# கிராம இயக்கம்

அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கத்தின்
ஸ்தாபகரும் காரியதரிசியுமான

ஆசிரியர்

**ஜே. ஸி. குமரப்பா**

எழுதியது.

**மகாத்மா காந்தியின் முன்னுரையுள்ளது**

**அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கம்**

**வார்தா**

**மத்ய மாகாணம்.** [விலை ரூ

131
N46

இப்புத்தகம் கையால் செய்யப்பட்ட காகிதத்தில் அச்சிடப்பட்டது.

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
110431

நாவலர் பவர் பிரஸ்,
பாலக்கரை, திருச்சிராப்பள்ளி.

# முன்னுரை

கிராம இயக்கம் என்ற இப்புத்தகத்தின் ஆங்கிலப் பதிப்பு மூன்றாவது முறை வெளியாகி இருப்பது ஒரு நல்ல அறிகுறியாகும். ஒரு முக்கிய தேவையை இது பூர்த்தி செய்கிறது, இந்த இயக்கம் அவசியமா, இயலுமா என்பவைகளைப்பற்றின சந்தேகங்களெல்லாவற்றையும் ஆசிரியர் குமரப்பா தீர்த்து வைக்கிறார். கிராமங்களிடம் அன்புள்ள எவரும் இப்புத்தகம் இல்லாமல் இருக்க இயலாது. எவ்விதச்சந்தேகக்காரரும் தமது சந்தேகத்தை இழக்காமலிருக்க இயலாது, கிராமங்களை அழித்து இந்தியாமுழுவதும் பெரிய பெரிய நகரங்களைக்கட்டி ஒருநிலைப்பட்ட அதிகாரத்தின் கீழ், ஆலைத் தொழில்கள் பல செய்தாலே தேசத்தில் பொன்னும் பொருளும் குவியும் என்று ஏற்கனவே தமது மனதில் தீர்மானித்திருப்பவர்களுக்கு இப்புத்தகத்தினால் ஏதுவிதப்பயனும் ஏற்படாது. நல்ல காலமாய் அவ்வித நாசத்தை விரும்புவோரின் தொகை இப்பொழுது அதிகம் இல்லை. தேசத்தில் விநாச இயக்கம் பரவாமல் தடுக்கவோ ஏற்ற தருணத்தில் இக்கிராம இயக்கம் ஏற்பட்டிருக்கிறதென்பது என்னுடையஎண்ணம். இக்கேள்வியின் விடை இப்புத்தகத்தில் கிடைக்கும்.

சேவா கிராமம்,
வார்தா,
2—2—'39.

மோ. க. காந்தி.

## ஆசிரியரின் முன்னுரை

உலகெங்கும் நன்கு ஆலோசிப்பவர்களிடை தற்காலத்திய முதளாளித்வ தொழில் முறையைப்பற்றி அதிக அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இம்முறையினால் நமது வறுமை குறையுமோ என்ற சந்தேகம் அவர்களை வருத்துகிறது. பெரிய ஆலைத்தொழில்களுக்கு இரண்டு சாதனங்கள் முக்கியமானவை. தடங்கலன்றி இயற் பொருள்கள் (Raw Materials) கிடைக்க வேண்டும். ஆலைகளில் உற்பத்தி செய்த பொருள்களை வாங்குவோர் வேண்டும். இவை இரண்டும் பலாத்கார முறைகளினாலேயே கிடைக்கும். ஸோவியத் பொதுவுடைமையில் முதலாளித்வத்தினால் ஏற்படும் அதிகலாபத்தைக் குறைக்க முயன்று, லாபமே கூடாதென்று தடுக்கப்பட்டிருப்பினும் ஒருநிலைப்பட்ட பொருளுற்பத்தி (Centralised production) என்றிருப்பதனால் அதிகாரம் சிலர் கையில் சேர்ந்துவிடுகிறது செல்வம் சிலரிடை சேர்ந்திருப்பதனால் ஏற்படும் தீங்கைவிட அதிகாரம் சிலரிடையே சேர்ந்திருப்பதினால் இன்னும் அதிகத்தீங்கு ஏற்படுகிறது. மேலும் அவ்வித முறையிலும் இயற்பொருள்களைப்பற்றியும், விற்பனைக்கு மார்க்கெட்டுகளைப் பற்றியும் நாளடைவில் கஷ்டம் ஏற்படும் முதலாளித்வ முறையிலாகட்டும், பொதுவுடைமை முறையிலாகட்டும், பெரிய ஆலை உற்பத்தியில் மனிதரின் குணங்களும் இயற்கையும் மறந்துவிடப்படுகின்றன.

இப்புத்தகத்தில் மனிதரின் இயற்கைக்கும் பண்பிற்கும் ஏற்றதாக முன்காலத்தில் கீழ்நாடுகளில் இருந்ததொழில் முறையை அனுசரித்து ஓர்அமைப்பு ஏற்படுத்த இயலுமா என்பது ஆராயப்படுகிறது. மனிதர் என்றால் மதம், தத்வம், அரசாங்கம், சமூகம், குடும்பம், தொழில் ஆகிய எல்லா உருப்புகளும் அமைந்தவர், அந்தக்குணங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக வளரச்செய்ய இயலாது. ஒரு நாட்டின் தொழில் முறையை அந்நாட்டினரின் இதர குணங்களுக்கு ஏற்றதாகவே நாம் அமைக்க முயல வேண்டும்.

இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கொள்கைகளை அனுசரித்து அமைக்கப்பட்டவையே அகிலபாரத கிராமக்கைத்தொழில் சங்கமும் அகில பாரத சர்க்கா சங்கமும். அச்சங்கங்களின் இலக்ஷியங்களை இப்புத்தகம்விளக்கிற்றெனில் இதை எழுதியதன் நோக்கம் பயன்பெற்றதாகும்.

**ஜே. ஸி. குமரப்பா.**

---

இப்புத்தகத்தைத் தமிழ் படுத்திய சமயம் ஆங்கிலப் பதங்களுக்கு எற்ற தமிழ்சொற்களை அமைத்துக்கொடுத்த ஸ்ரீ ராவ் சாகிப் வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும், ஸ்ரீ அப்புஸ்வாமி அய்யரவர்களுக்கும் நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.

ஜே. ஸி. கு.

## நான்காம் பதிப்பின் முன்னுரை

இப்புத்தகத்தின் நான்காம் பதிப்பிற்கென்று சீர்திருத்தப்பட்ட ஏட்டுப் பிரதி 1942-ம் ஆண்டு தயாராக இருந்தது. ஆனால் இதன் ஆசிரியர் இந்தியப் பாதுகாப்புச்சட்டத்தின்படி சிறைபோகும்படி ஆனதால் இதை பிரசுரிப்பது தடைபட்டது. இந்த மூன்று வருஷங்களில் உலகத்தில் அநேகபெரிய சம்பவங்கள்நேரிட்டு இவ்வாசிரியர் பலநிலைப்பட்ட தொழில் உற்பத்திக்கென்று எடுத்துக் கூறிய காரணங்களின் உண்மையை இன்னும் நன்றாக காட்டிவிட்டிருக்கிறது. ருஷ்ய தேசம், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரண்டின் ஏகாதிபத்ய முறையுடன் தானும் சேர்ந்துகொண்டிருப்பது ஒருநிலைப்பட்ட உற்பத்தியும் அரசியலில் ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று ஏற்றதல்ல என்பதையே ரூபிக்கிறது. மேலும் படைகளையும் ஆயுதங்களையும் நிறைய தயாராக வைத்திருப்பதனால் உலகத்தில் சமாதானமோ சுதந்திரமோ ஏற்படாதுஎன்பதும் தெரியவருகிறது இவ்வித நிலையில் "நான்தான் முன்பே சொன்னேனல்லவா?" என்ற வார்த்தையை அடிக்கடி சொல்ல விருப்பமுண்டாகிறது. இப்புத்தகத்தில் கண்டிருக்கும் விஷயங்களின் உண்மைகள் பிரத்யக்ஷமாக நம்மெல்லாருக்கும் இப்போது தெரிந்திருக்கிறது. இருந்தும் இவ்விஷயங்கள் நமது வாழ்க்கையுடன் மிகச்சம்மந்தப் பட்டவையாதலால் இப்புத்தகத்தை மறுபடி வெளியிட்டிருக்கிறோம்.

ஜே. ஸி. குமரப்பா

## மொழி பெயர்த்தவரின் குறிப்பு

இப்புத்தகத்தை தமிழில் மொழிபெயர்த்து பிரசுரிக்கவேண்டும் என்று கூறி ஆசிரியர் குமரப்பா அவர்கள் அதை என்கையில் கொடுத்த சமயம் அவர்களுடைய வார்த்தையை தட்ட முடியாமல் ஏற்றுக்கொண்டேன். இருந்தும் புத்தகத்திலடக்கியிருக்கும் நுட்பமான கருத்துக்களையும் ஏற்ற தமிழ்பதம்அற்ற கடின சொற்களையும் படித்த சமயம் இவ் வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமே என்ற கவலை அதிகமும் உண்டாயிற்று. எனது அதிர்ஷ்டவசத்தால் ஸ்ரீ ராவ்சாகிப், வையாபுரிபிள்ளை அவர்களும், ஸ்ரீ. அப்புஸ்வாமி அவர்களும் மிக அன்புடன் ஆங்கிலச்சொற்களுக்கு ஏற்ற தமிழ் மொழிகளை அமைத்துக் கொடுத்து உதவினர்.

புத்தகத்தில் பல புதுக்கருத்துக்கள் இருக்கின்றன. அவைகளைத் தெளிவுபடுத்த முயன்று ஆசிரியர் பல திசைகளிலிருந்தும் அவ்விஷயத்தைக் காண்பிக்க முயன்றிருக்கிறார். பின்பாகத்தில் ஒவ்வொரு அத்யாயமும் வெவ்வேறு இடத்தில் நின்று ஒரே விஷயத்தை நோக்குவதாகும், ஆகையால் ஒருமுறை கூறப்பட்ட விஷயம் மீண்டும் பலமுறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

புத்தகத்தில் அச்சுப்பிழைகள் அதிகம் ஏற்பட்டுவிட்டன. ஒரு சொல்லை இரண்டுவகையில் எழுதும் எழுத்துப் பிழைகளும் அதிகம் ஏற்பட்டுவிட்டன. அதுபற்றி மிக வருந்துகிறேன். காரணம் புத்தகம் துரிதமாக அச்சடிக்க நேரிட்டதே, என்னுடைய கவனக்குறைவும் சிரத்தைக் குறைவும் அல்ல.

குமுதினி.

# பொருளடக்கம்.

## முதல் பாகம்


பக்கம்.

**அத்யாயம் 1** படிப்படியான் தோன்றுமுறை பிராணிகளிடைவேலை முயற்சி, மனிதர் வளர்ச்சி, நாகரீகத்தின் அடையாளம், மனிதரின் முன்னேற்றத்துறையில் பொருளாதார அமைப்புகளின் சம்பந்தம் "வேட்ட இன" க்குணம், "கூட்ட இனக்" குணம். 2–7

**அத்யாயம் 2** மேல்நாட்டு பொருளாதார அமைப்புகள், வேடன் காலத்தில் உற்பத்தி பலம், தனம், எந்திரம், தொழில் இவைகளின் ஆட்சிகள், பலவகைப்பட்ட அமைப்புகளின் பரிசிலனை. 7–18

**அத்யாயம் 3** கீழ்நாட்டுப் பொருளாதார அமைப்புகள். ஒத்து வாழ்வதற்கும் பாதுகாப்பிற்கும் ஏற்ற கூட்ட இனம், குடும்பம், வருணம், சமூகம், கிராமப் பஞ்சாயத்து தொழில் வாழ்க்கைக்குப் பாதுகாபபுகள். 18–27

**அத்யாயம் 4** பொருளாதார வகைகள். பறிமுதல் முயற்சி, கூட்ட முறை, நிரந்தரப் பொருளாக்க வகைகள் ஏகாதிபத்தியம், பாஸிஸ்டு. நாஸி, கம்யூனிஸ்டு, பொதுவுடமை முறைகள். பிரம்ம, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திர முறைகள். 28–35


## இரண்டாம் பாகம்


**அத்யாயம் 5** ஜனங்களின் வருமானம். அது ஏன் குறைவாக இருக்கிறது சந்தர்த்தப்பக் குறைவுகள் கூலியளிக்காத வேலைகள் தேவையில் மாறுதல் உழைப்புத்தனம் நாணயவியலும் ஈரெட்டு முறையும் வருமானம் அதிகமாகிறதா, குறைகிறதா? 35–48

**அத்யாயம் 6** இயற்கை வழி இயற்கையில் தேவையும் பூர்த்தியும் வியவசாய நாகரீகத்தில் இயற்கைக்கு உதவி உற்பத்தி மார்க்கெட் வேட்டை இனமும் உண்டாக்குவதில் ஊக்கமும் விஷயங்களில் முன்னோக்கு சர்க்காரின் பொறுப்பு தேவைக்கேற்ற உற்பத்தி நாணயம் பொருளாதாரமான எல்லைகள் அரசியல் விளைவு அடிமைப்படுத்தும் முறையும் விடுதலை அளிக்கும் முறையும் ஏகாதிபத்யம். 49–63

**அத்யாயம் 7** வேலை வேலையின் மூலம் வழிபாடு. வேலை என்பது என்ன? மூன்றுவித உழைப்பு வெளி உத்திரவிற்கென்று செய்யும் அடிமைத்தனத்தை உண்டாக்கும் உழைப்பு உழைப்பிற்கென்றே உழைப்பது ஒரு உத்தேசம் கொண்டு 64–78


## பொருளாதார சொற்கள்

| | | |
|---|---|---|
| Artificial | செயற்கை | ... |
| Barter | பண்டம் மாற்று | ... |
| Capitalism | முதலாளித்வம் | ... |
| Centralised | ஒரு நிலைப்பட்ட | ... |
| Curio | விநோதப் பொருள் | ... |
| Consumption | உபயோகிப்பது | ... |
| Credit S,stem | ஈரெட்டு முறை | ... |
| Culture | பண்பு | ... |
| Decentralised | பலநிலைப்பட்ட, பரவிய | ... |
| Demand | தேவை | ... |
| Democracy | ஜனநாயகம் | ... |
| Distribution | பங்கீடு | ... |
| Economics | பொருளாதாரம் | ... |
| Economic activity | பொருள்முயற்சி, பொருளாக்கம் | ... |
| Economic field | பொருளாக்கத் துறை | ... |
| Exploit | சுரண்டு | ... |
| Exploitation | சுரண்டல் | ... |
| Imperialism | ஏகாதிபத்பம், சாம்ராஜ்யம் | ... |
| Luxury article | சுகபோகப் பொருள் | ... |
| Medium of Exchange | மாற்றுப்பொருள் | ... |
| Money economy | நாணயவியல் | ... |
| Natural | இயற்கை | ... |
| Parasite | கொள்ளி உயிரி | ... |
| Personality | மானுஷ்யம், ஆத்மசக்தி | ... |
| Planned economy | திட்டமான பொருளாக்கம் | ... |
| Predatory | பறிமுதல் | ... |
| Production | உற்பத்தி | ... |
| Raw Material | இயற்பொருள், மூலப்பொருள் | ... |
| Socialism | பொதுவுடைமை | ... |
| Standard of living | வாழ்க்கை நிலை | ... |
| Supply | பூர்த்தி செய்வது | ... |
| Surveying | விசாரணை செய்வது | ... |
| Unempolyment | வேலையில்லாத்திண்டாட்டம் | ... |

உழைத்து தனது ஆத்ம வளர்ச்சியைப் பெறுதல் வேலையும் 64–78
பண்பும் அவகாசம் புதிது கண்டு பிடித்தல் செல்வத்தை பங்கீடு செய்வதற்குச் சாதகமாய் வேலை மனிதனின் திறமை வளர்ச்சி பெற வேலை களைப்பு வாழ்க்கை நிலை.

**அத்யாயம் 8** செல்வத்தின் பொறுப்புகள். செல்வத்தின் 79–83
வகைகள். அன்பு. பொறுமானம். தர்மம். புண்யம் ஆகிய பலவித மதிப்பு. திட்டங்கள் வாங்குபவரின் கடமை. சுதேசி. வேலையில்லாத் திண்டாட்டம்.

**அத்யாயம் 9** பெண்களின் ஸ்தானம். ஆண் பெண் 84–96
களுக்கு இடை இருக்கும் குணபேதம். பொருள் முயற்சியில் இருவருடைய தனித்தனி. வேலைகள் தேவையைச் சொல்வது பெண்கள். வேட்டை இனத்திலும் கூட்ட இனத்திலும்பெண் களின் நிலை. நோட்டம் அறிந்து வாங்குதல். வாங்கு பவரின் தவம்.

**அத்யாயம் 10** தேசங்களிடை போர். பண்டை நாட் 96–111
களில் வேட்டை இனங்களிடே சண்டைக்குக் காரணம். இயற் பொருள் கிடைக்கும். இடங்கள் மார்க்கெட்டுகள். தொழிலில் பங்கீடு. யுத்த தளவாடங்கள். தேவையைக் கவனியாது செயற்கை மார்க்கெட்டுகள். பலாத்காரத்திற்கு அநாகரீகமான வரை நாகரீகமாக்குதல். பண்பின் அழிவிற்குக் காரணம். உற் பத்தி செய்யாமல் உபயோகிப்பது. முடிவு. பலாத்காரத்தை பெருமைப்படுத்துவது என்ன பயன்?

## மூன்றும் பாகம்

### விடை

**அத்யாயம் 11** தொழில்கள். வியவசாயமும் கைத் 111–128
தொழில்களும் சேர்ந்து உழைப்பது. மனிதரின் குணங்களுக்கு இடம். வேலையில்லாத் திண்டாட்டம். உற்பத்தி வகையே செல் வத்தை பங்கீடு செய்வது. உற்பத்தி செய்பவனின் நலம். அஹிம்சா எந்திரங்கள். வேலையின் மூலம் அறிவு விருத்தி. திட்டப்படுத்தப்பட்ட பொருளாக்கம். அவகாசம். மூலதனமும் ஒரு நிலைப்பட்ட அதிகாரமும். பண்டங்களின் குறைந்த விலை. மார்க்கெட்டுகள். ஒரு நிலைப்படுத்துதல்.

**அத்யாயம் 12** அஹிம்சா முறையான வாழ்க்கைநிலை 128–134
தேவையைக் கொண்டும், வருமானத்தைக் கொண்டும் நிலை ஏற் படுத்துவது, வருமான விகிதம். தவறுன நிலைகள் இயற்கைவகை

**அத்யாயம் 13** பண்டம் மாற்று. வேலையில் பங்கிடும் மாற்றுப் பொருளின் அவசியமும், மனிதரின் நலன். உற்பத்தியிலும், உபயோகத்திலும் ஏற்றத்தாழ்வு. நாணயவியலும் கிராமவாசியும். உண்மை மதிப்புகள். நாணயமும். சண்டைகளும் பண்டம் மாற்றுவதற்கு ஏற்ற சமயம். 134-148

**அத்யாயம் 14** பொருளாதார விசாரணையும் புது திட்ட அமைப்பும். விசாரணை வகைகள். 143-155

**அத்யாயம் 15** திட்டப்படுத்தப்பட்ட பொருளாக்கம். உத்தேசம் கொண்டு அமைப்பது. சர்க்காரின் வேலைகள். காடுகள் இயற்பொருள்கள் போக்கு வரத்து சாதனங்கள். வரி. செலவு ஒரு நிலைப்பட்ட தொழில்கள். கிராமத் தொழில்களும் குடிசைச் தொழில்களும். பங்கீடு. உழைப்பில் பாகுபாடு. சுதேசி. விலை. பொருட் காட்சிகள். 156-173

**அத்யாயம் 16** தொழில்களின் திட்டம் வியவசாயம். வியவசாயத்தின் மேல் பாரம். அதைக்குறைக்கும் குடிசைத் தொழில்கள். அகில பாரத சர்க்கா சங்கமும், அகில இந்திய கிராமத் தொழில் சங்கமும். எவ்வித் தொழில்கள் தேவை. வெளி நாட்டு இயற்பொருள். அலங்காரப் பண்டங்கள். பெண்கள் செய்யக்கூடிய உதவி. 173-182

**அத்யாயம் 17** ஒரு நிலைப்படுத்துவதும் பல நிலைப்படுத்துவதும் பொருள் முயற்சியில் ஒழுங்கின் நோக்கம் ஒரு. நிலைப்பட்ட உற்பத்திக்கு சாதகமான விஷயங்கள். அவ்வித முறையில் உள்ள தீங்கு. பல நிலைப்படுத்துவதால் சாதகம். 182-188

**அத்யாயம் 18** வாழ்க்கைக்கேற்ற கல்வி. கல்வியின் விளக்கம ஏகாதிபத்யக்கல்வி கீழ் நாட்டிலும் மேல் நாட்டிலும் கல்வி முறை. மதிப்பிடும் முறை. வார்தா முறை. 189-212

**அத்யாயம் 19** கீழ் நாடுகளில் ஜனநாயாகம். ஜனநாயகம், பண்பின் ஜனநாயகம். ஜனநாயகம் ஏற்பட்டது. ஜனநாயகத்திற்கு சாதகமான ஒருநிலைப்பட்ட உற்பத்தியும் பல நிலைப்பட்ட உற்பத்தியும். 213-223

**அத்யாயம் 20** உலகத்து சமாதானம். பல நிலைப்பட்ட உற்பத்தி. இயற்கையான தேவைக்கு ஏற்ற பூர்த்தி. உள்நாட்டு மார்கெட்டுகளும் இயற் பொருள்களும். சர்க்காரின் உதவி. சண்டைக்கு காரணங்களைக் குறைப்பதனால் சமாதானம் ஏற்படுவது. 223-225

# கிராம இயக்கம்.

## முதற் பாகம்.

## பண்டை வரலாறு.

### முதல் அத்தியாயம்.

#### படிப்படியான தோன்று முறை.

**பிராணிவர்க்கம்:**

அநாதி காலம் முதல் மனிதரும் இதரப் பிராணிகளும் தமது முக்கியத் தேவைகளைத் திருப்தி செய்து கொள்ள வேண்டிய அவசியத்தினாலேயே பொருள் தேடும் முயற்சியில் ஈடுபடலாயினர். அத்தேவைகளாவன:—

1. பசி.

2. மழை, வெயில், காற்று போன்ற இயற்கைத் தோற்றங்களிலிருந்து பாதுகாப்பு.

3. வேறு பிராணிகளின் எதிர்ப்பிலிருந்து பாதுகாப்பு.

இயற்கையில் காணும் பொருட்களைச் சேகரித்துக் கொள்வது பொருள் முயற்சியில் முதற்படி எனலாம். ஒரு குரங்கிற்குப் பசி ஏற்பட்டவுடன் அது தனது கையை நீட்டி ஒரு பழத்தையோ இலையையோ பரித்துக் கொள்ளுகிறது. இது கவர்ந்து வாழ்தல். பழமும் இலையும் வளருவதற்கென்று குரங்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. இருந்தும் தனது பசி என்னும் இந்த முக்கிய தேவையைத் திருப்தி செய்து கொள்வதில் அதற்கு ஏதாகிலும் தடை ஏற்பட்டால் உடனே கோபமும் சண்டையும் உண்டாக இடமாகிறது. அதேவிதம் பசியுடனிருக்கும் ஒரு நாயினிடமிருந்து அது கடித்துக் கொண்டிருக்கும் மாமிசத் துண்டை அகற்றினாலும் சண்டை ஏற்படுகிறது.

இவ்வித முயற்சியில் ஒவ்வொரு பிராணியும் தத்தம் சுய காரியத்தில் மட்டும் கவனமும் கவலையும் உள்ளதாக இருக்கிறது. தன்னுடைய இனத்தாருடன் கூடுவதென்றால் ஓநாய்கள் போல் வேறு இனத்தாரைக் கொல்வதற்கென்றே கூடுகிறது. இவ்வாறு பிறரை இம்சிப்பதற்கென்று கூடும் பிராணிகள் சாதாரணமாய் மூர்க்கத்தனமுள்ளவை.

வெயில், மழை முதலியவற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டும் சமயம் குகை பொந்து முதலிய இயற்கையாக ஏற்பட்ட மறைவுகளிலாகிலும், தேனீக்களையும் பறவைகளையும் போல் சுயமாகக் கூடு கட்டியாகிலும் பிராணிகள் பாதுகாப்பைப் பெறுகின்றன. இந்தத் தொழிலில் ஒவ்வொரு பிராணியும் தனக்குத் தேவையானதைத் தனது உழைப்பால் தேடிக்கொள்வதால் இதனில் கவர்ந்து கொள்வதற்காகிலும் சண்டையிடுவதற்காகிலும் அதிகம் இடம் இல்லை.

வேறு இனத்தாரின் எதிர்ப்பிலிருந்து பாதுகாப்பிற்கென்று சிலவகைப் பிராணிகள் தங்களுடைய இனத்தாருடன் கூடி ஒன்று சேருகின்றன. ஆடு, மாடு, யானை முதலியவை இவ்வகுப்பைச் சேர்ந்தவை. இவ்விதம் கூடும் வர்க்கத்திற்கு சமூக உணர்ச்சி அதிகம் இருக்கும். அவைகள் சாந்தமும் அடக்கமும் படைத்திருக்கும். ஓநாய்கள் போன்ற மூர்க்கத்தன முள்ளவைகளாக இரா. பிற பிராணிகளைக் கொன்று ஜீவிக்கும் உத்தேசத்துடன் ஓநாய்களைப்போல கூடும் வகையை "வேட்டை இனம்" என்றும், தங்களுடைய பாதுகாப்பிற்கென்று ஆடு மாடுகளைப் போல கூடும் வகையைக் "கூட்ட இனம்" என்றும் நாம் பிரித்துக் கூறலாம்.

**மனித வர்க்கம் :**

மனிதரின் சரித்திரத்தை நாம் ஆராய்ந்தோமானால் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் பல படிகளிலும் பின்பற்றி வந்த பொருள் முயற்சியில் மேற்கண்ட இரு வகைக் குணங்களும், ஒரு இடத்தில் ஒன்றும் மற்றொரு



இடத்தில் மற்றொன்றுமாக விளங்குவதைக் காணலாம். அநாதி காலக் காட்டு மனிதன் தனக்கு ஆகாரமாகக் காய் கனிகளைத் திரட்டிப் புசித்தும், இலைகளையும் மரப்பட்டைகளையும் ஆடையாகத் தரித்தும், குகைகளில் வசித்தும் வந்தான். அதற்கு அடுத்த படியாக வேடனும் செம்படவனும் தோன்றி, ஆயுதங்களைச் செய்து, அவைகளால் தம்முடைய தேவைக்கென்று வேறு பிராணிகளைக் கொன்றோ, பிடித்தோ, உபயோகிக்கலானார்கள். அதற்கும் அடுத்தபடியாகத் தோன்றின நாடோடி ஜாதியினர் மிருகங்களை பிடித்துப் பழக்கித் தமக்கு உபயோகமுள்ளவைகளாய்ச் செய்து கொண்டனர். அந்த ஜாதியினர் தமக்கும் தமது ஆடு மாடுகளுக்கும் தீனி தேடிக் கொண்டு தேசந்தோறும் சுற்றித் திரிந்தனர். இவ்வாறு பல படிகள் தாண்டிய பின் மனிதன் தன்னைச் சூழ்ந்திருக்கும் பொருட்களைத் தன் வயப்படுத்தியும், இயற்கையின் விதிகளைத் தன்னுடைய தேவைகளுக்கு அனுகூலமாக்கியும், தனது உழைப்பின் பலன்களை அனுபவிக்கத் தொடங்கினான். இது மனிதனின் முன்னேற்றத்தில் உழுது வாழும் நாகரீகம் என்ற படி.

நாகரீகம் வளர வளர தொழிற்துறையில் அதிக பாகுபாடு தேவை ஆயிற்று. அந்த அந்த தேசத்தின் மனிதரின் திறமைக்கும் குணத்திற்கும் ஏற்றதாக அந்த அந்த தேசத்துத் தொழில் முறைகள் ஏற்படலாயின.

நாகரீக மனிதர்களால் தொழில்களைச் செய்ய ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொருள் அமைப்புக்கள் பலவகைப்பட்டவை. ஆதிகாலத்தில் படிப்படியாகத் தோன்றின மனிதரின் முன்னேற்றத்தில் எவ்விதப் படியினின்று அந்த அமைப்புகள் பிறந்தனவோ அந்தப் படியை எடுத்துக் காட்டும் குணங்களுடன் அந்தப் பொருள் தேடும் முயற்சிகளும் இருக்கின்றன. பொதுப்படக் கூறின் மிருகங்களில் தங்களுடைய பாதுகாப்பிற்கென்று ஒன்றுகூடும் சாகபக்ஷிணிகளாகிய "கூட்ட இனமும்" உணவிற்காகப் பிறவற்றினைத் தாக்கும் "வேட்டை இனமும்" தவிர

மற்றவை தனக்குத் தான் என்று உழைப்பவையே. ஒன்றாகக் கூடி வசிக்கும் மனிதர்கள் இவ்விரண்டினத்தில் ஏதாவது ஒன்றின் குணமுள்ளவர். வேடனும் நாடோடியும் இரண்டாவதாகிய "வேட்டை இனத்"தைச் சேர்ந்தவர்கள். தன்னுடைய நலத்தைக் கருதி பிறரை வதைப்பவர்கள். பிறருடைய உரிமைகளையும் நலனையும் கவனிக்காதவர்கள்.

### நாகரீகம் எது?

உண்மையான நாகரீகம் என்பது நமக்கு இருக்கும் செல்வமும் நாம் வாழும் அந்தஸ்தும் வகையும் அல்ல என்பதை நாம் கருத்தில் வைக்கவேண்டும். நாம் பிறரின் க்ஷேமத்தில் கொண்டுள்ள எண்ணங்களைப் பொருந்தினதாகவே நமது நாகரீகம் வெளிப்படும். இருப்பதைக் கொள்ளையிட்டு ஜீவிப்பதில் நாகரீகமில்லை. அம்முறை காட்டு மிருகத்தனமே. உண்மையான பண்பு உரிமையை கேட்காது, கடமையைச் செய்யும். பிறரின் உணர்ச்சிகளைப் பொருட்படுத்தி அவர்களிடம் தமக்கு உள்ள பொறுப்பை உணர்ந்து நடந்துகொள்வதே ஒருகனவானை மூர்க்கனிடமிருந்து வேறுபடுத்துகிறது.

மனிதர் நாகரீகத் துறையில் உழுது வாழும் பண்பை அடைந்த சமயம், வேலியும் வரப்பும் கட்டும்போது அத்துடன் பிறரின் உரிமைகளுக்கு மரியாதையும், தாம் அனுபவிப்பதைப்பற்றின ஓர் வரம்பு உணர்ச்சியும் அவரிடம் தானாகவே ஏற்படுவதைக் காண்கிறோம். ஒருவனுடைய கொள்கைகளிலும் பிறர் தன்னுடைய செய்கையால் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென்ற கவலையும் உதிக்கிறது. இந்த நிலையை அடைந்தபோது மனிதரின் பொருள் உண்டாக்கும் அமைப்புகள் அதற்கு முன்பு இருந்தது போல் தனித்தன்மை பெற்றிராமல், மிருகங்களின் "கூட்ட இனம்" போல் கூட்டுத்தன்மை பெறலாயிற்று. அவைகள் ஒழுங்கான விதிகளுக்கும் நன்கு ஆலோசிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும் கட்டுப்பட்டவை ஆயின. மனிதர் "வேட்டை இனம்"



என்ற படியினின்று "கூட்ட இனம்" என்ற அடுத்த படியை அடைவதற்குப் பல்லாயிரம் வருஷங்களாகலாம். ஏனெனில் பழைய குணங்களெல்லாம் அழிந்து அல்லது மாறுபாடடைந்து புதுக் குணங்கள் ஏற்பட வேண்டும். அவ்விதமில்லாமல் ஒரு நிலைமையிலிருந்து மற்றொரு நிலைமைக்கு மனித சுவபாவம் மாறுவதற்கு போதுமான காலமில்லாமல் அவர்களுடைய பொருள் நிலைமை அதிக முன்னேற்றமடைந்துவிட்டால் ஜனங்களிடை தடுமாற்றம் சச்சரவு ஆகியவை ஏற்படுகின்றன.

### குணங்கள் :

பொதுவாக மனிதரின் பொருள் உண்டாக்கும் அமைப்புகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

அவை தனிப்பட்ட வழி, சமூகவழி என்பன.

ஆதிகால மிருகங்களின் குணங்களிலிருந்தே இவை ஏற்பட்டவையாகையால் அவைகளின் பெயரை வைத்துக் கூறின் "வேட்டை இன வழி" "கூட்ட இன வழி" என இம் முறைகளைக் கூறலாம். "வேட்டை இன" வழியில் கீழ்க்கூறப்பட்ட குணங்கள் இருக்கின்றன :—

1. வாழ்க்கையைப்பற்றிய குறுகிய மனப்பான்மை.

2. தலைமை ஆதிக்யம். அதிகாரம் ஒரு சிலர் அல்லது ஒரு சிறிய கூட்டத்தின் கையில் இருப்பது.

3. கடுமையான கட்டுப்பாடு.

4. தேக உழைப்பினால் பொருள் உற்பத்தி செய்யும் தொழிலாளியின் நலத்தில் அலக்ஷியம்.

5. தொழிலாளியின் சுதந்திரத்தை அடக்குதல்; எதிராகவும் போட்டியாகவும் தொழில் நடத்துவோரிடம் பொறாமை.

6. லாபம் கிடைக்கும் என்ற காரணமே வேலை செய்யத் தூண்டுகோலாக இருப்பது.

7. தொழிலில் ஏற்படும் லாபத்தை ஒரு சிலர் மாத்திரம் பங்கிட்டுக் கொள்வது.

8. தொழிலாளியின் உழைப்புக்குத்தகுந்த மதிப்பைக் கொடாமல், மேலிருப்பவர் தன்னுல் கூடியவரை பற்றிக்கொள்ளுதல் என்ற கொள்கை.

இத்துடன் அதிகாரமும் லாபமும் ஒரு சிலர் கையிலிருப்பதால் இவ்விதத்தொழில்கள் அநேகமாய் நகரங்களில் தான் ஏற்படுகின்றன என்றும் கொள்ளலாம்.

"கூட்ட இன"க் குணமுள்ளவர்களிடம் நாம் காண்பதாவன :—

1. வாழ்க்கையைப் பற்றின தீர்க்க தரிசனம்.

2. சமூகக் கட்டுப்பாடு. அதிகாரம் எல்லார் கையிலும் பரவி இருப்பது. வேலை செய்வதும் கட்டுப்பட்டு நடப்பதும் அவரவர்களுடைய சமூக விதிகளுக்காக; அதிகாரத்திற்கு பயந்து அல்ல.

3. சமூக விதிகள் தொழில்களை ஏற்ற துறையில் அமைப்பது. தனிப்பட்டவரின் பேராசையினுல் தொழில் முறை ஏற்படுவதில்லை.

4. பலவீனமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முயல்வது.

5. பிறரின் வளர்ச்சியைத் தடுக்காமல் அதற்கு இடம் கொடுத்துப் பொறுத்துக் கொள்வது,

6. சில உயர்ந்த இலக்ஷியங்களுக்காகவும் சமூக விதிகளுக்காகவும் தொழில் செய்வது.

7. லாபத்தைப் பலரிடம் அவரவர்களின் தேவைக்கு தகுந்த வண்ணம் பங்கிடுவது. இவ்விதம் பங்கிடுவதன் நோக்கம் சுயநலப்பற்றற்று தேவையைத் திருப்தி செய்வதற்காக இருப்பது.

அதிகாரத்தையும் பொறுப்பையும் பரவினதாகச் செய்து பொருள் உற்பத்தி என்பது கிராமம் கிராமமாக



பிரிக்கப்பட்டிருப்பது என்றிருந்தால் அதனுடைய அஸ்திவாரம் விசாலமானதாக இருக்கும்.

இவ் விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு மனிதரால் உற்பத்தி செய்யப்பட்ட சில பொருள் முயற்சி அமைப்புகளை ஆராய்வோம்.

---

## அத்யாயம் 2.

### மேல்நாட்டுத் தொழில் அமைப்புகள்

இப் புத்தகத்தின் நோக்கம் நமது நாட்டுத் தொழில் அமைப்புகள் சரியான முன்னேற்றமடைய எவ்வித அஸ்திவாரம் ஏற்படுத்தவேண்டுமென்பதைக் கண்டு கொள்ள வேண்டியதே. ஆகையால் கால அளவை நோக்கின் நமது நாட்டிற்குப் பிற்பட்டே மேல் நாட்டாரின் தொழில் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பினும், அவைகளையே முதலில் ஆராய்வோம்.

**வகைகள் :**

மேல்நாட்டார் உழுதுவாழ ஆரம்பித்து அதற்குரிய குணங்கள் அவர்களுக்குப் பழகுவதற்குள் அவர்களிடை ஆலைத்தொழிலபிவிருத்தி அதிகம் ஏற்பட்டு விட்டது. ஆகையால் வேடனும் நாடோடியும் காண்பித்த குணங்களாகிய "வேட்டை இன"க் குணங்களை அவர்களுடைய தொழில் முறையில்அதிகம் காணலாம். மேல் நாட்டிலாகட்டும் கீழ் நாட்டிலாகட்டும் ஜனத்திரள் அனேகமாய் ஒரு விதமாகத்தானிருப்பார்கள். பொது குணம் ஒருவிதமாகத் தானிருக்கும். ஆகையால் அவர்களை விட்டு, தொழில் ஏற்பட முக்கியமாக இருந்து, தொழில் முறைகளை அமைப்பதில் அதிகாரம் படைத்தவர்களை ஐந்து வகையினராகப் பிரிக்கலாம்.

1. பலத்தின் அதிகாரம்.
2. பணத்தின் அதிகாரம்.
3. எந்திரசக்தி அதிகாரம்.
4. தொழிலாளி அதிகாரம்.
5. நடுத்தர வகுப்பினர் அதிகாரம்.

பலத்தினால் ஆள்பவருக்குத் திருஷ்டாந்திரமாக இங்கிலாந்தில் முன் காலத்தில் சிற்றரசர்கள் போல் ஆண்டு கப்பம் வசூலித்த பாரன் (Fuedal Baron) என்ற வர்க்கத்தினரைக் கூறலாம்.

இவர்கள் தங்களுடைய ஆட்களைச் சிப்பாய்களாகப் பழக்கி, கிராமங்களில் புகுந்து அங்கு உழுது உழைத்து உண்டாகும் குடிகளை அவர்களுடைய பொருள்களில் ஒரு பங்கைத் தமக்குக் கொடுக்குமாறு செய்தனர். இவ்விதம் அக்குடிகள் கொடுப்பதற்கு பிரதியாக இதர சிற்றரசர்கள் அக்குடிகளைத் துன்புறுத்தாமலிருக்கும் வண்ணம் இவர்கள் பாதுகாப்பதாகப் பேச்சு. அவ்விதப் பாதுகாப்பிற்கென்று குடிகள் கொடுப்பதைக் "கப்பம்" என்றனர். இந்தக்கப்பம் அச்சிற்றரசர்களின் சொந்தச் செலவிற்காகவே. அப்பணத்தைக்கொண்டு குடிகளுக்கு ஏதாகிலும் நன்மை செய்யலாமென்ற எண்ணமே அவர்களுக்குக் கிடையாது. தமது செல்வாக்கை நாட்டவே எண்ணம். தான் கைப்பற்ற உத்தேசிக்கும் மாஸ்கோவை அடைய வேண்டுமென்பது நெபோலியனின் கருத்தாக இருந்ததே தவிர வழியில் எவ்வளவு சிப்பாய்கள் மாண்டனர் என்பது பற்றி அவனுக்குக்கவலை ஏது?

பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் மேல் நாடுகளில் பணத்தின் ஆட்சிவலுக்க ஆரம்பித்தது. பல நூற்றாண்டுகளாய் உழைத்துத் திரட்டிய பணமும் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட எந்திரங்களை விற்ற பணமும் சிலர் கையில் அதிகம் சேர்ந்தது. மதக்கட்டுப்பாட்டினால் ஐரோப்பாவிலிருந்து துரத்தப்பட்ட பல புத்திமான்கள் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்தனர். அச்சமயம் இவர்



களுடைய புத்தியைப் பயன் படுத்திக்கொள்ள இங்கிலாந்தில் அதிக தனமில்லை. ஆனால் சீக்கிரத்தில் ஏகாதிபத்தியம் சம்பாதிக்கும் பல பிரிட்டிஷ்காரர்களின் திறமையினால் கங்கைக் கரையின் தங்கவெள்ளம் தேம்ஸ் நதிக்கரையில் புரளும்படி செய்யப்பட்டது. இவ்விதம் பணத்தின் சக்தி பெற்றவரின் ஆட்சி முன்னுக்கு வரவே சிற்றரசர்களாக இருந்த பாரன்மார்களும் இவர்களுடன் சேர்ந்துகொள்ள ஆரம்பித்தனர். இவ்விதம் பலமும் பணமும் கைகோர்க்கவே, இக்காலத்தில் ஏகாதிபத்தியம் என்று வழங்கப்படும் குணம் ஏற்படலாயிற்று. இந்தக் குணத்திற்கு அதைக் கையாள்பவர் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பது மிகவும் அவசியம். இவ்விதம் ஒத்துழைப்பதற்குக் கைம்மாறாக முன்பு "கப்பம்" என்று கிடைக்கப்பட்டது. இப்பொழுது 'வட்டி' என்ற பெயரில் கிடைக்கிறது. அதிகாரப்பொறுப்பு ஒருசிலர் கையில் சேர்ந்திருக்கிறது. அவர்கள் தங்களுக்குள் மிக ஒத்துமையாக இருந்தாலே தங்களுக்குக் கீழ்ப்பட்ட ஏராளமானவர்களை ஆளக்கூடும். ஆகையாலேயே இங்கிலாந்தில் ஒத்துழைப்பு என்ற குணம் மிகவும் கொண்டாடப்படுகிறது. கிரிக்கெட், புட்பால், ஹாக்கி, படகுப்பந்தயம் ஆகிய ஒத்துழைப்பு அவசியமான விளையாட்டுக்கள் அதிகம் கௌரவிக்கப்பட்டு அதில் தேர்ந்தவர்கள் ராஜ்யம்கூட ஆளத்தகுந்தவர்களென்று கருதப்படுகிறார்கள். இந்த ஆட்சியிலும் முதலாளிக்குக் கிடைக்கும் வட்டிதான் முக்கியமாகும்.

எந்திர சக்தியின் ஆட்சிக்கு அமெரிக்க ஐக்கிய நாட்டை ஓர் சிறந்த உதாரணமாகக் கூறலாம். அங்கே இயற்கையின் அபாரசக்தியைக்கண்டு மனிதன் திக்பிரமை அடையும்படி ஆயிற்று. அங்குள்ள பிரம்மாண்ட தூரத்தைச் சேர்க்கவும், பெரிய நதிகளைக் கடக்கவும், அடர்ந்த காடுகளில் நுழையவும் மனிதன் தனக்குத்துணையாக எந்திரங்களை ஏற்படுத்திக் கொண்டான். இவ்விதத்துணையினால் இயற்கையைத் தனக்குச் சாதகமாக உதவும்படிச் செய்தான். தேக உழைப்பு அங்கே கிடைப்பது அரிதாக இருந்து அதற்கு மாறாக எந்திர உழைப்புத் தேவையாக

இருந்தமையால் எந்திர விருத்தி ஏற்பட்டது. இவ்வித எந்திரங்களைச் சிருஷ்டிக்க அதிக பொருள் வேண்டியிருந்தமையால் அப்பொருளைக் கொடுக்கும் முதலாளியின் கையில் அதிகாரம் அடங்கினதாயிற்று. எந்திரங்களைச் செய்யும் தொழிலாளியின் சௌகரியம் கவனிக்கப்படாமல் கைவிடப்பட்டது. சிகாகோ நகரத்து யாமிசம் அடைக்கும் எந்திரங்கள் அதனுடைய தொழிலாளிகளைத் துண்டு துண்டாக நறுக்கி ஊறுகாய் செய்தாலும் செய்யலாம், ஆனால் அவைகளின் வேலையை ஒரு விநாடியும் நிறுத்த இயலாது.

இந்த எந்திர சக்தி பெற்றவரின் ஆட்சியின் குணம் சாமான்களை மேன் மேலும் தயாரிப்பதும் எந்திரத்தினால் சுலபமாய்ச் செய்யக்கூடியதான ஒரே தன்மையான சாமான்களை ஏராளமாகத் தயாரிப்பதும் என்று ஆயிற்று. இவ்வித ஆக்கத்திலும் "வேட்டை இன" குணங்களைக் காணலாம். தொழிலாளியின் முயற்சியினால் எந்திரம் பொருளைச் செய்கிறது. லாபம் முழுவதும் எந்திரத்தின் முதலாளிக்குச் சேருகிறது

இவ்விதம் பலத்தின் ஆட்சி, பணத்தின் ஆட்சி, எந்திர ஆட்சி, ஆகியமூன்றின் கீழும் கஷ்டப்பட்ட தொழிலாளி இறுதியில் தன்னுடைய குறை தாங்கமுடியாமல் தகுந்த சந்தர்ப்பம் ஏற்பட்டதும் இம் மூன்று ஆட்சிகளையும் எதிர்த்து, அதிகாரத்தைத் தான் வாங்கிக்கொண்டு "பொதுவுடைமை ஆட்சி" என்று ஏற்படுத்தியிருப்பதை "வேட்டை இன"க்குணமுள்ளவரிடம் காணலாம். இந்த ஆட்சியிலும் முன் கூறின மூன்று வகைப்பட்டவர்களின் குணங்களிருக்கின்றன. அவையாவன :- அதிகாரத்தை ஒரு சிலர் கையில் சேர்த்தல்; உண்டாக்குவதையும் விற்பதையும் கடுமையான கட்டுப்பாட்டிற்கு அடங்கினதாகச் செய்து தனித்தனி மனிதரின் சுயமுயற்சிக்கு இடம் கொடுக்காமலிருப்பது; லாபத்தை முக்கியமாகக் கருதாமல் பொதுப்பட்டதாகச் செய்து எல்லாருக்கும் நலம் ஏற்பட வேண்டுமென்ற நோக்குடன் இந்த அமைப்பு ஏற்பட்



டிருப்பினும், இதுவும் ஒரு வர்க்கத்தினரின் ஆட்சியே தவிர உண்மை ஜனநாயகமாகாது. உரிமைகளும் சக்தியும் அதிகாரத்தை வகிக்கும் ஒரு சிலர் கையில் சிக்கி விடுகிறது.

கடைசியாக "நாஸி" "பாஸிஸ்டு" அமைப்புகளில் நடுத்தர வகுப்பினர் அதிகாரத்தைத் தமது கையில் வாங்கிக் கொண்டிருப்பதைப்பார்க்கிறோம்.

**பொதுக்குணங்கள் :**

இந்த ஆட்சிகள் எல்லாமும் நகரங்களில் சேர்ந்து ஒரு நிலைப்பட்டிருக்கின்றன. உற்பத்தியாளர் கைகளிலும் தொழிலாளிகளின் கைகளிலும் எவ்வித உரிமையும் கொடுக்காமல் அவர்களைக் கேவலம் உத்திரவிற்குக் கீழ்ப்படிபவர்களாய்ச் செய்து விடுகிறது. இதனால் தொழிலாளிகளான ஜனத்திரள் சுயமுயற்சி குன்றினவர்களாய் நாளடைவில் க்ஷீணித்துவிடுகின்றனர். ஏற்கனவே, ஒன்றிரண்டு தலைமுறைக்குள் முதலாளி ஆட்சிக்குள் மிகவும் நேர்மையாக ஆளப்பட்டதென்ற அமெரிக்க ஐக்கிய நாட்டில் அந்நாட்டின் பொருளாக்க முறையின் பயனாய் பலவித நரம்பு வியாதிகள் ஏற்பட்டு அந்நாட்டினருக்குக் கவலையை உண்டாக்கியிருக்கிறது. நியூயார்க் என்ற ஒரு மகாணத்தில் மாத்திரம் இருபத்திரெண்டு பேர்களில் ஒருவன் பைத்திய ஆஸ்பத்திரியில் இருக்கிறானாம். ஆஸ்பத்திரிகளில் 81,000 புத்தி ஸ்வாதீன மற்றவர்களும், 40,000 பைத்தியங்களும் இருக்கின்றனராம்.

சுமார் 40,000 குழந்தைகள் அதிகமும் மந்த புத்தியாக இருப்பதால் சாதாரணப் பள்ளிக்கூடங்களில் அவர்களைச் சேர்க்க இயலுவதில்லையாம் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருக்கும் க்ஷயரோகிகளைப்போல் எட்டு மடங்கு அதிகமானவர் புத்தி பிரமையுள்ளவர்களாய் அங்கே இருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. மேலும் க்ஷயம், காலரா, பிளேக், குடல் வியாதி, டைபாய்டு, ஆகிய எல்லா நோய்களைவிட, மூளை நோய்களைப்பற்றியே அமெரிக்க டாக்டர்கள் அதிகம் பயப்படுகிறார்களாம். ஒருநாட்டின்

பொருள் உற்பத்தியின் அமைப்பு முறை இவ்வித நிலைமையை உண்டாக்கிற்றென்றால் அந்த நாடு தன்னுடைய திறமையினாலேயே முன்னுக்கு வருவது இயலாது. அதன் தலைவர்களைத்தானே உற்பத்தி செய்து கொள்ள அதற்கு சக்தி இருக்காது. தற்காலத்திய முதலாளியர் வசப்பட்ட தொழில் முறைகளினால் அத்தொழிலில் ஈடுபட்டு உழைப்பவர்களின் அழிற்கு இடமுண்டாகிறது. ஆகையால் அம்முறை தன்னுடைய நாசத்தை விளைவிக்கும் விதையைத் தானே உண்டாக்கிக் கொள்கிறது எனலாம். நாளடைவில் இம்முறை அழிந்துவிடும். ஆகையால் நமது நாட்டிற்கு ஓர் நல்ல பொருளாக்க முறையை ஏற்படுத்த நாம் விரும்பும் சமயம் இவ்விதம் மனக்கெடுதலையும் மூளைக்கெடுதலையும் உண்டாக்கும் அமைப்பை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

ஆலைத்தொழில்கள் அதிகம் கொண்ட மேல் நாடுகளில் அம்முறையினால் நரம்புத்தளர்ச்சியின் உபாதை அதிகம் இருப்பதினாலேயே அங்கெல்லாம் ஓய்வு வேண்டுமென்ற முறையீடு இருக்கிறது. அவர்களுடைய தொழில்முறை இயற்கைக்கு விரோதமானதால் ஓய்வு மிகவும் அவசியமாகிறது. மேலும் நரம்புகளுக்கு கெடுதல் ஏற்படுவதால் அவைகளை ஆச்வாஸப்படுத்த வேறு ஏதாகிலும் தேவையாக இருக்கிறது. இது தொழிலாளியைக் குடியிலும் கெட்ட வழக்கங்களிலும் இறங்கச்செய்கிறது. இயற்கை முறையில் தொழில் செய்தாலோ தேகத்திற்கு அசதி மாத்திரம் ஏற்பட்டு, சும்மா இருப்பதிலும் தூக்கத்திலுமே அந்த அசதி நீங்கி விடுகிறது. நரம்பு கெடுவதில்லை. வேறு வித மனப்போக்குகள் வேண்டியதில்லை.

மேலும் மேல்நாடுகளில் பல தொழிற்சாலைகள் வேலை செய்து கொண்டே இருக்கவேண்டுமென்றால், பற்பல சாமான்களை வாங்கினாலே உங்களுக்குச் சந்தோஷம் ஏற்படுமென்று பொது ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டே இருக்கவேண்டியதாகிறது. பெரிய ஆலைத்தொழிலை ஏற்படுத்த பலாத்காரமான சில சாசனங்களும் அவசியம்.



**முடிவு:**

• மேற்கூறிய "வேட்டை இன"க் குணங்கள் கொண்ட பொருளுற்பத்தி அமைப்புகளில் பல தீமைகளிருந்தும் சில குணங்களுமிருக்கின்றன.

பலத்தின் ஆட்சி, பணத்தின் ஆட்சி, எந்திர ஆட்சி ஆகிய மூன்றையும் பொதுப்பட முதலாளி ஆட்சி என்றே கூறுவோம்.

முதலாளி ஆட்சியில் ஒருவன் லாபம் எவ்வளவு வேண்டுமானாலும் பெறலாம் என்று இடம் கொடுக்கப்பட்டிருப்பதால், தனித்தனி மனிதர் தம்முடைய லாபத்தைக் கருதி எல்லாவற்றையும் சுரண்டப் பார்க்கிறார்கள். இதனால் சமூகத்திற்குத் தீங்கு ஏற்பட்டாலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஆனால் இம்முறையினால் ஏற்படும் குணமென்னவெனில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய திறமை முழுவதையும் தன்னிஷ்டப்போல் உபயோகிக்கக் கூடும். அதிக லாபத்தினால் சமூகத்திற்குக் கெடுதி விளைகிறதென்பதைத் தடுக்கமுயன்ற "பொதுவுடமை" ஆட்சி, லாபமே கூடாதென்று நேரேயடியாகச் சொல்லி எதிர்க்கோடிக்குச் சென்று விட்டிருக்கிறது. பொதுவுடமைக்காரர்களின் ஏற்பாட்டின்படி ஒரு சில உயர்ந்த இலக்ஷியக்காரர்கள் தேசத்திற்குத் தகுந்ததென்று அவர்களுக்குத் தோன்றும் தொழில் முறையைத் தயாரிக்கிறார்கள். தனிப்பட்டவனின் திறமையும் சக்தியும் முழுவதும் அடக்கப்பட்டு விடுகிறது. முதலாளி ஆட்சியில் இருப்பது போல் சுயகாரியமே கவனமாக இருப்பது கெடுதலென்றாலும், அதற்காக மனிதனின் சுய முயற்சியையே அடியோடு அடக்கி, ஒரு யந்திரம்போல் குறிப்பிட்ட காரியத்தை மாத்திரம் செய்பவனாக, சுயமாக நினைக்கும் சக்தியைக்கூட அவனுக்கு இல்லாமல் செய்து விடுவதும் நல்லதல்ல. நாம் இரண்டு கோடிக்கும் செல்லக் கூடாது. ஒன்றில் சுயநலப்பற்று அதிகரித்து விடுகிறது. மன்றொன்றில் மனிதனின் ஆத்மாவே இல்லாமல் அழிந்து விடுகிறது. முதல்

ஆட்சிக்குக் காரணம் பேராசை. இரண்டாவதற்குக் காரணம் வகுப்புத்துரோகம்.

முதலாளி ஆட்சியிலாகட்டும், பொதுவுடமை ஆட்சியிலாகட்டும் மனித குணங்களுக்குத் தகுந்த மதிப்புக் கொடுக்கப் படுவதில்லை என்பதே எமது வாதம். ஒவ்வொரு மனிதனும் ஒரு தனிப்பட்ட சக்தி யெற்றவன். அதைச்சரியாக விருத்தி செய்தால் அவனால் சமூகத்திற்கு நலமுண்டாகும். பாமர ஜனங்களை முதலாளி ஆட்சி நினைப்பதுபோல் பீரங்கிக்குப் பலியாகவே பிறந்தவர்கள் என்றாகிலும், பொதுவுடமை ஆட்சி நினைப்பதுபோல் ஒரு இயந்திரத்தின் ஆணி அல்லது சிறு சக்கரம் என்றாகிலும் நினைக்க நமக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. ஒரு நிலைப்பட்ட அதிகாரமே கூடாதென்றாவது, தனிஉரிமையே கூடாதென்றாவது முழுவதுமாக எதையும் ஒதுக்கி விடுவது சரியல்ல. லாப எண்ணமே கூடாதென்பதும் தவறாகும்; அவரவரிஷ்டப்படி தொழிலும் லாபமும் என்று விடுவதும் தவறாகும். நாம் பெறமுயல்வது முதலாளி ஆட்சிக்கும் பொதுவுடமை ஆட்சிக்கும் நடுப்பட்டதாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய இரண்டு வழிகளிலும் ஒரு சாதாரண மனிதனின் பூரணசக்தி வெளிப்படுவதில்லை. இரண்டு முறைகளிலும் ஒரு வகுப்புக்காரர் மற்றொரு வகுப்பினர் மீது அதிக்ரமிக்க இடமுண்டாகிறது. முதலாளி ஆட்சியில் தாங்கள் செய்யும் சாமான்களை வாங்குவதற்கு மனிதர்களைப் பிடிப்பதிலும், பொதுவுடமை ஆட்சி முறையில் வெளிதேசத்து மனிதன் உள்ளே வராமல் செய்து, தன்னுடைய ஏற்பாட்டையே பலாத்காரமாய் வற்புறுத்துவதிலும் அக்ரமம் ஏற்படுகிறது.

ஆகையால் நாம் இரண்டையும் சற்று சீர்திருத்திக் கொள்ளவேண்டும். லாபம் என்பதை அடியோடு ஒதுக்காமல், ஆனால் ஒரு தனி மனிதன் பெறக்கூடிய லாபத்திற்கு ஒரு எல்லையை ஏற்படுத்தினோமானால் அது நல்லதாகும். நம்மில் ஒவ்வொருவரும் முன்னேற்றமடைந்தாலே நமது



சமூகம் முன்னேற்றமடையும். அவ்விதம் ஒவ்வொருவரும் முன்னேற்றமடைய ஒரு அளவு சுயநலத்திற்கு இடம் கொடுக்கவேண்டும். இது நமது தினசரி வாழ்க்கையில் நன்கு தெரியும். சர்க்கார் உத்யோகம் போல் ஒரு திட்டமான சம்பளத்திற்கு உழைப்பவர் செய்யும் வேலை நாளடைவில் வழக்கத்தின்மேல் செய்யப்படும் உணர்ச்சியற்ற வேலையாக ஏற்பட்டு விடுகிறது. புதுத்துறைகளில் தூண்டி விடுவதில்லை. மிகப்பெரிய விஷயங்களைக்கண்டு பிடித்தலும், புதிது அமைத்தலும் முன்னேற்றமடைய விரும்பிப்புது வழிகளில் பிரவேசிக்க முயலுபவர்களால் ஏற்பட்டவைகளே தவிர, வழக்கத்தையே செய்துகொண்டிருப்பவர்களாலல்ல. வழக்கத்தையே செய்பவருக்கும், புதுவழியில் துணிந்து பிரவேசிக்க விரும்புவருக்குமாக இருதிறத்தாருக்கும் சமூகத்தில் இடம் இருக்கவேண்டும். தனித்தனி உற்பத்தி என்று ஏற்பட்டால் உற்பத்தியாளனுக்குத் தன்னுடைய முயற்சியின் பயன் தனக்கே கிடைக்குமென்ற நிச்சயம் ஏற்படும். ஆகையால் ஒரு நிலைப்பட்ட முதலாளி ஆதிக்ய உற்பத்தி செய்வது தொழிலாளியின் வாழ்க்கையில் குறைகளை உண்டாக்கினால் அதற்கு மாற்று பரவின பலநிலைப்பட்ட தனித்தனி உற்பத்தியேயாகும். சிலர் சேர்ந்து சுயநலப்பற்றற்று உழைப்பதால் ஒரு சிறிய சமூகத்திற்குள் லாபம் ஏற்படுகிறது என்று கூறலாம். அது உண்மை என்றாலும், இதையே ஒரு தேசத்திற்கான பெரியஅளவில் செய்வது இயலுமோ, பயனளிக்குமோ என்பது மிகவும் சந்தேகமான விஷயம். சில உயர்ந்த இலக்ஷியக்காரர்கள் வேண்டுமானால் கூடி ஆச்ரமம் ஏற்படுத்திக்கொண்டு பிறருக்குத்தொண்டு செய்யலாம். ஆனால் பிறர் தொண்டே தமது வாழ்க்கை என்ற கொள்கையைத் தேசமுழுவதும் அங்கீகரிக்குமாறு செய்வது இப்பொழுது உலகம் இருக்கும் நிலைமையில் இயலாத காரியம். ருஷ்யாவில் கூட பொதுவுடமை ஆட்சியை நிலைநிறுத்துவதற்காக வெளிதேசத்தினர் உள்ளே வராமல் பாதுகாக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த தேசத்தில் அரசாங்கத்தினரே வெளிநாட்டினருடன் வியாபாரம் செய்யலாம். வெளி

நாட்டினருடன் கலந்து பழகுவதுகூட மிகவும் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆகையால் பொதுவுடைமை என்ற கொள்கையை ஒரு ரஸாயன ஆராய்ச்சியாளர் தமது அறையில் கதவுகளை அடைத்துவிட்டு ஒரு நூதன விஷயத்தை ஆராய்வது போலவும் ருஷ்ய அரசாங்கத்தினர் ஆராய்ந்து பார்க்கின்றனர் என்று சொல்வது மிகையாகாது. ஆராய்ச்சி செய்வதற்கென்று பிறரைப் பிரவேசிக்க விடாமல் ஒரு சிறிய அளவு சிறிது காலம் கட்டுப்படுத்தலாம். ஆனால் மனித வர்க்கமே தனது பொருள் முயற்சியில் சில கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது வீண்.

முதலாளி ஆட்சியின் கீழ் உற்பத்தியானது தனக்கு லாபம் தேடுவதே நோக்கமாய், தொழிலை முக்கியவிஷயங்களிலிருந்து முக்கியமல்லாத விஷயங்களில் திருப்பிவிடுகிறது, ஆகாரத்தைவிட்டு அலங்காரத்தில் செலுத்துகிறது. ஏனெனில் ஆகாரத்தைவிட அலங்கார விற்பனையில் அதிக லாபம் கிடைக்கிறது, ஒரு ஏழையின் கையிலிருக்கும் ஒரு ரூபாய் அவனுக்கும் அவனுடைய குடும்பத்திற்கும் இரண்டு நாள் சாப்பாட்டிற்கு ஆகும். அதே ரூபாய் ஒரு தனவந்தனுக்கு ஒரு தாகசாந்திக் காகிலும் சுருட்டிற்காகிலுமே காணும். ஏழையின் கையிலிருக்கும் ரூபாய் அதிக பொருளை வாங்கும். தனவந்தனுடைய கையிலிருப்பது சிறிதளவே வாங்கும். ஆகையால் நிறையலாபம் பெற விரும்புவர்கள் நிறையப்பொருளைக் கொடுத்து ஏழையின் பணத்தைப் பெற முயல மாட்டார்கள். அது சிரமமான வேலை, லாபம் குறைவு. அதற்குமாறாக சுலபமாகக்காசை வீசி எறியும் தனவந்தர்களுக்கு வேண்டிய வஸ்துக்களைக் கொடுத்து அதிகலாபம் அடையவே முயல்வார்கள். ஒரு தொழிற்சாலையில் ஓலைப்பாய்களைச் செய்து ஏழைகளுக்கு விற்பதனால் கிடைக்கக்கூடிய லாபத்தைவிட உதட்டிற்கு வர்ணப்பூச்சு செய்து சீமாட்டிகளுக்கு விற்பதனால் அபரிமிதமானலாபம் கிடைக்கும். இந்தக்காரணத்தினால் தான் முதலாளி ஆட்சிக்குக் கீழ்பட்ட பெரியபெரிய தொழிற்சாலைகள் பல இருந்தும் இச்சமயம் உலகத்



தில் ஒரு புறம் உற்பத்தியாக்கப்பட்ட பொருள்கள் அதிகம் சேர்ந்து விற்கமுடியாத நிலைமையும், மற்றொருபுறம் பசிப்பிணியும் ஏற்பட்டிருக்கிறது.

முதலாளி ஆட்சியிலாகட்டும், பொதுவுடைமை ஆட்சியிலாகட்டும், ஒரு நிலைப்பட்ட உற்பத்தி இருந்தால் அது சீக்கிரம் தேசத்தில் குறைவை உண்டாக்கிவிடும். ஏனெனில் இம்முறையில் தொழில் செய்பவனின் சாமர்த்தியம் முன்னேற்றமடைய இடமில்லை. 'நமது தேசத்தினர் வியாபாரத்திலும் உத்யோகத்திலும் காண்பிக்கும் திறமைக் குறைவிற்கு முக்கியகாரணம் அவர்கள் பொறுப்பு வகிக்க இடம் கொடுக்கப்படாமல் இருப்பதே. அவரவர் தமது விருப்பம் போல் முன்னுக்குவர முயற்சிசெய்ய இடம் கொடுத்தாலே வளர்த்தி ஏற்படும். அதிகாரத்தைச் சிலர் கையில் கொடுத்து விட்டு, அதற்கு அடிமைப்பட்டிருப்பவர்கள் பயில்வான்களாக வளரவேண்டுமென்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. தனித்தனி பொறுப்பு கொடுத்தால் தான் பொருளாதார சுதந்திரமாகட்டும் அரசாங்க சுதந்திரமாகட்டும் துளிர்க்க முடியும். ஒரு எந்திரம் இருக்கவேண்டிய இடம் மனிதனுடைய கையாகும். மனிதரை எந்திரங்களுக்கு அடிமையாகச் செய்தால் அது தலைகீழ் அமைப்பு. எந்திரத்திற்காக வல்லவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டது.

பொதுவுடைமை ஆட்சியில் சமூகத்தை தூக்கிவைத்து தனிப்பட்ட மனிதர் துரும்பென மதிக்கப்படுகின்றனர். ஒருவன் தனது ஆத்மாவை இழப்பதாக இருந்தால், அவனுடைய சமூகம் அவனுக்கு எத்துணை சௌகர்யங்களைச் செய்து கொடுத்தும் என்ன பயன்?

பொதுவுடைமை ஆட்சியானது பொருள் முயற்சியில் ராணுவக்கண்டிப்பைச் செலுத்துகிறது. கட்டுப்பாடும் கண்டிப்பும் அதிகமானால் வளர்த்திக்கு இடமில்லை. ருஷ்யப் பொதுவுடைமை ஆட்சி வகுப்புத் துரோகத்தினால் ஏற்பட்டு வகுப்புத்துரோகத்தை அடிப்படையாகக் கொண்டது. இன்றைக்கும் அங்கே குடியானவனையும் தொழிலாளியையும்நடத்தும் முறையில் அதிக பக்ஷபாதமிருக்கிறது. ஏகாதி

ப[illegible]தியத்தில் அந்நியநாட்டாரிடம் எதிர்ப்பும் விரோதமும் உண்டாகிறது. பொதுவுடமை ஆட்சியிலோ தங்களுக்குள்ளேயே விரோதமிருக்கிறது. அதன் மனிதரே அதனுடைய விரோதத்தின் பயனை அனுபவிக்க வேண்டியதாகிறது. ருஷ்யாவில் நடுத்தர வகுப்பினர்களிடம் காட்டப்படும் பலாத்கார முறைகளைப்பற்றி நாம் கேள்விப்படும் கதைகளில் சிறிதாகிலும் உண்மை இருக்குமெனில், மனிதரின் முன்னேற்றத்தில் பற்றுடைய எவரும் அந்த முறையை நாம் கையாள வேண்டுமென்று சொல்லமாட்டார். நாம் ஏற்படுத்தும் ஆட்சியானது வகுப்புத்துரோகத்தை அடிப்படையாகக் கொள்ளக்கூடாது.

எவ்வித ஆட்சியாக இருப்பினும், ஆட்சி என்றால் அது பலாத்காரம்தானே என்று சிலர் வாதிக்கின்றனர். ஏற்கெனவே நாம் கூறியுள்ள பிரகாரம் ஆள்பவர்கள் சில திட்டங்களையும் விதிகளையும் அனுசரிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் அதை எவ்விதம், எவ்வளவு பிரயோகிக்கிறார்கள் என்பதில் வித்தியாசமிருக்கிறது. மிகப் பிரியம் கொண்ட தகப்பனாரும் தமது பிள்ளையைக் கண்டிக்கிறார். இவ்விதக் கண்டிப்பு பலாத்காரமென்றால், ஆட்சி என்று நாம் உத்தேசிப்பதிலும் பலாத்காரம் இருந்தே தீரும். ஒரு ஆட்சிமுறை உண்மையான ஜனநாயகம் என்றால் அது ஜனங்களின் ஆட்சியே. அவ்வித ஆட்சியில் இருக்கும் கண்டிப்பும் தண்டனையும் ஒருவன் தன்னுடைய இந்திரியங்களைக் கட்டுப்படுத்துவது போன்ற சுயக் கட்டுப்பாடேயாகும்.

## அத்தியாயம் 3

### கீழ்நாட்டுப் பொருளாக்க அமைப்புகள்.

மிகப் புராதன நாடுகளாகிய இந்தியா, சைனா, (முன்பு இருந்த) ஜப்பான் ஆகிய இவைகளில்தான் உழுது வாழும், பண்பு ஏற்பட்டு அது ஜனங்களின் பொருளாக்க அமைப்புகளைக் கட்டுப்படுத்துவதை காணலாம். இவ்விதக் கட்டுப்பாடு தத்வ ஞானத்தினாலும், சமூக திட்டங்களைச் சரிவர அமைக்க வேண்டுமென்ற முயற்சியினாலும் ஏற்பட்டது. மேல்நாட்டுஅமைப்புகள் யோசனையின்றித் தானாக வளர்ந்தவை. உண்மையில் மேல்நாட்டில் நாகரீகவாழ்க்கை இல்லை என்றே சொல்லலாம். அங்கே இருப்பது வெறும் கடசல் பிடித்த காட்டு வாழ்க்கை. இந்த விதிக்கு விலக்காக ஸோவியத் ருஷ்யா ஒன்றே சரியோ, தவறோ, ஒருவித தத்வ ஞானத்தைக்கொண்டு சமூக திட்டங்களை ஏற்படுத்த முயன்று கொண்டிருக்கிறது. கீழ்நாடுகளாகிய இந்தியா, சைனா, முதலியவற்றில் சமூகமானது ஜனங்களின் பொருளாக்க முயற்சியை இழுத்துச் செல்லும் விதம் அதனுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. "வேட்டை இன"க் குணங்களுக்கும் கூட்ட இன"க்குணங்களுக்கும் இடையில் வெகு தூரம். "கூட்ட இனக்" குணமுள்ளவர்கள் தமது நாடுகளில் ஏற்படுத்தியிருக்கும் பொருளாதார அமைப்புகள் அநேகமாய் ஒரேவிதக் குணங்களுள்ளவை: "வேட்டை இனக்" குணங்களுள்ளவர்களிடமோ பாலாத்காரம் செய்வது என்ற ஒன்றில் தான் ஒற்றுமை இருக்கிறது. உதாரணமாக சீன, ஜப்பான் தேசங்களில் சமீபகாலம் வரை வெளிதேசத்தவர் நாட்டில் பிரவேசிக்காமல் தடுக்கப்பட்டிருந்ததையும் இந்தியாவில் கடல்தாண்டி வெளிதேசம் செல்வது மிகஏளனமாகக்கருதப்பட்டு கண்டிக்கப்பட்டு வந்ததையும் கூறலாம். வியாபாரிகள் மாத்திரமே வியாபாரத்திற்கென்று மாத்திரம் வெளிநாடு சென்றனர். தொழில் முறையை நாட்டு திட்டங்களுடனே மதத் திட்டங்களுடனே பிணைத்து, அதற்கு அதிகாரம் ஒரே இடத்தில் சேராமல் உற்பத்தியைப் பரவினதாகச் செய்து ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. பலவீனமானவர்களுக்கும் உதவி வேண்டுவோருக்கும் உதவி ஏற்படும்விதம் பாதுகாப்புகள் இருந்தன. இந்தப்பாதுகாப்பை எவரும் மீரத்துணியார். இதன்பயனாக இந்தியாவில் பொதுக்குடும்பம், ஜாதிகேற்ற தொழில், விவசாயிகள் உழுது பயிர் செய்வதில தச்சன், கொல்லன் குசவன் ஆகியவர்களுக்கும் பங்கு என்ற நியமங்களைக் காணலாம்.

ஒரு பொதுக்குடும்பத்தில் சம்பாதிக்கத் திறமையுள்ளவர்கள் சம்பாதிப்பதை அக்குடும்பத்தினர் எல்லோரும் அனுபவிப்பார்கள். ஒருவனுக்கு அதிக வருமானமிருப்பின், அவனுடைய தம்பி சம்பாதிக்காவிடில், தமையன் தன்னுடைய வருமானத்தில் தம்பிக்கும் கொடுப்பான். இவ்விதம் ஒருவனுடைய கையில் தனம் அதிகம் சேராமல் குடும்பம் பகிர்ந்து கொண்டதால் மேல் நாட்டில் மிகுந்த தனவந்தர்கள் போட்டியிட்டுப் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்தினது போல் இங்கே செய்ய இயலாமலிருந்தது. இவ்விதம் பொதுக்குடும்பம் என்ற முறையினால் போட்டியில் அக்ரமம் செய்யும் சக்தி குறைந்ததல்லாமல் சம்பாதிக்கச் சக்தியற்றவர்களுக்கு ஆதரவும் கிடைத்தது. அந்தந்த ஜாதியினர் அந்தந்தத்தொழிலைச் செய்வது என்பதனால் ஒரே தொழிலை எல்லாரும் செய்யாமல் ஒருவருக்கொருவர் உதவியான தொழில்களைச் செய்ததுடன், பேராசை கொண்டு போட்டியிடுவதும், ஒரு பொருளை அதிகம் உண்டாக்கி விட்டுப்பிறகு விற்கமுடியாமல் கஷ்டப்படுவதும் இல்லாமலிருந்தது. தச்சன், கொல்லன், குயவன் முதலியவர்களுக்குக் குடியானவன் நெல்லளப்பதும், அவர்கள் இவனுடைய கலப்பையை மராமத்து செய்து, சட்டிபானைகள் கொடுப்பதும் பரம்பரையாக ஏற்பட்டு, ஒவ்வொருவருக்கும் ஓரளவு உணவு நிச்சயம் கிடைக்குமென்பதுடன், அவரவர் தொழில் க்ஷீணமடைந்து அழிந்து விடாமலிருக்கக் காரணமாகவும் இருந்தது. இவ்வித அமைப்பினால் பலவீனமானவர்களை பலவந்தர்கள் ஆக்ரமிக்க இடமில்லை. இந்த அமைப்பிற்கு அடிப்படையாக இருக்கும் கருத்து செல்வம் எல்லோரிடமும் பரவியிருப்பதற்கு வழி யாவரும் தத்தம் தொழிலைச்செய்வது என்பதேயாகும். நமது தேகத்தில் தனித்தனி உருப்புகளான கைகால்கள் தனித்தனி வேலையைச் செய்து பொதுவான தேகத்தை ரக்ஷிப்பது போலவும், சமூகத்தின் தனித்தனி அங்கத்தினர் தனிப்பட்ட வேலையைச் செய்து பொதுவான சமூக வாழ்க்கை என்ற ஒரு பூரணவஸ்துவை ரக்ஷிப்பது என்பதே அம்முன்னோர்களின் நோக்கம். நமது சரீர



வாழ்க்கையில் கை கால்கள் நெஞ்சுடன் சண்டை இடுவதாகிலும் வயிறு இதயத்திற்கு ஆகாரம் கொடுக்கமாட்டேனென்று சொல்வதாகிலும் பொருத்த மற்றதாகுமல்லவா!

மேலும் இவ்தக் கட்டுப்பாட்டிற்குள் வளர்பவர்கள் தங்களுக்குள் ஒற்றுமையுள்ளவர்களாய் வெளி மனிதன் வந்து இவர்களுடையதைப்பற்றிக் கொண்டு போகாமல் தங்களைக் காப்பாற்றிக்கொண்டிருந்தனர். இவர்களுடைய வாழ்கையானது வெளியிலிருந்துவரும் ஓநாய்களிடமிருந்து காப்பாற்றும் பட்டிக்குள் அடைக்கப்பட்ட ஆட்டுமந்தைகளுடையது போன்றதாக இருந்தது. வெளி மனிதர்களின் சுரண்டல் இல்லாமலில்லை. ஆனால் இவ்வித அமைப்பினால் அதனால் ஏற்படும் கேடுகள் குறைந்து பலவீனமானவர்களுக்குப் பாதுகாப்பு இருந்தது. இக்காலத்தில் மிகப் பெரிதாக விரிந்திருக்கும் தொழில்களின் விளைவுகளைத் தாங்க அந்தப் பழைய அமைப்பிற்குச் சக்தியில்லை. இருந்தும் நாம் அந்தப் பழைய அமைப்புகளைச் சரிவரக் கவனித்துக் கூடியவரை அவ்விதமானதாக, தொழிலாளிக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படாமலும், அதே சமயம் ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய உழைப்பின் பூரண லாபம் கிடைக்கும் விதமும் செய்யவேண்டும். “வேட்டை இன”க் குணத்தின் அமைப்பில் துணிந்தவன் தன் இஷ்டம்போல் செய்யலாம் என்று விட்டிருப்பதனால், தனிப்பட்டவனுக்குப் பூரண சுதந்திரமிருப்பதையும், “கூட்ட இன”க் குணத்தின் அமைப்பில் சமூக நலத்தை உத்தேசித்து பூரண சுதந்திரத்தினால் ஒருவனுக்கு சுய நலம் அதிகரித்துவிடுமென்று அது ஓரளவு கட்டுப்படுத்தப் பட்டிருப்பதையும் இதுவரையும் விளக்கியுள்ளோம்.

**இதர விஷயங்கள் :**

இவ்வித நோக்குடன் நாம் கீழ் நாட்டினரையும் மேல்நாட்டினரையும் கவனிப்பின் “வேட்டை இன” “கூட்ட இன”க்குணங்கள் பொருளாக்க முயற்சியில்

மாத்திரமல்ல, அரசாங்க, மத, சமூக விஷயங்களிலும் காணப்படுவதை அறிந்து கொள்ளலாம்.

அரசியல் விஷயத்தில் உண்மை ஜனநாயகமென்பது மேல் நாடுகளில் எங்கும் இல்லை. பார்லிமெண்ட் என்ற வேஷம் தரித்து உண்மை அதிகாரம் ஒரு சில வர்கத்தினர் அல்லது ஒரு திறமை சாலியின் கையில் இருக்கிறது. அதே விதம் யேசு போதித்த மிகப் பொதுப்பட்டதும் சகிப்புத் தன்மையுள்ளதுமான மதமும் மேல்நாட்டாரின் அமைப்பு முறையில் எல்லா அதிகாரமும் போப் அல்லது மாதா கோயில் அதிகாரிகளின் கையின்கீழ் அடங்கினதாக இருக்கிறது. இதன் பலனாக பிறர் மதம் பொறுக்காத வெறுப்பு அவர்களிடை ஏற்பட்டிருக்கிறது. சமூக வாழ்க்கையிலும் அரண்மனையின் நவநாகரீகத்தைப் பிரபுக்களும், பிரபுக்களைக் குடிகளுமாகப் பின்பற்றுகிறார்கள். நகரத்தில் நடப்பதைக் கிராமத்தினர் பின்பற்றுகின்றனர். இதனால் ஏற்பட்டிருப்பது முன்காலத்தில் கிரேக்க ரோம நாகரீகம் போன்ற நகரத்தில் வாழ்வதற்குரிய குணத்தை அளிக்கும் வெறும் நாகரீகமே. அதை ஒரு நாட்டின் மனிதரின் ஆத்ம விருத்தியைக்காண்பிக்கும் பண்பு என்று சொல்வது இயலாது.

இந்தியாவிலோ முன் காலத்தில் அரசியலைப்பற்றின வரை ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய வேலையைத் தான் செய்து கொண்டது. வெளித்தேசத்தினர் படையெடுத்து வந்த சமயம்கூட கிராமத்துக் குடிகளின் வாழ்க்கையில் அதிகம் மாறுதல் இல்லை. மதத்திலும் அவரவர் இஷ்டப்படி ஆராதித்து, ஒரு நிலைப்பட்ட அதிகாரம் எவரும் வகிக்காமல் இருந்ததால் பிற மதத்தைப்பற்றின துவேஷம் மிகக் குறைவாக இருந்தது. சமூக வாழ்க்கையிலும் ஆடம்பரமும் வைபவமும் அரண்மனைக்கும் கோயிலுக்கும் விடப்பட்டு, மக்களின் சாதாரண வாழ்கை கிராம்ய வாழ்க்கைக்கு ஏற்றதாக இருந்தது. ஜனங்களுக்கு இயற்கையாக உண்டாகும் ரஸிக குணத்தின் ஆடம்பரமெல்லாம்கோயில் உற்சவங்களைப் பெரிதாகக் கொண்டா



டுவதில் செலவழிக்கப்பட்டது தம்மை விளம்பரப்படுத்திக் கொள்வதில் அல்ல.


"வேட்டை இன"க் குணத்திற்கும், "கூட்ட இன"க் குணத்திற்கும் அடிப்படையாக இருக்கும் வித்யாசத்தை நாம் எடுத்துக் காட்டியுள்ளோம். இந்தியா வெகுகாலமாய் "கூட்ட இன"க் குணத்தாரின் கீழ் இருந்திருக்கிறது. தனக்கென்று ஒருவிதப் பண்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இதன் பேரில் "வேட்டை இன"த்தாரின் பண்பை வைத்தால் அதைத்தாங்குவது அதற்கு நஷ்டமுண்டாக்கும். இந்தியாவில் ஒரு தலைமைப்புருஷரின் கீழ் சிலர் சேர்ந்து ஒத்து உழைப்பது என்பது எவ்வளவு கஷ்டமாக இருக்கிறதென்பதை நாம் அடிக்கடி கவனித்திருக்கிறோம். சாதாரண தினசரி பத்திரிகைகளைப் படித்தால் டிஸ்டிரிக் போர்டு முதலிய அமைப்புகள் ஒத்து உழைப்பதற்கு எவ்வளவு சிரமப்படுகின்றன என்பது தெரியும். ஆனால் இவ்விதத்தலைவன் கீழ் கண்களை மூடிக் கொண்டு ஒருமித்து உழைப்பது என்பது "வேட்டை இன"த்திற்கு மிக அவசியமான குணமாகும். இந்தியாவில் அவ்வித ஒத்துழைப்பு கிடைப்பது சிரமமாக இருப்பதற்குக் காரணம் இங்கே பல ஆயிரம் வருஷங்களாக ஏற்பட்டிருக்கும் பண்பின் வழக்கம். ஆகையால் மேல் நாடுகளைப் போன்ற பெரிய தொழில் அமைப்புகளை நாம் இங்கே ஸ்தாபிக்க விரும்பினால், இவ்விடத்திய குணங்களையும், தற்காலத்தில் வசதிக்கு ஏற்றதான தொழில் முறைகளையும் ஆலோசித்து நிர்ணயிக்கவேண்டும். அப்பொழுதே மேல் நாடுகளில் ஆலைத்தொழில்களினால் ஏற்படும் தீங்குகள் இங்கே விளையாமலிருக்கும்.

நமது பண்டைய அஸ்திவாரத்தின் பேரில் ஒரு புது அந்நிய நாட்டுக்கட்டிடத்தை எடுத்துவைத்தால் அது நிலைத்திருக்காது. சீட்டாடும் கார்டுகளைக் கொண்டு கட்டப்படும் வீடு போல் கீழே விழும்.

ஜன்னல் ,வாதில்களெல்லாம் அடைத்துவிட்டு ஆவியின் உஷ்ணத்தினால் கண்ணாடி அறைகளில் வளர்க்கப்படும்

செடிகளைப்போல் பாதுகாத்து வளர்க்கப்படும் ருஷ்ய தேசத்து முறை அந்நாட்டில் எவ்விதம் வளர்ந்தாலும், நமது தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டால் இங்கே விருத்தியாகாமல் அழிந்துவிடலாம். ஒரு நிலைப்பட்ட அதிகாரத்தை சிலர் கையில் சேர்த்து வைத்துக்கொள்வது குறுகிய நோக்கம். அதிகாரத்தைப் பலரிடம் பிரித்துக் கொடுத்து அவ்வித அதிகாரம் சமூகத்தைச் சேர்ந்ததாக செய்தால், அந்த அமைப்பு நீடித்த நோக்குள்ளதாக இருக்கும்.

இந்த அத்யாயத்திலும் இதற்கு முந்தின அத்யாயங்களிலும் கூறப்பட்ட விஷயங்களைக் கீழ்க்கண்ட வம்சாவளி விளக்கிக் காட்டும்.




மேல்காட்டிய வம்சாவளியிருந்து மேல் நாட்டார் தமது தொழில் முறையின் மூலம் ஏற்பட்ட நாகரீகத்திலிருந்து அதற்கு ஒத்ததாக சில சமூக, அரசியல் திட்டங்களை ஏற்படுத்திக் கொண்டிருப்பது தெரியவரும். இந்தி



யாவில் முன்பு இருந்த உழுதுவாழும் நாகரீகம் குன்றி க்ஷீணித்து விட்டிருக்கிறது.

## நான்கு வருணங்கள்.

நாம் நமது இலக்ஷியங்களிலிருந்து வழுவிவிட்டோம். மறுபடி அவைகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றால் நமது முன்னோர்கள் கொண்டிருந்தவையும் அவர்களுக்கு உதவியாக இருந்தவையுமான கொள்கைகளை நாம் மறுபடிபெற முயலவேண்டும். நமது அழிவிற்கு முக்கிய காரணம் நமது தேசிய குணம் கெட்டுவிட்டதும், தனிப்பட்டவரின் சுயநலப்பற்றுமே. சமூகம் என்பது பலர் கூடி ஏற்படுவது. அவர்களை நான்கு வகையினராகப் பிரிக்கலாம்.

(1) இலக்ஷியக்காரர்கள்—: வாழ்க்கையைப்பற்றின தீர்க்க தரிசனம் கொண்டவர்களாக உயர்ந்த இலக்ஷியங்களுக்கென்று வாழ்பவர். (2) தர்மிஷ்டர்கள்:- வாழ்க்கையைப்பற்றி அதிகம் உன்னத மனப்பான்மை இல்லாவிட்டாலும், தமக்கென்றே நினையாமல் வாழ்பவர். (3) பொருள் விரும்புவோர் தமது வாழ்க்கையைப்பற்றி மாத்திரமே கருத்துள்ளவர்கள். (4) எவ்வித நோக்கமும் இல்லாமல் பிறர்செல்லும் பாதையில் செல்பவர். வர்ணாச்ரம முறைப்படி இந்நான்கு வகையினரையும் பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்திர ரெனலாம்.

பிராம்மணரென்பவர் இனி வருபவற்றைத் தெரிந்து கொள்ளும் எதிர்கால நோக்கு உடையவர்; ஆகையால் தமது பூத உடலை மறந்து இலக்ஷியங்களுக்காகவே என்று வாழ்பவர். அவருடைய சின்னம் பிக்ஷுவின் ஓடு. தமது இலக்ஷியத்தைப் பெறுவதற்கு யாவற்றையும் துறக்கத் தயாராக இருப்பவர். தமது கொள்கைகளில் சிறிதும் விட்டுக் கொடுப்பது என்பதை அறியாதவர். புத்தியினால் உழைப்பவர்கள் நிலை இவ்விதமானதே. தமது இயற்கையான புத்தியின் உழைப்பைக்கொண்டு சுயநலப்பற்றுடன் அதிகலாபம் சுரண்டாமலிருப்பதற்கென்று பண விஷயத்

தில் அவர்கள் இவ்விதம் விருத்தியடையாமல் தடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் தமது வாழ்க்கையை சமூகத்திற்கு உழைப்பதற்கு பரிசுத்தமான வழியில் அர்ப்பணம் செய்யவேண்டும். அதற்கு மாற்றாக அவர்கள் பெறுவது கௌரதையும் மதிப்புமே.

க்ஷத்ரியரென்பவரோ தமது வாழ்க்கையைத் துச்சமாக மதித்துத் தமது சமூகத்தின் நலத்திற்கென்று தாம் உயிர் துறக்கசித்தமாக இருந்தாலும், தமது சமூக நலத்திற்கென்று மாத்திரமே உழைப்பவர். அதற்கு மேற்பட்டுப் போகார். தேவை என்றால் தமது இலக்ஷியங்களிலும் சிறிது விட்டுக்கொடுப்பார். அவருடைய சின்னம் கொடி. தன்னைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பதே அவர் பெருமை. செல்வாக்கும் பதவியும் அவருக்கு வெகுமதி.

மூன்றாவது வகுப்பினர் தம்மைப்பற்றியே நினைப்பவர். அதற்கு மேற்பட்டு பார்க்கத்தெரியாதவர். அவருடைய இலக்ஷியமும் குறுகினதே. ஜயிலுக்குப் போகாத நியாய வாழ்க்கையில், தமக்குச் சுகத்தைதேடிக் கொள்வதே அவர்கள் நோக்கம். அவருடைய சின்னம் தராசு. இவ்விதமானவரே வைசியரெனப்படுவர். பொருள் தேடும் வியாபாரி. அவர் நிறைய தனம் சேர்த்தாலும் சமூகத்தில் அவர்கள் தர்மம் செய்தாலே அவர்களுக்கு மரியாதை உண்டு.

வைசியரின் துணிவும் திறமையும் கூட இல்லாதவர் சூத்திரரெனப்படுவர். தமது சம்பளம், பென்ஷன் இவைகளுடன் திருப்தி அடைகிறவர். பிறர் இடும் வேலையை செய்பவர். உதாரணமாக சுயநலம் கருதாமல் ஞானம் பெற வேண்டுமென்ற உணர்ச்சியுடன் மின்சார சக்தியின் உண்மைகளை ஆராய்ந்து கண்டுகொள்ளும் விஞ்ஞானி பிராம்மணனாவான். அந்தத்தத்துவத்தைக் கற்று தனது தேசத்தில் அதன் உதவியால் தொழில்களை விருத்திசெய்ய விரும்புபவன் க்ஷத்திரியனாவான். இலக்டிரிக் சாமான்களை லாபத்திற்கு விற்றோ, அல்லது கண்டிராக்டிற்கு இலக்டிரிக் வேலை செய்தோ ஜீவிப்பவன் வைசியனாவான். திட்டமான



சம்பளமும் பிற்பாடு பென்ஷனும் கிடைக்குமென்ற நிச்சயத்திற்காக சர்க்காரின் இலக்டிரிக் இலாகாவில் வேலை பெற விரும்புபவன் சூத்திரனாவான்.

பிராம்மணனாகப் பிறந்து, சட்டங்களைக்கற்று, பிறர் சண்டையிடுவதைத் தனக்குப் பயன் படுத்திக்கொண்டு பணம் சம்பாதிப்பவன் பிராம்மணனேயல்ல, வைசியனாவான். க்ஷத்ரியனாகப் பிறந்து அந்நிய நாட்டாரின் அரசாங்கத்தின் கீழ் வேலை பார்க்க ஒத்துக்கொள்பவன் தன்னைப் பணத்தின் பொருட்டு அடிமையாகச் செய்து கொள்ளுகிறான். அவன் க்ஷத்திரியனேயல்ல. உண்மை க்ஷத்திரியனானவன் தனது ஆத்மாவை விற்கமாட்டான். தன்னுடைய சுதந்திரத்திற்காக உயிரையும் விடுவான்.

வருணாச்ரமத்தின் சாரம் இதுவே. இம்முறையினால் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு அவ்விதப் போட்டியினால் சமூகத்திற்கே அழிவும் நஷ்டமும் உண்டாவது தடுக்கப்படும். ஒத்துழைப்பும் கட்டுப்பாடுமே சமூக ஒழுங்கிற்கு அடிப்படையான விஷயமாக இருக்கும். இவ்வித முறையானது ஒரு உயர்ந்த பண்பின் மூலம், பொருளைவிட இலக்ஷியம் முக்கியமானது என்ற கொள்கைகளைக்கொண்டு ஏற்றபட்ட பண்பின் மூலம் உண்டாயிருக்கிறது. பொருளை முக்கியமாகக் கருதுவோருக்கு இது தெரியவராது. மனிதரின் க்ஷேமத்தை முக்கியமாக யோசித்தால் பொருள் சேர்ப்பது துச்சமாக மாறும். கடமையும் நமது உரிமைகளுமே நமக்கு சமூகத்தில் ஏற்ற ஸ்தானத்தை அளிக்கின்றன. இந்த தத்துவங்களை நன்கு அறிந்தோமானால் சண்டையில்லாமல் சமாதானமே எங்கும் நிரவியிருப்பதற்கு வழி ஏற்படும்.

# நான்காம் அத்யாயம்.

## பொருள் உற்பத்தி வகைகள்.

நாம் முந்தின அத்தியாயங்களில் ஆராய்ந்த பொருள் உற்பத்தி வகைகளை, அவைகளுக்கு அடிப்படையாக இருந்து அவைகளை உருவாக்கின முக்கிய குணங்களை ஆதாரமாகக் கொண்டு நான்கு இனமாகப் பிரிக்கலாம்.

(1) பறிமுதல் பொருளாக்கம்.
(Economy of Predation)

(2) முயற்சிப் பொருளாக்கம்
(Economy of Enterprise)

(3) கூட்டுமுறைப் பொருளாக்கம்
(Economy of Gregarianism)

(4) அழிவற்ற பொருளாக்கம்
(Economy of Permanance)

### பறிமுதல் பொருளாக்கம்:

ஏற்கெனவே கூறிய விதம், பொருள் முயற்சியில் மிகச் சுலபமான முறை ஏதும் தான் இயற்றாமல் முன்பே இருக்கும் ஒன்றைக்கொண்டு தனது தேவையைத் திருப்தி செய்து கொள்வது. வேட்டை ஆடுவது, மீன் பிடிப்பது, ஓர் அளவு சுரங்கங்களிலிருக்கும் பொருள்களை எடுப்பது ஆகியவை இந்த வகையைச் சேர்ந்தவை. தனது கடமை உரிமை ஆகிய எதையும் சிறிதும் பாராட்டாமல் தனது தேவையை திருப்தி செய்துகொள்ள வேண்டுமென்ற ஒரு எண்ணத்துடன் செய்யப்படுவது. இந்த முறை, இது மிகவும் மட்டமானது. மிருகங்களின் வாழ்க்கையில் பொருளாக்கம் என்ற தத்துவத்தைக்கொண்டு ஆராய்ந்தால் எல்லா மிருகங்களும் இந்த வகையைப் பின்பற்றுபவை என்பது வெளியிடப்படும். இவ்விதம் தான் எதுவும் செய்யாமல் தமக்கு லாபம் பெற முயலுவது மிருக வாழ்க்கைக்கு மனிதரை இழுக்கும்.



### முயற்சிப் பொருளாக்கம்:

அடுத்தபடி ஒருவர் தன்னுடைய உரிமையை உபயோகிப்பது. ஒருவனுக்குச் சில திறமை இருக்கிறது. அவன் அதைத் தன்னுடைய லாபத்திற்கென்று உபயோகித்துக் கொள்ளுகிறான். வேறு எவரும் அதனால் லாபமடைந்து விடாத விதமும், தன்னுடைய வேலையில் வேறு எவரும் குறுக்கிடாத விதமும் பார்த்துக் கொள்ளுகிறான். இது மனித வாழ்க்கையில் முதற்படி. மனிதன் ஒரு தேவையை (தேவையான வஸ்துவை) உண்டாக்கி, அதைத் தனக்கென்று வைத்துக்கொள்ளுகிறான். இந்த முறையின் பயனாகவே முதலாளித்வ மனப்பான்மை, 'சர்க்காரின்' கண்ட்ரோல்'' அதிகார விதிகள் ஆகியவற்றிற்கு உடன்பட்டு வாழும் 'செய்தால் செய்து கொள்ளட்டும்' என்ற போக்கு ஏற்பட்டிருக்கிறது. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சென்ற ஒரு நூற்றாண்டாக இவ்வித வாழ்க்கையைப் பற்றின சுயநலமான தன்மையின் கீழ் தொழில்கள் சிக்குண்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் தனக்கென்று பற்றிக் கொள்வது. கடைசியாக வருபவன் கதி எக்கேடாகிலும் ஆகட்டும் என்ற ரீதி. இது தன்னை திருப்தி செய்துகொள்ள ஏற்பட்ட ஒத்தை அடிப்பாதை. எல்லாரும் சேர்ந்து போகக்கூடிய வழி அல்ல.

### கூட்டுப் பொருளாக்கம்.

மனிதன் வளர்ச்சியில் மேன்மேலும் அறிவு ஏற்பட்டு எவரும் தனக்கென்று மாத்திரம் வாழ்வது சரியல்ல என்ற உணர்ச்சி உண்டாகி, இதர மனிதர்களுடன் பழக்கமும் பாசமும் ஏற்படவே, மனிதருக்குக் கூட்டு உணர்ச்சி உண்டாகிறது. இதிலும் கூடும் வகையில் வித்தியாசமிருக்கிறது.

#### (க) ஏகாதிபத்யம்

கூடும் வகையில் மிகச் சாதாரணவகை கூட்டத்தாரின் நலத்திற்கென்று சேருவது. மேல் நாடுகளில் ஏற்படும் Cartels, Combines, Trusts, Monopolies முதலியவை

இவ்வகையானவை. இவ்விதம் கூடுபவருக்கு பறிமுதல் பொருளாக்க உணர்ச்சியும் இருந்தால் அது "ஏகாதிபத்யம்" என்ற பெயரில் ஒரு வகுப்பினரின் உழைப்பையும் சக்தியையும் தமது வகுப்பினரின் லாபத்திற்கென்று ஏற்படுத்திக்கொள்ளும். இம்முறையும் சுயநலமே முக்கிய கொள்கையாக இருந்து தமது கடமையைப் புறக்கணித்து உரிமையை மாத்திரம் கவனிக்கும். தமது வர்க்கத்தார் நலத்திற்கு பிறவற்றை பயன்படுத்திக்கொள்ளும்.

## (உ) பாஸிஸ்டு, நாஸி, கம்யூனிஸ்டு, ஸோஷலிஸ்டு முறைகள்.

தத்வ வளர்ச்சியோ, சமூக உணர்ச்சியோ, பொருளாக்க உணர்ச்சியோ, ஒரேவகையானதாகக்கொண்ட பல வகைப்பட்ட மனிதர் ஒன்றுகூடினால் அவர்கள் தங்களுடைய பொதுப்பட்ட நலத்திற்கென்றோ தங்களுடைய கொள்கைகளின் வெற்றிக்கென்றோ சேர்ந்து முயற்சிக்கிறார்கள். இவ்விதக் கூடுதலில் தமது கடமைகளைப் பற்றின சிந்தனை ஓர் அளவு இருக்கிறது. ஆனால், அது தமது வகுப்பைச் சேர்ந்தவர்களிடமே இருக்கிறது. பிற வர்க்கத்திற்கு எதிராகத் தமது வர்க்கம் வெற்றிபெற வேண்டுமென்ற உணர்ச்சி அதிகம் இருக்கிறது. இந்த முறையினால் பலவகை சமூக அமைப்புகள் இந்த நூற்றாண்டில் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் ஒன்றுக்கொன்று சற்று சற்று மாறுதல்கள் இருக்கின்றன; ஆனால் அடிப்படையான தத்வம் ஒன்றே கொண்டவை. சாம்ராஜ்யத்தின் கீழ் இருப்பதைவிட இவ்வித முறைகளில் பறிமுதல் என்பது குறைவாகவே இருக்கும். ஆனால் இம்முறை அதிக தீவிர தேசீய உணர்ச்சியை உண்டாக்கி விடுகிறது. மனிதனின் ஆத்மீக மேன்மை, பண்பு முதலியவை புறக்கணிக்கப்பட்டு சரீர தேவைகள் மாத்திரமே கவனிக்கப்படுகின்றன. மேலும் தங்கள் சமூகமும் இதர சமூகமும் எவ்விதம் ஒருவருக்கொருவர் நடந்துகொள்வது என்பதைப்பற்றியே அவர்கள் சிந்திப்பதில்லை.



## அழிவற்ற பொருளாக்கம்:

நாம் இதுவரை கூறிய பொருளாக்க முறைகளையெல்லாம் மாறுபடும் பொருளாக்கம் என்று கூறலாம். ஏனெனில் அவைகள் ஒரு மனிதன், அல்லது கூட்டம், அல்லது ஒரு தேசத்தின் ஜீவிய காலம் வரையே இருப்பவை. நாம் ஸ்திரமாக இருக்கும் முறையை ஏற்படுத்த விரும்பினால் நிரந்தரமான உண்மைகளை அவைகளுக்கு ஆதாரமாக வைத்து ஏற்படுத்தவேண்டும்.

உரிமைகளை மாத்திரம் நாம் முக்யமாகக் கருதினோமானால் நமது வாழ்க்கை சுயநலம் கொண்டதாகவும் நமக்கே அழிவை உண்டாக்குவதாகவுமாகும். நமது கடமைகளைக் கருதினோமென்றால் நம்மில் ஒவ்வொருவர் வாழ்க்கைக்கும் பிறர் வாழ்க்கைக்கும் இருக்கும் சம்பந்தத்தைக்கொண்டு நமது வாழ்க்கையின் மதிப்பு ஏற்படும். இதனால் ஸ்திரத்தன்மை ஏற்படும். மனிதன் கடவுளின் சிருஷ்டியின் ஓர் அம்சம். தன்னைச் சுற்றியிருக்கும் இதர ஜீவாத்மாக்களிடம் இவன் கொண்டுள்ள அன்பின்மூலம் இவன் இறுதியில் பரமாத்மாவுடன் ஐக்யமாகவேண்டியவன். அவனுக்கு இருக்கும் இந்த சொல்ப காலத்திய வாழ்க்கையை சுகப்படுவதிலேயே கழிப்பதற்கல்ல அவன் வாழ்க்கையெடுத்திருப்பது. அவன் நிரந்தர கால அளவைக் கணக்கிட்டு அதில் தனது அல்ப ஆயுட்கால வாழ்க்கையை ஒத்திட்டு, "இந்த துச்ச மனிதனையும் தாங்கள் ஏன் பாதுகாத்துவருகிறீர், பிதாவே!" என்று கேட்கவேண்டியவன். நமக்கு இங்கே எப்போதும் தங்கியிருக்க இடம் கிடையாது. யாத்ரீகர்களாய் நாம் வந்து போகிறவர்கள்.

கடவுளின் சிருஷ்டியைப்பற்றி இவ்வித அபிப்ராயம் கொண்டிருப்பதனாலேதான் காந்திஜீ மனிதர் வாழ்க்கையில் ஏற்படும் பெரிய விபத்துக்களுக்கெல்லாம் காரணம் மனிதர் கடவுளின் கட்டளைப்படி நடக்காமல் பாவம் செய்வதே என்று கூறுகிறார். கடவுளின் கட்டளைப்படி நடப்பதென்றால் மனிதன் செய்யவேண்டிய காரியங்களுக்கு

அவனுக்கு வழிகாட்டியாகக் கடமை என்ற ஒன்றுதான் இருக்கும்—தர்மம் என்பதுதான் அழிவற்றதற்கு வழி.

பொருள் முயற்சி என்ற சாஸ்திரத்தின் நியாயங்களை ஏற்படுத்தும் சமயம் நாம் மனிதரின் அல்ப ஆயுட்காலத்தையும், பிரம்மகால அளவையும் உணர்ந்து நமது விதிகளை ஏற்படுத்தவேண்டும். அவ்வித மனப்பான்மை இருந்து ஏற்படுத்தினால்தான் முன்னேற்றமும் க்ஷேமமும் ஏற்பட்டு நாளுக்குநாள் பண்பும் நாகரீகமும் வளர இடமாகும். ஆகையால் நாம் நமக்கு தற்காலத்திலிருக்கும் தேவைக்கென்று பொருள் முயற்சி விதிகளை ஏற்படுத்தாமல் எக்காலமும் சத்யமாக இருக்கும் தர்ம விதிகளின் ஆதாரத்தின்பேரில் அவைகளை ஏற்படுத்தவேண்டும்.

அவ்வித பொருள் முயற்சி முறையில் இயற்கையிலிருக்கும் வஸ்துக்களை மிகச் சிக்கனமாய்ச் செலவு செய்ய வேண்டும். நிறைய கிடைப்பதைப் பற்றிக்கொள்வோம் என்ற கொள்கையில் வேலை செய்யாமல், மனிதர் உழைப்பினால் எப்போதும் எவ்வளவு உண்டாக்க இயலுமோ அதற்குத் தகுந்த செலவு என்று விதித்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் செய்யப்பார்த்தால், செலவழிக்கும் வகையைப்பற்றி கருத்து ஏற்படும். தற்காலத்தில் மேல் நாட்டில் மிக "ஏற்றது" என்று கையாளப்படும் வகைக்கும் நாம் மேற் கூறியிருக்கும் வகைக்கும் அதிக வித்யாசம் இருக்கும். இரும்பு போன்ற உலோகத்தை சிக்கனமாக செலவழிக்கவேண்டி வரும். ஏனென்றால் சுரங்கங்கள் நிரந்தரமாய் இரா. காலப் போக்கில் வற்றிவிடுபவை. கூடியவரை மனிதர் உழைப்பினால் உண்டாக்கக்கூடிய பொருள்களைக்கொண்டே வாழ முயலவேண்டும். கவனமாகக் கணக்கிட்டு மரங்களைப் பயிர்செய்து காடுகளை வளர்ப்பதனால் நமக்கு எப்போதும் மரம் கிடைக்கும் விதம் செய்து கொள்ளலாம். "தத்கால" வாழ்க்கை "இரும்பும் எஃகும்" கொண்டு வாழும் வாழ்க்கை. நமக்கு இருக்கும் சொத்தை நாம் தாறுமாறாக செலவழித்து விடக்கூடாது. செங்கல்லும், சுண்ணாம்பும், சிமிண்டும் மரமும் ஸ்திரமான



பொருளாக்க முறையைச் சேர்ந்தவை. எஃகுத் தூண்களும் இரும்புக் கதவுகளும் பீரோக்களும் நிலையற்ற பொருளாக்க வஸ்துக்கள். இந்தியாவின் மண்குடிசைகள் ஸ்திரமானவை. அமெரிக்க தேசத்து ஆகாயமளாவும் முப்பது, நாற்பது மாடிக் கட்டிடங்கள் இரும்புகொண்டு கட்டப்பட்டவையாக இருப்பினும் நிலையற்ற பொருளாக்க அமைப்பைச் சேர்ந்தவை. அதேவிதம் இதர விஷயங்களிலும் மனிதன் தன்னுடைய உழைப்பில் நம்பியிருப்பது தான் நல்லது; இயற்கையின் ஏராளச் செல்வத்தை நம்பக் கூடாது. இவ்விதம் இருப்பதனால் வாழ்க்கையின் எல்லாத் துறையிலும் புதுவித மனப்பான்மை உண்டாகும்.

இவ்வுலக வஸ்துக்கள் நிலையற்றவை என்றும், நமது வாழ்க்கை நாம் இறப்பதுடன் முடிந்து விடவில்லை என்றும் அறிவு ஏற்பட்டால் தேசத்தின் விஷயங்களை எல்லாம் ஸ்திரமானதான ஓர் புது திட்டங்கொண்டு பார்க்கும்படி நமக்குத் தூண்டுகோல் ஏற்படும். ஹிந்துக்களின் புராதன சமூகத்தில் அவ்வித ஸ்திரமான ஓர் அமைப்பு ஏற்படுத்த முயற்சி இருந்தது நமக்குத் தெரிய வருகிறது. ப்றிமுதல் செய்த ஐரோப்பிய சமூக அமைப்பில் முதல் மரியாதை அந்தச் சமூகத்தின் வாழ்க்கைக்கு முக்கியமானவைகளான பட்டாளத்திற்கும் கடற் படைக்கும் கொடுக்கப்பட்டிருக்க, (இங்கிலாந்தின் அமைப்பின்படியாய் கடற்படைக்கே முதல் மரியாதை இருக்க) ஹிந்துக்களின் சமூகத்தில் இலக்ஷியங்களுக்குத்தகுந்த மரியாதை அளிக்கப் பட்டிருந்தது.

முதல்—தனக்கு எவ்வித லாபமும் இல்லாத தூய்மை முறையில் தொண்டு செய்யும் இலக்ஷியக்காரர்கள் — பிராம்மணர்கள்.

இரண்டாவது—தனது நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் எவ்வகையிலும் தொண்டுசெய்யும் தர்மிஷ்டர்கள் — க்ஷத்திரியர்கள்

மூன்றுவது—தர்மம் செய்யலாம், ஆனுல் தன்னுடைய லாபம் முக்கியம் என்று உழைத்துப்பொருள் தேடுபவர்கள் — வைசியர்கள்.

நான்காவது—வெறும் மிருகங்களைப்போல் ஜீவிப்பவர் — சூத்திரர்கள்.

இவ்வித அமைப்பில் சுயலாபத்திற்கென்று அதிகம் உழைக்க இடமில்லை. விலையை ஏற்றி, இறக்கி மார்க்கெட்டை ஆட்டிவைக்க இயலாது. பொருள்களைச் செலவு செய்யும் வகையிலும் மனிதர் நலத்திலுமே கருத்து வைக்க வேண்டுவதாக இருக்கும். பணத்தைத் திரட்டுவது முக்கிய நோக்கமல்ல. ஒருவனின் நலம் அல்லது ஒரு கூட்டத்தாரின் நலம், அல்லது ஒரு தேசத்தின் நலம் அல்ல நாம் தேடுவது. மனித சமூகம் முழுவதற்குமே நலம் ஏற்பட நாம் முயல வேண்டும்.

பொருளாக்கம் என்ற சாஸ்த்திரத்தில் இருக்கும் வகைகளுக்கு நாம் வர்ணபேதம் கூறலாமென்ருல் எவ்வித முயற்சியும் செய்யாமல் கிடைப்பதைப் பறித்துத்தின்பது போன்ற பறிமுதல் பொருளாக்கத்தை சூத்திர வருணம் என்கலாம். அநாகரீகமான கூட்டத்தார் இவ்வகையைப் பின்பற்றுகின்றனர்.

முயற்சிப் பொருளாக்கமும் ஏகாதிபத்ய முறையும் வைசிய வருணமெனலாம். இரண்டும் ஓரளவு பறிமுதல் என்ருலும் அவைகளில் முன்னேற்றத்தில் தீவ்ர ஆர்வமும் சக்தி முழுதும் கொண்டு முயற்சிப்பது என்ற குணமும் இருக்கின்றன. முதலாளித்வமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்வமும் இவ்விதமான ஆரம்பகால முன்னேற்றத்திற்கு அடையாளமானவை. தனிப்பட்டவருடையவும் தனி வர்க்கத்தாருடையவையுமான பொருளாக்கம்.

கூட்டுப்பொருளாக்கம் என்பதை க்ஷத்ரிய வருணம் எனலாம். அது தனித்தன்மை கொண்டதல்ல. ஒரு ஜாதிய அல்லது தேசீய இலக்ஷியத்தைக் கொண்டது. நாஸி, கம்யூனிஸ்டு முறைகளை இதற்கு உதாரணமாகக் கூரலாம்.



இங்கே இலக்ஷியத்திற்கென்று தனிப்பட்டவரின் சுகம் தியாகம் செய்யப்படுகிறது.

நிலையான பொருளாக்கம் என்பது பிராம்மண வருணத்தின் இலக்ஷியங்களுக்கு ஒப்பானது. அதுஉலகைத்தின் விதிகளுடன் ஒத்து பிரம்மத்துடன் ஐக்கியப்படமுயல்வது. மனிதர் பெறக்கூடிய மிக மேலான முன்னேற்றம் அதுவே. இவ்வித முறையினுல்தான் மிகத்துச்சமானவருக்கும் பாதுகாப்பு இருக்கும்; மிகத்தாழ்மையானவரும் தமது பூரண சக்தியைப் பெறக்கூடும். அப்பொழுதே ஜனங்களின் பூரண முன்னேற்றம் ஏற்படும். உலகம் எல்லாவற்றிற்கும் நலம் ஏற்பட வேண்டுமென்று நாம் தகுந்த முயற்சிகள் செய்யாவிடில் நம்மில் சில பகுதிகளிடை அநாகரீகம் ஏற்பட்டு உலகத்தையே அழித்துவிடக்கூடும். நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து திட்டங்களை ஏற்படுத்த மிக நுட்பமான அறிவும் முன்னேற்றமடைந்த பண்பும் வேண்டும். அவ்வித முறையில் சீக்கிரமாகப் பலன்கள் ஏற்படா. நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். அஹிம்ஸையும் சத்யமும் மெதுவாகத்தான் பயனை அளிப்பவை. அம்முறையின் லாபமும் சிறிதுதான் இருக்கும். ஆனுல் அரசியலில் உண்மை ஜனநாயகமும் தேசத்திற்கு தேசம் சமாதானமும் ஏற்பட அது ஒன்றேதான் வழி.

---

## ஐந்தாம் அத்தியாயம்.

### ஜனங்களின் வருமானம்.

ஒரு தேசத்தின் வருமானத்தைக் கணக்கிட்டு, அதன் மூலம் அத்தேசத்து மனிதரின் ஒவ்வொருவருக்கும் தலைக்கு வருமானம் எவ்வளவு என்பதைக்கணக்கிட்டு, அத்துடன் இதேமாதிரி கணக்கிடப்பட்ட பிறதேசத்து மனிதர் ஒவ்வொருவருடைய வருமானத்துடன் ஒத்துப்பார்த்து முடிவுகள் செய்ய பலர் முயன்றிருக்கின்றனர். இந்தியாவைப்

பற்றி சமீபத்தில் வி. கே. ஆர். வி. ராவ் என்பவர் கணக்கிட்டது. "பிரிட்டிஷ் இந்தியாவின் வருமானம்" என்பது. அவர் திட்டப்படி தலைக்கு ஒரு வருஷத்திற்கு ரூ.62 கிடைக்கிறது. இவ்விதக் கணக்குகள் சில போதனா முறைகளுக்கு உபயோகப்படும் என்றாலும் கிராமங்களில் இருக்கும் உண்மையான நிலையை அவைகள் எடுத்துக்காட்டா. இவ்விதக் கணக்கை எடுப்பதற்குக் குறுக்காக இருக்கும் இடைஞ்சல்கள் பல. வரவு திட்டங்கள் கிடைப்பது கஷ்டம். எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி வரி, தீர்வை முதலியவை இரா. மிக அதிகமான ஜனத்தொகையைக் கணக்கிட்டு வீதாசாரம் கண்டுபிடிக்கவேண்டியதாக இருப்பது முதலியவைகளினால் தவறுகள் ஏற்பட இடமிருக்கிறது. ஆகையால் இவ்விதக் கணக்கில் நாம் அதிக நம்பிக்கை வைக்கக்கூடாது. இவ்வித உத்தேசக்கணக்கின் மூலம் ஒருதலைக்கு மாத வருமானம் ரூ. 5 என்று ஏற்படுகிறது. இந்த வருமானத்தில் உடலைப் பாதுகாப்பதற்கு ஏற்ற நல்ல உணவு கிடைப்பது கூடக் கஷ்டம். அதற்கு மேற்பட்டு ஆடையும் இருப்பிடமும் வேறு வேண்டும்.

கிராமங்களில் வரும் வருமானத்தைக்கொண்டு நாம் கணக்கிட்டால் இன்னும் உண்மையான நிலைமையைக் குறிக்கும் கணக்கு கிடைக்கும். இப்புத்தகத்தின் ஆசிரியர் மாதார் தாலூக்காவில் சுமார் ஐம்பது கிராமங்களை நேரில் பார்வையிட்டு அங்குள்ளவர்களின் அசல் வருமானத்தைக் கொண்டு சராசரி கணக்குப்போட்ட சமயம் தலைக்கு ரூ. 14 ஒரு வருஷத்திற்கு வருமானம் என்றே ஏற்பட்டது. இந்தத் தாலூக்கா குஜராத்தில் சுமாராக நல்ல ஸ்திதியில் இருப்பதாகக் கருதப்படுகிறது. குஜராத்தும் இந்தியாவின் இதர மகாணங்களைவிட மிக நல்ல நிலைமையிலிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கும் செலவு விவரத்தைக்கொண்டு வீதாசாரம் கணக்கிடுவது மற்றொரு வழி. அநேகம் விவசாயிகள் வீடுகளில் வருமானம் நிலத்திலிருந்து நேராக ஏற்படுவதால் அதை ரூபா கணக்கில் சேர்க்க இயலாது. மத்ய மாகாணத்தின் சுமார் 600 கிராமங்களில் பார்வையிட்டு கணக்கிட்டதில் வருஷாந்திர வருமானம் தலைக்கு ரூ. 12 என்று ஏற்பட்டது. இந்த வருமானத்தைக் கொண்டு கேவலம் உயிர்வாழ்வதற்கு வேண்டிய உணவின் அளவில் பாதிகூடப்பெற இயலாது. ஆகையால் வருமானம் முழுவதையும் ஆகாரத்திற்கென்றே செலவழித்தாலும் அனேகம் பேர்களுக்கு அறை வயிற்றிற்குக்கூட ஆகாரம் கிடைப்பதில்லை என்பது ஏற்படுகிறது.



**வருமானக்குறைவின் காரணம்:**

இவ்விதம் உயிர்வாழக்கூட உணவு கிடைப்பது கஷ்டம் என்று ஏற்படுவதென்றால், அதற்குக் காரணம் என்ன என்பதை அறிய நாம் இன்னும் ஆழமாக ஆராய வேண்டும். இந்தியாவில் இருக்கும் எளிய வாழ்க்கைக்கு காரணம் இந்தியர்களின் இலக்ஷியங்கள் துறவறத்தில் இருப்பது என்று கூறுவது சரியாகாது. மெலிந்து அழகாய் இருக்கவேண்டுமென்ற காரணத்தினால் ஜனங்கள் இந்நாட்டில் அறை வயிற்றிற்குப் புசிக்கிறதில்லை; அவர்களுக்குப் போதுமான உணவு கிடைக்காததனாலேயே அவ்விதம் செய்கிறார்கள். தங்களுடைய தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு அவசியமான "வாங்கும் சக்தி" அவர்களிடம் இல்லை. குடிகள் உழைப்பாளிகளாகவும் புத்திசாலிகளாகவும் இருக்க அவர்களின் உற்பத்தியைக் குறைவு என்றாகிலும் அவர்கள் திறமை அற்றவர்கள் என்றாகிலும் அவர்களுடைய வறுமைக்கு காரணம் கூறக்கூடாது. இதற்குக் காரணம் வேறு இடத்தில் இருக்கிறது.

ஒருவன் உழைப்பாளியாகவும் புத்திசாலியாகவும் இருந்தும், அவன் தனது திறமையை உபயோகிக்க சந்தர்ப்பம் பெறாமல் இருக்கலாம், அல்லது சந்தர்ப்பம் கிடைத்தாலும் தனது உழைப்பிற்குத் தகுந்த வருமானம் இல்லாமல் இருக்கலாம். அவ்விதமிருந்தால் அவனுடைய வாழ்க்கை நிலை மிக மட்டமாக இருப்பது அவனுடைய தவறு ஆகாது. நமது நாட்டில் இவ்வித நிலைமையே இருக்கிறது.

## சந்தர்ப்பக் குறைவு:

நமது நாட்டின் இறக்குமதி ஏற்றுமதி பட்டியலை எடுத்து மேல் வாரியாகப் பார்த்தால்கூட நமது இறக்குமதிகள் அனேகமாய் ஆலைகளில் பூர்த்தி செய்யப்பட்ட பொருள்களென்றும், ஏற்றுமதிகள் இயற் பொருள்கள் என்பதும் தெரியவரும். இயற்பொருள்களை நாம் ஏற்றுமதி செய்து வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டால், அவைகளை உபயோகத்திற்கு ஏற்றவைகளாகச் செய்யும் வேலைகளை நமது ஜனங்களுக்கு இல்லாமல், நாம் செய்துவிடுகிறோம். அதேவிதம் பூர்த்தியான பொருள்களை நாம் இறக்குமதி செய்தால் அப்பொருள்களை உண்டாக்குவதற்கான கூலியை பிறநாட்டாருக்குக் கொடுப்பவர்களாவோம். நமது நாட்டாருக்கு வேலையும் கூலியும் இல்லாமல் செய்துவிடுகிறோம். நமது வெளிநாட்டு வியாபாரம் என்பது நமது நாட்டாரின் சந்தர்ப்பங்களை பிற நாட்டாருக்கு நாம் கொடுப்பது என்பதே என்று ஏற்படுகிறது.

இது எவ்விதம் நடத்தப்படுகிறது என்பது ஒரு நீண்ட வரலாறு. புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு எவ்வித உதவியும் பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. ரயில்வே விகிதங்கள் இயற்பொருள்களை வெளி நாட்டிற்கு அனுப்ப சாதகமாகவும், செய்யப்பட்ட பொருள்களை உள் நாடுகளுக்குக் கொண்டுவர சாதகமாகவும் விதிக்கப்பட்டிருக்கின்றன. இயற்பொருள்கள் உற்பத்தியாகும் இடத்தில் கனத்த வரியை விதிப்பது, போக்கு வரவு சாதனங்களாகிய ரஸ்தா அமைப்பது, கால்வாய் வெட்டுவது ஆகிய விஷயங்களில் தவறான முறையைக் கையாளுவது, முதலியவை தொழிலை விருத்தியடையாமல் செய்து விட்டன. வியவசாயி உற்பத்தி செய்வதற்கு உபயோகமான ஆராய்ச்சி எதுவும் செய்யப்படவில்லை. சர்க்கார் வாங்கும் வகையிலும் உள் நாட்டு சாமான்கள் வாங்கப்படுவதில்லை; அவர்கள் செலவு விஷயத்தில் தவறான திட்டத்தை ஏற்படுத்திக்கொடுக்கிறார்கள். இதனால் சர்க்கார் டிபார்ட்மெண்டுகளுக்கென்று



அயல் நாட்டுப் பொருள்கள் ஏராளமாய் வாங்கவேண்டியதாகிறது. சர்க்காரின் கல்வி முறையும் வாலிபர்கள் படித்துத்தேறி தொழிலிலும் வியாபாரத்திலும் பிரவேசிக்க ஏற்றதாக அமைக்கப்படவில்லை. இச் சிறிய புத்தகத்தில் இந்தத் தவறுகளை எல்லாம் விவரிக்க இயலாது. ஆனால் மேற்கூறியவைகள் வாசகர்களுக்கு ஒருவாறு ஜனங்களுக்கு அவர்களுடைய தேச உரிமைகள் எவ்விதம் ஏமாற்றப்பட்டன என்பது தெரியவரும். இதெல்லாவற்றுடனும் வியவசாயத்திற்கு வானமும் காற்றும் புயலும் செய்யும் இடைஞ்சல்களையும் நோக்க வேண்டும். ஏனெனில் வியவசாயமே இந்நாட்டின் முக்கிய ஜீவாதாரம். இவைகளெல்லாம் சேர்ந்து நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சுவல்ப கூலி கிடைக்கும் வேலையையும் உண்டாக்கி, ஜனங்களின் வருமானத்தைக் குறைத்துவிட்டிருக்கிறது.

## பயன்தரா நிலைகள்:

இயற்பொருளை உபயோகத்திற்கு ஏற்றதாகச் செய்வதற்குப் பல படிகள் தாண்டவேண்டும். இவைகளில் அதை அவ்விதம் ஏற்றதாகச் செய்பவருக்குக் கிடைக்கும் லாபம் பலவகைப்பட்டது. ஆரம்பத்தில் லாபம் மிகக் குறைவு. மேன்மேலும் அது பக்குவமடைய அதனால் ஏற்படும் லாபம் அதிகரிக்கும். இவ்விதம் ஒரு இயற்பொருள் ஒரு உபயோகப் பொருளாக்கப்படுவது ஒரே நாட்டில் என்றால், அந்த நாட்டின் வருமானத்தில் வித்யாசமிராது. தனம் எல்லாரிடமும் ஒரே அளவாகப் பரவியிராது என்றாலும் அது நாளடைவில் சரிக்கட்டிக்கொள்ளும். இதற்கு மாறாக, இயற்பொருள் உபயோகப் பொருளாவதற்கு இடையிலுள்ள பல நிலைகள் வெவ்வேறு நாட்டில் அமைந்திருந்தால், வெவ்வேறு அரசாங்கத்தின் கீழ் அவைகள் மாற்றப்பட்டால், இயற்பொருள்கள் உற்பத்திசெய்து மாற்றப்படும் ஆரம்ப நிலைகள், அதாவது சுவல்ப லாபம் அளிக்கும் நிலைகள் ஒரு நாட்டிலும், இறுதி நிலைகள், அதாவது அதிகம் லாபம் அளிக்கும் நிலைகள் மற்றொரு

நாட்டிலுமேயே இருப்பது என்று ஏற்பட்டால், ஆரம்ப உற்பத்திசெய்யும் நாட்டிற்கு சுவல்ப வருமானமும், இறுதி வேலைகளைச் செய்யும் நாட்டிற்கு அதிக வருமானமும் இருந்துகொண்டே இருக்கும்.

உதாரணமாக கடலை எண்ணையிலிருந்து கூந்தல் தைலம் உண்டாக்குவதை எடுத்துக்கொள்வோம். சுமார் நான்கு ஏக்கர் சாகுபடி செய்யக்கூடியதாகப் பெற்றுள்ள குடியானவன் ஒருவன் 70 ரூ. செலவுசெய்து ரூ. 100 பெறுமானமுள்ள நிலக்கடலையைப் பயிர்செய்கிறான். இதற்கு ஐந்து மாத காலம் பிடிக்கிறது. அவன் வருமானம் ரூ. 30. இன்னும் ஒரு சாகுபடிசெய்து அதே வருஷத்தில் கோதுமையைப் பயிர்செய்தால் அவனுக்கு அதிர்ஷ்டம் இருந்தால் இன்னும் ரூ. 50 கிடைக்கலாம். அந்த வருஷத்திற்கு அவனுடைய வருமானம் ரூ. 80 ஆகும். ஒரு வாணியன் இந்த ரூ. 100 பெறுமானமுள்ள கடலையை செக்கிவிட்டு எண்ணை எடுத்தால், அவனுக்கு இவ்வேலை ஒரு மாதகாலம்பிடிக்கும். அந்த ஒரு மாதத்திற்கு ஒரு ஜதை மாட்டிற்கு தீனிச் செலவு ரூ. 10. அவனுக்கு சுமார் ரூ. 125 பெறுமானமுள்ள எண்ணையும் ரூ. 25 பெறுமானமுள்ள புண்ணாக்கும் கிடைக்கும். ஆகையால் அவனுக்கு ஒரு மாத வருமானம் ரூ. 40 ஆகிறது. அவனுக்குப் போதுமான மூலதனம் இருந்து வருஷ முழுவதும் செக்கு வேலை செய்வதற்குப் போதுமான கடலை மூட்டைகளை வாங்கி வைத்துக்கொள்ளக் கூடுமென்றால், இதே ரீதியில் ஒரு வருஷத்திற்கு சுமார் ரூ. 500 வருமானம் கிடைக்கலாம்.

கூந்தல் தைலம் செய்யும் வியாபாரி இந்த ரூ. 125 பெறுமானமுள்ள எண்ணையை சுத்தம்செய்து, வாஸனை கலந்து, புட்டியில் அடைத்து விற்பதற்கு அவனுக்கு இரண்டு மாத அவகாசம் வேண்டும். அந்த இரண்டு மாத வேலை செய்தால் சுமார் ரூ. 500 பெறுமானமுள்ள வாஸனைத் தைலம் செய்யலாம். இதனால் அவனுக்கு மாதம் ரூ. 130 கிடைக்கும். போதுமான மூலதனம் இருந்தால் வருஷம் முழுவதும் வேலைசெய்து வருஷ வருமானம் சுமார் ரூ. 1500 பெறலாம்.



மேற்கூறியவற்றிலிருந்து தனது தொழில் வகையினாலும், மழையின் நிலையற்ற குணங்களினாலும் ஒரு வியவசாயி வருஷத்திற்கு ரூ. 80 வருமானமே பெற, வாணியன் மூலதனம் போதுமான அளவு பெற்றால் வருஷ முழுவதும் வேலை செய்து ரூ. 500 பெறக்கூடிய நிலையிலிருக்க, வாஸனைத்தைல வியாபாரி ரூ. 1500 பெறக் கூடும். ஒரு பொருள் உற்பத்தி நிலையிலிருந்து மாறி உபயோகிக்கப்படும் நிலையை சமீபிக்க, அதற்கு உரிய வேலை குறைவு; ஆனால் மூலதனம் அதிகம் வேண்டும். ஒரு நிலைப்பட்ட (Centralised Method) தயாரிப்பு என்றால் இவ்விதக்குணம் இன்னும் அதிகரிக்கும். ஒரு வாஸனைத் தைல வியாபாரிக்கு வருஷ முழுவதும் வேலை கொடுக்க வேண்டுமென்றால் சுமார் ஒரு டஜன் வியவசாயிகள் அரை வயிற்று உணவுடன் உழைத்துத் தேவையான கடலையை உற்பத்தி செய்யவேண்டும். அப்படி இருந்தும், எல்லாரும் ஒரே நாட்டில் இருந்தால் இந்த வருமான வித்யாசம் தன்னில் நாளடைவில் ஓரளவு சரிமட்டமாக்கிக் கொள்ளும். ஆனால் வியவசாயி இந்தியாவிலும், தைலம் செய்பவன் ஜர்மனியிலும் இருந்தால், இவ்விருவர்க்கும் இடையே இருக்கும் வருமான வித்தியாசம் வேறு வழியில் சரிக்கட்டிக்கொள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது. அதன் பலனாக ஒரு தேசத்தில் மேலும் மேலும் வறுமையும் மற்றொரு தேசத்தில் மேலும் மேலும் தனலாபமும் ஏற்படுகிறது. இயற்பொருட்களை (Raw Meterials) உற்பத்தி செய்கிறவர்கள் தாழ்மை வேலையையே செய்து கொண்டிருக்க, ஆளும்தேசங்கள் தங்களுக்கென்று நல்ல ஆதாயமளிக்கும் தொழில்களையே ஸ்திரப்படுத்திக்கொள்ள ஏதுவாகிறது. ஆகையாலேயே உற்பத்தி நாடுகளை தங்களுக்குக் கீழ்படுத்தி, தாங்கள் அரசாள்பவர்களாக இருக்க வேண்டுமென்ற போட்டி மேல் நாட்டாரிடை இருப்பதற்குக் காரணமிருக்கிறது. சாம்ராஜ்ய முறைக்கு அடிப்படையான கொள்கை உழைப்பு அதிகமும் லாபம் குறைவுமான உற்பத்தி வேலையை கீழ்பட்டிருக்கும் நாடுகளுக்கு அளித்து, அதிக லாபம் வருகிற தொழில்களை அரசாளும்

நாடுகள் வைத்துக்கொள்வது என்பதே. இவ்விதம் வெவ்வேறு நாடுகளிடை தொழில்களைப் பிரித்துக் கொடுப்பது நாளடைவில் இயற்பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளை மேன்மேலும் வறுமையையே உண்டாக்கும் பொருளாக்கம் உடையவர்களாய்ச் செய்து இறுதியில் அந்நாட்டின் பண்பே அழிந்துவிடும்படி செய்யும். சென்ற நூற்றாண்டில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆலைத்தொழில்கள் அதிகம் அபிவிருத்தி அடையவே, இந்தியா இவ்வித கீழ்பட்ட நிலைக்கு மெதுவாக நழுவி விட்டது. அதனாலேயே உலகத்து மக்கள் தற்சமயம் உற்பத்தி செய்யும் ஏராள செல்வ விருத்தியில் இந்தியாவின் பாகம் தற்சமயம் மிகவும் குறைவானதாக இருக்கிறது. இவ்வித நிலைமைக்குக் காரணம் உற்பத்திக் குறைவு அல்ல, லாபத்தை பங்கு இடுவதில் இருக்கும் பெரிய ஏற்றத் தாழ்வே காரணம்.

## தேவையை மாற்றுவது :

இந்தியாவில் உழைப்பு அதிகம் கிடைக்கும். இதை உழைப்புச் செல்வம் பெற்றநாடு எனலாம். ஆகையால் உழைப்பு அதிகம் தேவையான பண்டங்களை ஜனங்கள் வேண்டுமென்று கேட்டால் தான் இந்நாட்டின் மக்கள் தமது பண்டமாகிய உழைப்பை விற்று தனம்பெற முடியும். மேல் நாடுகளில் மிஷின் முன்னேற்றமும், உழைப்பைக் குறைக்கும் எந்திரங்களின் உற்பத்தியும் ஏற்படவே மார்க்கெட்டுகளில் உழைப்புக் குறைவான பண்டங்கள் மலிந்து குவிந்து விட்டன. இவ்விதப் பண்டங்களின் விலைக்கு முக்கிய காரணம் அவைகளை ஆலைகளில் உற்பத்தி செய்வதன் சிரமமல்ல, இயற்பொருளின் விலை, விற்பனைக்கு கொண்டுவரும் கப்பல், வண்டிகளின் சத்தம், இன்ஷ்யூரன்ஸ், விற்பவருக்குக் கொடுக்கும் கமிஷன் முதலியவைகளே. இவ்விதம் முதலாளித்வ முறை என்பது ஆலைகளின் உற்பத்தி மூலம் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டு, உழைப்பாளியை தோற்கடித்துவிட்டது. இந்தியாவில் மூலதனம் கிடைப்பது கஷ்டமாக இருப்பதாலும்,



உழைப்பாளிகள் ஏராளமாக இருப்பதாலும், அவ்வித உழைப்பாளிகளுக்கும் ஆலைகளில் கிடைக்கக்கூடிய சொல்ப வேலையும் வஞ்சிக்கப்பட்டு வெளிநாட்டுத் தொழிலாளிக்குப் போய்ச் சேருவதாலும் நிலைமை இன்னும் கேடுள்ளதாகிறது. இந்தியர்களிடை இருக்கும் முக்கிய பண்டம் உழைப்புச்சக்தி. இந்த சக்தியை விற்பதற்கு மார்க்கெட் இல்லாமல், உலகத்தின் ஆலைத்தொழில் பண்டங்கள் இங்கு வந்து குவிந்து விடுகின்றன; அவ்வித ஆலைகளின் மூலம் லாபம் பெறுபவர்களின் சாமார்த்தியமான பிரசாரத்தினால் அந்த வெளிநாட்டுப் பண்டங்களை ஏராளமாக வாங்குவதன் நிமித்தம் இந்தியர்களின் தேவைகள் அதிகரிக்கப்படுகின்றன. அரசியல் அதிகாரத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களை வாங்கித் தங்கள் தேவைகளை திருப்தி செய்து கொள்ளுமாறு ஜனங்கள் கூறப்படுகின்றனர். இந்நாட்டின் பண்டமாகிய உழைப்பு சக்தியை விற்க இடமில்லாததால் வேறு பண்டங்களை வாங்கும் சக்தியும் இந்நாட்டாருக்குக் குறைந்து விட்டது. (வியவசாயி தன்னுடைய நெல்லை விற்க முடிந்தால் தான் அவனால் மோட்டார் வாங்க இயலும். அதேவிதம் நாட்டுஜனங்கள் தங்களிடமிருக்கும் பண்டத்தை விற்றாலே வேறு பண்டம் வாங்கக்கூடும்.)

## பணமும் ஈரெட்டுமுறையும் :

நமது நாட்டில் எல்லாவிதப் பண்டங்களுக்கும் மார்க்கெட் இருக்கிறது; அதாவது தேவை இருக்கிறது. இந்த மார்க்கெட்டை சரிவர நடத்தி பாதுகாத்திருந்தால் ஜனங்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை எப்போதும் விற்கக்கூடியவர்களாக இருப்பார்கள். சென்ற நூற்றாண்டில் பணத்தின் மாற்றும், அதனுடைய ராக்ஷஸப்பிரவியாகிய ஈரெட்டாக வியாபாரம் செய்வது என்பதும் உலக முழுவதும் பரவி வேரூன்றியதால் நமது உள்நாட்டு மார்க்கெட்டுகளை வெளித்தேசத்தவர்கள் பிடித்துக் கொண்டு விட்டார்கள். ஒருவனுடைய வாங்கும் சக்தியை சுலபமாக இங்கும் அங்கும் கொண்டுபோவதற்கு பணமும்

ஈரெட்டு முறையும்போல் சாதகமான கருவி வேறு எதுவும் கிடையாது. ஆனால் உண்மையான மாற்றாக இருக்க வேண்டுமென்றால் பண்டத்தின் விலைமாத்திரமல்ல, அதைச் சேர்ந்த மனிதரின் க்ஷேமமும், தர்மமும் கணக்கிடப்பட வேண்டும். இறுதி இரண்டும் சாதாரணமாகப் பணம் கொடுத்து வாங்குவதில் கவனிக்கப்படுவதில்லை. சீக்கிரம் கெட்டுப்போகும் பதார்த்தங்களாகிய வாழைப்பழமோ மீன்களோ விற்பவனின் சக்தி என்றும் கெடாத பணத்தை வைத்திருப்பவனின் சக்தியைவிடக் குறைவானது. பணத்தைக் கொடுத்துப் பண்டங்களை வாங்குவது என்ற முறை நேர்மை நியாயம் எல்லாவற்றையும் கொன்றுவிட்டது. பணத்தைக் கொடுத்தால் போதும், வேறு எதுவும் கவனிக்க வேண்டாம் என்று ஆகிவிட்டது. இவ்விதமாக இருந்தால் வியாபாரம் என்பது உலகத்தின் கோடிவரை நடத்த இயலும். ஆனால் வாங்குவதும் விற்பதும் சரியான விலைக்கு என்று சொல்ல முடியாது. இவ்விதம் பணம் மாற்று இருப்பதனால் இயற்பொருளை வாங்கி வெகு தூர தேசத்திற்கு அனுப்பி அங்கே ஆலையில் உபயோகப் பொருளாகச் செய்யப்பட்டு, அவ்வித தூரதேசத்து ஆலையில் செய்யப்பட்ட பொருளை மறுபடி இந்நாட்டில் கொண்டுவந்து விற்பது என்பது சுலபமாய் ஏற்பட்டுவிட்டது. நாம் முன் கூறியவாறு இதனால் நமது நாட்டில் சுவல்ப லாபம் கிடைக்கும் தொழில்களே இருக்கின்றன.

முற்காலத்தில் இந்திய முறையில் பணம் மாற்று, பண்டம் மாற்று ஆகிய இரண்டு வகையும் இருந்தன மனிதர் நலத்தைக் கருத்தில் வைத்து ஏற்படுத்தின முறை இது. தச்சன், கருமான் முதலிய தொழிலாளிகளும், பரியாரி, வண்ணான் முதலிய வேலையாட்களும் அவர்களுக்கு உணவிற்குக் குறைவு இல்லாமலிருக்கும் வகையில் அறுப்பு சமயம் "படி" பெற்றுக்கொண்டிருந்தனர். ஏனெனில் சாகுபடி செய்யாவிட்டாலும் அவர்கள் சமூகத்திற்கு அவசியமான தொழிலைச் செய்தார்கள். ஆகையால் அவர்களுக்கு உணவு கொடுக்க வேண்டியது



சமூகத்தின் கடமை எனக் கருதப்பட்டது. அந்த வழக்கம் இப்போது மாறிவிட்டிருக்கிறது. அந்தத்தொழிலை பின்பற்றியவர்களின் சந்ததி பட்டினியாக இருப்பது அல்லது வேறு தொழிலைப் பின்பற்றுவது என்று ஆகிவிட்டது.

## தற்கால ரீதி :

ஜனங்களின் வருமானம் குறைவாக இருந்தாலும் பொதுவில் நாளடைவில் அது அதிகமாகி வருகிறது என்ற ரீதி இருந்தால் நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அதைக் கவனிக்க நமக்குப் போதுமான ஆதாரம் இல்லை. ஒரே விதமாகக் கணக்கிட்டு அடிக்கடி அதைப் பரிசீலனை செய்பவர் எவரும் இல்லை. ஆகையால் நாம் நமது புத்தியைக் கொண்டு ரீதி எவ்விதமிருக்கிறது என்று நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. நாட்டில் இருக்கும் சில கோடீச்வரர்களின் எண்ணிக்கை இன்னும் சற்று அதிகரித்தால் நாட்டின் வருமானம் அதிகம் என்று நாம் நினைக்கக் கூடாது. இந்நாட்டில் நூற்றில் தொண்ணூறு பேர்கள் கிராமங்களில் வசிப்பவர். ஆகையால் அவர்கள் முன் இருந்த நிலையையும் இப்போது இருக்கும் நிலையையும், அவர்களுக்கு இருக்கும் சொத்து முதலியவைகளையும் கவனித்து நாம் நிர்ணயிக்கவேண்டும். அவர்கள் நிலையில் மாறுதல் இருந்தால் அது (1) அவர்கள் வீட்டில், (2) நகைகள், வெள்ளி சாமான்கள் முதலியவற்றில், (3) அவர்கள் பழைய வழக்கங்களிலிருந்து மாறுபட்டிருப்பதில் ஆகிய மூன்றிலும் தெரியவரும்.

## வீடு, கட்டிடங்கள் :

நமது கிராமங்களைப் பார்க்கும் எவரும் அங்கே இருக்கும் பெரிய கட்டிடங்களெல்லாம் அனேகமாய் புராதன ஜீர்ணித்த கட்டிடங்கள் என்பதையும், புதிதாக எவ்விதப் பகட்டான பெரிய கட்டிடமும் அங்கே காண்பது அரிது என்றும் உணராமல் இருக்கமாட்டார். இதிலிருந்து ஐம்பது அறுபது வருஷங்களுக்குமுன் இருந்தவர்கள் நல்ல

ஸ்திதியில் இருந்தார்களென்றும், அவர்கள் பரம்பரையினர் ஏழ்மை நிலை அடைந்து, அந்தப் பழைய பாழடைந்த வீடுகளிலேயே வசிக்கிறார்கள், அதைப் புதுப்பித்து செப்பனிட வகையற்றிருக்கிறார்கள் என்பதும் தெரியவரும். இக்காலத்தியவர் நிலை அவ்வீடுகளைச் செப்பனிடக்கூட இடம் தரவில்லை.

தர்மசாலை, சத்திரம், கோயில், குளம், பாடசாலை முதலியவை சமீபத்தில் இயற்றப்பட்டவைகளைக் காண்பது கடினம். அவ்விதம் தர்மம் செய்ய ஜனங்களுக்கு சக்தி இல்லை. ஜனங்களின் செல்வம் குறைந்திருப்பது என்பதைக் காண்பிக்க இது முக்கிய அறிகுறி.

**நகைகள் :**

நகரவாசிகள் தமது ரொக்கத்தை பிராமிசரி நோட்டு, ஷேர்கள் முதலிய வியாபார வகையில் வைத்து விருத்தி செய்ய விரும்பினாலும் இன்றைக்கும் நமது கிராமவாசிகளின் பாங்க் அவர்களுடைய தங்க நகைகளே. இந்நாட்களில் கிராமத்து தட்டானைக் காண்பது அரிது. மிகுந்திருக்கும் ஒன்றிரண்டு பேர்களும் அணைந்திருக்கும் தங்கள் கும்மிட்டிகளின் எதிரில் உட்கார்ந்து தங்கள் ஆயுட்காலத்திற்குள் இத்தொழில் இவ்விதம் க்ஷீணித்து விட்டதை கூறிக் குறைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் தொழில் குன்றியிருப்பது ஜனங்களிடம் பணக்குறைவு ஏற்பட்டு வருவதற்கு அறிகுறி.

**பழக்க வழக்கங்கள் :**

கிராமவாசிகள் தங்களுக்குச் செலவிற்குக் கட்டிவரவில்லை என்று முறையிடுவதற்கு முக்கியகாரணம் அவர்களுக்கு விவாகம், ஆண்டுநிறைவு, உபநயனம், சீமந்தம் என்ற சமயங்களிலும் கருமாதி காலத்திலும் அதிகம் செலவு ஏற்படுகிறது என்பதே. அவர்களுடைய தற்கால வருமானத்தை உத்தேசித்தால் இவ்விதச் செலவுகள் மிகக்



கஷ்டமானவையே. ஆனால் இவ்விதச் செலவுகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதிலிருந்து அவர்களுடைய முன்காலத்திய வருமானம் இவைகளுக்கெல்லாம் கட்டிவரக்கூடியதாக இருந்திருக்குமென்றே ஏற்படுகிறது. ஒருவனுக்கு ரூ. 1000 வருமானம் இருந்து, அவன் ரூ. 100 விவாகத்திற்கென்று செலவு செய்தால் அவனை ஊதாரி என்று எவரும் திட்ட வேண்டியதில்லை. ஆனால் அவனுடைய மகனின் வருமானம் ரூ. 300க்குக் குறைந்து விட்டிருக்க, அம்மகனும் விவாகத்திற்கென்று ரூ. 100 செலவு செய்தால் அவன் ஊதாரி எனப்படுவான். உலக முழுவதும் ஜனங்களிடை பழக்க வழக்கங்கள் என்றிருப்பவை மிகவும் பலமான பிடிப்புடையவை. எல்லா நாடுகளிலும் ஜனங்கள் தங்கள் உணவுச் செலவைக் குறைத்துக் கொண்டாகிலும் தங்கள் முன்னோர் செய்தவிதம் விசேஷங்களைக் கொண்டாட விரும்புவார்கள். வரும்படிக்கு மீறின அளவில் விசேஷங்களைக் கொண்டாடுகிறார்கள் என்று இந்தியர்களிடை புகார் சொல்லப்படும் இந்தப் பழக்கமே, முன் காலத்தில் இருந்ததற்கு சூசனையாக, இக்காலத்திய வருமானக் குறைவிற்கு அத்தாக்ஷியாக இருக்கிறது

மேற்கூறிய மூன்றும் ஜனங்களின் துன்பத்தைக் கொண்டு எழுதப்பட்ட அழியா தஸ்தவேஜாக செல்வத்திலிருந்து வறுமைக்கு வந்திருப்பவர்களின் நிலைக்கு அத்தாக்ஷியாக இருக்கிறது.

**சுமைதூக்கும் ஜந்துக்களுடன் போட்டி :**

நீடித்த காலத்தில் ஏற்படும் இந்த சாக்ஷியங்கள் தவிர, இவ்வளவு நாட்கள் மிருகங்கள் செய்து வந்த வேலையைத் தாங்கள் செய்து எவ்விதமாகிலும் வயிற்றுக்கு உணவைத் தேடலாம் என்று மிருகங்களுடன் போட்டியிடும் குணம் இப்போது மனிதர்களிடை காணப்படுகிறது. மாடுகள் இழுத்த கட்டை வண்டியை இப்போது மனிதர்கள் இழுக்கிறார்கள். குதிரை டாங்கா வண்டிகளுக்கு மாறாக இப்

போது ரிக்ஷா வண்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் தேசத்தின் செல்வ மிகுதிக்கு அறிகுறியா? உண்மையில் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வறுமை மிகுதியில் அவர்கள் கால்நடைக்கு வைக்கும் தவிட்டையும் தின்கத்தயாரென்றே படுகிறது.

நகரங்களைச்சுற்றிலும் செல்வத்தின் அறிகுறியாக வெகுசீக்கிரம் கட்டடங்கள் கட்டப்படுவதைக் கண்டு நாம் ஏமாந்துவிடக்கூடாது. சில ஆலைத்தொழில்களுக்கு இந்தியர்கள் பெருத்த முதல் போட்டிருப்பதையாகிலும், நகரங்களில் வசிப்பவர்களின் உயர்தர வாழ்க்கை நிலையைக் கண்டாகிலும் ஏமாறக்கூடாது. இந்தியா வசிப்பது கிராமங்களில். இந்தியா ஏழையா செல்வமிகுந்ததா என்பதற்கு அத்தாக்ஷியை நாம் கிராமங்களில் காணவேண்டும்.

**செல்வாக்கு உள்ளவர்கள்:**

கிராமத்துக் குடிகளுக்கு இருக்கும் ஜீவனோபாயங்களில் ஒன்று சத்தவண்டி மூலம் சரக்குகளை நகரங்களுக்கு கொண்டுபோய் சேர்ப்பது. உழவிற்கும், ஏற்றத்திற்கும் மாடு தேவை. இல்லாத சமயம் குடியானவன் வண்டியை கட்டி சாமான்களை ஏற்றிக்கொண்டுபோய் சேர்த்துக் கூலிபெறுவான். ரயில்வேக்களும் மோட்டார் லாரிகளும் வர, இந்த வருமானம் போய்விட்டது. பழங்கள், மீன்கள் முதலிய சீக்கிரம் கெட்டுவிடும் பண்டங்களை துரிதமாகச் செல்லும் வண்டிகளில் அனுப்பவேண்டியது அவசியம். ஆனால் காட்டு மரங்களை லாரிகளில் அனுப்ப அவசியமென்ன? அம்மரங்கள் பக்குவமடைய பல மாதங்கள் பிடிக்கும். ஆனால் பெட்ரோலும் மோட்டாரும் விற்பவர்களுக்கு செல்வாக்கு அதிகம் அரசாங்கத்திடம் இருக்கிறது. ஆகையால் லாரிகள் அவசியமாகின்றன. கிராமத்துக் குடிகளுக்கு தங்கள் ஜீவனத்தை சம்பாதித்துக் கொள்வதற்கு இருக்கும் வழிகள் ஒவ்வொன்றும் அடைபட்டு வருகிறது.

# இரண்டாம் பாகம்.

## தற்கால நிலைமை.

## அத்யாயம் 6.

### இயற்கை முறை.

சரித்திரத்தில் இயற்கை முறையை நோக்கினால் ஆதியில் பசி ஏற்பட்டு, குளிருக்கும் மழைக்கும் பாதுகாப்பின் தேவை ஏற்பட்டு, அதற்குமேல் ஆகாரம், துணி, வீடு இவைகள் கிடைக்கப்பட்டன. தேவை ஏற்பட்டால் அதற்கு ஏற்ற திருப்தியும் கிடைக்கும். "தேவையே உற்பத்திக்குத் தாய்" என்பது பழமொழியல்லவா. சில சமயம் இப்பொழுது இருக்கும் தேவையைக்கொண்டு, பிற்காலத்திலும் தேவை ஏற்படுமென்று ஊகித்து, மழைகாலத்திற்கென்று பொருள் சேர்க்கப்படுகிறது. எறும்பு, தேனீ முதலியவை இவ்வித நோக்கத்துடனேயே ஆகாரம் திரட்டுகின்றன.

உழுது வாழ்பவரிடம் இந்த இயற்கை முறையில் அதிக மாறுபாடு ஏற்படுவதில்லை. ஏதாகிலும் மாறுபாடு இருப்பின், அது பயிரை விருத்தி செய்வதில் மாத்திரமே. இயற்கையாக வெகு நாட்கழித்து ஏற்படக்கூடியதை வியவசாயிகள் சீக்கிரமாக வளரும் விதம் செய்கின்றனர். அதேவிதம் தொழில் முயற்சியிலும் உழுது வாழ்பவரின் குணம் இயற்கையைப் பின் பற்றுவதாக இருக்கிறது. தேவைக்குத் தகுந்ததாகவே பொருள்கள் செய்யப்படுகின்றன. அப்பொருளாக்க முயற்சியின் பலன் எல்லாரிடமும் பரவும் விதம் சமூக அமைப்பு இருக்கிறது. ஆனால் பொருள் உண்டாக்கப்படுவதோ தனித்தனி முயற்சியினால். குசவன் தன் முயற்சியினால் பானை செய்கிறான். குசவனிடம் பானை வாங்க வேண்டுமென்று விதிப்பது சமூக அமைப்பு. ஆகையால் பானை செய்வது குசவன்,

அதை விற்க சாதகமாயிருப்பது சமூகம். குசவன் செய்வதும் தன்னுடைய சக்திக்கும், தன்னுடைய கிராமத்தோரின் தேவைக்கும் ஏற்றதாக இருக்கும். இவ்விதம் உண்டாக்குவதும் விற்பதும் எங்கும் ஒருவர் அதிகாரத்தின் கீழ் சேர்ந்திராமல் கிராமந்தோறும் பரவியிருக்கிறது. ஆகையால் விற்பனையில் தடங்கல் ஏற்பட்டு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது இல்லை. (பர்மிங்ஹாமில் செய்யப்படும் பித்தளை சாமான்களை இந்தியர்கள் வாங்காவிடில் அங்கே உற்பத்திக்குக் கட்டு ஏற்பட்டு பலர் வருந்த நேரிடும் என்ற நிலைமை இந்த அமைப்பில் இல்லை.) உள்ளூர் தேவையே முதலில் கவனிக்கப்பட்டு தேவைக்கு ஏற்றதாகவே பொருள் உண்டாக்கப்படுகிறது. கிராமத்தில் பொருள் உண்டாக்கப்பட்டு நகரங்கள் அவைகளை வாங்கிச் செலவு செய்தால் செல்வம் கிராமங்களில் தங்குகிறது. ஒவ்வொரு தனிப்பட்டவன் கையிலும் இருக்கும் செல்வம் குறைவாகவே இருப்பினும், விற்பனை பரவி ஏற்படுவதால் "வேட்டை இன"க் குணத்தவரிடம் இருப்பதைவிட இங்கு சமத்வம் அதிகமாக இருக்கும். அங்கே விற்பதும் செய்வதும் சேர்ந்து நாளடைவில் ஒரு சிலர் கையிலகப்பட்டு சிலர் கோடீச்வரராகின்றனர். பலர் பரம்பரை தரித்திரராகின்றனர்.

வேடனிடமிருந்தும் ஆதிகாலக் கப்பம் வாங்கும் பாரன்மார்களிடமிருந்தும் ஏற்பட்ட "வேட்டை இன"த் தொழில் முறையில், இயற்கைக்கு விரோதமாகத் தேவையைச் சிந்திக்காமல், பொருள்கள் செய்யப்பட்டுவிடுவதையும், பிறகு அப்பொருள்களை விற்பதற்காக தந்திரமான விளம்பரங்களும், நிர்பந்தங்களும் ஏற்படுவதையும் காணலாம். சோப், கூந்தல் தைலம், டீ, முதலிய விஷயங்களில் இவை நன்ருகத் தெரியும். விருந்து தயாரிக்கப்பட்டுவிடுகிறது. ஆனால் பசி இருப்பதில்லை. பசி ஏற்பட மருந்துகளைக் குடிக்கச் செய்தாக வேண்டும். இதுதான் இக்கால நிலைமை. இவ்விதம் பொய்ப்பசியை உண்டாக்கிக்கொண்டு சாப்பிடுவதால் அஜீர்ணம் ஏற்படுகிறது. இந்த முறையினுல் பொருளாக்க முயற்சி ஒழுங்காக இல்லாமல் அதிகம்



பொருள் சேர்வதும், சிலரிடம் அதிகம் தனம் சேர்வதுமாகத் தாறுமாருகிறது. ஏனெனில் இந்த அமைப்பின் முறை தனிப்பட்டவனுக்கு லாபத்தை உண்டாக்கப் பார்க்கிறது, சமூகத்திற்கல்ல.

முதலாளித்வத்தின் தொழிற்சாலையின் எந்திரங்கள் மிகவும் விலை உயர்ந்தவை. அவைகளுக்காக முதல் அதிகம் வேண்டியிருக்கிறது. இவ்விதம் முதல் போடுவதற்குக் கட்டிவர வேண்டுமென்று முதலாளியானவன் ஒரே திட்டமான ஏராளமான சாமான்களைச் செய்து, தன்னைப்போல் செய்யும் இதர முதலாளிகளுக்குப் போட்டியாக விற்பனையில் தான் முந்திக்கொண்டாலே, அவனுக்கு லாபம் கிடைக்கும். இதனுல் கடையில் சாமான்கள் குவிந்துவிடுகின்றன. அவைகளை விற்று வெளியேற்ற கடைக்காரரின் திறமையும் விளம்பரங்களும் அவசியமாகின்றன. இது இயற்கை முறையே அல்லாத செயற்கை முறையாகையால் இது நடந்தேற பலாத்காரம் தேவை.

எந்திரங்கள் வாங்குவதற்காக முதல் ஏராளமாக உபயோகிக்கப்பட்டிருப்பதால் விற்றுவரும் பணத்தில் அதிகபாகம் அந்த எந்திரங்களின் மராமத்து, முதலாளியின் முதலிற்கு வட்டி, லாபம் ஆகியவைகளில் செலவழிந்து விடுகிறது. ஒரு சிறிய அளவே தொழிலாளிக்குப் போகிறது. முதலாளியின் நோக்கமெல்லாம் தொழிலாளியின் சம்பளத்தைக் குறைக்க வேண்டுமென்பதே. இதனுல் ஜனங்களிடை (அதிக ஜனங்கள் தொழிலாளிகளாக இருப்பதனுல்) வாங்கும் சக்தி குறைகிறது. அவர்களுக்குத் தேவையான ஆகாரத்திற்கு மேற்பட்டு வாங்கும் சக்தி இருந்தாலல்லவோ தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை அவர்கள் வாங்கக்கூடும்? இதனுல் வாங்குவது குறைந்து, உற்பத்தி அதிகரித்து பொருள் நிலையில் மந்தம் ஏற்படுகிறது. இவ்வித மந்தம் ஏற்பட்டால் மனித தேகத்தில் மந்த மேற்பட்டால் ஜுரம் கண்டு எல்லாம் தகிக்கப்படுவதுபோல், போர் ஏற்பட்டு தேசம் தகிக்கப்பட்டாலே முன்னிருந்த நிலைக்கு வரக்கூடும்.

பொதுவுடமை ஆட்சியிலும் பொருட்களைச்செய்யும் தூண்டுதல் தொழிலாளிக்குச் சுயமாக உண்டாவதல்ல, வெளிப்பட்டதாய் அதிகாரிகளிடமிருந்து வருவது. ஆகையால் இதற்கும் ஒரு வகையில் இல்லாவிடில் ஒரு வகையில் பலாத்காரம் ஏற்படுகிறது.

லாபம் அதிகம் பெற வேண்டுமென்ற உத்தேசத்துடன் உற்பத்தியாளர்கள் சில சமயம் 'கூட்டு' 'சங்கம்' இவை போன்றவை ஏற்படுத்திக் கொள்ளுகிறுர்கள். இது ஒரு மனிதன் கையில் அதிகாரம் சேராமலிருக்க சாதகமாயிருப்பினும், ஒரு வர்கத்தினரிடம் அதிகாரமும் செல்வமும் சேர இடமளிக்கிறது. ஆகையால் தேசத்திற்கு நன்மை பயப்பதென்று சொல்ல இயலாது. இவ்வித சமயம் அந்த உற்பத்தி அரசாங்கத்தாரிடம் விடப்பெற்றுல், சுயலாபப் பற்றன்றி அவ்வேலை நடத்தப்பட்டு ஓரளவு நன்மையையே உண்டாக்கும்; தண்ணீர் வசதி, டெலிபோன், தந்தி தபால், ராஸ்தாக்கள், காடுகளைக் குத்தகை எடுப்பது ஆகியவை இவ்விதத் தொழில் இனத்தைச் சேர்ந்தவை.

**எல்லைகள் :**

உற்பத்தியை தாறுமாருக விடக்கூடாது என்று அதை அரசாங்கத்தின் மூலம் மேல் நாட்டார் கட்டுப்படுத்த முயன்றிருக்கும் சமயங்களில்கூட நாணயவிகிதம், விலைதிட்டம், கூலிதிட்டம், வெளிநாட்டு வியாபாரவரி, ஆகிய பலவித எல்லைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. "வேட்டை இன"க் குணமுள்ளவரிடை அரசாங்கம்கூட தன்னுடைய பொருளாக்க முயற்சிக்குக் கீழ் படிந்ததாய் அம் முயற்சிக்குத் தலைவர்களான சில முதலாளிகளின் லாபத்திற்கு இசைந்து நடக்கிறது. அதாவது, "வேட்டை இன"த்தில் அரசாங்கம் அத்தேசத்தின் உற்பத்தி எந்திரத்தில் ஒரு உருபுபோல் ஆகிறது. அந்த எந்திரத்தை அடக்கும் 'சக்தியை அரசாங்கம் இழந்து விடுகிறது. பொது ஜனங்களின் க்ஷேமத்தையே நாடுகிறது என்று சுட்டிக் காட்டக்கூடிய அரசாங்கம் எதுவும் தற்சமயம் மேல் நாட்டில் இல்லை எனலாம். முதலாளி ஆட்சியில் மாத்திரமல்ல, பொதுவுடமை ஆட்சியிலும் அரசாங்கம் பொருளுற்பத்திக்கு அடிமைப்பட்டு விடுகிறது. அரசாங்கம் தேசத்தின் பொருளாக்கத்திற்குத்தான் ஒரு தூண்டுகோலாக இருப்பதற்கு மாருக அதன் கைக்கோலாக ஆகவே, உலகமே ஒரு ராஜீய, பூகோள, ஜாதீய, வேலிகளால் கட்டப்பட்ட தனித்தனி உற்பத்திசாலையாக மாறி விட்டிருக்கிறது.



இவ்விதம் ஒன்றின் நலமும் மற்றென்றின் நலமும் முரண்படும் அமைப்புகளிடை, இயற்பொருள், பகுதி செய்யப்பட்ட பொருள், முழுதும் செய்யப்பட்ட பொருள் ஆகியவை இங்குமங்கும் போக வேண்டி இருப்பதால் உலகத்தில் சமாதானமான பொருளுற்பத்தி என்று ஏற்படுவது மிகச் சந்தேகம். வேலிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க, பொருள்களின் போக்கு வரவிற்கு தடைகள் அதிகரிக்கின்றன. ஆகையாலேயே உலகப் பொருளாக்க முயற்சி தானுக தேக்கமன்றி ஓடும் ஓர் ஆறு போலிருக்காமல், இக் காலத்தில் அதனில் ஓரிடம் வரட்சி, ஓரிடம் தேங்கும் தண்ணீர், ஓரிடம் வேகமான சுழல் ஆகியவைகளைக் காண்கிறோம்.

**தவருன வழி :**

நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டிய விதம் தற்காலப் பொருளுற்பத்தி ஜனங்களின் தேவைக்கென்றில்லாமல் எந்த வகையில் நிறைய லாபம் கிடைக்குமோ அதில் செல்லுகிறது. இதனுல் அதிக விளைவும் அதிக தரித்திரமும் உலகத்தில் ஏககாலத்தில் இச்சமயம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் "கூட்ட இன" குணத்தாரிடை பொருளுற்பத்தியானது சிறிய சிறிய கிராமங்களில் தேவைக்கேற்றதாகச் செய்து கொள்வது என்று பிரிக்கப்பட்டு, ஜாதி என்ற கட்டுப்பாட்டினுல் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

ஆக்குவதிலும் செலவழிப்பதிலும் தேக்கம் இருப்பது இயற்கையல்ல. அவ்விதத் தேக்கம் இருக்காமலிருக்கவே

"கூட்ட இன"க் குணத்தவர் பொருளுற்பத்தியைச் சிறிய சிறிய அமைப்புகளாகச் செய்து, கூடியவரை பொருளைக் கொடுத்து பொருளை வாங்கிக் கொள்வது என்று வைத்திருந்தார்கள். சக்கிலி செருப்பைச் செய்து வியவசாயிக்குக் கொடுத்து, அதற்கு மாற்றாக நெல்லை வாங்கிக்கொள்கிறான். வியவசாயி தான் உற்பத்திசெய்த நெல்லில் சிறிது கொடுத்து சக்கிலியின் செருப்பை வாங்கிக்கொள்கிறான். இது ஒரு பூரண வட்டம். ஆனால் வியவசாயி ஒரு ஜப்பான் தேசத்துச் செருப்பை வாங்கினால், அவன் தான் உட்கார்ந்திருக்கும் கிளையைத் தானே வெட்டிக்கொள்கிறவனாகிறான். ஏனெனில் கிராமத்து சக்கிலியின் செருப்பை இவன் வாங்காததனால் அவன் ஏழையாகி விடுகிறான். இவனுடைய நெல்லை வாங்கும் சக்தி அவனுக்கு இல்லாமல் போய்விடுகிறது. ஜப்பானியன் இந்த வியவசாயியின் நெல்லை வாங்குவானோ என்பதும் சந்தேகம். ஜப்பானியன் வேறு தேசத்திலிருந்து தனது உணவை வாங்கிக்கொண்டு, அந்த வேறு தேசத்தவன் இந்தியாவிலிருந்து வேறு சாமான் வாங்கிக்கொண்டு, அந்த வேறு சாமான் வாங்கப்பட்டவன் இந்த வியவசாயியின் நெல்லை வாங்கலாம். இவனுடைய ரூபாய் இவ்வளவு தூரம் சுற்றிவிட்டு இவனிடை வரலாம். ஆனால் தற்காலத்திய வரிகள், சட்டங்கள் முதலிய எல்லைகளினால் பாதிக்கப்பட்டு இந்த ரூபாய் இந்தியாவிற்குத் திரும்பி வராமலே தடைப்பட்டு விடுகிறது. இவ்விதம் உள் வருமானமற்ற வெளிச் செலவினால் தேசத்திற்கு அதிக நஷ்டம் ஏற்படுகிறது.

**நாணயம்:**

ஆதியில் ஒருவருக்கொருவர் பொருள் மாற்றிக் கொள்ள அதிக வசதி கொடுக்கப்படவேண்டும் என்ற எண்ணத்துடன் நாணயம் என்பது ஏற்படுத்தப்பட்டது. அது இப்பொழுது அதிகாரத்தைத் தானே வகிக்க ஆரம்பித்துவிட்டிருக்கிறது. முதலாளி ஆக்கம் முழுவதும் இந்த நாணயவியலினால் ஏற்பட்டதே. ஒருவனின் மதிப்பை அளக்கும் கருவியாக அது இப்பொழுது உபயோகப்படு



கிறது. ஒரு முயற்சியை அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கும் பணத்தைக்கொண்டே ஜனங்கள் மதிப்பிடுகிறார்கள். கல்வியின் மதிப்புக்கூட அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கும் பணத்தைக்கொண்டு அளக்கப்படுகிறது. இக்காலத்தில் கூடியவரை மலிவாக வாங்கிக் கூடியவரை அதிக விலைக்கு விற்கவேண்டுமென்பதே எல்லோருடைய நோக்கம். ரஸிக திட்டம், தர்ம திட்டம், குண திட்டம் ஆகிய யாவும் மறந்துவிடப்படுகின்றன. தங்கத்தைத் தூக்கி சிங்காதனத்தில் வைத்திருக்கிறது. யாவரும் அதைத் தொழுமாறு தூண்டப்படுகின்றனர். ஆனால் மனிதன் உண்பதற்கு மாத்திரம் ஜீவிப்பதில்லையே! நமது இயற்கையிலேயே பதிந்திருப்பவையான வேறு பல தேவைகள் இருக்கின்றனவே! மனிதரின் இயற்கைக்கு ஏற்றதாக நமது பொருளாக்க முயற்சி ஏற்பட்டாலொழிய சிலர் கையில் குவிந்திருக்கும் தனம் மூழ்கியிருக்கும் மனித சமூகத்தை இன்னும் ஆழத்திற்கே இழுத்துச்செல்லும்.

தற்காலத்தில் இந்தியாவில் அனுப்புக்கூலி தவறாக திட்டப்படுத்தப்பட்டு இருப்பதனால் இயற்கையான விற்பனை தேக்கப்படுகிறது. நாஸிக்கில் விளைந்த திராக்ஷை நாஸிக் ரயில் ஸ்டேஷனில் ஆஸ்திரேலிய திராக்ஷையை விட மலிவாகக் கிடைக்கும் என்று ஒருவர் எதிர்பார்க்கலாம். ஆனால் சுங்கவரி, அனுப்புக்கூலி முதலிய திட்டங்களினால் ஆஸ்திரேலிய திராக்ஷையே மலிவாகக் கிடைக்கின்றன. இவ்விதம் பல உதாரணங்கள் கொடுக்கக்கூடும். பொருளின் போக்கு வரவு தடையின்றி ஏற்படும்வரை அயல் நாட்டாருடன் வியாபாரம் வைத்துக்கொள்ளுவது மடமையாகும். வியவசாயத்தை விருத்தி செய்ய வேண்டியதைப்பற்றி தற்காலம் அதிகப் பேச்சு நடக்கிறது. இவ்வித "விருத்தி" என்பதற்கு அர்த்தம் நாம் நம்முடைய கோடிக்கணக்கான ஜனங்களுக்குத் தேவையான உணவை பயிரிடவேண்டுமென்பதானால் அது நல்லதே. ஆனால் விருத்தி என்பதன் உத்தேசம் வெளிநாட்டாருக்குத் தேவையானதை உண்டாக்குவதென்றால், நமது வியவசாயிகள் எச்சரிக்கையுடன் இருப்பது நலம். ஏற்கனவே லாப

ஆசையினால் தூண்டப்பட்ட நமது வியவசாயிகளில் சிலர் சூடுபட்டுக்கொண்டிருக்கின்றனர். மார்க்கெட்டில் அதிகத் தேவை இருந்த சமயம் அயல் நாட்டிற்கென்ற "விற்பனை"ப் பயிர்களை (பருத்தி, அவுரி) உற்பத்தி செய்து விட்டு, பிற்பாடு வியாபார மந்தம் ஏற்பட்ட சமயம் அப்பயிர்களைக் கையில் வைத்துக் கொண்டு திண்டாடும்படி ஆயிற்று. இவ்விதமான "துணிவு வியாபாரத்தில்" பிரவேசிக்கத் தேவையான பொருள் முதல் அவர்களிடம் இல்லை என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். உலக வியாபாரத்தில் தற்சமயம் சிலவித அதிகாரம் படைத்தவர்களுக்கே செல்வாக்கு என்றிருக்கிறது. அவ்விதமில்லாமல் எல்லோருடைய நன்மைக்குமாக சர்வதேச விலை திட்டங்களும் நாணய மாற்றுகளும் ஏற்படுத்தப்பட்ட பின்பு நமது வியவசாயிகள் அயல் நாட்டு வியாபாரத்தைப்பற்றி சிந்திக்கலாம். அதுவரை நமது உள்ளூர் தேவைக்கென்றே உற்பத்தி செய்து, கூடியவரை தரகர் கையில் அகப்படாமல் தப்புவது நலம்.

## அரசாட்சியில் மாறுதல்:

பொருளாக்கம் என்ற சாஸ்திரத்தை பணத்தின் மூலமாகவே பார்க்குமாறு வெகு நாட்களாக நாம் போதிக்கப்பட்டிருக்கிறபடியால் முதலாளித்வம் என்பது மூலதனத்தைக் கொண்டு பொருள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய எந்திரங்களையும், சரக்குகளையும் வாங்கி உற்பத்தி செய்யும் முறை என்று நினைக்கிறோம். இதுமாத்திரம் தான் முதலாளித்வம் என்றால் இது முன்பே மரித்து விட்டிருக்கும். ஏனென்றால் அது நீடித்து வாழவேண்டுமென்றால், அதன் சாமான்களை வாங்குவதற்கு எப்போதும் வாடிக்கைக்காரர்கள் வேண்டும். அவ்வித வாடிக்கைக்காரர்களை உண்டாக்க சில சமூக வழக்கங்களையும் நாகரீக முறைகளையும் ஏற்படுத்தி அம்முறைகளை ஜனங்கள் கண்மூடித்தனமாய் பின்பற்றுவதாக இருக்க வேண்டும். இவ்விதம் தனக்கு இடம் சம்பாதித்துக் கொண்டாலே ஒரு அமைப்பு நீடித்து வாழக்கூடும். ஆகையால் ஒரு அமைப்பு எவ்விதமானது என்று நாம் ஆராயும் சமயம் அது தான் நீடித்திருக்க



எவ்வித ஏற்பாடுகள் செய்கிறது, ஜனங்களின் வாழ்க்கையில் எவ்வித மாறுதல்களையும் அதிகாரங்களையும் ஏற்படுத்திக்கொள்ள முயலுகிறது என்பதை ஆராயவேண்டும். ஒரு உற்பத்தி அமைப்பு தன்னுடைய சாமான்களுக்கு எவ்வித மார்க்கெட்டை ஏற்படுத்திக்கொள்ளுகிறது என்பதைக் கொண்டே அந்த அமைப்பு எந்த வகையைச் சேர்ந்தது என்று நாம் பிரிக்கவேண்டும். அவ்விதம் பிரிப்பதுதான் மனிதர் க்ஷேமத்தைக் கருதி பிரிக்கும் முறையாகும்; கேவலம் தனம் எவ்வளவு திரட்டுகிறது என்று மாத்திரம் கவனிக்கும் முறை ஆகாது.

## அடிமைப்படுத்தும் முறை:

ஜனங்களின் தேவைகள் அதிகமாவது கடைக்காரனுக்கு நலம். அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு தங்கள் தேவையைத் தாங்களே திருப்தி செய்துகொள்ள இயலாத நிலைமையில் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு கடைக்காரன் தானே அத்தேவைகளைப் பூர்த்திசெய்து தனக்கு லாபம் தேடிக்கொள்ள முயலுவான். ஆகையால் ஜனங்கள் அவனையே எதிர்பார்க்கும்படி செய்வதுதான் அவனுக்கு நலம். இந்த உத்தேசத்தைக்கொண்டு அவன் அவர்களுடைய தேவைகளை எல்லாம் கவனித்து, அதை அவர்கள் எவ்விதம் திருப்தி செய்ய முயலுகிறார்களோ அதைவிட இன்னும் நல்ல முறையில்தான் செய்ய முன்வருவான். இவ்விதமே நீடித்த நாள் நடந்தால் இறுதியில் வாங்குபவன் தன் திறமை மங்கி, குன்றி, சக்தியற்றவனாவான்; விற்கும் கடைக்காரன் தன் புத்தி கூர்மையுறப் பெற்றவனாய், தனவந்தனாய், கொழுப்பான். ஒரு நிலைப்பட்ட உற்பத்தி முறையின்கீழ் இதுதான் நடக்கிறது. அநாகரீகமானவரை நாகரீகமாக்குகிறோம் என்ற பெரிய பொறுப்பை வகிக்கும் பாசாங்கைச்செய்யும் ஆள்பவர்களின்கீழ் அகப்பட்டு அவர்களிடம் தங்கள் அரசாட்சிக்கும், தங்கள் பண்டங்களைச் செய்துகொடுக்கவும் நம்பியிருக்கும் நாடுகளின் கதி நாளடைவில் இவ்விதம் மாறி வருவதையே நாம் காண்கிறோம். ஆலைத் தொழில் உற்

பத்தியின்மூலம் ஜனங்கள் இன்னும் உயர்ந்த வாழ்வு வாழலாம் என்ற மயக்கத்தை உண்டாக்கி, ஆலையில் தயாரித்த மலிவான சரக்குகளை வாங்கி நிறைய தினுசுகளைக்கொண்டு வீட்டை நிரப்பலாம் என்று பொதுஜனங்கள் கூறப்படுகிறார்கள். வாங்குபவர்களின் நலத்திற்காகவே தாங்கள் உற்பத்திசெய்வதாக ஆலைத்தொழில்காரர்கள் கூறுவதை எவ்வளவுக்கெவ்வளவு வாங்குபவர் நம்புகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவுதான் ஆலைகள் விருத்திபெற முடியும். (ஆலைகள் விருத்திபெற்றாலே ஆலைத்தொழில் முக்கியமாகக் கொண்ட நாடுகளும் விருத்திபெற முடியும்.)

இவ்வித சக்தி குன்றின நிலை அமெரிக்க ஐக்ய நாட்டில் மிக வேகமாய்ப் பரவிவருவதைக் காணலாம். அங்கே ஒரு பெண் தனது சமையலைக்கூடச் செய்ய வேண்டாம். எல்லாம் அவளுக்காகச் செய்யப்பட்டுத், தயாராக இருக்கின்றன. அவள் ஒரு கடைக்குச் சென்று, குழம்பு பில்லைகள், சமைத்து டப்பிகளில் அடைக்கப்பட்ட கறி வகைகள், மீன்கள், புதிதாகச் செய்யப்பட்ட பக்ஷணங்கள் பனிக்கட்டியில் வைத்துக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்பட்ட பழங்கள் ஆகியவற்றை வாங்கலாம். அவள் செய்ய வேண்டியதெல்லாம் இவைகளை வாங்கிப் பறிமாறிச் சாப்பிடவேண்டியதே. இந்த குணம் நமது நாட்டிலும் பரவுகிறது. குவாக்கர் ஓட்ஸ், கோதுமை அவல், சோளப்பொறி, ஜாம், ஊறுகாய்கள் ஆகிய பல உணவு பதார்த்தங்கள் நாளுக்குநாள் அதிகமாகப் பழகிவருகின்றன. அறைகுறையாகப் படித்த வைத்தியர்கள் அறியாப் பெண்களுக்கு இவைகளை சிபார்சுசெய்து, அதை உற்பத்தி செய்பவரின் மூடுமந்திரங்களைத் தாங்களும் கிளிப்பிள்ளைகள் போல் சொல்லி வீட்டுக் கோதுமை கஞ்சியையும் தோட்டத்துப் புது பழங்களையும்விட இவைகள் இன்னும் மேன்மையானவை என்கிறார்கள். இதே ரீதியில் போனால் இன்னும் சில நாட்களில் நமது கடைகளில் இங்கிலாந்தில் சமைத்து அழகான டப்பிகளிலும் புட்டிகளிலும் அடைக்கப்பட்ட சாதம், சப்பாத்தி, முதலியவைகள் குவிந்துவிடும். சுயநலம்பாராட்டும் டாக்டர்கள் இந்தியாவின் உஷ்ணத்தில்



செய்யப்பட்டவைகளைவிட இங்கிலாந்தின் குளிரில் தயாரிக்கப்பட்ட சோறு உடலுக்கு இன்னும் அதிக நலத்தைக் கொடுக்கும் என்பார்கள். புத்தியைவிடப் பணம் அதிகம் பெற்ற பெண்கள் அதை நம்பி அச்சரக்குகளை வாங்குவார்கள். நாளடைவில் சமைக்கும் வகையே மறந்துவிடப்படும்; இங்கிலாந்தின் ஆலைத் தொழில்காரர்கள் இன்னும் கொழுத்த பணக்காரர் ஆவார். இது வெறும் கற்பனை அல்ல என்பது நாம் நம்மைச் சுற்றிலும் நடப்பதைக் கண்களைத் திறந்து நோக்கினால் தெரியவரும். ஒரு நிலைப்பட்ட ஆலைத் தொழில் என்பது அதன் உற்பத்தி சரக்கை வாங்குபவர்களின் சக்தியைப் புதைத்து அந்த சமாதியின்பேரில் எழுப்பப்படுவது. ஆகையால் மனிதருக்கு அது உண்டாக்கும் நலத்தை உத்தேசித்து அதை மதிப்பிட்டோமானால் ஒரு நிலைப்பட்ட ஆலைத் தொழில் என்பது, அடிமைப்படுத்தும், இரத்தத்தை உரிஞ்சும் முறை; கவி டாகூர் கூறியவிதம் நரமாமிசபக்ஷிணி என்றே ஏற்படும். அதற்கு இரையாகாமல் ஜனங்கள் சுறுசுறுப்புடன் தமது தேவையைத் தாங்களே திருப்திசெய்து கொள்ள முயன்றால் முதலாளித்வம் அழிந்துவிடும்.

## விடுதலையளிக்கும் முறை:

இதற்கு மாறாக ஜனங்களுக்குத் தங்கள் திறமைகளை விருத்தி செய்துகொள்ள இடமளிப்பதான உற்பத்தி முறையும் தேவையைப் பூர்த்திசெய்யும் முறையும் இருந்தால் அந்த அமைப்பு விடுதலை அளிப்பதாகவும் விருத்தி பெறச்செய்வதாகவும் முற்போக்குள்ளதாகவும் இருக்கும். நமது கிராமங்கள் தமது தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்ய முயல வேண்டும். அவ்விதம் பூர்த்தி செய்து கொள்ள முடியாதவைகளை வேண்டாமென்று ஒதுக்கிவிட வேண்டும். இவ்விதமிருந்தால் ஆரம்பத்தில் வாழ்க்கை நிலை மிக மட்டமானதாகத் தென்பட்டாலும், முன்னேற்றமும் தன்னம்பிக்கையும் நாளடைவில் ஏற்படும். கிராமவாசிகள் தமது தேவை, நகரவாசிகளின் தேவை ஆகிய இரண்டையும் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையில் நமது

நாட்டை முன்னேற்றமடையச் செய்வதே நமது இலக்ஷியமாக இருக்கவேண்டும். அவ்வித முயற்சியினாலேயே எல்லா ஜனங்களுக்கும் வேலை ஏற்படும். பணம் ஏற்ற வகையில் பரவ சாதகமாக இருக்கும். ஏழ்மையை வேருடன் நீக்கி நிலைபெற்ற செல்வத்தை உற்பத்திசெய்ய இது ஒன்றே ஏற்ற வழி.

**சுதந்திரம் :**

நமக்கு அரசியல் சுதந்திரத்தை ஓர் வெகுமதியாக அளித்தாலும் அதை வைத்துக் கொண்டு நாம் என்ன செய்வோம்? அதைப்பயன்படுத்திக் கொள்ள நம்மால் இயலாதாகையால் அதைப்பெற்றால் மாத்திரம் போதாது. பிறரை நம்பி வாழ்வது அடிமைப்படுத்தும், நமக்கு வேண்டியதை நாமே உற்பத்திசெய்து கொள்ளக் கற்றாலே சுதந்திரத்திற்கு அடிப்படையான தன்னம்பிக்கை ஏற்படும். கிராமவாசிகள் தன்னம்பிக்கை பெற்று சுதந்திரமுடையவர்களானால், அவர்களுக்குத் தம்மைப் பாது காற்றுக் கொள்ள வகை தெரியும்; அவர்களுடைய பஞ்சாயத்து சரிவர நடக்கும்; அவர்கள் தமது சச்சரவுகளைத் தாமே தீர்த்துக் கொள்ளுவார்கள்; கோர்ட்டுகளுக்குப் போகும் வழக்கம் நிற்கும்; அவர்கள் தண்ணீர் வசதிகள், சுகாதாரம் முதலியவற்றை அவர்களே ஏற்படுத்தி கொள்வார்கள்; அவர்களுக்குத் தேவையான ராஸ்தாக்களை அமைத்துக்கொள்வார்கள்; அவர்களுடைய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திக் கொள்வார்கள்; அப் பள்ளியின் செலவைத் தங்களுக்குள்ளேயே வரி விதித்து சரிக்கட்டிக் கொள்வார்கள். சுதந்திரம் பெற்றதும் இவ்வளவும் செய்து கொள்ளத் திறமையற்றவர்களாக நாம் இருந்தால், அடிமை நிலையைவிட இன்னும் கேடான நிலைக்கு மாறுவோம்; ஆகையால் அரசியல் சுதந்திரத்தைப் பெறுவது என்பது மாத்திரம் போதாது.

மேலும், கிராமங்களில் தங்கள் வேலைகளைத் தாங்களே பார்த்துக்கொள்ளக் கற்று ஒழுங்குடன் நடந்து கொண்டால் ஜனங்கள் சக்திபெற்று வெளிநாட்டு படை



எடுப்பிற்கும் அஹிம்ஸா முறையில் எதிர்த்து நிற்கக் கூடியவராவார்கள். தங்களைக் காப்பாற்ற பிற நாட்டார் உதவியை நாடும் இழிவான ஸ்திதியில் இரார்.

**ஏகாதிபத்திய விதை :**

ஒரு தேசத்தை மற்றொரு தேசம் தனக்குக் கீழ்ப்படுத்தி அதனால் தனக்கு லாபம் ஏற்படுத்திக் கொள்வதை நாம் ஏகாதிபத்யம் என்கிறோம். அவ்வித ஏகாதிபத்யத்தின் குணத்தை நாம் காண்பதற்கு வேறு தேசம் போகவேண்டுமென்ற அவசியமே இல்லை. ஏகாதிபத்தியத்தின் குணத்தை நாம் ஒரு தனிப்பட்ட மனிதனிடம் கூடக் காணலாம். பிறர் உழைப்பிலிருந்து தான் லாபம் பெற முயலுவதே அதன் சாரம். அதுதான் ஏகாதிபத்ய முறை.

ஒரு நிலைப்பட்ட ஆலைத்தொழில் ஒரு முதலாளி ஆதிக்யத்தில் நடத்தப்படுவதில் இந்த குணம் மிகத் தீவ்ரமாக இருக்கிறது. ஆகையால் இம்முறையை தனது பொருளாக்கத்திற்கென்று எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு நாடும் இறுதியில் ஏகாதிபத்யத்தையே உண்டாக்கும்; சுதந்திரத்தை உண்டாக்காது. அது இரண்டுபுறமும் கூர்மையாக இருக்கும் கத்தி. எதிராளியை மாத்திரமல்ல, அதை உபயோகிப்பவனையும் அது காயப்படுத்தும். வெளியிலிருந்து பலாத்காரமும் கட்டுப்பாடும் இருந்தால் தான் அது விருத்தி பெறும்.

இவ்விதத்தீங்கை அளிக்கும் முறைக்கு மாற்று தத்தம் சுய நம்பிக்கையும் திறமையுமே. பரவிய உற்பத்தி முறையினால் இவ்விரண்டையும் நாம் விருத்தி செய்து கொள்ளலாம். அதற்குமேல் நாம் உடன் பட்டால் ஒழிய ஒரு தேசமும் நம்மை அடிமைபடுத்த இயலாது. வெளியிலிருந்து நமக்குக் காண்பிக்கப்படும் ஆசை மயக்கங்களை எதிர்த்துக் கொள்ள போதுமான திட சக்தி நம்முள் இருந்தாலே நாம் நமது சுதந்திரத்தை வைத்துக்கொள்ள இயலும். இல்லாவிடில் நாம் அடிமையாகவேதான் இருக்க வேண்டும்.

ஏகாதிபத்ய முறை வெளியிலிருந்து அதிகாரம் செலுத்துகிறது. பயமும் பலாத்காரமும் அதற்குத் தேவை. ஆனால் உண்மை சுதந்திரமென்பது ஆத்ம கட்டுப்பாட்டினால் ஏற்படுவது. அன்பும் அஹிம்சையும் கொண்டது. இந்த இரண்டாவது இருக்கும் இடத்தில் பெரியவன், சிறியவன், பணக்காரன் ஏழை என்ற வித்தியாசமிராது. எல்லோரும் சகோதர ராவார்கள்.

ஏகாதிபத்ய முறையின் பயனை நாம் நமது கண்களெதிரேயே பார்க்கிறோம். ஜர்மனி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, ஐக்யநாடு எல்லாமும் உலகத்தின் பொருள்களை தங்களுக்குக் கைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாடும் வெளிக்குச் சொல்லும் காரணத்தை ஒதுக்கி அதன் உட்கருத்தை ஆராய்ந்தால் இதுதான் உண்மை என்பது நமக்குத் தெரியும். தேசத்திற்கு தேசமோ, மனிதருக்கு மனிதரோ, ஏகாதிபத்ய முறை என்பது அழிவிற்கும், விரோதத்திற்கும், ஹிம்ஸைக்குமே அழைத்துச் செல்லும். நமது வாழ்க்கையில் இவ்வித முறைவேண்டுமோ?

பிறர் உழைப்பினால் நாம் லாபம் பெற வேண்டுமென்ற இச்சை நமது மனதிலிருக்கும் வரை சர்ச்சிலாகிலும் ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸ் ஆகிலும் நமக்கு உதவி அளிக்க இயலாது.

பிரிட்டனின் ஆலைத் தொழிலுக்கு இயற்பொருள் அளிக்கவும், அந்த ஆலைகள் தயாரிக்கும் பண்டங்களை வாங்குவதற்காகவுமே நாம் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆகையால் நமது இயற்பொருள்களை நாமே உபயோகித்து நமது தேவைகளுக்கு நாமே பண்டங்களைத் தயாரித்துக்கொள்ள ஆரம்பித்தால், அந்தக்கணமே ஏகாதிபத்ய முறையின் அஸ்திவாரத்தில் வெடிமருந்து வைத்தாகி விடும்.

நமது நோய்க்கு இந்த மருந்து மிக சுலபமானதாகத் தோன்றுவதாக இருப்பினும், இதற்கு மிகக் கடினமான



ஆத்ம கட்டுப்பாடும், அடக்கமும் அவசியம். தற்காலம் கிராம உற்பத்தி பண்டங்கள் அதிக விலையாகவும், ஆலை உற்பத்தி பண்டங்கள் மலிவாகவும் காண்கின்றன. இதற்குக் காரணம் கிராம உற்பத்தி முறையில் பரவிய கூலிமுறை இருக்க, ஆலை உற்பத்தி முறையில் முதலாளியும் அவன் சர்க்காருமே லாபத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் குறைந்த லாபத்தை எடுத்துக்கொள்கிறார் என்ற காரணத்திற்காக அந்த பறிமுதல் முறையை நாம் பொறுத்துக் கொள்ளலாமா? கிராமப் பண்டங்கள் அனேகமாய் மோட்டாவாக இருக்கின்றன. இதற்குக் காரணம் நாம் அவைகளை இவ்வளவு நாட்கள் கவனியாமல் இருந்ததே. ஆலைகளில் ஒரே மாதிரி உற்பத்தி செய்யப்படுவதை வாங்கி அற்ப திருப்தி அடைந்து இந்தக் கிராமப் பண்டங்களை நாம் புறக்கணிக்கலாமா? இறுதியில் சுயராஜ்யம் பெறுவதற்கு நாம் இப்போது இச்சிறிய கஷ்டங்களை அனுபவித்தேயாக வேண்டும். இவைகள் நமக்கு மிகப் பெரிதாகத் தோன்றி நமது கண்களை மயக்கி பரதேசிப் பட்டாடைகளே மிக மேன்மையானவை என்று தோன்றச் செய்கின்றனவோ? வீடு முழுவதும் இவ்விதம் அழகானவை என்று கருதப்படும் ஆலைத்தொழில் சாமான்களை வைத்துக்கொண்டு அடிமை வாழ்க்கை வாழ்வதை விட ஒரு கவளம் அன்னமும் சுதந்திர வாழ்க்கையும் எவ்வளவோ மேலானவை.

இந்தியாவின் தேவைகளை இந்தியக் கிராமங்கள் எவ்வளவுக்கெவ்வளவு பூர்த்தி செய்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு நாம் சுயராஜ்யம் பெற்றவர்களாவோம். உற்பத்திக்காரர், வாங்குபவர் ஆகிய இருதிறத்தாரும் இம்முயற்சியில் உதவி புரியலாம். ஒவ்வொரு மனிதனும், ஸ்திரியும் குழந்தையும் ஏகாதிபத்ய முறையை எதிர்க்கும் இந்தப் போரில் கலந்து கொள்ளலாம்.

# அத்யாயம் 7

## வேலை.

பொருளாக்க முயற்சியில் நாம் உத்தேசிப்பது என்ன? எல்லோருக்கும் வேலை ஏற்படும் விதம் முயற்சி செய்வதா? அவ்விதமென்றால் வேலைக்கு அதிக மதிப்புக் கொடுப்பதாகுமே. வேலை செய்வதில் என்ன உயர்வு? வேலை என்பது நமக்கு நன்மை பயப்பதா அல்லது தீமை பயப்பதா? வேலை செய்வதனால் மனிதனுக்கு என்னலாபம்? தேக உழைப்பினால் மனிதர் விருத்தி பெருகின்றனரா க்ஷீணிக்கின்றனரா? இவ்விதப் பிரச்னைகளை நாம் சிறிது ஆராய்வோம்.

நல்ல உணவு பதார்த்தங்களையும், மற்றும் யோக்யமான பண்டங்களை உண்டாக்குவதே ஒரு உத்தம நோக்கமாகும். மோசங்கள் மிகுந்திருக்கும் இந்நாட்களில் அவ்வித வேலையைச் செய்வதே சமூக சீர்திருத்தம் செய்வதாகும். வேலையற்யவர்களுக்கு வேலையை உண்டாக்கிக் கொடுப்பதும் ஒரு தர்ம கைங்கர்யமாகும். இவை மாத்திரம் போதுமோ? வேலை என்பது நல்ல பதார்த்தங்களை உண்டாக்குவது என்றால் பெரிய தொழிற்சாலைகளில் எந்திரங்களின் மூலம் ஏராளம்ாகப் பொருள்களை உற்பத்தி செய்து கொடுப்பதும் சமூகத்திற்கு மிகவும் நன்மை செய்து கொடுப்பதாகத்தானே இருக்கவேண்டும் என்று தோன்றக்கூடும்.

வேலைக்கென்றே வேலை செய்வது மிருக உழைப்பைத் தாக்கி வைப்பதாகுமே! உழைப்பைக் குறைக்கவேண்டுமென்றால், மனிதரைக் கஷ்டப்பட்டு உழைக்குமாறு செய்கிறவன் ஜனங்களுக்கு நன்மை செய்பவனல்ல என்றல்லவோ ஏற்படும்! எந்திர உழைப்பைக் குறைத்து மனிதரின் வேலையை அதிகப்படுத்தும் கிராமத்தொழில் வழியைப் பின்பற்றுவது என்ன காரணம்? இம்முறையினால் எ.. தப்பெற முயலுகிறோம் என்ற கேள்வி வாசகர்களுக்கு ஏற்படலாம்.



மிருகங்களிடமிருந்து மனிதர் வித்யாசப்படுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று அவருடைய ஆத்ம விருத்தியும் மதக்கொள்கைகளும். மதபற்று என்றால் பூஜை செய்வதும், கோயில் வழிபாடும், நமாஸ் படிப்பதும் என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஒருவன் உண்மை பக்தனென்றால் அவனுடைய ஒவ்வொரு செய்கையும் அவனைப் படைத்தவரின் மேன்மையை எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். ஒருவன் தான் விழித்திருக்கும் காலத்தில் மிகச் சிறிய அளவையே தனது தெய்வத்தைத் தொழுது பூஜிப்பதில் கழிக்கிறான். மிகுதிப்பொழுதைத் தன்னுடைய வேலையில் கழிக்கிறான். இவனுடைய எண்ணங்களெல்லாம் தனது வேலையைப் பொருந்தியவையே. இவனுடைய ஆத்ம விருத்தியும் இவனுடைய எண்ணங்களையும்வேலையையும் பொருத்தியதாகவே இருக்கும. ஆகையால் ஒருவனுடைய ஆத்ம விருத்திக்கு அவனுடைய மதக்கொள்கைகளைவிட அவன் வேலை செய்யும் வகையே அதிக முக்கியமென்று ஏற்படுகிறதல்லவா. உண்மையில் மதம் என்பது வெறும் கொள்கையே என்றும், தான் செய்யும் வேலையின் மூலமே மனிதன் அக்கொள்கையை உயிருள்ளதாகச் செய்கிறான் என்றும் சொல்லலாம். கருணை என்பது ஒரு கொள்கை. ஒருவன் தனக்குக் கீழ்பட்டிருக்கும் தொழிலாளிகளிடம் கருணையுடன் நடந்துகொண்டால் அவன் தன்னுடைய கொள்கைகளை அனுபவத்தில் கொண்டு வருகிறான். அவ்விதம் அக்கருணையை வெளிப்படுத்தினாலே அவனுடைய கொள்கை உயிர் பெற்றதாகும். இவ்விதம் தனது தொழில் மூலம் கொள்கைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் பெற்று மனிதன் ஆத்ம விருத்தி அடையவேண்டுமென்றால், பூஜை வழிபாடுகளைவிட வேலை மிக முக்கியமென்பது ஏற்படுகிறது. இவ்விதம் நோக்கின் மனிதனை வேலை செய்யாதே என்பது, கடவுளைத் தொழக்கூடாது என்று தடுப்பதற்கு சமமாகும். பொருளுற்பத்தியைப் பொருந்திய வரை ஒரு சமூகத்தில் வேலை செய்யாதவர்கள் தீண்டாதவர்களுக்குச் சமானம். தீண்டாதவனாக

இருப்பதும், வேலை செய்யாதவனாக இருப்பதும் இரண்டும் தாழ்வே. யாவருக்கும் வேலையை உண்டாக்கிக்கொடுப்பது யாவரையும் கோவிலுக்குச் செல்லலாம் என்று கதவைத் திறந்து விடுவதற்குச் சமமாகும்.

சற்று நிதானித்து யோசிப்பின், உண்மையில் பூஜை, வழிபாடு முதலியவற்றைக் காட்டிலும் வேலை என்பது சமூகத்தை அதிகம் சீர்திருத்துகிறது என்பது தெரிய வரும். கடவுளிடம் அன்பென்று வாய்மூலம் சொல்வது சுலபம். ஆனால் கடவுளிடமுள்ள அன்பை நமது வேலையில், நாம் பிறருடன் பழகும் வகையில் காண்பிப்பது சிரமம். மதத்தினால் கடவுளிடம் அன்பு செலுத்த வேண்டியதை உணர்கிறோம். ஆனால் வேலையின் மூலமாகவே அவ்வித அன்பைச் செலுத்தும் முறையைக் கற்கிறோம். நாம் கண்டு பழகும் நமது சகோதரர்களிடம் அன்பு செலுத்த நாம் அறியாவிடில் நாம் காணாத கடவுளிடம் அதைச் செலுத்தும் சக்தியை எவ்விதம் பெறுவோம்.

ஆகையால் முன்பே கூறிய வண்ணம் கோயில் வழிபாட்டைவிட வேலையே ஆத்மவிருத்திக்கு சாதனம் என்பது தெரியவரும். ஆனால் எல்லாருமே வேலைசெய்வதை தர்மவழி என்று கருதுவதில்லை.

உழைப்பு என்பதை ஆராய்ந்து பார்த்தோமானால், அதை ஒரு பாரமென்று நினைக்க மாட்டோம். அதனில் இரண்டுவித முக்கிய அம்சங்கள் இருக்கின்றன:—(1)வளர்ச்சியின் விதை—அதாவது மனிதனின் ஆத்ம வளர்ச்சிக்கும் சந்தோஷத்திற்கும் காரணமான சிறிய வஸ்து. (2) வெறும் உழைப்பு—இவ்விரண்டும் சேர்ந்து ஒரு நெல்லின் உள் அரிசியும் மேல் உமியும் போன்றதாகும் "மூளைப்பதரிசியே யானாலும் விண்டுமி போனால் முளையாதாம்" "ஒரு பங்கு மூளையும் தொண்ணூற்றொன்பது பங்கு வியர்வையும் சேர்ந்தால் மேதாவி" என்பது ஆங்கிலப் பழமொழி. அந்த வியர்வை அல்லது தேக உழைப்பு இல்லாவிடில் மூளை பயன் பெறாது. இரண்டுமிருந்தாலே நாம் வளரக்கூடும். வேலையின் மூலம் நாம்



விருத்திபெற வேண்டுமென்றால் தேக உழைப்பு அவசியம். எவ்வித இனிமை சாரீரம் படைத்திருப்பினும் பல வருஷங்கள் சாதகம் செய்த பின்பே ஒரு பாடகர் சபையில் பாடி கீர்த்தி பெறக்கூடும்.

ஒருவன் விஞ்ஞானியாவதற்கு முன்பு பல வருஷங்கள் ஒரு ரஸாயன சாலையில் உழைத்துத் தனது முகரும் சக்தியை விருத்திசெய்துகொண்டு, கந்தகநீரகத்தை உணரும் திறமையைப் பெற்றவனாகவேண்டும். இது இயற்கை விதி. ஆகையால் வேலையில் நமது மனதிற்குகந்த சந்தோஷமான அம்சத்துடன் உழைப்பும் இருந்தாலே வளர்ச்சி ஏற்படும். உழைக்காமலிருப்பவன், மற்றொரு அம்சமான சந்தோஷத்திலிருந்து மாத்திரம் லாபம் பெற இயலாது. அவ்வித வேலை சிறிது காலம் மனதிற்குப் பிடித்திருந்தாலும் அவனுடைய சக்தி நாளடைவில் குன்றி விடும். வேலையைச் சரியான வழியில் உபயோகித்தால் அதன் மூலம் நமது சக்திகளை விருத்திசெய்து கொள்வதுடன் நமது ஆத்ம திருப்தியையும் சம்பாதித்துக் கொள்ளலாம். ஒருவனுடைய மதப்பற்றும் வாழ்க்கை இலக்ஷியமும் அவனுடைய தினசரி வேலையின் மூலம் வெளிப்படும். இவ்விதம் மனிதனுக்கும் அவனுடைய வேலைக்கும் பரஸ்பர பிணைப்பு இருக்கிறது. ஒருவன் செய்யும் வேலையைவிட, அவ்வேலையைச் செய்ய அவன் எவ்விதம் முனைந்தான் என்பது முக்கியம். வேலையினால் ஏற்படும் லாபம் சொற்பம். ஆனால் வேலையைச் செய்யும் முறையினால் மனிதனுக்கு ஏற்படும் வளர்ச்சி நலனும், அவ்வித ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சியினால் சமூகம் அடையும் நலனும் அதிகம்.

உழைப்பு என்பது கடினமாக இருப்பதால் அதைச் செய்யாமலிருக்க முயல்வதும், செய்தே தீரவேண்டிய உழைப்பைப் பிறரைக்கொண்டு செய்துகொள்வதும், மனிதரின் இயற்கை. ஆனால் உழைப்பு எவருக்குமே ருசிப்பதில்லையாகையால், பிறரைக்கொண்டு செய்துகொள்வதென்றால, பிறரைப் பலவந்தப்படுத்த வேண்டியதாகிறது.

நாம் வாழ்க்கையில் சுகத்தை மாத்திரம் அனுபவிக்க வேண்டுமென்றால், உழைப்பைப் பிறரைக்கொண்டு செய்விக்க நமது கையில் சவுக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மேல் நாட்டார் உழைப்பையும் சுகத்தையும் சேர்த்தே அனுபவிக்கவேண்டுமென்று கருதுவதில்லை.

அதற்கு மாறாக, வாழ்க்கையில் சந்தோஷங்களை அதிகப்படுத்தவே அவர்கள் முயன்றிருக்கிறார்கள். இவ்விதம் தம்முடைய சந்தோஷ பாகத்தை மாத்திரம் அதிகரிக்கச் செய்ய முயல்வதே பிறரை அடிமைப்படுத்துவதாகும். முற்காலத்திய கிரேக்க ரோமிய சாம்ராஜ்யங்கள் சுகத்தைப் பெறுவதற்குச் செய்யவேண்டியதான அவசியமான சுகமில்லாத உழைப்பைத் தாங்கள் பிடித்து வந்த அடிமைகளைச் செய்யுமாறு ஏவி வாழ்ந்தன. அதேவிதம் பலத்தின் மேன்மையால் அதிகாரம் செலுத்திவந்த சிற்றரசர்களின் காலத்திலும் அச் சிற்றரசர்களாகிய "பாரன்"மார்கள் குடித்துவிட்டு புரள்வார்கள்; குடிகள் உழைப்பார்கள். உழைக்காமல் அனுபவிப்பதே மிக மேன்மையாகக் கருதப்பட்டது. முதலாளித்வத்திலும் தொழிலாளிகள் உழைப்பதன் பலனை முதலாளிகள் அனுபவிக்கிறார்கள். ஏகாதிபத்யத்தில் அடிமை தேசத்தின் உழைப்பை அதிபதி தேசம் அனுபவிக்கிறது. இந்த முறைக்கு இம்சை அடிப்படையானது. இம்சை செய்யாமல் ஒரு தேசம் மற்றொரு தேசத்தைத் தனது உழைப்பைச் செய்யுமாறு ஏவ இயலாது. கிரேக்க மேதாவியான "அரிஸ்டடில்" என்பவர் "அடிமைத்தனம் இயற்கை விதி" என்றார். அதாவது அடிமையாக இருப்பதற்கென்றே சிலர் பிறந்திருக்கின்றனரென்று கருதினார். அடிமை உழைப்பிற்கும் சாதாரண உழைப்பிற்கும் வித்யாசம் என்னவென்றால் தன்னுடைய சுய முயற்சியைக் காண்பிக்க இடமில்லாத உழைப்பை அடிமைத்தனமெனலாம். கிரேக்கர்களும் ரோமியர்களும் தேக உழைப்பு மிகவும் தீது எனக் கருதியதால், ஒருவன் எவ்வளவுக் கெவ்வளவு அவ்வித உழைப்பைத்தான் செய்யாமலிருந்தானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய



மதிப்பு அதிகமாயிற்று. இவ்விதக் கொள்கைகளைக் கொண்ட அந்த தேசங்கள் அழிந்து விட்டன.

நமது தினசரி வேலைகளை மூன்று விதமாகப் பிரிக்கலாம் :—

(1) பிறர் சொல்லுக்குக் கீழ்பட்ட உழைப்பு.

(2) உழைப்புக்கென்றே உழைப்பது.

(3) ஒரு உத்தேசத்தை நிறைவேற்ற உழைப்பது.

முதல் வகை அடிமைத்தனம். அவ்வித உழைப்பு மனிதனின் மானுஷ்யத்தைக் குறைத்து விடுகிறது. இரண்டாவது வகை விளையாட்டு, பந்தாட்டங்கள் முதலியவை போன்றது. அதனால் தேகம் வளரும். ஆனால் மூன்றாவது வகையான ஒரு உத்தேசத்தைக்கொண்டு மனிதன் உழைப்பதனாலேயே மனிதனின் உண்மை சக்தி விருத்தி பெறும்.

சிலர் கருதுவதுபோல் உழைப்பிற்கென்றே உழைப்பது நல்லதெனில் அடிமைத்தன உழைப்பு மிகவும் நன்மையைத் தரவேண்டும். ஆனால் அவ்விதமில்லை. அதனில் தவறு என்ன, ஏன் குணமில்லை என்றாலோ, சுய முயற்சி என்பது அதனிலிருந்து நீக்கப்படுவதால் அது மனிதனின் மானுஷ்யத்தைக் கெடுத்துவிடுகிறது. அவனுடைய குணங்கள் வளரவேண்டியதற்கு முக்கியமான உள்விதை அடிமைத்தன் உழைப்பில் இல்லை. இருப்பது வெறும் உமியேயாகும். நெல்லிற்கு மேல் மூடியாக இருந்தால் உமியினால் பயனுண்டு. அரிசியைவிட்டு அகற்றினால் உமிக்கு மதிப்புக் கிடையாது. சரியான ஆகாரத்தில் சத்துடன் சக்கை வஸ்துக்களும் கலந்திருப்பது நமது தேகத்திற்கு மிகவும் அவசியம் என்பதுபோல், நமது வேலையிலும் 90 சதவிகிதம் உழைப்பு கலந்திருப்பது அவசியம். ஆனால் சத்து நீங்கின சக்கையை மாத்திரம் புசித்தால் வயிற்றுக்குத் தீங்குண்டாகி உயிர் நீங்குவதுபோன்றும், சுயமுயற்சியற்ற உழைப்பு மாத்திரமிருப்பின் சமூகம் முன்னேற்றமடையாமல் நசித்துவிடும். அடிமைத்தனமாக வேலை செய்வது

வேலையல்ல, வெறும் உழைப்பே; அதனால் நாசமே ஏற்படும் ஒரு நிலைப்பட்ட ஏராளமான பொருளுற்பத்தி முறையில், ஜனங்களில் பெரும்பாலர் வெறும் உழைப்பை, அடிமை வேலையைச் செய்யுமாறு நாம் ஏற்படுத்தினால், சமூகம் அழியும். அடிமை உழைப்பில் அவ்விதம் உழைப்பைச் செய்பவரின் மனம் புண்படுவதற்குக் காரணமெல்லாம் அவர்கள் சொந்த முயற்சியினால் செய்யாமல் பிறர் உத்திரவினால் உழைக்கிறார் என்பதே. ஆகையால் முதல் வகையான உழைப்பினால் குறைவும் நாசமும் ஏற்படுமென்று தெரிவதால், அடிமைத்தன உழைப்பை விதித்தால் அதற்கென்று நாம் மிக மிக விலையை, மனிதரின் குணக் குறைவிலும் சக்தி குறைவிலுமாகக் கொடுக்குமாறாகும்.

கவர்ந்து வாழ்பவரிடை உண்மை உழைப்பு ஏளனமாகக் கருதப்படுகிறது. ஒருவன் வேலை செய்யாமலேயே அதிக தனம் சம்பாதித்தானென்றால் அவன் மிகவும் சாமர்த்தியசாலி என்று கருதப்படுகிறான். தேக உழைப்பு துச்சமாக மதிக்கப்படுகிறது. இவ்வித நோக்கத்தினாலேயே பிறரைச் சுரண்டும் குணம் வளர்ந்து விட்டது. விழித்த ஆசாமிகள் சற்று மந்த புத்தியுடையவர்களை அதிகாரம் செய்து தமக்கும் சேர்த்து அவர்கள் உழைக்குமாறு செய்துவிட்டிருக்கிறார்கள். மேலும் அவர்களிடை வேலை செய்வது அதிகம் பொருள் திரட்டுவதற்காகவே என்று கருதப்படுகிறது. பொருள் என்பது நமது பசி தாகத்தைத் தணித்து, நமக்கு சிதோஷ்ணங்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கவே தேவையானது என்பதை மறந்து, அதிகப்பொருள் இருந்தாலே அதிக ஜனங்களை வேலை வாங்கலாம், அதிக அதிகாரம் பெறலாம் என்ற எண்ணத்துடன் தனம் சேர்க்கப்படுகிறது. அதிகாரத்திற்கு ஆசைப்படுபவன் கையில் இவ்விதம் செல்வம் சேர்ந்தால் அது மிகவும் தீங்கை விளைவிக்கிறது. அவ்விதமானவன் தனது பணத்தின் சக்தியால் பலவீனமானவர்களைத் தனக்குக் கீழ்படியுமாறு செய்து விடுகிறான். கையில் அறிவாள் இருந்தால் இளநீரைச் சீவலாம் அல்லது எதிரியின் தலையையும் சீவலாம். தேக உழைப்பு என்பதை நலத்தைப் பயக்கும்



வண்ணமும் உபயோகிக்கலாம், கெடுதல் செய்யவும் உபயோகிக்கலாம். மேல் நாட்டாரில் தொழில் முறையில் அதிகாரம் சிலர் கையில் குவிகிறது. ஆகையால் மேல் நாடுகளில் தொழில் முறை தவறான வழியில் அனுசரிக்கப்படுகிறது என்பது தெரிகிற்து. இவ்விதம் சேர்ந்திருக்கும் அதிகாரம் நல்ல வழியில் செலுத்தப்படுகிறதா, தீய வழியில் செலுத்தப்புடுகிறதா என்பதுபற்றி பிரச்னை இல்லை. தீயவழி மூலம் நலம்பெற முயலக்கூடாது. முதலாளித்வத்திலும் பொதுவுடைமையிலும் தொழில் மூலம் சிலர் தமது கையில் அதிகாரத்தைத் திரட்டிக்கொள்ள முயலுகின்றனர், அல்லது அதிகாரம் தானாகவே சேருகிறது. முதலாளித்வத்தில் அதிகாரம் முதலாளியின் கையில் சேருகிறது; பொதுவுடைமையில் அரசாங்கத்தை வகிக்கும் சிலர்கையில் சேருகிறது. இவ்வித ஆக்க முறைகளில் தொழிலாளிகள் கேவலம் உழைப்பிற்கென்றே பிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். அவ்விதம் கருதப்படும் மனிதர்கள் நாளடைவில் அடிமைகளாகின்றனர். அவர்களுடைய உழைப்பின் பயனை வேறொருவர் பெறுகின்றனர். இவ்வித வேலை மனிதனின் மானுஷ்யத்தை வரட்சிபெறச் செய்கிறது. இவ்வித வேலையைச் செய்த ஒரு தினத்தின் முடிவில் மனிதனின் தேகம் மாத்திரமல்ல, ஆத்மாவே சோர்வடைந்து விடுகிறது. பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டுள்ள நாடுகளில் தற்காலம் தொழிலாளிகள் ஆடுமாடு மந்தைகளின் நிலைமையிலிருக்கின்றனர். அவர்களுடைய சுயமுயற்சி என்பது அறவே அகற்றப்பெற்று எந்திரத்தின் ஒரு சக்கிரமாகவே அவர்களும் மதிக்கப்படுகின்றனர்.

சுய முயற்சியை அகற்றினால் மனிதன் தன்னுடைய ஊக்கத்தை இழந்து, பொறுப்பை இழந்து விடுகிறான். யோசிப்பதையே விட்டு விடுகிறான். இவ்விதமானவன் சக்தியுள்ளவர்களின் வலையில் சிக்க சிக்க, இன்னும் தனது சக்தியை இழந்து தனக்கு ஏற்படவிருக்கும் ஆபத்திலிருந்து தப்ப இயலாதவனாகிறான்.

இரண்டாவது வகையான உழைப்பைப் பற்றி நாம் அதிகம் சொல்லவேண்டியதில்லை. விளையாட்டு என்பது வாழ்க்கையில் ஓரளவு வேண்டியதே. ஆனால் தேக உழைப்பைக்கொண்ட விளையாட்டையே மிகப் பெரிதாகக் கருதினால் அதுவும் தீங்காகும். கிரேக்க ரோமிய ஜனங்களில் தாழ்ந்த வகுப்பினர் அடிமைகளாக உழைத்து க்ஷீணித்து நசித்தனர். மேல் வகுப்பினர் விளையாட்டில் முனைந்து உடலை விருத்தி செய்துகொண்ட போதிலும் ஆத்மவளர்ச்சி தடைபட்டவர்களாய் க்ஷீணித்து நசித்தனர். தேகத்திற்கு உழைப்பு மிகவும் அவசியமே. ஆகையாலேயே மேல் நாட்டில் சுகத்தையே அனுபவிக்க முயல்பவர்கள் கூட கிரிக்கட், டென்னிஸ் முதலிய சந்தோஷமான விளையாட்டுக்களின் மூலம் அவ்வித உழைப்பை தேகத்திற்கு கொடுக்க முயல்கின்றனர். இருந்தும் உழைப்பு மாத்திரம் போதா.

**பண்பு:**

மூன்றாவது வகையான உழைப்பினாலேயே மனிதன் அதிக சாதகமடைவதைக் காணலாம். ஒருவனின் குணங்களை விருத்தி செய்வது அவன் எப்போதாகிலும் செய்ய நேரிடும் பெரிய விஷயமல்ல. தினப்படி அவன் செய்ய நேரிடும் சிறிய சிறிய விஷயங்களினாலேயே அவன் குண விருத்தி பெறுகிறான். நாம் விழித்திருக்கும் நேரத்தில் அதிகமான பாகத்தை வேலையில் செலவழிக்கிறோம். நமது வேலையை நாம் செய்யும் முறையிலும் இதர மனிதர்களுடன் நாம் பழகும் வகையிலிருந்தும் நாம் நாளுக்கு நாள் பயனடைந்து மேன்மேலும் உழப்படும் நிலம் பண்படைவதுபோல் நமது மனமும் ஒரு மேன்மையை அடைகிறது. அதுவே மனதின் பண்பு எனலாம். ஆகையால் நாம் விழித்தவர்களாக இருந்துகொண்டு நமது வேலை நம்மை எவ்வித மனிதராகச் செய்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். உலக சரித்திரத்தை நாம் நன்றாக ஆராய்ந்து பார்த்தால் அந்தந்த தேசத்தினரின் பொருளாக்க முயற்சியின் வகையே அவர்களின் பண்பிற்குக் காரணமாக



இருந்ததென்பது தெரியவரும். மதத்தினால் உயர்ந்த இலக்ஷியங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் வேலையின் மூலமே அந்த இலக்ஷியங்கள் உயிர் பெற்றன. ஒரு தேசத்தில் கோயில் ஒழுகுவதும் பூஜை செய்வதையும் விட, அத்தேச மக்கள் சரியான தொழிலைச் செய்வதனால் அதிக க்ஷேமம் ஏற்படும். இருந்தும் எத்தனை தேசத்தலைவர்கள் தேச மக்களின் பொருளாக்க முயற்சியைத் திருத்த முயன்றிருக்கின்றனர்? சரியான வழியில் தொழில் செய்தால் பொறுமை, விடாமுயற்சி, சுய சாமர்த்தியம், கல்பனாசக்தி, ஆகியவை விருத்தி பெற்று, மனிதன் தன்னம்பிக்கை, பொறுப்பு, ரஸிகத்தன்மை, வேலையைப் பூரணமாகச் செய்வதில் ஆசை ஆகிய எல்லாக் குணங்களையும் பெறுகிறான். வேலை என்பது நாம் வாழ்க்கை முழுவதும் படிக்கும் பள்ளிக்கூடம். தேகத்தின் வளர்ச்சிக்கு ஆகாரம் போலவும் மனிதனின் வளர்ச்சிக்கு வேலை.

முதலாளித்வத்திலாகட்டும், பொதுவுடைமையிலாகட்டும், அல்லது ஏராளமாகப் பொருள் செய்யும் எந்த ஒரு நிலையுற்பத்தியிலாகட்டும் தொழிலாளியானவன் தனது புத்தியையும், குணத்தையும் உபயோகிக்க அவசியமில்லாத ஒரு எந்திரச் சக்கரம்போலும் ஆகிறான். இவ்வித அமைப்பில் ஒருவன் பண்பு பெறவேண்டுமென்றால் தனது வேலை முடிந்தபின் வெளியில் வந்து அதைத் தனியாகப் பெற முயலவேண்டும். தனது வேலையின்மூலம் இயற்கையாகப் பெறக்கூடிய பண்பை ஒருவனுக்கு அளிக்காமல், அடிமையைப்போல் உழைக்கச் செய்து, பிறகு பண்பை வேறுவித செயற்கை முறையில் பெறச் சொல்வது மனோதத்வ விதிப்படி சரியானதல்ல. இதைத் திருத்தவேண்டுமென்றால், தனது தொழிலின்மூலமே ஒருவன் தனது புத்தி, குணம், ரஸிகத்தன்மை ஆகிய மூன்றிலும் விருத்தி பெறவேண்டுமென்றால்; ஒரு நிலையுற்பத்தியின்கீழ் தொழில் செய்வது தவறு, தொழிலைப் பிரித்துப் பிரித்து, பல நிலைப்படுத்த வேண்டும் என்பது தெரியவரும். இவ்விதம் தொழிலை அதனுடைய சரியான ஸ்தானத்தில் வைக்க முயலும் சமயம் நமக்கு அதிகம் விரோதமாக இருப்பது மேல்

நாட்டாரின் தவறான கல்வி போதனைகளே. நாட்டின் தொழிலைத் திருத்தி அமைக்கமுயலும் அகில பாரத கிராமத் தொழில் சங்கம் அதிக எதிர்ப்புக்கிடை உழைக்க வேண்டியதாக இருக்கிறது. தற்காலத்தில் தொழிலைப் பற்றியிருக்கும் இலக்ஷியத்தை மாற்றவேண்டியிருப்பது மாத்திரமல்ல — அது ஒரு தினத்தில் செய்துவிடக் கூடியதல்ல — தொழில் செய்வதற்குப் புது எந்திரங்களையும் புது வகைகளையும் இயற்றவேண்டியதாக இருக்கிறது. நாம் எவ்வித மனப் பான்மையுடன் முனைகிறோமோ அதற்கு ஏற்றதாகவே நாம் அமைக்கும் புது எந்திரங்களும் இருக்கும். சென்ற இருநூறு ஆண்டுகளாய் அமைக்கப் பெற்றிருக்கும் புது எந்திரங்களெல்லாம் அதிகாரத்தைச் சிலர் கையில் சேர்க்கும் உத்தேசத்துடன் இயற்றப் பெற்றவை. அவ்வித எந்திரங்களை நாம் உபயோகிக்கக் கூடாது. நாளடைவில் நமது கொள்கைகளுக்குத் தகுந்த எந்திரங்களை, மனிதனின் தேக உழைப்பைக் குறைப்பவையாகவும், அதேசமயம் அதிகாரத்தைச் சேர்க்காமவிருப்பவையுமான எந்திரங்களை நாமும் இயற்றலாமென்று நம்புகிறோம்.

புது எந்திரங்களைக் கண்டுபிடித்து அமைப்பதைவிட மிகப் பெரிய வேலை இக் காலத்தில் பரவியிருக்கும் தொழிலைப் பற்றின கொள்கைகளை மாற்றி, மனிதரின் மனதில் வேலை செய்வதன் நோக்கம் வேலை செய்பவரின் க்ஷேமம் என்பதை நாட்டவேண்டியது.

இயற்கையான முறையில் தொழில் செய்தால் ஓய்வு வேண்டுமென்ற தேவை இருக்காது. ஓய்வு காலத்தை எவ்விதம் சரியாகப் பயன்படுத்தலாம் என்று முனைவதை விட, மனதிற்குகந்த வேலையைச் செய்துகொண்டே இருப்பது ஜனங்களுக்கு அதிக எளிதாக இருக்கும். ஓய்வைச் சரிவர பயன்படுத்த வேண்டுமென்றால் தன்னை அடக்கிக்கொள்ளும் சக்தி அதிகம் வேண்டும். அவ்வித சக்தி உண்மையான வேலையைச் செய்வதிலிருந்தே ஏற்படும். இவ்வித வேலையினால் தேகத்தில் சரீர அசதி இருக்



கத்தான் செய்யும். ஆனால் அது நல்லதே அவ்வித அசதி தளர்ச்சியினாலும் தூக்கத்தினாலும் நிவர்த்தியாகும்.

மனிதரை விட்டு, பொருளுக்கு நாம் மதிப்புக் கொடுக்கத் தொடங்கினால் வேலையின் உண்மை நோக்கம் என்ன என்பதை நாம் மறந்துவிடுகிறோம். ஒரு தொழிற் பயிற்சிசாலையில் வாலிபர்கள் இழைப்புளியையும் சுத்தியையும் அரத்தையும் உபயோகிக்கக் கற்றால், ஆரம்பத்தில் மரங்களைச் சேதம் செய்தாலும், தமது திறமையை விருத்தி செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் மிக நுட்பமான எந்திரங்களில் மரத் துண்டுகளைக் கொடுத்து மறுபுறம் அழகிய சாமானாகத் தயாரிக்கப்பட்டு வருவதை வாங்கி வைக்கப் பழகினால், பொருள் லாபத்திற்கே மதிப்புக் கொடுக்கப்படுகிறது, மனிதரின் தேர்ச்சிக்கல்ல. மனிதரின் தேர்ச்சியை விட அழகிய சாமான் முக்கியமா?

மனிதரை ஓர் உழைப்பு மிருகமாகவாகிலும் எந்திரமாகவாகிலும் ஆகிவிடாமலிருக்கச் செய்யவேண்டுமென்றால், தற்கால நிலைமையை நன்கு நோக்கி இந்தச் சிக்கலுக்கு ஓர் விடையைக் கண்டுபிடிக்கவேண்டும். வேலையின் மூலம் செல்வமும் அதிகாரமும் சிலர் கையில் திரண்டு சேராமல், செல்வம் பலரிடை பரவிவரும் வண்ணம் செய்யவேண்டும். இவ்விதம் செய்தால் மேல் நாடுகளில் திடீரென்று அவிட்டுகள்போல் கிளம்பி, ஒரு நிமிஷத்தில் உயர்ந்தவர்களாகும் கோடீச்வரர்களை இங்கு காண இயலாது. ஆனால் நமது தரித்திரக் கோடிகளின் கையில் இன்னும் சிறிது பைசாக்கள் விழும். இதனால் தேசத்திலிருக்கும் பணத் தொகை ஒரே அளவாக இருப்பினும், தேசத்தின் உண்மைச் செல்வம் அதிகரிக்கும். ஒருவன் கையில் லக்ஷ ரூபாய் இருப்பின், அவனுக்கு அதனால் ஏற்படும் சாதகத்தைவிட, அதே லக்ஷம் பத்தாயிரம் பேர்களிடை பரவியிருந்து அவர்களுடைய தினசரி உணவிற்குக் கண்டு வந்தால் அதிக சாதகத்தையுண்டுபண்ணுமல்லவா.

பொருளாக்கத்தின் முக்கிய நோக்கம் செல்வமும் அதிகாரமும் திரட்டுவதல்ல, தொழிலாளியின் அபிவிருத்

தியே என்ற கொள்கையுடன் உழைக்கும் அகில பாரத கிராம தொழிற் சங்கமானது மனிதரின் முக்கிய தேவையாகிய உணவுப் பதார்த்தம், ஆடை, சீதோஷ்ணப் பாதுகாப்பு இவைகளை உற்புத்தி செய்வதிலேயே முனைந்திருக்கிறது. அதேவிதம் அகில பாரத சர்க்கா சங்கத்தினரின் வேலையிலும், இந்தக் கொள்கை அனுசரிக்கப்பட்டு வருவதைக் காணலாம். நூற்பவர்கள் தமது ஆடைக்கு வேண்டிய நூலைத் தாங்களே நூற்றுக்கொள்ள வேண்டுமென்பது அச் சங்கத்தின் திட்டம். இவ்விதத் திட்டத்தினால் தத்தமக்குப் போதுமான முக்கிய பதார்த்தங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்.

தவறான முறையில் தொழில் செய்வது பாபமாகும். அதனால் துயரமே ஏற்படும். முன் அத்யாயங்களில் பல முறை எடுத்துக் கூறியவிதம் மேல் நாட்டு அமைப்புகளில் தொழில் என்பதை செல்வம் சேர்ப்பதற்கென்றும், செல்வத்தின் மூலம் பிறர் வாழ்க்கையில் அதிகாரம் பெறுவதற்குமே சாதனமென்று கருதினர். இதனால் போட்டிகளுக்கும் இம்சைகளுக்கும் இடம் ஏற்பட்டது சகஜம் தானே ! தீச் செயலினால் வேறு எது கிடைக்கும்? நாம் முனைந்து வேலையை அதனுடைய உண்மை ஸ்தானத்தில் வைத்து, மனிதனுக்கு அவனுடைய மதிப்பைக் கொடுத்து, வேலையினால் ஜனத்திரள் விருத்தி பெறுமாறு செய்தாலே நாட்டில் க்ஷேமம் ஏற்படும். இல்லாவிடில் பொறுப்பை வகித்து தேசத்தில் சாந்தமும் செல்வமும் குடிகொள்ளும் வண்ணம் அரசாள மனிதர் கிடைப்பதே நாளடைவில் அரிதாகி விடும்.

**சோர்வு :**

நாம் தற்காலத்திய உலகத்திலிருந்து பிரிந்துநின்று நோக்கினாலே "வேட்டை இன" குணத்தாரின் அமைப்புகளினால் ஏற்பட்டிருக்கும் அக்ரமங்களை சரிவர பார்க்க சக்தி பெறுவோம். உள்ளத்திலிருந்து தொழில் செய்யத் தூண்டுதலிருந்தால், அதைச் செய்பவன் மேன்மேலும் விருத்தியடைவான். இது இயற்கை விதி. ஒருவனுக்கு



எந்த வேலையில் மனம் லயிக்கிறதோ அதைச் செய்தாலே அவனுடைய குணங்கள் விருத்தி பெறும். ஆனால், ஒருவனுக்கு சித்திரம் எழுத திறமை இருப்பின், அவனை மோட்டார் ஓட்டியாகச் செய்தால் அவனுக்கும் தீங்கு அம்மோட்டாரில் செல்பவர்களுக்கும் தீங்கு. அவன் தனது இயற்கையை அனுசரித்து நடந்தாலே பூரண விருத்தியை அடைவான். ஒருவன் செய்யும் வேலையினால் அவனுடைய மனம் எவ்வித மாறுதலடைகிறது என்று கவனித்தால் அவ்வேலை அவனுக்கு ஏற்றதா இல்லையா என்பது தெரியவரும். மேல் நாட்டுத் தொழில் முறையில் வேலை செய்பவர்களிடம் நாம் காண்பது என்ன? அவ்வித உழைப்பினால் அவர்கள் ஆத்ம விருத்தி பெற்றிருப்பதாக காண்கின்றனரோ? இல்லை. ஜீவசக்தியை இழந்த ஆண் பெண்களையே அங்கே காணலாம். இவ்வித நிலைமைக்குக் காரணம் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. ஒரு கொள்ளி உயிரி அவர்கள் பேரில் ஜீவித்து வருகிறது. இதன் பலனாக அவர்கள் நரம்பு வியாதிகளினாலும் மூளைக் கோளாறுகளினாலும் பீடிக்கப்படுகின்றனர். ஆகையால் அவர்களுடைய அமைப்பு தவறானதென்பதும் நாளடைவில் க்ஷீணித்து நாசத்தையே அடையுமென்பதும் தெரியவருகிறது.

இவ்விதம் ஜீவனைக் கசக்கி முயற்சிப்பதன் நோக்கம் என்ன என்றே நாம் கேட்கலாம். மேல் நாட்டார் தமது வாழ்க்கை நிலமையை மேன்மேலும் உயர்ந்ததாகச் செய்ய விரும்புகின்றனர். இவ்வித விருப்பம் நிறைவேற அவர்களுடைய சாமான்களை மற்ற தேசத்தினர் மேன்மேலும் வாங்க வேண்டியதாகிறது. அவர்கள் தமது வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்வதென்பது தமது தேவைகளை அதிகரிக்கச் செய்து கொள்வதே. தேவைகளை அதிகரிக்கச்செய்து தமது வீட்டிலிருக்கும் பொருள்களை அதிகரிக்கச் செய்வதனால் அவர்களுடைய சந்தோஷம் அதிகமாகி இருக்கிறதோ? உழைப்புக் குறைந்திருக்கிறதோ? இந்திய தொழிலாளியின் மனைவி தனது சாணத்தினால் மெழுகப்பட்ட வீட்டில் கயிற்றுக் கட்டில் ஒன்றுடன் வசிக்கும் சந்தோஷம் சௌகரியம் இரண்டையும்விட இங்

கிலாந்தில் ஒரு தொழிலாளியின் மனைவி தனது ரத்தினக் கம்பளம் விரித்த வீட்டில் பலவித நாற்காலி மேஜை சாமான்களுடன் அதிக சௌகரியத்துடனும் சந்தோஷத்துடனும் இருக்கிறாளோ? உழைப்புக் குறைந்திருக்கிறாளோ? உண்மையில் ஆங்கில ஸ்த்ரீக்கே உழைப்பு அதிகம்; கவலை அதிகம். ரத்ன கம்பளத்தை அடிக்கடி எடுத்துத் தட்டிப் போட்டு, கண்ணாடிக் கோப்பைகளையும் பிளேட்டுகளையும் கழுவி, மேஜை நாற்காலிகளுக்கு அடிக்கடி மெழுகிட்டு, திரைச் சீலை முதலிய துணிகளைத் துவைத்து இஸ்த்ரி செய்தாக வேண்டும். அவள் தன்னுடைய உழைப்பை அதிகரிக்க அல்லவோ செய்திருக்கிறாள். அவளுடைய உயர்ந்த வாழ்க்கையினால் ஏற்பட்டதெல்லாம் முதலாளியின் தொழிற்சாலைகளில் உண்டாக்கப்படும் சாமான்களுக்குத் தேவையே.

மேல் நாட்டு முறையில் சாமான் வாங்குவதெல்லாம் உழைப்புக்குத் தம்மை அடிமைப்படுத்திக் கொள்வதே ஒருவருக்கு பொருள் அதிகம் சேரச் சேர பந்தனமே அதிகமாகிறது. ஆகையால் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும் என்று சொல்லுகிறவர்கள் அவ்வித உயர்வு என்பது என்ன என்று தமக்குள் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். கேவலம் முதலாளி பொருள்களுக்கு தாம் விற்பனை ஏஜண்டுகளாக மாறிவிடக் கூடாது. "வேட்டை இன" குணத்தின் கீழ் ஏற்பட்டிருப்பது இயற்கையான வாழ்க்கையேயல்ல. செயற்கையாக சந்தோஷம் சம்பாதிக்க முயலும் அவ்வாழ்க்கையில் உண்மை மதிப்புகள் மறைந்து விடுகின்றன. சுரண்டுவோர் கையில் ஜனங்கள் சுலபமாய் சிக்கி விடுகின்றனர்.

---

# அத்யாயம் 8

## செல்வத்தின் பொறுப்புகள்

குணச் செல்வம், கல்விச் செல்வம், பொருட் செல்வம் என, செல்வமென்பது பல வகைப்படும். இவைகளின் லட்சணங்களும் வெவ்வேறு வகைப்பட்டவைகளாக இருக்கும். பொருட் செல்வத்தின் பல அம்சங்களையே இங்கு ஆராய்வோம்.

முதலாளித்வத்தின் பொருளுற்பத்தி முறையினால் தூண்டப்பட்டு நாம் தனத்தை அதனுடைய பொருள் பெறும் சக்தியைக்கொண்டே மதிப்பிடக் கற்கிறோம். ஒருவரிடம் பணமிருந்து, அதைக் கொடுத்துத் தமக்குத் தேவையான பண்டம் ஒன்றை அவர் வாங்கிக்கொண்டால், அத்துடன் அவ்வேலை முடிந்துவிடுகிறது. "உங்களுடைய ரூபாய்க்குப் பெறுமான பண்டம் வாங்கிக் கொண்டாகிவிட்டது!" என்று சொல்லப்படுகிறது. மனிதர்களும் மிருகங்களாக இருந்து ஆத்மா என்ற ஒன்று அவர்களுக்கு இல்லாவிட்டால், உண்மையில் விஷயம் இத்துடன் முடிந்துவிடும். "மனச் சாக்ஷி" "பாபப் பணம்" "பொறுப்பு" முதலிய பேச்சே இருக்காது.

அதிர்ஷ்டவசமாய் நாமெல்லோரும் அவ்விதம் பொருளே முக்கியமென்று கருதும் மனப் பான்மையுடையவர்களல்ல. நம்மில் அநேகர் பொறுப்பு, கடமை முதலியவற்றைப்பற்றிச் சிறிது சிறிதாகிலும் அறிவார்கள். மனச் சாக்ஷி என்பதும்—அது அநேகமாய்த் தூங்கும் மனச் சாக்ஷியாக இருப்பினும்—நமக்கு ஒன்று இருக்கிறது. ஆகையால் மனிதருக்கு ஆத்ம முன்னேற்றமும் நல்லொழுக்க மேன்மையும் அவசியமென்பதை உணருகிறோம். இவ்விதம் இருப்பதனால் பொருள் கொண்டு நாம் வாழும் வாழ்க்கையைக் கேவலம் பொருளாசை வாழ்க்கையாக இல்லாமல், ஒரு மேன்மையான புண்ணிய வாழ்க்கையாகச் செய்ய இயலும்.

ஒரு வஸ்துவின் பெறுமானத்தை பல திட்டங்களைக் கொண்டு மதிப்பிடலாம்.

(1) பாத்திரக் கடையில் ஒரு செம்பின் எடையை நிறுத்து வாங்கும்போது நாம் அப்பண்டத்தின் பித்தளை செய்கூலி, முதலியவைகளை மாத்திரமே மதிப்பிட்டு வாங்குகிறோம். இது பண்ட மதிப்பு.

(2) சில பொருள்கள், அவைகளின் விலையை உத்தேசித்து மாத்திரமல்ல, அவைகள் பேரில் ஒருவர் கொண்டுள்ள அபிமானம், பற்றுதல் முதலியவைகளைக் கொண்டு மதிப்பிடப்படுகின்றன. மிக அருமையான தாயாரோ தகப்பனாரோ உபயோகித்துவந்த ஒரு நாற்காலியின் மதிப்பைக் கேவலம் அதன் விலையைக்கொண்டு மட்டும் நாம் நிச்சயிக்க மாட்டோம். இது அன்பின் மதிப்பு எனலாம்.

(3) ஒரு குழந்தையின் கழுத்தில் போட்டிருந்த தங்கச் சங்கிலியை அக் குழந்தையின் கழுத்தை முறித்துக் கொன்றுவிட்டு ஒருவன் எடுத்துவந்து விற்றானானல் இவ்விவரங்களை அறிந்த எவரும் அதை வாங்க முன்வர மாட்டார்கள். இச்சமயம் அதன் விலையைப்பற்றிய கேள்வியே எழாது. இது நமது நியாய - அநியாய மென்னும் பகுத்தறிவினால் ஏற்படும் அருசி. இதைத் தர்ம மதிப்பு எனலாம்.

(4) காந்திஜியைப் போன்ற ஒருவர் பட்டும் பீதாம்பரமும் அணியும் சக்தி பெற்றிருந்தும், தமது நாட்டின் பெரும்பான்மையோரின் நிலையைத் தாமும் பகிர்ந்து கொள்ள விரும்பி மோட்டாவான கதர்த் துண்டைக் கட்டிக்கொண்டால், அந்தத் தியாகம் ஆத்ம மேன்மையினால் ஏற்படுவது. இதை ஆத்மீக மதிப்பு எனலாம்.

இந்த நான்கு உதாரணங்களிலும் செய்யப்படும் செய்கை அந்த அந்தப் பண்ட மதிப்பு, அன்பு மதிப்பு, தர்ம மதிப்பு, ஆத்மீக மதிப்பு ஆகிய குணங்களைக் காட்டுவதுடன் அவரவர்களின் மதிப்பிடும் சக்தியையும் எடுத்துக் காட்டும்.



செல்வம் சேர்க்கும் விஷயத்தில் ஜனங்களுக்குத் தீங்குண்டாகும் வகையில் ஒருவர் செல்வம் சேர்த்தால். கள்ளுக்கடை வைத்தோ, விபசார விடுதி வைத்தோ செல்வம் திரட்டினால், அது பாபப்பணம் என்று சொல்லப்படும் நாம் அத்துடன் நின்றுகொள்கிறோம். ஒரு வக்கீலோ டாக்டரோ தமது கக்ஷிகாரனுக்கும் நோயாளிக்கும் எது நலம் என்பதைப் பாராமல், தான் அவர்களிடம் எவ்விதம் அதிகப் பணம் சுரண்டலாம் என்றே யோசித்துக் காரியங்களைச் செய்தால் நாம் அவ்வளவாகக் குற்றம் சொல்வதில்லை. வியாபார விஷயத்திலோ நாம் ஒன்றுமே விசாரிப்பதில்லை.

செல்வத்தை செலவழிக்கும் விஷயத்தில், பணத்தைக் கொடுத்து ஒரு பண்டத்தை வாங்கும் சமயம் ஓர் உயர்ந்த மதிப்பு வேண்டுமென்று எவரும் கருதுவதேயில்லை. தினசரி தேவைகளை வாங்கும்பொழுது கூட நமது கடமை ஒன்று இருக்கிறதென்று எவரும் கருதுவதில்லை. குழந்தையின் கழுத்துச் சங்கிலியுடன் கொலை பாதகமும் சேர்ந்திருப்பதுபோல், கடையில் வாங்கும் ஒவ்வொரு பண்டத்துடனும் நல்லதோ கெட்டதோ ஒரு குணம் சேர்ந்திருக்கிறது. விற்கிறவன் தனது பண்டத்துடன் தனது கர்மத்தின் பலனையும்—அது நல்லதோ தீயதோ—விற்றுவிடுகிறான். ஆகையால் நாம் வாங்கும் பண்டத்தின் வரலாற்றை நாம் அறியவேண்டும்.

இது ஒரு பெரிய பொறுப்பு. தினமும் பண்டங்கள் வாங்கும் சமயம் நம்மில் எவ்வளவு பேர்கள் தங்கள் பொறுப்பை உணருகிறார்கள்? கஞ்சிக்கும் போதாத கூலியைக் கொடுத்துச் செய்யப்படும் பொருளை நாம் வாங்கினோமென்றால், அப்பொருளுடன் பட்டினி கிடக்கச் செய்த பாவத்தையும் நாம் வாங்கிக்கொள்கிறோம். இது முதலில் மிகக் கொடூர எண்ணமாகத் தோன்றும். ஆனால் சற்று நிதானமாக யோசித்தால் இந்தப் பயங்கர உண்மையை உணருவோம். இயந்திரத்தில் ஒரு பண்டம் செய்யப்பட்டதென்றால் நாளடைவில் அந்த இயந்திரம் தேய்வடைந்து உபயோகமற்றதாகிவிடுகிறது. ஆகையால்

அந்த இயந்திரத்தின் விலை, அதைப் பழுது பார்க்கும் செலவு, அதை வேலைசெய்யச் செய்யும் செலவு ஆகிய யாவும் சேர்த்து அவற்றால் உண்டாக்கப்படும் பண்டங்களின் விலையுடன் கூட்டி வசூலிக்கப்படும்.

மனிதன் ஒரு இயந்திரமே. ஒரு குயவன் பானைகள் செய்தால், அப்பானைகளின் விலையானது அக்குயவனுடையவும் அவனுடைய குடும்பத்தினுடையவும் ஜீவனோபாயத்திற்குப் போதுமானதாக இருக்க வேண்டும். ஜீவனோபாயமென்பது அவன் கேவலம் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கச் சக்தி அளிப்பது மாத்திரமன்று; அவன் தனது வேலையைச் சரிவரச் செய்யும் சக்தியளிப்பதாக இருக்கவேண்டும். இல்லாவிடில், மலிவாக விற்கப்படும் பானைகளுடன் இவனுடைய தேக சக்தி க்ஷீணமடைவதும் அதில் சேரும். மலிவாகப் பானை வாங்குகிறவர்கள் அவனுடைய சக்தியையும் எடுத்துக் கொள்கிறவர்களாவார்கள். செய்கூலி ஏற்றதாகக் கொடுக்கவேண்டும் என்ற காரணத்தினால் ஒரு பண்டத்தின் விலை அதிகரிக்கிறதென்றால், அது மிகவும் நல்லதே. அவ்வித அதிக விலையைக் கொடுப்பதற்குப் பண்டம் வாங்கும் கனவான்கள் எவரும் தயங்கக் கூடாது.

ஒரு பண்டத்தின் உற்பத்தி விவரம் அறிந்து வாங்குவது தர்மமென்று ஏற்படுகிறது. மனித சக்தியின் விருத்தியை விரும்பும் எவரும் இவ்விவரங்களை அறியாமல் பண்டங்களை வாங்கக்கூடாது. ஆனால் இவ்விதம் அறிய முயலுவது மிகவும் கடினமான வேலை. பிற தேசங்களிலிருந்து வரும் பண்டங்களை வாங்கும்போது இந்த வேலையைச் செய்ய இயலாது. ஆகையாலேயே நமது நாட்டில் செய்யப்படும் பண்டங்களையே வாங்குவது உசிதம். இதுவே, "சுதேசி" என்பதற்கு அடிப்படையான தர்மம்.

மார்க்கெட்டில் போட்டா போட்டிக்குப் பண்டங்கள் விற்கப்படும் சமயம் சுதேசிப் பொருள்களின் விலை அதிகமாக இருக்கும். உள்நாட்டுப் பிண்டத்தை விட்டு, மலிவாக இருக்கும் அந்நிய நாட்டுப் பண்டத்தை நாம் வாங்கினோமென்றால், நாம் நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஏழ்மையையுமே உண்டாக்கிக் கொள்கிறோம்.



ஏற்ற விலையைக்கொடுத்து, நமது நாட்டுப் பொருளை வாங்கி, நமது தேவைகளை திருப்தி செய்து கொள்ள இயலவில்லையென்றால், பிற நாட்டுப் பொருளை வாங்காமல், நமது தேவையைக் குறைத்துக்கொள்வது தான் மேன்மையான நடத்தை.

ஒரு பண்டத்தின் அழகும் உபயோகமும் எவ்வளவு இருப்பினும், நமது நியாய ரீதிக்கோ, தர்ம ரீதிக்கோ அது ஏற்றதல்லவென்று தோன்றினால் நாம் உடனே அதை வேண்டாமென்று ஒதுக்கவேண்டும். நமது மனச்சாக்ஷி பலம் பெற்றதாக இருப்பின், இவ்விதம் தேவையைக் கட்டுப்படுத்துவது கஷ்டமாக இராது. சர்க்கரை வாங்கச் செல்லுகிறோம்; ஆலைகளில் தயாரித்த வெளுப்புச் சர்க்கரை கட்டிகளும் அவற்றின் அருகில் நாட்டுக் கருப்பு வெல்லக்கட்டிகளும் இருந்தால் வெல்லம் மிக அழுக்கடைந்ததாக நமக்குத் தோன்றும். ஆனால் நமது மனச்சாக்ஷியின் கண் திறந்திருந்தால், நியாய அநியாயங்களின் பகுத்தறிவு சக்தி நமக்கிருந்தால், இந்த ஆலைச்சர்க்கரையோ கையினால் தொடுவதற்கும் அருகதையற்ற பண்டமென்பதை உணர்வோம். "மனிதனின் புறத்திருந்துவரும் ஏதுமவனை அழுக்குறச் செய்யா; அவனது நெஞ்சத்திலிருந்தெழும் தீதே அவனை அழுக்குறச் செய்கிறது."

நம்மில் அநேகர் பண்டத்தின் விலையை மதிப்பிடுவதில் விழித்த ஆசாமிகளே. அதேவிதம் ஒன்றின் தர்மத்தை, நியாய-அநியாயத்தை மதிப்பிடுவதிலும் நாம் நிபுணர்களாகவேண்டும். வெல்லம் அழுக்காக இருந்தால் சுத்தம் செய்யலாம். நமது ஆத்மாவை நாம் கெடுத்துக் கொள்ளலாமா?

நமது செய்கைகளினால் பிறர் எவ்விதம் பாதிக்கப்படுகிறார்களென்பதை உணர்ந்து நம்மால் எவ்வளவு மேன்மையாக நடக்க இயலுமோ அவ்வளவு மேன்மையுடன் நடந்தோமானால், நமது ஆத்மா மேன்மேலும் பரிசுத்தமடையும்.

# அத்யாயம் 9

## பெண்களின் ஸ்தானம்

சாதாரணமாய்ப் புருஷனுக்கு ஒரு காரியத்தைக் தொடங்குவதற்கும் ஒரு புது விஷயத்தில் பிரவேசிப்பதற்கும் ஆவலும் துணிவும் இருக்கிறது. ஆனால் பெண்களுக்கு வழக்கமான காரியத்தையே செய்வதும், பழைய கொள்கைகளைப் பாதுகாப்பதும் இலக்ஷியம். பொதுவில் புருஷன் வெளி விஷயங்களில் ஆவலுள்ளவன், பெண் தன்னைச் சேர்ந்த விஷயங்களிலேயே கவனமுள்ளவள் என்று சொல்லலாம். அதேவிதம் புருஷன் "வேட்டை இன"க்குணமுள்ளவனென்றும் பெண் "கூட்ட இன"க் குணமுள்ளவளென்றும் சொல்லலாம். இத்துடன் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களிடமும் அவரவர் தேசத்தின் பொது குணமும் இருக்கும். ஏற்கனவே கீழ் நாட்டினர் கமிட்டி முதலிய அமைப்புகளில் ஒத்துழைக்கக் கஷ்டப்படுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம். பெண்களுக்குக் கமிட்டிகளில் ஒத்துழைப்பது இன்னும் கஷ்டமாக இருக்கும். "கூட்ட இன" மனப்பான்மையினால் அவர்கள் பழைய கொள்கைகளைப் பிடித்துக் கொண்டு மத திட்டங்கள் சமூக திட்டங்கள் ஆகிய எல்லாவற்றிற்கும் புருஷர்களைவிட அதிகம் கட்டுப்படுகின்றனர். மேல் நாட்டாரின் "வேட்டை இன" வகையிலும் புருஷனை விடப் பெண்ணிற்கு சுயநலப்பற்று குறைவு. அவளுடைய அன்பு குடும்பத்திற்கான அன்பு.

ஆகையால் "வேட்டை இன"க் குணங்கள் அவசியமாக இருக்கும் விஷயங்களிலெல்லாம் துணிந்து செல்வதற்கும் சுய முயற்சிக்கும் அவசியம் இருக்கும் விஷயங்களிலெல்லாம் புருஷனே முன்செல்ல ஏற்றவன்.

தற்காலத்திய தொழில் முறையில் இயற்கையாகப் பெண்களுக்கு உரிய ஸ்தானம் கவனிக்கப்படுவதில்லை. அவர்களுடைய குணத்தை ஆராய்ந்தால் தேசத்தின் பண்பைப் பாதுகாத்துவருபவர் அவரே, இக்காலத்தவர்



புதிதாகச் செய்வதை பிற்காலத்தவருக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பவர் பெண்களே என்பது தெரியவரும். ஆதிகாலத்தில் இயற்றுவது ஆண்கள் கையிலும் உபயோகிப்பது பெண்கள் கையிலும் இருந்தது. ஆண்கள் ஆகாரத்தைச் சம்பாதித்துக் கொடுத்தால் பெண்கள் அதைச் சமைத்துக் கொடுப்பார்கள். பெண்களுக்கு வீடு தேவை என்றால் ஆண்கள் அதை அமைத்துகொடுப்பார்கள். பொருளியலின் பரிபாஷையில், "தேவை" "திருப்தி" என்ற இரண்டில் பெண்கள் "தேவையை" இயற்றுபவர்; ஆண்கள் திருப்தியை இயற்றுபவர். "கூட்ட இன"க் குணத்தவரிடை படிப்படியாக பண்பு ஏற்படவே, உற்பத்தியைச் சமூகம் கட்டுப்படுத்துவது என்ற அவர்களுடைய திட்டத்தில், பெண்களும் அவ்விதக் கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரம் பெற்றிருந்தனர். உண்மையில் பெண்களே எவ்வித உற்பத்தி தேவை என்று திட்டப்படுத்தினர் என்று சொல்வது மிகையாகாது. இவ்வித முறையினால் பெண்கள் தமக்கு ஏற்றதான பதவியை வகித்துடன் உற்பத்தி தாறுமாறாகாமல் ஒழுங்காக நடப்பதற்கு வேண்டிய காவல் இருந்தது. இக்காலத்தில் இந்தியாவில் பெண்களின் பண்பு குறைந்து, அவர்கள் அறியாமை மிகுந்தவர்களாய் மிகவும் வருந்தத்தக்க நிலைமையை அடைந்திருப்பினும், நாட்டின் தினசரி வாழ்க்கையில் அவர்கள் அதிகம் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒரு மனிதன் எவ்வளவு விசால மனப்பான்மை கொண்டவனாகவும் நாகரீகம் பெற்றவனாகவும் இருப்பினும், அவனுடைய வீட்டில் அவனுடைய மனைவியின் அறியாமையும் குருட்டுக் கொள்கைகளுமே செல்வாக்குப் பெற்றிருக்கின்றன. அவன் அதற்குக் கீழ்ப்படிந்தே நடக்கவேண்டியதாகிறது. தற்காலத்தில் அநேக இந்தியர் மேல்நாட்டு வாழ்க்கை முறைகளைப் பின்பற்ற முயன்றும், அவர்களுடைய வீடுகளில் சுகாதார விதிகள் அனுசரிக்கப்படாமல் கேவல நிலைமை காணப்படுகிறதல்லவா? அதற்குக் காரணங்களில் இதுவும் ஒன்றாகும். பெண்களும் புருஷருடையது போன்ற பண்பைப் பெறாவிடின் இருவருக்கும் அதிக தாரதம்மியம்

ஏற்பட்டு, சமூக வாழ்க்கையானது பெண்களின் பண்பின் மட்டம் எதுவோ அதையே அனுசரிக்கும். பெண்களும் புருஷர்களுடன் ஒத்துக்கொண்டாலே புருஷர்கள் தமது முன்னேற்றக் கொள்கைகளைப் பின்பற்ற முடியும். இல்லாவிடில் அக்கொள்கைகள் வெறும் கொள்கைகளாகவே இருக்கும், உயிர்பெற்று வாழ்க்கையாக மாரு. ஈரம் போன்ற சில குணங்கள் புருஷர்களைவிடப் பெண்களிடம் அதிகம் காணப்படுகின்றன. ஆகையால் அவர்கள் செய்யும் வேலை புருஷர்களுடையது போலல்லாமல் வேறு விதமானதாகவே இருக்கும். இருவருக்கும் போட்டி ஏற்படாது. இருவரும் ஒத்து உழைக்கவேண்டும்.

"வேட்டை இன"த்தின் பொருளாக்கத்தில் பெண்களுக்கு ஏற்ற இடமே கொடுக்கப்படவில்லை. பலத்தின் ஆட்சியில் அவள் பலசாலியின் அந்தப்புர ஸ்த்ரீயாகவே இருந்தாள். அவளுடைய தேக வனப்பே முக்கியமாகக் கருதப்பட்டு அதன் நிமித்தமாக ராஜ்யங்கள் ஆக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வந்தன. பணத்தின் ஆட்சி முறையில் அவள் பணக்காரனின் அந்தஸ்தை எடுத்துக்காட்டும் கருவியானாள். பல இடங்களிலிருந்து சேர்த்துத் திரட்டப்பட்ட தலைவனின் தனத்தின் மகிமையை அவள் தனது ஆடைகளிலும் செய்கைகளிலும் வெளிப்படுத்தலானாள். தன்னுடைய புருஷனின் வருமானத்திற்கேற்ற கௌரவ இடத்தை சமூகத்தில் போட்டியிட்டுப்பெற முயல்வதே அவளுடைய வேலையாயிற்று. எந்திர ஆட்சியில் பெண்களின் தாழ்வு அதிகரித்தது. எந்திரங்களின் மூலம் தொழிற்சாலையில் உண்டாக்கப்படும் பொருள்களை அணிவதற்கு ஏற்ற பொம்மைகளாகவே அவர்கள் ஆகிவிட்டனர். அவ்விதமில்லாதவர் விடுதலைபெற்ற பெண்மணிகளாய், தொழிற்சாலையில் தாமும் தொழிலாளிகளாகப் பிரவேசிக்கலானார்கள். அங்கே இவர்களுக்கு தேக வலிவு குறைவு என்பதை வைத்துக்கொண்டு முதலாளிகள் இவர்களுக்குச் சம்பளத்தைக் குறைவாகக் கொடுத்துத் தாம் லாபமடையலானார்கள். தொழிலாளி ஆட்சி முறையாகிய பொது



வுடைமையில் ஆணுக்குச் சமமாகப் பெண்ணும் ஒரு தொழிலாளியாகிறாள். "வேட்டை இன"த்தைச் சேர்ந்த இந்த முறைகளிலெல்லாம் பெண்களுக்கு இயற்கையான ஸ்தானம் அளிக்கப்படுவதில்லை; அதாவது எவ்விதமான பொருள் வேண்டுமென்று நிர்ணயித்து அதன் தேவையை இயற்றுபவர்களும், தேசத்தின் பண்பைப் பாதுகாப்பவர்களுமாக அவர்கள் இல்லை. பொருள்களை எந்திரச் சாலையினர் ஏராளமாகச் செய்துவிட்டுப் பிறகு அவைகளை வாங்க வேண்டுமென்று பெண்களுக்குப் போதிக்கின்றனர். பெண்கள் கண்மூடித்தனமாக "நவநாகரிகம்" என்பதைப் பின்பற்றி இந்த வலையில் சிக்கி, பொருள்களை வாங்குபவர்களாக மாறிவிட்டனர். தற்காலம் ஆண் பெண்களின் சமத்வத்தைப்பற்றி எவ்வித வாதமிருப்பினும், அரசியல் விஷயத்தில் பெண்கள் சுதந்திரம் பெற்றதன் பயன் எதுவாக இருப்பினும், யந்திர உற்பத்தி பொருள்களை வாங்கவே அவர்கள் அதிகம் சாதகமாக இருக்கிறார்கள். தங்களுடைய இயற்கை ஸ்தானத்தை இழந்துவிட்டனர். வாங்குவது என்பதைத் திட்டம் செய்வது பெண்களாக இருந்தது போய்விட்டது. அவர்களுடைய பீடத்தில் லாப வெறியே வீற்றிருக்கிறது. தன்னுடைய கூட்டாளியான பெண் தேவைகளைச் சொல்ல, தான் அவைகளை உற்பத்தி செய்யவேண்டியவனான மனிதன், தற்காலம் கூட்டாளியை இழந்தவனாகத் தனிமையில் தொழில் செய்கிறான். பெண்கள் இவ்விதம் சரியான பதவியை வகிக்காமலிருப்பதே தற்காலப் பொருள் முறையிலிருக்கும் பல தீங்குகளுக்குக் காரணம். வேட்டை இனத்திலாகட்டும் கூட்ட இனத்திலாகட்டும், பெண்கள் தங்களுக்குரிய உயர்ந்த ஸ்தானத்தை வகித்து, லாப விருப்பத்தைக் கீழே தள்ளினாலே சரியான பொருளாக்கம் ஏற்படும். பெண்கள் தமது பொறுப்பைச் சரியாக வகித்தால், பிறகு வீட்டைச் சேர்ந்த இதர வேலைகள் ஒழுங்குபட்டு, நாளடைவில் எங்கும் முன்னேற்றம் ஏற்படும்.

விளம்பரக்காரர்கள் உபயோகிக்கும் தந்திரச் சொற்களில் பெண்கள் வெகுசுலபமாய்ச் சிக்கிவிடுகிறார்கள். பெண்

கள் கண்டிப்புடன் இருந்து, பொருளின் உண்மை மதிப்புத் தெரிந்து வாங்குகிறவர்களானால் அவர்கள் வேறு எவ்விதச் சீர்திருத்தம் செய்யாவிடினும், பொருள் உண்டாக்குவதில் மாறுதல்களைக் காணலாம். கடையில் விற்கப்படும் பண்டங்களில் அதிகபாகம் வீட்டிற்கென்று ஏற்பட்டவை. கிருக லக்ஷ்மியான பெண்களின் ஆதீனத்திற்கு உட்பட்டவை.

**பண்டம் வாங்குபவர்களின் கடமை:**

பண்டம் வாங்குகிறவர்கள் சாதாரணமாய்த் தமக்குத் தேவையானதைக் கூடியவரை மலிவாக வாங்குவதுடன் திருப்தியடைந்து விடுகிறார்கள். இவ்விதம் செய்வது நமது கடமையைப் புறக்கணிப்பதாகும். நேர்மையாகப் பொருள் வாங்குபவரின் கடமைதான் என்ன? ஒரு பண்டத்தை வாங்கும் சமயம் அவ்விதச் செய்கையினால் ஏற்படும் பலனை நாம் நன்கு உணரவேண்டும்.

(1) நாம் வாங்கும் பண்டம் எங்கிருந்து வருகிறது? விளைபொருள் என்றால் யார் பயிர் செய்வது?

(2) அது உபயோகத்திற்கு ஏற்றதாக எங்கே எவரால் செய்யப்படுகிறது. அதை அவ்விதம் செய்பவர்களின் நிலைமை என்ன? அப்பண்டத்தின் விலையில் எவ்வளவு பகுதி அவர்களுக்குக் கூலியாகக் கிடைக்கிறது?

(3) மிகுந்த பகுதி எவ்விதம் செலவழிக்கப்படுகிறது?

(4) ஒரு தேசத்தின் பொருள் முயற்சியில் அந்த பண்டம் எவ்வித இடம் பெற்றிருக்கிறது? பிற தேசத்துடன் அந்தத் தேசம் கொண்டிருக்கும் உறவில் இந்தப் பண்டம் எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது?

மேற்கூறிய கேள்விகளுக்கெல்லாம் விடை அறிய முயலவேண்டும். ஒரு திருட்டுச் சொத்தை நாம் வாங்கினோமென்றால் மேன்மேலும் திருடுவதற்கு இடம் கொடுப்பவராகிறோம்; அந்தப் பாவம் நம்மைச் சேர்ந்ததாகும். அவ்வாறே பிறரைத் துன்புறுத்தி உண்டாக்கப்பட்ட

பொருளை, பிறதேசத்தினரை அடிமைப்படுத்தி பெறப் பட்ட பொருளை நாம் வாங்கினோமென்றால், அவ்வித ஹிம் சைக்கு நாமும் உடந்தையாகிறோம். ஆகையால் பொருள் நன்றாக இருக்கிறதா என்பதையும் அதன் விலையையும் மாத்திரம் கவனித்துவிட்டு வாங்கும் பெண்மணி தனது கடமையைச் சரிவரச் செய்தவளாகமாட்டாள். பொரு ளின் முழு விவரத்தையும் அறிந்த பின்பே அதை நாம் வாங்குவது தர்மமுறை என்றால், வெகு தூரத்திலிருந்து வரும் பொருள்களை வாங்குவது உசிதமல்ல என்பது ஏற் படுகிறது. "அவ்வளவு தூரத்தில் என்ன நடக்கிற தென்பது எனக்கு எவ்விதம் தெரியும்? என்று சொல்லி நாம்நமதுபொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள இயலாது. அவ்வளவு தூரத்திலிருந்து வரும் பொருள்களின் விபரம் தெரியாவிட்டால் அவைகளை வாங்காமல் இருப்பதுதான் உசிதம். மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள தோட்டங்களில் அந்நாட்டு மக்களை நிர்ப்பந்தமாக உழைக்கச் செய்து பயிர் செய்யப்பட்ட கோகோ விதை, பலாத்காரத்தினால் பெறப் பட்ட சமுத்திரப்பாதைகளின் வழியாக இங்கிலாந்திற்குக் கொண்டு போகப்பட்டு அங்கே தொழிலாளிகளின் ஜீவனைக் கசக்கும் முறையில் ஆலைகளில் தயாரிக்கப்பட்டு, இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்கள் பெற்றிருக்கும் அரசாங்க அதிகாரத்தின் மூலம் குறைந்த சுங்கம் கொடுத்து இங்கே கொண்டுவந்து விற்கப்பட்டதென்றால், இதன் பொறுப் பெல்லாம் ஒவ்வொரு டின் கோகோவிலும் இருக்கும். ஒவ்வொருடின் கோகோ வாங்கும் பெண்மணியும் ஆப்ரிகா தேசத்தோட்டத்து மக்களின் துன்பத்திற்குக் காரண மாகிறாள்; கடற் சண்டையினால் ஏற்படும் பாபங்களைப் பகிர்ந்துகொள்ளுகிறாள். இங்கிலாந்திலுள்ள தொழிலாளி களின் தாழ்ந்த நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளுபவளாகிறாள்; இந்தியாவின் அடிமைத் தனத் தினால் பயனடைகிறாள். இவ்வளவு பொறுப்பையும் வகித்து நமது நாக்கின் ருசியை நாம் வளர்த்துக்கொள்வது நலமா அல்லது நமது விட்டில் நன்கு வளர்க்கப்பட்டிருக் கும் பசுவின் பாலைக் குடித்துத் திருப்தியடைவது நலமா?

இவ்விதம் யோசிப்பதெல்லாம் பொருத்தமற்றதென்று பெண்கள் புறக்கணிக்கக்கூடாது. வாழ்க்கையில் தனது கடமையைச் செய்யவிரும்பும் எந்தப் பெண்மணியும் தனது செய்கையினால் ஏற்படும் பலன்களை முழுதும் உணர முயலவேண்டும்.

ஒரு பண்டத்தைப் பற்றின முழு விவரமும் நமக்குத் தெரியாவிட்டால் அகில பாரத சர்க்கா சங்கம் அல்லது அகிலபாரத கிராமத் தொழில் சங்கம் இவைகளின் உதவியை நாடுவது உசிதம். இக்காரணத்தினால்தான் கதர் வாங்கும்போதுகூட அத்தாட்சிபெற்ற கடைகளில் கதர் வாங்கவேண்டும்.

## சுதேசி ஏன்?

வெகு தூரத்திலிருந்து வரும் பண்டங்களின் முழு விவரமும் நமக்குத் தெரிவது கஷ்டம். ஆகையால் கூடிய வரை உள்ளூருக்குள் கிடைக்கும் சரக்குகளை நாம் வாங்கினால் நமது செய்கைகளினால், ஏற்படும் பலாபலன்களை அறியக்கூடும். அவைகளை நல்லவழியில் திருப்ப நமக்கு அதிகாரம் கிடைக்கும். இதுதான் "சுதேசி" என்பதற்கு அடிப்படையான கொள்கை. சுதேசி என்று சொல்வது வெறும் அரசியல் பேச்சு மாத்திரம் அல்ல. நமது சக்திக்கு ஏற்றதாக நமது செய்கை இருக்கவேண்டும் என்ற கொள்கையாலேயே சுதேசியத்தைத் தலைவர்கள் வற்புறுத்துகிறார்கள்.

## தர்ம முறையில் வாங்குவதனால் புண்ணியம்:

மேற்கூறிய விஷயங்களையெல்லாம் ஆலோசிக்கப் புகுந்தால் நாம் வாங்கும் பண்டங்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். நம்முடைய பலவிதத் தேவைகளை நாம் திருப்திசெய்துகொள்ள இயலாமல் போய்விடும். கடைக்குப் புடவை வாங்கச் சென்றால் பெல்ஜியத்திலிருந்தும் பாரிஸிலிருந்தும் மற்றும் பல தேசங்களிலிருந்தும் வந்திருக்கும் பல அழகிய பட்டுக்களை மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கக் கூடியவைகளைக் கடைக்காரன் உங்



களுக்குக் காண்பிக்கலாம். இருந்தும் உங்களுடைய தர்மமானது மிக மோட்டாவான நாட்டுக் கதரையே வாங்கும்படி உங்களைத் தூண்டும். ஏனெனில் அதற்கென்று நீங்கள் கொடுக்கும் ரூபாய் உங்கள் ஊர் ஏழைக்குப்போகிறதென்று உங்களுக்குத் தெரியும். இந்தக் கதர் உடுத்துவதற்குக் கனமானது, விலை அதிகமானது, பார்க்க அதிக அழகில்லாதது; இருந்தும் அந்நியநாட்டின் அழகிய பட்டைவிட இக்கதரை வாங்குவதே உங்களது கடமையாகும். இதனால் தியாகம் செய்யவேண்டிவரும்.

இவ்விதம் நமது ஆசையைக் கட்டுப்படுத்தித் தியாகம் செய்வதே தவம். ஆணிப் பலகையில் உட்காருவதுதான் தவம் என்பதல்ல, கன்னத்தில் ஊசி குத்திக்கொள்வதுதான் தவம் என்பதல்ல. நமது தினசரி வாழ்க்கையில் ஒரு ஆசையைக் கட்டுப்படுத்தியோ ஒரு தேவையைக் குறைத்துக்கொண்டோ, நமது கொள்கைக்கு விரோதமாக நடப்பதில்லை என்ற பிடிவாதத்துடன் நாம் இருந்தோமென்றால் நாம் செய்யும் அந்தத் தவம் முன்னாட்களில் ரிஷிகள் காட்டிற்குச்சென்று செய்த தவத்தைவிட எவ்விதத்திலும் குறைந்ததாகாது. இந்தக் கொள்கையை எல்லா மதத்திலும் காணலாம். "உனது சிலுவையைத் தரித்து என்னைப் பின்பற்று" என்று பைபிளில் கண்டிருக்கிறது. நாம் ஒரு கொள்கையைப் பின்பற்றினால் பின்னோடு ஒரு கஷ்டமும் அனுபவிக்கவேண்டும். ஒரு சிலுவையைத் தரித்தாகவேண்டும். அவ்விதம் தரிக்கும் சிலுவை இரத்தினங்கள் இழைத்துச் செய்து நமது கழுத்தில் அலங்காரமாக அணிந்துகொள்ளும் தங்கச் சிலுவை அல்ல. மிகப் பாரமானதும் பல பலசாலிகளின் முதுகை முறித்திருப்பதுமான வலுவான சிலுவை, ஆனால் அதைத் நமது முதுகில் தாங்கினால் நமக்குப் புண்ணியம் ஏற்படுமென்பது நிச்சயம்.

இந்தத் தவம், இந்தத் தியாகம், இந்தச் சிலுவை தரிப்பதென்பது நாம் சுதேசியைப் பின்பற்றும்போது பல விதத்திலும் நம்மை பாதிக்கும். உப்பு வாங்கச் சென்றால் அழகான புட்டிகளில் மிகச் சுலபமாகத் தெளிக்கக்கூடிய

முறையில் வைத்திருக்கும் அந்நியநாட்டு வெள்ளை உப்பை வாங்கவே விருப்பமுண்டாகும். சாக்குகளில் அழுக்கடைந்து கருப்புக்கற்கள் போன்று இருக்கும் நாட்டு உப்பை வாங்குவது அருசியை உண்டாக்கலாம். மிகத் திடமனம் இருந்தால்தான் இந்த நாட்டு உப்பையே வாங்கி நமது வீட்டில் சுத்தம் செய்துகொள்ளத் தோன்றும். ஆனால் அவ்விதம் சுத்தம் செய்தால் அந்நிய நாட்டு உப்பைவிட மேலானதாக இதைச் செய்து விடலாம். எனக்குத் தெரிந்த ஓர் அமெரிக்க டாக்டர் அம்மாள் கடையிலிருந்து வெல்லத்தை வாங்கிக் காய்ச்சி சுத்தம் செய்து புட்டிகளில் ஊற்றி வைத்துக்கொண்டு தமது குழந்தைகளுக்குக் கொடுக்கிறார். அவர் சர்க்கரையைவிட வெல்லம் உடலுக்கு நல்லதென்றே அவ்விதம் செய்கிறார்; நமது நாட்டின் தொழில்களின் விருத்தியை உத்தேசித்து அல்ல. அந்த அமெரிக்கச் சகோதரியைவிட நமக்கு நமது நாட்டுப் பண்டங்களையே உபயோகிக்க அதிகக் காரணங்கள் இருக்கின்றன. ஆனால் அதற்கு வேண்டிய திடசித்தம் இருக்கிறதோ? மேலும், பண்டங்கள் கடனாகக் கொடுப்பது, ஈரெட்டாகக் கொடுப்பது, மாதிரிக்குக் கொடுப்பது, நாம் உத்திரவிட்டதும் உடனே அனுப்புவது முதலிய வியாபார லாகவங்கள் கையாளப்படாதபோது நமக்குச் சலிப்பு ஏற்படுவது சகஜம். இவ்வித லாகவங்கள் முதலாளித் தனத்தினாலும் மும்முரப் போட்டியினாலும் ஏற்பட்டவை. இருந்தும் நமது தர்ம உணர்ச்சியைப் பின்பற்றினால் இச்சமயங்களிலும் திடமாக இருக்கலாம். எப்போதும் இந்தக் கஷ்டங்கள் இரா. நுட்பமான எந்திரங்களினாலும் செய்ய இயலாத வஸ்துக்களைச் செய்துவந்த நமது நாட்டுத் தொழிலாளிகள் அநியாய முறையில் ஏற்பட்ட போட்டியினாலும், வாங்குபவர்கள் அவர்களை இரக்ஷிக்காததனாலும் தாழ்வை அடைந்துவிட்டனர். முன்பு நாம் கைவிட்ட அவர்களை இப்போது காப்பாற்றுவது நமது கடமை அல்லவா? அவர்கள் நல்லநிலையை அடைந்துவிட்டால் இப்போது முதலாளி முறையில் கிடைக்கும் வசதிகள் எல்லாம் அப்போதும் கிடைக்கும் என்று நிச்சயமாய் நம்பலாம்.



## தொழில்களின் அழிவிற்குக் காரணம்:

மேலே நமது நாட்டுத் தொழிலாளிகளை நாம் கைவிட்டோம் என்ற பெரிய குறையைக் கூறியுள்ளேன். அந்நிய நாட்டுத் தொழிலை ஆதரிப்பதனால் நமது நாட்டின் தொழில்கள் அழிந்து தேசத்தில் நாளடைவில் ஏழ்மையும் தாழ்வும் ஏற்படுவதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு சம்பவம் கூறுகிறேன். ஒரு சமயம் நான் திருவாங்கூரில் யாத்திரை செய்துகொண்டிருக்கையில் கோரைப் பாய்கள் முடையும் தொழிலைக் கவனிக்கலானேன். இத்தொழில் முன்பு மிக்க விருத்திபெற்றிருந்தது. இப்பொழுது அடியோடு நசித்துவிடும்போல் இருக்கிறது. அப்பாய்களைப் பின்னும் வகை மிக நேர்த்தியாக இருக்க, அவைகளுக்கு வேண்டிய கோரைப் புற்கள் அந்நாட்டில் ஏராளமாகக் கிடைக்க, அத்தொழில் இவ்விதம் க்ஷீணமடைவதற்குக் காரணம் இன்னதென்பது எனக்கு விளங்கவில்லை. திருவாங்கூரில் குடிசைகளைச் சுற்றிலும் வேலியாக இந்தப் புற்களை வளர்க்கிறார்கள். வீட்டில் ஆண், பெண், பாலர் ஆகிய யாவரும் இந்த வேலையில் கலந்துகொள்கிறார்கள். இந்தப் பாய்களைத் துணிபோல் மடிக்க இயலும். மிக நயமானவை. படுக்கச் சுகமானவை. தண்ணீர்விட்டுக் கழுவினால் சுத்தமாகி விடுபவை. அங்கிருக்கும் பாய் முடைபவர்களில் மிகப் பெரியவன் என்னையும் நண்பர் இருவரையும் அழைத்துச் சென்று பாய் முடையும் வகைகளையும் காண்பித்து இத்தொழில் மறுபடி முன்னுக்குக்கொண்டுவருவது எவ்விதம் என்று என்னைக் கேட்டான். அதற்கு விடை அச்சமயம் எனக்குத் தெரியவில்லை. பிறகு அவன் தனது சொற்ப ஆகாரத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு எங்களை அழைத்தான். நாங்கள் கைகால்களைக் கழுவுகையில் நாங்கள் உட்கார்ந்துகொள்வதற்கென்று அவன் தனது வீட்டுத் தாழ்வாரத்தில் ஆஸனங்களை விரித்தான். நாங்கள் அங்கே சென்றதும் இரண்டு பக்கங்களில் விரித்திருக்கும் கோரைப் பாய்களில் எனது நண்பர்களை உட்காரச் சொல்லி, நடுவிலிருக்கும் ஆஸனத்தை எனக்குக் காண்பித்தான். அதைக் கண்டதும் நான் பிரமித்து அவனை நோக்கி,

"உன்னுடைய தொழிலின் அழிவிற்குக் காரணம் இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. அதற்குக்காரணம் உனது மனப்பான்மையே" என்றேன். நான் சொன்னதன் கருத்து அவனுக்கு விளங்கவில்லை. என் நண்பர்களுக்கு விரித்திருக்கும் பாய்களைக் காண்பித்து "இவை ஏது?" என்று கேட்டேன். அவன் தனது தோட்டத்தின் புல்லைக்கொண்டு தானே முடைந்தது என்றான். அவை இரண்டிற்கும் நடுவில் விரித்திருக்கும் புலியுருவம் அச்சடித்த பாயைக் காண்பித்து "இது ஏது?" என்று கேட்டேன். "கடையில் வாங்கினது" என்று அவன் சொன்னான். அந்த விகாரமான ஜப்பான் பாயை விரிப்பதனால் எனக்கு அதிக கௌரவம் அளிப்பதாக அவன் எண்ணினான். "இவ்விதம் உன்னுடைய பாயைவிட அந்தப் பாய் உயர்ந்ததென்று நீயே எண்ணினால் மற்றவர்களும் அவ்விதமே நினைத்து உன்னுடைய பாயை வாங்காமல் அவைகளை வாங்குவதில் தவறு என்ன? உன் தொழில் ஏன் அழியாமல் இருக்கும்? உன்னுடைய தொழிலிற்கு நீ மதிப்புக் கொடுத்து அந்நிய நாட்டுப் பாயை வாங்காமல் இருந்தால்தான், பிறரும் உன்னுடைய பாயை வாங்கி உன் தொழிலை ஆதரிப்பார்கள்" என்றேன். நமது நாடு க்ஷீணமடைந்திருக்கும் காரணத்தை இச்சம்பவம் விளக்கும்.

## தொழில் விருத்தி:

அந்நிய நாட்டுச் சரக்கை வாங்கும் ஒவ்வொரு சகோதரியும் நமது நாட்டுத் தொழிலாளிக்கு வேலையில்லா நிலைமையை உண்டாக்கி அவனுடைய ஜீவனோபாயத்தைக் கெடுக்கிறாள். இதை நாம் நன்கு உணரவேண்டும். காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு என்பது தமிழின் அழகிய வசனங்களில் ஒன்று. ஆனால் நாமோ நமது தொழில்களைப் புறக்கணித்து அந்நியநாட்டு ஆலைத்தொழில்களுக்குத் தாய் தகப்பன்மார்களாகிவிட்டோம். உங்கள் வீட்டிலிருக்கும் பண்டங்களில் எத்தனை பண்டங்கள் பிற நாட்டிலிருந்து வந்தவை என்பதைக் கணக்கிட்டுப் பாருங்கள். அவைகளுக்காக நீங்கள் கொடுத்தவிலை உங்கள்



நாட்டுத் தொழிலாளிகளுக்கு உங்களால் நஷ்டமானவை. நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும் நமது நாட்டுத் தொழிலை ஆக்கவோ அழிக்கவோ உதவி புரியும். கிருகலக்ஷ்மிகளாகிய பெண்களே தொழில் விருத்திக்கு அதிபதிகள். அந்த அதிகாரத்தை வகிக்க அவர்கள் சரிவரக் கற்கிறார்களா? ஜப்பான், ருஷ்யா, ஜர்மனி, இத்தாலி முதலிய தேசத்தினர் நமது நாட்டுப் பெண்களை மேன்மேலும் மக்களைப்பெறுமாறு தூண்டுதல்செய்து பெண்களின் தெய்வத் தன்மையை கேவலம் ஒரு பீரங்கிக்குப் பலிகளைச் சிருஷ்டிக்கும் எந்திரத்திற்குச் சமமாய்ச் செய்து, தம் மக்களைப் பரிகொடுத்துத் தமது நாட்டு ஆலைத் தொழிலை விருத்தி செய்கிறார்கள். நாமோ நமக்கு இருக்கும் சொற்பத்தையும் அழித்துக் கொள்ளுகிறோம்.

## புண்ணிய யாத்திரை:

நமக்கு வேண்டிய சுதேசிப்பொருள் கிடைப்பதற்காக நாம் தேடி அலைய வேண்டி நேரிடும். இந்தியாவில் செய்த பட்டுக்கயிறு வேண்டுமென்று நீங்கள் பல கடைகளில் தேடியும் அது அகப்படாமல் இருக்கலாம். நூல் கயிற்றைக்கொண்டு நீங்கள் திருப்தியடையவேண்டி இருக்கும். நமக்கு மாத்திரம் மனத்தில் உறுதி இருப்பின் இவ்விதம் தேடி அலைவது வீணாகாது. அதை ஒரு புண்ணிய யாத்திரையாகக் கருதலாம். காசியிலிருந்து கன்யாகுமரி வரை அங்கப் பிரதக்ஷிணம் செய்து புண்ணியம் சம்பாதிக்க முயலுபவர்கள் இருக்கிறார்கள். நாம் இந்த சிறிய கஷ்டத்திற்கு பின் வாங்குவதா?

நமது நாட்டுத் தொழில் விருத்தியைப் பற்றி ஒரு திராத்தாபம் நமது மனதில் எப்போதும் இருக்கவேண்டும். நம்மைச் சார்ந்தவர்களுக்குச் செய்யவேண்டிய கடமையை நாம் எப்போதும் மறக்காமல் செய்வோமா?

## சுதந்திரத்திற்கு வழி:

இந்த நிலைமையைப்பெற நாம் பல தியாகங்கள் செய்து, நமது சிலுவையைத் தரித்து, நம்முடைய கொள்கைகளைச் சிறிதேனும் விட்டுக்கொடுப்பதில்லை என்ற

உறுதியுடன் இருக்கவேண்டும். நம் உரிமைகளைக் கேட்காமல் நம் நாட்டாருக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவேண்டும். இவ்விதம் நமது தவத்தினாலும் தியாகத்தினாலும் லக்ஷக் கணக்காணவர்களுக்கு ஜீவனோபாயம் அளிப்பதுடன் நமது விடுதலையையும் நாம் பெறுவோம். நம் நாட்டுச் சகோதரிகள் இதன் அவசியத்தை அறிந்தால் உடனே அதைச் செய்வதற்குரிய சக்தியையும் பெறுவார்கள்.

இதைப் படிப்பவர்கள் சுலபமானதும் நாட்டிற்கு அழிவை அளிப்பதுமான பாதையில் செல்லாமல் இனியாகிலும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, முட்கள் நிறைந்ததென்றாலும் இறுதியில் நாட்டிற்கு க்ஷேமத்தையும் விடுதலையையும் அளிப்பதான வழியைப் பின்பற்றுவார்களோ?

---

# அத்யாயம் 10

## தேசப் போர்கள்

ஆதிகாலத்தில் வேட்டையிலும், மீன்பிடிப்பதிலும், பொருளைப் பங்கிட்டுக்கொள்வதிலும் சண்டை உண்டாயிற்று. வேட்டை இனத்தில் சண்டையும் இம்சையும் ஒரு முக்கிய குணம். பலத்தின் ஆட்சிக்கு சண்டையே அடிப்படையான விஷயம். இவ்விதம் பிறருடன் சண்டையிடத் தூண்டுகோலாக இருந்தவை மேன்மை, அதிகாரம் செல்வாக்கு முதலியவைகளில் ஆசையும் எதிரியைப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும்

### ஒருநிலைப்பட்ட உற்பத்தியும் இம்சையும்:

பணத்தின் ஆட்சியில் பலமும் பணமும் கைகோர்த்து ஏகாதிபத்தியத்தை வளர்த்தன. தூரதேசத்தில் வியாபாரம் செய்து வட்டிபெறவேண்டுமென்றால், வியாபாரிகளின் முதலின் பாதுகாப்பிற்காக ஒரு சேனை அவசியமாயிற்று. (நமது நாட்டார் திரைகடலோடி வியாபாரம்



செய்யும் சமயம் ஒரு சேனையை உடன் கூட்டிச் செல்லவில்லை). எந்திர ஆட்சியில் பொருள்களை உற்பத்தி செய்யும் எந்திரங்களில் அதிக முதல் போட்டிருப்பதனால் அந்த எந்திரங்கள் பொருள்களைச் சீக்கிரம் உற்பத்தி செய்வது அவசியமாயிற்று. இல்லாவிடில் அந்த எந்திரங்களைக் கட்டி ஆள்வதனால் ஏற்படும் செலவு ஏராளமாகிவிடும். அச்செலவிற்கு ஏற்றதாக வருமானம் ஏற்பட உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் விலையை அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கும். பொருளின் விலையில் முக்கால் அம்சம் எந்திரத்தினால் ஏற்பட்டதாகிவிடும். இவ்விதம் பொருளின் விலை அதிகரிக்காமலிருக்கவேண்டுமென்றால் அந்த எந்திரச் செலவை அதிக எண்ணிக்கைகளின் பேரில் பரவினதாகச் செய்யவேண்டும். உதாரணமாக ஒரு ஆடை நெய்யும் எந்திரத்தின் ஒரு தினச் செலவு, அதை வாங்குவதற்காக போடப்பட்ட முதலின் வட்டி உள்பட பன்னிரண்டு ரூபாய் என்றால், ஒரு தினத்திற்கு ஒரு ஆடை செய்தால், ஆடைக்குச் செலவழிந்திருக்கும் நூல், சாயம், முதலியவைகளின் விலை மூன்று ரூபாயாக இருக்க, இவ்வாடையைப் பதினைந்து ரூபாய்க்கு விற்றாலே முதலாளிக்கு லாபம் ஏற்படும். ஆனால் ஒரு தினத்தில் பன்னிரண்டு ஆடைகள் உற்பத்தி செய்தால் ஒரு ஆடையை நாலரை ரூபாய்க்கு விற்றாலே லாபம் கிடைத்துவிடும். இவ்விதம் பொருளின் விலையைக் குறைக்க, அதிகம் பொருள்கள் செய்வது அவசியமாகிறது. ஆகையால் தேவை இருக்கிறதா இல்லையா என்பதை ஆராயாமலேயே அதிக உற்பத்தி செய்வது பெரிய தொழிற்சாலைகளின் குணம்.

இதனுடன் கட்டுக்கடங்காத தனித்த அதிகாரமும், இஷ்டம்போல் விற்கலாம் என்ற சுதந்திரமும் ஏற்பட்டால், போட்டியிட்டு போட்டியிட்டு மேன்மேலும் பொருள்களை உண்டாக்கவேண்டுமென்ற விருப்பமானது தேவை இருக்கிறதா என்பதைச் சிறிதும் கவனிக்காமல் பொருள்களை உண்டாக்கி விடுகிறது.

இவ்விரண்டு நிலைமைகளிலும் உண்டாக்கின பொருளிற்கு விற்பனையைத் தேடவேண்டியதாகிறது. மேலும்

உண்டாக்குவதற்கு அவசியமான இயற்பொருள்கள் தூர தேசத்தில விளைந்தாலும் தயக்கமில்லாமல் தொழிற்சாலைக்கு வந்து சேரக்கூடிய செல்வாக்கு வேண்டியிருக்கிறது. தொழிலும் இந்த முறையில் மிக நுணுக்கமாக பங்கு பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஆகையால் இவ்வித முறையின் கீழ் பொருளுற்பத்தி செய்ய இயற்பொருள்களில் ஆரம்பித்து அப்பொருள் விற்கப்படும் இடம் வரை உலக முழுவதும் பரவியிருப்பதால், காலம், தேசம் இரண்டையும் வென்று வசப்படுத்த வேண்டியதாக இருக்கிறது இவ்விதப் பொருளியற்குத் தேவையானவைகளெல்லாம், முதலாளியின் அதிகாரத்திற் குட்பட்டதாக இருந்தால் மாத்திரமே, தேவையான இயற்பொருள் குறிப்பிட்ட காலத்திற்குள் எந்திரத்திற்குக் கிட்டி, அந்த எந்திரம் உண்டாக்கியதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் சரியாக விற்று லாபம் கிடைக்கப்பெற்றாலே, ஒரு தேசம் பெரிய தொழிலாக்க முயற்சியில் இறங்கலாம். இவ்வித செல்வாக்கு பலாத்காரத்தினால் மாத்திரமே கிடைக்கும்.

உதாரணமாக லங்காஷயரில் துணி உற்பத்தி செய்வதென்றால், எந்திரம் லங்காஷயரில் இருக்கிறது. அங்கே பஞ்சு விளைவதில்லை. அந்த இயந்திரத்தை மையமாக வைத்து உலக முழுவதும் அதைச்சுற்றி வரவேண்டியதாகிறது. இந்தியாவிலிருக்கும் வியவசாயக் கல்லூரியில் அந்த எந்திரத்திற்கு ஏற்றதான பஞ்சு விளைவிக்கக்கூடிய பூமி எது என்று ஆராயப்படவேண்டும். அவ்விதப் பூமியில் எவ்விதப் பயிர் செய்தால் ஏற்ற பஞ்சு விளையுமென்று பலவிதப் பருத்திகளைக் கலந்து பரிசைக்ஷகள் நடத்தவேண்டும். அந்த பூமியில் வியவசாயிகள் ஏற்கனவே உணவு பதார்த்தங்கள் பயிர்செயதுகொண்டிருந்தனரென்றால், அதைவிட்டு இனி லங்காஷயருக்கு பருத்தி விளைவியுங்கள் என்று அவர்களுக்குப் போதித்தாகவேண்டும் விளைந்த பருத்தியைக் குறைந்த கூலிக்குத் துறைமுகத்திற்குச் சேர்ப்பதற்காக ரயில் பாதைகள் அமைக்கவேண்டும். துறைமுகத்தில் இவைகளைச் சேகரித்துவைக்கக் கிடங்குகளும் கப்பலில் ஏற்ற வசதியான கட்டிடங்களும் கட்டவேண்டும் கப்பலின் போக்குவரவு சரியாக இருக்கும் வண்ணம் சிங்கப்பூரில் கப்பல் படையும், ஜிப்ரால்டர் ஏடன் முதலிய இடங்களில் கோட்டைகளும் நிலைப்படுத்த வேண்டும். இவைகளுக்குத் தேவையான சேனைகளுக்காக நிலப்படை, கப்பல் படை, ஆகாயப்படை ஆகிய மூன்றும் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விதம் ஒரு நிலைப்பட்ட பொருளாக்கமானது நிலப்படை, கப்பல்படை, ஆகாயப் படை இவைகளின் உதவியில்லாமல் ஒரு தினம்கூட நடைபெற இயலாது. உலக முழுவதுமாகப் பரவியிருக்கும் ஒரு அமைப்பின் முக்கிய அச்சு லங்காஷியரின் ஆலை ஆகையால் இதனுடைய சேவைக்காக விவசாயக் கல்லூரிகள், குடியானவர்கள். வரி விகிதம், ரயில்பாதை, கப்பல் மார்க்கம் ஆகிய எல்லாவற்றின் பேரிலும் அதிகாரம் இருக்கவேண்டும். இவ்வித அதிகாரம் இந்தியாவின் பேரில அரசியல் அதிகாரம் இருந்தாலே கிடைக்கும். இவ்வளவும் பொருள் உற்பத்திக்காக. ஆனால் இத்துடன் அந்த அமைப்பு முடிவதில்லை.



தொழிலுற்பத்தியினால் வாழும் நாட்டிற்கு முக்கியமாக வேண்டியவை மூலப் பொருள்களும், உற்பத்தியான பொருள்களை விற்பதற்கு மார்க்கெட்டுகளும். இவ்விரண்டின் பேரில் அதிகாரம் படைத்தாலே அந்நாடு வாழமுடியும் என்றிருப்பதால் இவைகளைப்பெற அது முயன்று கொண்டே இருக்கிறது. அவ்வித விற்பனைக்கேற்ற மார்க்கெட்டுகளுக்காக இதர மனிதர்களை அடக்கியாளவேண்டியதாகிறது. இவ்வித நாட்டிற்கு அதற்குத் தேவையான மூலப்பொருளோ அல்லது அது உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்கும் மார்க்கெட்டுகளோ இல்லாவிதம் யாராகிலும் தடைசெய்யப் புகுவது ஒரு பசித்திருக்கும் நாயினிடமிருந்து மாமிசத்துண்டைப் பறிப்பது போலாகும். இச்செய்கையினால் சண்டையே ஏற்படுகிறது.

தொழிலாளி ஆட்சிமுறையாகிய பொதுவுடைமையிலும் அதிகாரம், ஒழுங்கு செய்வது, திட்டம் விதிப்பது ஆகிய எல்லாம் ஒரு நிலைப்பட்டிருப்பதால் அதைச்செலுத்த பல சிக்ஷைகளும் சாஸனங்களும் அவசியமாகிறது. அங்குள்ள

தொழிலாளிகளுக்கு தொழில்செய்ய வேண்டுமென்ற விருப்பம் உள்ளத்திலிருந்து உண்டாவதில்லை. மேலதிகாரிகளிடமிருந்து வருகிறது. ஆகையால் ஓரளவு பலவந்தம் இருந்தே தீரும். ஏனெனில் அவ்வித பலவந்தம் இருந்தாலே தொழில் ஒழுங்காக நடக்கும். இங்கே உற்பத்தி செய்யும் முறை முதலாளி உற்பத்திமுறை போன்றே இருப்பதால் வேறு "வேட்டை இன"த்தவரின் ஆட்சிக்கு இது வெகு சீக்கிரத்தில் கட்டுப்பட்டுவிடும். ஆகையால் பலசாலிகளான வேறு "வேட்டை இன" தேசத்தினர் இதன் மேல் ஆசை வைக்கிறார்கள். தற்காப்பின் பொருட்டு இவ்விதத் தேசம் பெரிய சேனையைச் சேகரித்து வைத்துக் கொள்வது அவசியமாகிறது.

இவ்விதக் காரணங்களினாலேயே மேல் நாடுகளில் சமாதான முறையில் காரியங்களை ஒழுங்குபடுத்த இயலுவதில்லை. தற்காலத்திலிருக்கும் யுத்தங்களுக்கும் தேசத்திற்கு தேசம் ஏற்பட்டுள்ள சச்சரவுகளுக்கும் அடிப்படையான காரணம் இவ்வித வேட்டையினப் பொருளாக்கமே. இவை இருக்கும்வரை சண்டைகள் இருந்தே தீரும். காரணம் இருந்தால் காரியம் ஏற்படுவதில் என்ன ஆச்சரியம்! தேசங்கள் தமக்குள் எவ்வளவுதான் நல்ல உத்தேசத்துடன் உடன்படிக்கைகள் செய்துகொண்டாலும் ஆயுதப் பரிஹாரணம் ஏற்படாது. சர்வ தேசச் சங்கம் ஏற்படுத்தின திட்டங்கள் பயனற்றவைகளானதை நாம் நேரில் கண்டிருக்கிறோம். உண்மையில் இச்சங்கம் ஒரு ஓநாய்ச் சங்கமாகிவிட்டது. தேசத்திற்கு தேசம் இருக்கும் உறவு இக்காலத்திய பொருளாக்க முயற்சியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும்வரை, அச்சங்கம் அவ்விதம்தான் காட்டுமிருகங்களின் சங்கமாகும். ஒருவருடைய இரத்தத்தை ஒருவர் குடிக்கவே விரும்புவார். இந்தியர்களாகிய நாமும் அப்பொருளாக்க முறையைப் பின்பற்றினால் அதனால் ஏற்படும் பயனை அனுபவிக்காமலிருக்க இயலாது. ஜப்பான் துர்பாக்ய வசத்தினால் "கூட்ட இன" வகையிலிருந்து "வேட்டை இன" வகைக்கு மாறிவிட்டது. அதன்



பயனாக மேல் நாட்டினரைப்போல் ஏகாதிபத்தியத்தை விரும்பி இம்சையில் பிரவேசித்திருக்கிறது.

மேல் நாட்டுப் பொருளாக்கத்திற்கு அடிப்படையான விஷயங்களை நாம் பின்பற்றலாமோ, அல்லது அந்த வேட்டை இன முறைக்கு மாறாக நமது நாட்டில் முன்பு "கூட்ட இன" குணத்தின் பண்பில் இருந்த பொருளாக்கத்தைத் தழுவினதாய் நாமும் நமது புது அமைப்புகளை ஏற்படுத்தலாமோ என்பதைத் தீர்க்கவேண்டும். முன் காலத்தில் அச்சமயத்திற்கு ஏற்றதாகக் கருதப்பட்ட திட்டங்களையே நாம் இக்காலத்தில் கண்மூடித்தனமாகப் பின்பற்றவேண்டுமென்பதல்ல. ஆனால் தனிமனிதனின் பேராசையைக் கட்டுப்படுத்தி, தேவைக்குத் தகுந்ததாக உற்பத்தியை ஒழுங்குபடுத்தி, உற்பத்தியையும் விற்பனையையும் நமது ஜனங்களுக்குள்ளேயே அடங்கினதாகச் செய்யும் அமைப்பை நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உலகத்தில் இன்று நாம் காண்பதென்ன! எங்கும் இம்சை வியாபித்திருக்கிறது. தேசங்கள் ஆயுதம் பூண்ட சமாதானம் என்ற வேஷத்தை அணிந்து ஒன்றைப்பார்த்து ஒன்று சீறிக்கொண்டும் பற்களை நெறித்துக்கொண்டும் இருக்கின்றன. (இக்கட்டுரை 1936ம் வருஷம் எழுதப்பட்டது.) சகோதர பாவனையில் செய்கிறோம் என்று சொல்லப்படும் ஒவ்வொரு விஷயத்திற்கும் உள்ளுக்குள் துவேஷமும் விரோதமும் இருக்கிறது. பலவீனமானவர்களைப் பாதுகாக்கிறோம் என்று வேஷம்போடுவதெல்லாம் சுயநலப்பற்றினாலும் பேராசையினாலும் செய்வது. ஏகாதிபத்தியம் வேண்டுமென்று ஆசைகொண்ட ஜனங்களே "அநாகரீகமானவர்களை நாகரீகமானவர்களாக்குகிறோம்" என்று சொல்லிக்கொண்டு வாழ்கிறார்கள். பசுத் தோல் போற்ற புலியே உலகத்தில் உலவி வருகிறது.

மிருகங்களிடை பொருளாக்கம் ஆகாரத்தை தேடுவதில் ஏற்படுகிறதென்பதை ஆதியில் வர்ணித்தோம். அதற்குத் தூண்டுகோல் பசியே. அவைகள் தாம் இயற்றியதை உண்ண முயல்கின்றன. உண்டாக்காமல் அறியவிக்

ARCHIVES 11043

கின்றன. ஆகாரம் குறையக் குறைய அவைகளுக்குக் கோபமே அதிகரிக்கிறது. தாங்கள் உண்டாக்காத பொருளைக் கவர்ந்து வாழ்வதால் தேவைக்குப் போதுமான பொருள் கிடைக்காவிடில் கோபமும் சண்டையுமே ஏற்படுகிறது. (உண்டாக்கும் சக்தி இருந்தால் இவ்விதம் ஏற்படாது)

மனித வர்க்கம் நாடோடியாகத் திரிந்த காலத்திலும் இவ்வித நிலைமைதானிருந்தது. அவர்களும் மிருகங்களைப் போல் தங்களுக்குத் தேவையானதை உற்பத்தி செய்துகொள்ளும் சக்தியற்றவர்களாய், ஆகாரம் குறைந்துவிட்ட இடங்களைவிட்டு ஆகாரம் அதிகம் இருக்கும் இடங்களுக்கு சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய இந்த முயற்சிக்குக் குறுக்காக இருப்பவர்களுடன் சண்டை ஏற்பட்டுக்கொண்டிருந்தது. அவர்கள் உற்பத்தி செய்தது மிகவும் சொற்பம். மிகுதியை இயற்கையிலிருந்து கவர்ந்து எடுத்துக் கொண்டார்கள். அவர்களுடைய தேவைகளும் மிருகத்தனமானவைகளாகவே இருந்தன — பசியும் சீதோஷ்ணப் பாதுகாப்பும்.

நாடோடிக்குப்பின் உழுது வாழ்பவர் ஏற்பட்டனர். அவர்களே முதன்முதலாகத் தேவைக்குத் தகுந்ததான உற்பத்தியைச்செய்ய முயன்று, இயற்கைக்கு உதவியாகத் தாமும் உழுது பயிர் செய்யத் தொடங்கினார்கள். இவ்விதம் செய்வதால் உற்பத்தியானது மனிதருக்கு வசமாயிற்று. அவர்கள் தமது தேவையை அதிகரிக்கச்செய்து ஆகாரத்துடன் நிற்காமல் ஆடை, இருப்பதற்கு வீடு, ஆகிய தேவைகளையும் ஏற்படுத்திக்கொண்டு, இவைகளைத் திருப்தி செய்துகொள்ளும் திறமையையும் பெற்றனர். இந்த நிலைமையில் தேவைக்கும் உற்பத்திக்கும் அதிக வித்யாசமில்லாமலிருப்பதால் போட்டிக்கு இடமில்லை. தேவைக்கு அதிகமாக உற்பத்தி இல்லாமலிருப்பதால் செயற்கையாகத் தேவை ஏற்படுத்த, பொய்ப்பசியை உண்டாக்க நிமித்தமில்லை. இம்சைக்கு இடமில்லை. எவ்வளவு தேவையோ அதற்கு அவசியமானதாகவே உற்பத்தியுமிருக்கிறது. ஒரு



வனுக்குச் செருப்புத் தேவை என்றால் அவனுடைய கால்களின் அளவிற்குச் செருப்பு செய்யப்படுகிறது. இவ்விதம் ஏற்பட்டாலே தேவை சரிவண்ணம் திருப்தியாகும். தேவையின் குணங்கள் அதிகரிக்க அதிகரிக்க, உற்பத்தியாளரான தொழிலாளியின் திறமை அதிகரித்து அவர்களுக்கு விருத்தி ஏற்படுகிறது. இவ்விதம் தொழிலாளி விருத்தி பெறுவதனால் அக்காலத்திய பண்பு விருத்தி பெறுகிறது. உற்பத்தியாளன் தேவையான பொருளை உற்பத்தி செய்யச் சக்தி பெற்றிருக்கும்வரை இம்சைக்கு இடமில்லை. அவரவர் தம் வீட்டுக் கொல்லைக் காய்களைப் புசித்துத் தமது கேணி நீரை உட்கொண்டால் நாட்டில் சமாதானம் நிறைந்திருக்கும்.

வேட்டை இனக்குணங்களுடையவரால் தமது முன்னோராகிய நாடோடி மனிதர் இயற்கையிலிருந்து ஆகாரத்தைப்பெற்று ஜீவித்தனர் என்பது மறந்துவிடப்படுகிறது. அவர்களுடைய வியவசாயி இயற்கைக்கு உதவியாக உழைத்துப் பயனடைய முயலாமல், இயற்கையை வெல்லப் பார்க்கிறான். மனிதனுக்கு உதவி செய்யா இயற்கையைக் கட்டிப்போட முயலுகின்றனர் இவ்விஷயத்தில் மனிதனுக்கு உதவிசெய்யுமாறு பல எந்திரங்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் உத்தேசித்ததற்கு மாறாக, மனிதருக்கு உதவியாக நினைத்து இயற்றிய எந்திரத்திற்கு மனிதர் அடிமையாகிவிட்டனர். தேவையை விட உற்பத்தி வேகமாய் முன்சென்றுவிட்டது. ஆதியில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவே சிரமப்படவேண்டியிருந்தது இப்பொழுது தேவையை அதிகரிக்கச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எந்திரங்களின் உதவியை நாடினால் பொருள்களை ஒரே தன்மையானவைகளாகவும் ஏராளமாகவும் செய்யவேண்டியதாக இருக்கிறது. அவ்விதம் செய்வதால் தேவைக்குத் தகுந்ததான பூர்த்தி இருப்பதில்லை. உதாரணமாக பம்பாயில் “பூட்ஸ்” வேண்டுமென்று ஒருவன் கடைக்குச் சென்றால், இங்கிலாந்தில் நார்தாம்டன் என்ற இடத்தில் செய்யப்பட்ட ஒரு ஜதையை கடைக்காரன் எடுத்துக் கொடுக்கிறான். அதைச்

செய்தவன் நமது பம்பாய் மனிதனை முன்பின் பார்த்த தில்லை. இவனுடைய கால்களின் அளவிற்கென்று அவை கள் செய்யப்பட்டதேயல்ல. அவைகளைச் செய்தவன் ஒரே தன்மையான பல ஜதைகளை ஏழு, எட்டு, பத்து என்ற அளவு நம்பர்களைக்கொண்டதாக ஏராளமாகச் செய்து கப்பலில் ஏற்றி விற்பனைக்காக உலக முழுவதும் அனுப்பி விடுகிறான். "தேவை" எத்தன்மையானது என் பதை அறியாமலேயே "பூர்த்தி" உண்டாக்கப்படுகிறது. அதற்கு மேல் தேவையை உண்டாக்கவேண்டி இருக்கிறது. காலில் பூட்ஸ் தரிக்காத "அநாகரீகமான" கீழ் நாட்டின ருக்கு பூட்ஸ் தரித்துக்கொண்டு போகுமாறு நாகரீகம் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இம்சைக்கு இடமேற்படு கிறது. இரும்பு ஆலைகள் போன்ற தொழில்களில் முத லாளிகள் தங்களுக்கு அதிக செல்வாக்கு இருப்பதனால் சர்க்காரின் மூலம் தங்களுடைய இரும்புகளின் தேவையை அதிகரிக்கச்செய்ய முயல்கின்றனர். சர்க்கார் "அநாகரீக மான" தேசங்களாகப் பார்த்து அவைகளில் அந்த அநாகரீக ஜாதியினரின் சௌகரியத்திற்காக ரயில் பாதைகளும் பாலங்களும் அந்த ஜனங்களின் செலவில் கட்டிக்கொடுக் கின்றனர். அந்த ஜனங்களும் அவர்களுடைய குழந்தை களும் போதுமான உணவுகூடக் கிடைக்காமல் பட்டினி கிடப்பதுபற்றி இவர்களுக்கு என்ன கவலை?

எந்திரங்களின் மூலம் ஒரே தன்மையான பொருள் களை ஏராளமாக உற்பத்தி செய்ய அதிகச் செலவு பிடிக் காது. அவைகளை விற்க மார்க்கெட்டுகள் அவசியம் அதனால் இம்சை ஏற்படுகிறது. ஆயுதங்கள் செய்பவரின் தொழிலோ இன்னும் கேவலமானது. யுத்தத்தைக் கிளப்பிவிட்டுக்கொண்டிருந்தால் அவர்களுடைய பொருள் களுக்கு அதிகத்தேவை ஏற்பட்டுக்கொண்டே இருக்கும் பிறர் இம்சையினாலேதான் அவர்களுக்கு லாபம் ஏற்படும் ஆதியில் நாடோடியின் இயற்கையான பசியும், விவசா யிக்கு இயற்கையாகக் குளிர் வெயிலினால் ஏற்படும் தொந் திரவுகளுமே தேவையை ஏற்படுத்திப் பொருளாக்கத் திற்குத் தூண்டுகோலாக இருந்தது. ஆனால் இப்பொழுது



செயற்கையாகப் பிறர் போதிப்பதனாலும் வழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதனாலும் பல பொய்ப்பசிகளை இயற்றவேண்டியதாக இருக்கிறது. ஆகாரம், ஆடை, வீடு, இவைகள் இயற்கையான தேவைகள். சுருட்டு புகையிலை, உதட்டுப்பூச்சு, பவுடர் ஆகியவை வழக்கத்தி னாலும் பழக்கத்தினாலும் ஏற்படும் தேவை. ஒரு பொருள் அவசியமே இல்லாவிடினும், அதை உபயோகிப்பதனால் தீங்கே ஏற்படுவதாக இருப்பினும், தந்திரமான விளம்பரங் களினால் அதை அவசியம்போல் காண்பித்து, ஜனங்கள் வாங்கும் விதம் உற்பத்தியாளர்கள் செய்கிறார்கள். அவ் விதம் செய்தாலே இவர்களுக்கு லாபம் கிடைக்கும்.

இவ்வண்ணம் முன்பு "தேவையின் பூர்த்தி" குறை வாக இருந்ததைச் சரிக்கட்டி, இயற்கையிலகப்படும் பொருள்களுடன் செயற்கையாகப் பொருள்களை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட்ட மனித முயர்ச்சி, இப்பொழுது திரும்பிக்கொண்டு "தேவையை" அதிகரிக்கச் செய்யப் பார்க்கிறது; அதிக உற்பத்தி ஏற்பட்டுவிட்டது.

## தேவையும் பூர்த்தியும் இம்சையும்:

பூர்வ சரித்திரங்களைப் படித்தால் எந்த ஜனங்கள் தமது தேவையைத் தாமே திருப்திசெய்துகொள்ள இய லாமலிருக்கின்றனரோ, அல்லது எவருடைய தேவை யைத் திருப்தி செய்வது கஷ்டமாக இருக்கிறதோ அவர் கள் சீக்கிரம் அழிந்துவிடுகின்றனர் என்பது தெரியவரும். முதல் வகையான அழிவு அமெரிக்க சிவப்பு இந்தியரிடம் காணலாம். இரண்டாவது வகையான அழிவினாலேயே ஒவ்வொரு பெரிய சாம்ராஜ்யமும் விழ நேரிட்டது. சாம் ராஜ்யங்களில் பிற தேசத்தைக் கொள்ளையிடுவதனாலும், பிறதேசத்திலிருந்து பிடித்துவந்த அடிமைகளை உழைக்கச் செய்வதனாலும் பொருள் அதிகரிக்கிறது. இவ்விதம் அதிக மான பொருள்களை அனுபவிக்க வாழ்க்கையின் நிலைமை உயர்த்தப்படுகிறது. உண்டாக்காமல் அனுபவிப்பது என்பது ஏற்படுகிறது. அவ்வித வாழ்க்கை சீக்கிரம் நாச மடைகிறது. அவ்வித வாழ்க்கையானது உண்மையான

சக்தியைக் கொடுக்கும் எலும்பை வளர்க்காமல், வெறும் சதையை மாத்திரமே வளர்த்து, தன்னுடைய செய்கையின் பயனாகத்தானே நிற்க இயலாமல் வீழ்கிறது. கவர்ந்து வாழும் வாழ்க்கையினால் ஜனங்கள் விருத்தி அடைவதில்லை. அது ஜனங்களின் சக்தியைக் குறைத்துவிடுகிறது. தனது தேவையைத் தானே உற்பத்தி செய்துகொள்ளத் திறமை பெற்ற தேசமே நீடித்து வாழும் சக்தியைப் பெறும். தேவைக்கும் உற்பத்திக்கும் ஏற்றத் தாழ்வு இல்லாமலிருந்து, உற்பத்தியினால் தேவை திருப்தியடைந்தால், அத்தேசத்தின் பண்பு விருத்தியடைகிறது. இந்தியா, சைனா, எகிப்து ஆகிய மூன்று தேசங்களிலும் அத்தேசத்தினரின் உழுதுவாழும் காலத்திலேயே அவர்களின் திறமையும் பண்பும் அதிகரித்திருந்தது. மேல்நாட்டில் ஆலைத்தொழில் மிக விருத்தியடைந்த காலத்தில நிலையற்றதான ஒரு பண்பு விக்டோரியாவின் காலத்தில் ஏற்பட்டது. ஆனால் உற்பத்தியானது தேவைக்கு மேற்பட்டதாய் வெகு சீக்கிரம் ஏற்படவே அதிக உற்பத்தி என்பது உலகத்தையே கஷ்டத்திலும் அநாகரீகத்திலும் அழுத்திவிட்டது. அந்த அநாகரீகத்தின் பயனை நாம் இன்னும் அனுபவிக்கிறோம். முன் காலத்தைவிட நமக்கு அதிகம் தெரியும், நாம் விஞ்ஞான விஷயத்தில் அதிக முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்று சிலர் பெருமை சொல்லலாம். ஆனால் இவ்வித அறிவு உண்மைப் பண்பாகா. உண்மைப் பண்பு ஏற்பட வாழ்க்கையில் சாவகாசம் வேண்டும். இக்காலத்திய கசக்கி அழுத்தும் வாழ்க்கையில் எவருக்கும் சாவகாசம் என்பது இல்லை. நாம் கூடியவரை நமது உற்பத்தியையும் தேவையையும் சரிசெய்துகொள்ள வேண்டும். அதிக உற்பத்தியைச் செய்துவிட்டுப் பிறகு தேவையை விருத்திசெய்துகொண்டு சமத்வம் ஏற்படுத்த முயற்சிப்பதனால் இயற்கையான சமத்வம் ஏற்படாது. அது செயற்கை சமத்வமேயாகும். இவ்விதம் செயற்கை சமத்வம் இருக்கும்வரை நாட்டில் இம்சையும் இருக்கும். நமது நிலைமையும் பண்பும் அஸ்திவாரப் பலம் இல்லாத கட்டிடத்தில் நிற்பதற்கொப்பாகும். எந்த நிமிஷமும் கீழேவிழ நேரிடலாம்.



நாம் செயற்கையாகப் பொய்த் தேவைகளை உண்டாக்கிக்கொள்வதைத் தடுத்தேயாக வேண்டும். இவ்விதம் தடுப்பது ஏகாதிபத்தியத்திற்கு இடம் கொடுக்காமல் அதை அடியோடு ஓட்டும். தேசத்து மக்கள் பிற தேசத்தினர் போதிக்கும் "நாகரீக"த்தைப் பின்பற்றாமல் தமது நாகரீகத்தைத் தாமே இயற்றிக்கொள்ள வேண்டும். பேராசைகொண்டு உற்பத்திசெய்வதும் லாபத்தையே கருதி உற்பத்திசெய்வதும் தடுக்கப்பட வேண்டும். "அநாகரீகமான"வர்களை "நாகரீகப்"படுத்த முயலாமலேயே பொருள்களை விற்கவேண்டும். ஒவ்வொருவனுடைய உற்பத்தியும் அவனுடைய சக்திக்குத் தகுந்ததாய், பலவீனமானவரை ஏமாற்றிச் சுரண்டாத விதத்தில் இருக்கவேண்டும். முதலாளித்வத்தில் லாபம் என்பது எவ்விதத்திலும் கட்டுப்படுத்தப்படாமலிருக்கிறது. தீர்க்க திருஷ்டியில்லாமல் அப்பொழுதே கிடைக்கக்கூடிய லாபத்தை உத்தேசித்து பொருள்கள் செய்யப்பட்டு, சிலர் கையில் செல்வம் சேர சாதகமாக இருக்கிறது. இதனால் அவசியமான பொருள்களின் உற்பத்தி குறைந்து, அநாவசியமான சுகபோகப் பொருள்கள் அதிகரித்து செல்வம் ஜனங்களிடை தாறுமாறாகப் பரவியிருப்பதற்குக் காரணமாகிறது. ஜனத்திரள் ஏழ்மைத்தனமடைந்து எந்திரத்திற்கு பலியாகின்றனர். இவ்வித நிலைமை முதலாளிக்கும் தொழிலாளிக்கும் ஜாதித் துவேவுத்தை உண்டாக்கியிருக்கிறது.

ஸோவியத் பொதுவுடைமை ஆக்கத்தில் லாபம் என்பது தடுக்கப்பட்டாலும், ஜாதித் துவேஷம் அதிகரித்து இருக்கிறது. அதிகாரம் சிலர் கையில் சேருகிறது. முதலாளித்வத்தில் செல்வம் சேர்ந்திருப்பதைவிட, இவ்விதம் அதிகாரம் சேர்ந்திருப்பது இன்னும் அதிகத் தீங்கை இழைக்கிறது. தொழிலாளிகளிடை சுயமுயற்சியே இல்லாமல் போய்விடுகிறது. சுயமுயற்சி இல்லாவிட்டால் பண்பு ஏற்படாது. மனிதனை ஒரு எந்திர மனிதனாகவாகிலும், ஒரே திட்ட குணமுள்ள மனிதனாகவாகிலும், ஆத்மா அற்றவனாக நாம் வளர்க்க முயலக்கூடாது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டகுணங்கள் எவ்வளவு இருப்பினும்

எவ்விதம் இருப்பினும், அவனை ஆத்ம முயற்சி உடையவனாகவே இருக்கச் செய்யவேண்டும். ஆத்மாவை அழித்துவிட்டு, அல்லது வகுப்புத் துவேஷத்தை உண்டாக்கிவிட்டுப் பிறகு தேக சௌக்யங்களை அதிகம் ஏற்படுத்திக் கொடுப்பதனால் எவ்வித நலனும் கிடைக்காது. பொதுவுடைமையின்கீழ் இவ்வித நிலைமையே இருக்கிறது.

தேவையை யோசியாமல் உற்பத்தி செய்வதனால் பல சிக்கலான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதிகமாகிவிட்டிருக்கும் உற்பத்தியை விற்பதற்கு மார்க்கெட்டுகள் தேடிக்கொண்டு போட்டி வெகு மும்முரமாக நடக்கிறது. வாங்குபவர்களை அதிகரிக்கச்செய்யும் நோக்கத்துடன் அநாகரீகமானவர்களைப் பிடித்துப் பழக்கி நாகரீகமானவர்களாகச் செய்வதுடன் அது நிற்பதில்லை. ஆலைத் தொழில் தேசங்கள் இவ்விதம் நாகரீகமாகப் பிறரைச் செய்வதுடன், தங்களுக்குள் அவ்விதம் நாகரீகப்படுத்தும் உரிமையைப்பற்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளுகிறார்கள். இவர்கள் நாகரீகப்படுத்த முயலும் அந்த அநாகரீக ஜாதியினரோ "நீங்கள் எவரும் வந்து எங்களை நாகரீகப்படுத்த வேண்டாம்" என்று எதிர்த்துச் சண்டையிடுகின்றனர். இதனால் மேன்மேலும் ஆயுத விருத்தியும் சேனை விருத்தியும் ஏற்படுகிறது. இவ்வித ஆயுதங்களைச் செய்யும் தொழிற்சாலைகள் மேன்மேலும் விருத்தியடைகின்றன. இந்தக் குழப்பத்தில் உண்மைப் பண்பிற்கு இடமில்லை. சக்தி முழுவதும் இம்சையைச் செய்வதிலோ இம்சையைத் தடுத்துக்கொள்வதிலோ செலவழிந்து விடுகிறது.

இவ்விதம் தற்கால அமைப்புகளின் மையத்து ஆணி இம்சை. அஸ்திவாரம் இம்சை. அத்துடன் நிற்பதில்லை. இந்த நிலைமையினால் லாபமடைந்து சுகமனுபவிப்பவர்கள் சாதாரண ஜனத்திரளல்ல; மேம்பட்ட சில வகுப்பினரே எத்தேசத்திலும் ஜனத்திரளிடம் துவேஷமும் இம்சையும் இயற்கையாக ஏற்படாது. அவர்கள் பிற தேசத்தை ஆக்ரமிக்க வலுவில் போகமாட்டார்கள். அவர்களை வலு



வில் போகச் செய்வதற்காகத் தவறான போதனை முறைகளினால் இம்சையைப் பெரிய கீர்த்தி என்று காண்பித்தாக வேண்டியதாகிறது. இம்சையைச் செய்வோரைப் பெரிய மகான்களாகக் கருதியாகவேண்டியிருக்கிறது. பட்டாளத்தின் தலைவரும், கப்பற்படை அதிகாரியும், ராணுவ உத்தியோகஸ்தரும் மிக மேலானவர்கள் எனப் பாவிக்கப்பட்டு, ஜனங்களுக்கு அவர்களிடம் பக்தி ஏற்படும்படி போதிக்கப்படுகிறது. இவ்விதமானவர்கள் இறந்தபின், அவர்களைப் பற்றின ஞாபகார்த்த சின்னங்கள் மாதாகோயில் முதலிய பிரார்த்தனை ஸ்தலங்களில் கட்டப்பட்டு அவர்களையும் புண்யாத்மாக்களுடன் சமத்வப்படுத்தி அவர்களுக்கென்று சிலைகள் செய்து பொதுஜனங்கள் கூடுமிடங்களில் வைக்கப்படுகின்றன.

பட்டாளத்துச் சிப்பாய்களைக் கூலிக் கொலைஞரென்றும், ராணுவத் தலைவர்களைக் கொடும் கொலைஞரென்றும், நாம் பாவிக்கலாம். இங்கிலாந்தில் ஸெண்ட்பால் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் ஆபிக்கு நாம் சென்றோமானால் இவ்விதம் கொடுங் கொலைஞரின் நிரந்தரக் கீர்த்திக்கென்று கட்டப்பட்ட ம்ருதிகளை அங்கே காணலாம். ஒரு பிரார்த்தனை ஸ்தலத்தைக் கொலைஞர் கூடுமிடமாக இங்கிலாந்தில் செய்யப்பட்டிருக்கிறது. அனேக சண்டைகளில் பட்டாளத்திற்கு முன்பாக பிடித்துச் சென்று கிழிந்த கொடிகள் அங்கே கௌரவ ஸ்தானத்தைப் பெற்றிருப்பதைப் பார்க்கும் சமயம் நமது மனதில் இரண்டாயிர வருஷங்களுக்கு முன் கூறின "இம்மனிதரை எடுத்துச் செல்லுங்கள். பாராபஸ்ஸை விடுவியுங்கள்" என்று சொல்லப்பட்ட வார்த்தைகள் ஞாபகம் வருகின்றன.

இவ்வித "நாகரீகங்களே" ஐரோப்பாவில் இச்சமயம் அணிவகுத்துநின்று ஒன்றைப்பார்த்து ஒன்று சீரிக்கொண்டிருக்கிறது. இவ்விதம் பலத்தை மேன்மைப்படுத்துவதால் என்ன கிடைக்கப் போகிறது? உலகத்தில் ஜனநாயகம் ஸ்திரப்படப்போகிறதா, அல்லது "போரைத் தீர்க்கும் போர்" என்பதா? தீமைகளை அகற்றுவதற்கென்று தீய முறைகளைப் பின்பற்றக் கூடாது.

இந்தத் தாழ்வும் ஆத்ம விழ்ச்சியும் ஏன்? மூலப் பொருள்களைப் பெறவும் விற்பனைக்கு மார்க்கெட்டுகள் பெறவுமே என்பதா?

**இம்சையின் விலை:**

மிருகங்களிலிருந்து மனிதன் வித்யாசப்படுவது அவனுடைய சிருஷ்டி சக்தியில்தான். ஆகையால் மனிதன் மேன்மேலும் சிருஷ்டிப்பதில் அவனுடைய முன்னேற்றம் விளங்கும். தற்கால போர்களோ அழிப்பதில் போட்டியாக இருக்கிறது. ஒரு நிலைப்பட்ட உற்பத்தியினாலும், ஒரேவித உற்பத்தியினாலும் நாம் சீக்கிரத்தில் மனித சமூகத்தையே அழித்துவிடக்கூடிய நிலையை அடைந்து வருகிறோம். ஒருவருக்கொருவர் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் மனிதர் முனைவதைவிட்டு சத்ருவின் பண்டங்களை மாத்திரமல்ல, தமது பண்டங்களையும் நாசம் செய்வதில் மனிதர் ஈடுபட்டிருக்கின்றனர். எதிரி வந்து பயனடைவானே என்ற பயத்தில் ஊரைவிட்டு ஓடும்போது களஞ்சியங்களை அழித்துவிட்டுப் போகின்றனர் மனிதர்.

சாதாரணத் தினங்களில் ஒரு கோடி ரூபாயை நாம் மிகப் பெரிய தொகையாக எண்ணுவோம். "பிரின்ஸ் ஆப் வேல்ஸ்" போன்ற சண்டைக் கப்பல்கள் கட்டுவதற்கு பதினைந்து கோடி ரூபாய்கள் வேண்டியிருக்கின்றன. பதினைந்து நிமிஷத்திற்குள் அவ்விதக் கப்பல் தண்ணீரில் மூழ்கடிக்கப்படுகிறது. வருஷம் முழுவதுமாக சர்க்கார் இரண்டு கோடி ரூபாய் படிப்பிற்கென்று செலவழிப்பதில்லை—ஒருசண்டைக் கப்பலின் செலவு கல்விக்கு இல்லை. தண்ணீரில் மூழ்கிச் செல்லும் கப்பலாகிய ஒரு சப்மெரின் விலை ஐம்பது லக்ஷம் ஆகும். இதில் பாதி அளவுகூட இல்லாத தொகையை மூலதனமாக வைத்துக்கொண்டு அகில பாரத சர்க்கா சங்கம் எத்தனையோ வருஷங்களாய் பதிமூன்றுயிரம் கிராமங்களில் மூன்று லக்ஷத்திற்கு மேற்பட்டவருக்கு ஜீவனத் தொழில் ஏற்படுத்தி அவர்களிடையே பதினைந்து லக்ஷம் ரூபாய் சம்பளமாகக் கொடுத்திருக்கின்றனர். ஒரு சண்டைக் கப்பலில் ஒரே ஒரு 16 இஞ்சு பீரங்கியின் விலை



ஆறு லக்ஷம் ஆகும். சர்க்கார் ஒரு வருஷத்தில் இந்தியா முழுவதும் செய்திருக்கும் பஞ்ச நிவாரண உதவியின் செலவை அவ்வித இரண்டு மூன்று பீரங்கிகளின் விலையில் சரிக்கட்டிக்கொள்ளலாம். அகில பாரத கிராமத் தொழில் சங்கத்தின் மத்ய காரியாலயத்தின் ஒரு வருஷத்திய செலவை அவ்வித பீரங்கிகளின் இரண்டு மூன்று குண்டுகளின் விலையைக்கொண்டு செய்யலாம். பத்து விமானக் கப்பல்கள் சுட்டுக் கீழ் வீழ்த்தப்பட்டன என்று படிக்கும் சமயம், அந்த நஷ்டம் அகில பாரத சர்க்கா சங்கத்தின் மூலத் தொகை முழுவதும் நஷ்டமாவதற்கு ஈடாகும் என்று நாம் உணர வேண்டும். இங்கிலாந்தில் இந்த யுத்தத்திற்கென்று ஒரு தினம் செலவு செய்யப்படும் தொகை அளவு இந்தியாவின் மாகாண சாக்கார், மத்ய சர்க்கார் ஆகிய எல்லாரும் சேர்ந்து சென்ற பதினைந்து வருஷங்களாய் இந்தியத் தொழில் விருத்திக்கு என்று செலவழிக்கவில்லை. இந்தியாவின் ஏழை மக்கள் இவ்விதம் அடிக்கடி போரின்மூலம் நிலைப்படுத்திக்கொள்ள அவசியமிருக்கும் பொருளாக்க முயற்சியைக் கையாள அவர்களால் இயலுமா? அந்தச் செலவு அவர்களால் இயலுமா?

---

# மூன்றும் பாகம்

## விடை

---

## அத்யாயம் 11

### தொழில்படுத்துவது

முன் காலத்தில் வியவசாயத்திற்குத் துணையாகப் பல விதக் கைத்தொழில்கள் இருந்தன. தொழிலாளிக்குக் கூலியாக விளைபொருள்களே கொடுக்கப்பட்டன. உண்மையில் அச்சமயம் இருந்த கைத்தொழில் குடியானவர்களுக்கு வேண்டிய கலப்பை முதலிய ஆயுதங்களைச் செய்து கொடுப்பவையும், வாழ்க்கைக்கு முக்கியமான மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்பவையுமே.

நாகரீகம் வளரவே, மனிதரின் தேவையில் எண்ணிக்கை, வகை, குணம் ஆகிய மூன்று விதத்திலும் விருத்தி ஏற்பட்டது. சமீப காலம் வரை இந்தியாவில் இந்தத் தேவைகளைத் திருப்திசெய்யும் கைத்தொழிலாளிகள் நகரங்களுக்கு அருகில் தமது தொழில்களைச் செய்து வந்தனர். அத்தொழிலாளிகளுக்குத் தமது சாமான்ய ஆயுதங்களைத் தவிர வேறு தொழிலிற்கென்று முதல் போடவேண்டிய அவசியமில்லை. இந்த ஆயுதங்களைக் கூட அவர்கள் அநேகமாய்த் தாமே செய்துகொண்டனர். உற்பத்தி செய்யப்பட்ட பொருளை எவ்விதம் விற்பது என்ற கேள்வி அக்காலத்தில் எழுந்தது கிடையாது. மிகச் சொல்பமே லாபமிருந்தபடியால் வியாபாரமூலமாக அதிக திரவியம் சேர்ப்பது கஷ்டம். பலவிதத் தொழில்கள் இருந்ததுடன் ஜாதிக் கட்டுப்பாட்டினால் ஒரு இனத்தினரே ஒரு விதத் தொழிலைச் செய்வது என்றும் இருந்தபடியால் வியவசாயத்தில் அதிகப் போட்டி ஏற்படவில்லை.

### இந்தியாவின் சீர்குலைவு:

மேல் நாடுகளில் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படவே, இதெல்லாம் மாறிற்று. மேல்நாட்டுப் பொருள்களை விற்பதற்கு மார்க்கெட்டாக இத்தேசம் கையாளப்பட்டு, அவர்களுடைய தேசத்தின் தொழில்களின் முன்னேற்றத்திற்குச் சாதகமாக்கிக்கொள்ளப்பட்டது. உதாரணமாக இந்தியாவில் வயல் பாச்சலுக்கும் போக்குவரவிற்கும் கால்வாய்களின் தேவையே அதிகமாக இருக்க, அவைகள் வெட்டப்படாமல், அச்சமயம் இங்கிலாந்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இரும்புத் தொழிலின் முன்னேற்றத்திற்காகவும் ராஜதந்திர வசதிக்காகவும் இந்தியாவில் அதிக ரயில் பாதைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் காரணத்தினாலும், இதற்கு உடந்தையாகவும் சகாயமாகவும் இருந்த வேறு சில காரணங்களினாலும் வியவசாயத்திற்குக் கூட்டாக இந்தியாவில் இருந்த தொழில்கள் மறைந்து வருகின்றன. அத்தொழில்களைச் செய்துவந்தவர்களும் வியவசாயத்தில் பிரவேசிக்கலானார்கள். அதனால் வியவசா-



யத்தில் பாரம் ஏற்பட்டிருக்கிறது. வியவசாயத்தில் தற்காலம் இருக்கும் போட்டியைக் குறைக்கவேண்டுமென்றால் வியவசாயிகளில் சிலரை இதர தொழில்களில் பிரவேசிக்கச் செய்யவேண்டும். இவ்விதம் நாட்டின் கைத்தொழில்கள் அழிந்ததுடன், மெக்காலே என்பவர் ஏற்படுத்தின ஆங்கிலப் படிப்பு முறையினால், கிராமத்தில் அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கும், கிராமத் தொழில்களின் விருத்திக்கும் காரணமாக இருக்கக்கூடிய சாமர்த்தியம், புத்தி, முயற்சி ஆகிய குணங்களை யுடையவர்களை எல்லாம் ஆங்கிலப் படிப்பு என்ற ஆசை நகரங்களுக்கு இழுத்துவிட்டது. கிராமத்து மட்டியே கிராமத்திலிருந்துகொண்டு கிராமத்தின் பழைய வேலையைப் பழைய முறையில் செய்துகொண்டிருப்பவனானான்.

முதலாளித்வத்தின் பழக்கத்தினால், இத்தேசத்து ஜனங்களும் பணமே முக்கியமென்று நினைக்க ஆரம்பித்து விட்டனர். முதலாளித்வத்திற்கு அடிப்படையானது லாபம் பெறும் விருப்பமாகையால் அவர்கள் தமது வாழ்க்கையைச் சேர்ந்த எல்லா விஷயத்தையும் பணத்தைக்கொண்டு மதிப்பிட முயலுவது இயற்கை. நமது புராதன அமைப்புகளில் வேறுவிதமான மதிப்புத் திட்டம் இருந்தது கோடீச்வரனும் அரசர்களும் ஒரு யோகியின் காலடியில் விழுவார்கள். எல்லா வருணத்திற்கும் மேலானவர் பிராமணர், வைசியரல்ல. க்ஷத்ரியனும் கல்விமானை மதித்தான் சாதாரணமாய் ஒரு பொருளை வாங்கும் சமயம் அதன் விலையைக்கொண்டே நாம் அதை வாங்குவதில்லையல்லவா? அதன் உபயோகம், நீடித்து உழைக்கும் சக்தி, அழகு ஆகிய எல்லாவற்றையும் சேர்த்தே மதிப்பிடுகிறோமல்லவா? பணத்திற்கு மேம்பட்டதான மதிப்புத் திட்டங்கள் இருக்கின்றன. இந்தியாவில் எவனொருவன் தனது உடன் பிறந்தவனைப் பட்டினிகிடக்கவிட்டு, அவ்விதம் தான் செய்ததால் சேர்ந்த தனத்தைக்கொண்டு தனக்குப் பட்டாடைகள் வாங்கிக்கொள்வான். இவனுடைய செய்கைக்கு மதிப்புத் திட்டம் பணத்தினால் ஏற்பட்டதல்ல; அன்பும் கடமையுமே திட்டத்தை விதிக்கின்றன. இவ்விதம் நமது

முன்னோர்கள் இங்கு சில மதிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர். அவைகளை மறுபடி நமது நாட்டில் திட்டத்திற்கு கொண்டுவருவது முடியாத காரியமல்ல.

கிராமத்து வாழ்க்கையைச் சீர்திருத்த வேண்டுமென்றால் உயர்ந்த இலக்ஷியங்களுக்குள்ளவர்களும், அதே சமயம் திறமையும் கற்பனாசக்தியும் பெற்றவர்களுமான மனிதர் கிராமத்தில் வசித்து, கிராம்ய ப்ரச்னைகளைச் சரிவரத் தீர்த்து, தற்கால விஞ்ஞான முறைகளையும் கையாண்டு புதுத் தொழில் முறைகளை இயற்றுவது அவசியம். இக்காலம் நமது சமூகம் இருக்கும் நிலைமையில் இவ்விதம் ஏற்பட இயலாது. நம்மிடம் பல மாறுதல்கள் அவசியம். வெறும் சட்டங்களைக்கொண்டு உண்டாக்கும் மாறுதல்களினால் சிறிது காலத்திற்கு பயனேற்படலாம், ஆனால் மனிதரின் மனதிலேயே மாறுதல் ஏற்படக்கூடிய அமைப்புகளை இயற்றாவிடில் இவ்வித வெளி உதவியினால் ஏற்படும் மாறுதல் நீடித்திராது. மேல்நாட்டிலிருப்பவை போன்ற எந்திரங்களை சிறிய அளவில் இங்கே கொண்டுவந்து வைத்தால்மாத்திரம் காரியம் கைகூடாது. பல தொழில்களில் அம்முறையைப் பரீக்ஷித்தாகிவிட்டது. அதனால் ஏதுவித லாபமும் ஏற்படவில்லை. உதாரணமாக, கைத்தறியைவிட்டு எந்திரத் தறியில் ஆடை நெய்யத் தொடங்கினால் உடன்பட்டதாக வேறு பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஓர் எந்திரத் தறியானது கைத்தறியைவிட நான்கு மடங்கு சக்திபெற்றது என்று வைத்துக் கொள்வோம். கைத்தறிக்காரன் ஒரு வருஷத்தில் சுமார் 120 புடவைகளை நெய்வான், அவைகள் கலியாண காலத்தில் விற்றுப்போகும் என்று வைத்துக்கொள்வோம். கைத்தறியின் விலை ரூ. 75 இருக்கும். புடவை ஒன்றின் விலை ரூ. 4 என்றால், அவன் ரூ. 300 வைத்துக்கொண்டு நடத்த இயலும். எந்திரத் தறியைக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்தால் அவன் ஒரு வருஷத்தில் 600 புடவைகள் நெய்துவிடுவான். அதற்கேற்றாப்போல் மார்க்கெட்டு விரிவதில்லை. ஏனென்றால் வருஷத்தில் ஒரு முறையே கலியாண காலம் வருகிறது. இவனுக்காக நான்கு ஏற்படாது. ஆகையால் இவனுடைய கையில் சரக்கு அதிகம் தங்குமாதலால், இவன் ஆடைகளை நெய்வதற்கு மாத்திரமே ரூ. 2400 வேண்டும். அதற்குமேல் எந்திரத்தின் விலை சுமார் ரூ. 800 ஆகும். முன்பு ரூ. 300ல் செய்யக்கூடிய தொழிலிற்கு இப்பொழுது ரூ. 3000 மூலதனம் வேண்டும். அவ்வித முதல் வைத்தாலும் கலியாண காலம்வரை அது கட்டுப்பட்டே இருக்கும். இவ்வித நிலைமையினால் போட்டியிட்டு விற்க வேண்டியதாகிறது. தனது முதலை மீட்கவும் மார்க்கெட்டைப் பிடித்துக்கொள்ளவும் நிர்பந்தமாக முன்னாடி விற்க வேண்டியதாகிறது. சாதாரணமாய் கைத்தறிக்காரனிடம் அவ்வித முதல் வசத்திலிருப்பதில்லை. கடன்காரன் வசப்படுகிறான். அல்லது அடியோடு தொழிலை விட்டுவிட்டு நீங்கி விடுகிறான். மேலும் நான்கு பங்கு உற்பத்திசெய்து, விற்று வியாபாரம் செய்ய அவனுடைய திறமை, கல்வி, எல்லாமும் நான்கு பங்கு அதிகமாக இருக்கவேண்டும். மேல் நாட்டில் தனித்தனி நலத்தையே கருதும் குணமுள்ளவர்களும் பொருளாக்கத்திற்கென்று ஒன்று கூடி ஒத்து உழைக்கிறார்கள். அவ்விதக் கூட்டு முறையில் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டுமென்பது அவர்களுக்குத் தெரியும். நமது நாட்டில் அவ்விதம் கூடுவது வழக்கமில்லை. நாம் கூடும் முறை நம்மை நிலைப்படுத்திக்கொள்வதற்கும், பலவீனமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவுமே ஏற்பட்டது. ஆகையால் மேல்நாட்டுப் பொருளாக்க முறையில் கூடுவதுபோல் இங்கே மனிதரைக் கூடும்படிச் செய்தால் அக்காரியம் சரிப்பட்டு நடந்தேறுவதில்லை. அவர்களுடைய குணம் வேறு, நம்மவர்களின் குணம் வேறு.



மேற்கூறிய உதாரணத்தில் இருக்கும் நிலைமை மேன்மேலும் வளர்ந்தால் கைத்தறிக்காரனின் தொழிலும் ஒரு தறி எந்திரம் வைத்திருப்பவனின் தொழிலும் அழிந்துவிடும். பல எந்திரங்கள் வேலைசெய்யும் பெரிய ஆலைத் தொழிலே முதலாளித்வத்தின் கீழ் அமையும். தனி நெசவுக்காரர்கள், நாளடைவில் முதலாளியின் கீழ் தாம் தொழிலாளிகளாகக் கூலிக்கு உழைத்து ஜீவிக்க வேண்டிவரும். இதன் பயனாக மேல் நாட்டின் தொழில் முறையின் தீங்கு

களெல்லாம் இங்கும் ஏற்பட்டு சண்டையிலும் இம்சையிலும் முடியும்.

**உற்பத்தியும் விற்பனையும் :**

மேலும் முதலாளி ஆக்கத்தில் பெரிய எந்திரங்களை வைத்துத் தொழில் செய்வதனால் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதில்லை. நூற்றுக்கணக்கான வருஷமாய் ஆலைத்தொழில் செய்யும் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய தேசங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் மற்ற தேசங்களைவிட அதிகமாகவே இருக்கிறது. விஸ்தீர்ணப் பிரதேசம், விசால நதிகள், உயர்ந்த மலைகள் முதலியவைகளைக் கொண்டதும் வேலைக்கு மனிதர் அகப்படுவது துர்லபமுமாக இருந்த அமெரிக்க தேசத்தில் அத்தடைகளை வெல்ல எந்திரங்கள் அவசியமாக இருந்தன. உழைப்பிற்குப் போதுமான மனிதர் அகப்படாத குறையை எந்திரங்களின் உதவியைக்கொண்டு அத்தேசத்தினர் நிவர்த்திக்க முயன்றனர். ஆனால் நமது தேசத்திலும் மற்றும் ஜனத்தொகை நிறைந்த தேசங்களிலும் மனிதர் உழைத்தாலே செல்வம் எல்லாரிடமும் பரவிவரும். ஒருவன் தன்னுடைய உதவிக்கென்று பெரிய எந்திரத்தை வைத்துக்கொண்டால் பிறருக்கு உதவியளிக்காதவனாகிவிடுகிறான். சுயநலத்தைத் தேடுகிறவனாகிறான். உழைப்பே செல்வத்தை எல்லாரிடமும் பரவியிருக்கச் செய்யும் கருவி என்றால் பிறருக்கு உழைக்க வசதி கொடுக்கவேண்டும். ஆனால் அவ்விதம் செய்ய மேல் நாட்டில் முதலாளியின் லாபத்திற்கென்றே தயாரிக்கப்பட்டு தொழிலாளிகளை அலக்ஷியம் செய்யும் எந்திரங்கள் நமக்கு ஏற்றதாகா. எந்திரங்களே கூடாதென்று நாம் சொல்லவில்லை. ஆனால் மேல் நாட்டு எந்திரங்கள் செல்வத்தைச் சிலர் கையில் சேர்க்கின்றன, செல்வம் பரவி வருமாறு செய்வதில்லை. நமக்குத் தேவையான எந்திரம் சாமான்யப்பட்டதாய் இந்தியாவின் தொழிலாளியின் சக்திக்குட்பட்ட விலையுள்ளதாய், அவனுடைய உழைப்பைக் குறைத்துத் திறமையை விருத்தி செய்வதாய், அதே சமயம் அதிகலாபம்பெற இடமளிக்காமலிருப்பதாக இருக்க வேண்டும்.



தேசத்தில் அதிக உற்பத்தியாளர்கள் இருக்க இருக்க செல்வம் இன்னும் சமமாகப் பரவியிருக்கும். ஏனெனில் உற்பத்தி செய்வதுதான் செல்வத்தைப் பரவச் செய்யச் சிறந்த மார்க்கம். எந்தத் தேசத்திலும் தேசத்து ஜனங்களெல்லாருமே கோடீச்வரர்களாகிவிட இயலாது. நமது நாட்டு தனம் நம்மெல்லோரிடமும் சமமாகப் பரவினதாக இருக்கவேண்டுமென்றால் எல்லாரும் உழைத்து உற்பத்தி செய்வதற்குச் சாதகமான கருவிகள் எல்லாரும் பெறக் கூடியவைகளாய் இருக்கவேண்டும். இதற்கு ஏற்ற தொழிலை ஏற்படுத்தும் சமயம் நமது நோக்கம் லக்ஷாதிபதிகளை சிருஷ்டிக்க வேண்டுமென்பதல்ல; எல்லோருக்கும் உண்ண உணவும் உடுக்க வஸ்திரமும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதே. எந்திரத்தை உபயோகிக்க நமக்கு எவ்வித ஆக்ஷேபணையும் கிடையாது. ஆனால் செல்வத்தைச் சிலர் கையில் திரட்டிக் கொடுக்கக் காரணமாக இருக்கும் எந்திரத்தை நாம் அங்கீகரிக்க இயலாது.

**இம்சையற்ற எந்திரங்கள் :**

உயிரற்ற பொருள்களில் நல்லது கெட்டது என்பது இல்லை. அவைகளை மனிதர் உபயோகிக்கும் வகையில்தான் இந்தக் குணங்கள் ஏற்படுகின்றன. ஒரு பண்டத்தை நாம் பிறர் நலத்திற்கென்று உபயோகித்தால் அது நல்ல பண்டமாகிறது. ஒருவன் தலையைச் சீவ உபயோகித்தால் அந்த அரிவாள் இம்சை வஸ்து. இளநீரைச் சீவ உபயோகித்தால் அது அஹிம்சை வஸ்துவாகிறது. எந்திரங்கள் நமக்குக் கீழ்பட்டும் இருக்கும், நமக்கு அடங்காமலும் போகும். பிறரின் உழைப்பை பயன்படுத்திக்கொள்வதற்கென்று உபயோகித்தால் அவைகள் நமக்கு அடங்காமல் போய்விடுகின்றன. சாதாரணமாக விஷத்தைப் புசிக்கக் கூடாதென்று நாம் சொல்லுகிறோம். ஆனால் சில சமயம் விஷத்தையும் மருந்தாக உட்கொள்ள வேண்டியிருக்கிறது. அதேவிதம் சில கட்டுப்பாடுகளுடனும், நமது கைக்கு உட்பட்டதாகவும் வைத்துக்கொண்டு சிற்சில சமயம் எந்திரங்களை நமக்குத் துணையாக உபயோகிக்கலாம். சர்க்கா ஒரு

எந்திரமே. ஆனால் நூல் நூற்கும் ஆலைகளைப்போல் அது பிறர்தொழிலை பறிமுதல் செய்வதில்லை. எந்திரங்கள் இல்லாமலேயே தொழில் பறிமுதல் நடக்கக்கூடும். "பீடி" செய்வதில் எந்திரம் வேண்டியதில்லை. ஆனால் அது ஒரு பறிமுதல் தொழிலே ஆகும். ஆகையால் எந்திரமா, அல்லது எந்திரம் இல்லாமலிருப்பதா என்பது முக்கிய பிரச்னை அல்ல. நமது தேவையை எப்படி திருப்திசெய்வது அதேசமயம் நமது ஜனங்களுக்கு வேலை எவ்விதம் கொடுப்பது என்பதே முக்கிய பிரச்னை. பிற தேசங்களில் எவ்விதம் இருப்பினும் வேலையில்லாமலும், அரைக்கூலி வேலைகளே இருப்பதுமான இந்தியாவில் வேலையைக் குறைக்கும் எந்திரங்கள் சாபவஸ்துக்களே. கையால் செய்ய இயலாததை செய்வதும், தொழிலாளியை அப்புறப்படுத்தாமல் வேலை செய்வதுமான எந்திரங்களே இங்கே உபயோகிக்கலாம்.

பலாத்காரமும் இம்சையும் சேர்ந்து எந்திரத்தை பிறரைப்பறிமுதல் செய்யவும், அடிமைப்படுத்தவும், அழிக்கவும் கொலை செய்யவுமே உபயோகித்திருக்கிறது. ஆனால் அஹிம்ஸை முறை எந்திரத்தை மனிதரின் முன்னேற்றத்திற்கும் க்ஷேமத்திற்கும் உபயோகிக்கும். வெடிமருந்துகளை மேல்நாட்டு முறையில் எதற்கு உபயோகிக்கிறார்களென்று நமக்குத் தெரியும் — அபாரக்கொலை செய்யவும் பண்டங்களை அழிக்கவும். அவ்வித விஷயங்களுக்கு வெடிமருந்து மிகக் கெடுதல். ஆனால் அதே வெடிமருந்தை மனிதரின் நலத்திற்கும் உபயோகிக்கலாம். அஹிம்ஸை முறையில் அவைகளைக்கொண்டு பாறைகளைப் பெயர்த்து, குகைகள் வெட்டி, கிணறுகள் தோண்டி, சுரங்கங்கள் ஏற்படுத்தி, உலோகங்கள் எடுத்து, இன்னும் பலவகையில் உபயோகிக்கலாம். விளையாட்டிற்கென்று மத்தாப்பு, பட்டாசுகள் கூடச் செய்து கொள்ளலாம். ஆகையால் வெடிமருந்தை கெட்ட வஸ்து என்று நாம் சொல்ல இயலாது. தற்காலம் எந்திரங்கள் சண்டையில் எதிரியை அழிப்பதற்கே உபயோகப்படுகின்றன. அதே சக்தியை நாம் அஹிம்ஸை முறையில் நல்ல விஷயத்திற்கு பயன்படுத்திக்கொள்ளலாம்.



சென்ற பிப்ரவரியில் அகில கிராமத் தொழில் சங்கம் காகிதப் பல்ப்பு செய்வதற்கு எந்திரம் உபயோகிப்பதென்று தீர்மானித்தது. வருஷம் தோறும் இந்தியாவில் 2½ கோடி ரூபாய் பெறுமான காகிதம், அட்டை முதலியன இறக்குமதியாகிறது. அவ்வளவும் கையினால் செய்யக்கூடும். ஆனால் சில பாகத்தை எந்திரத்தால் செய்வது நலம் ஏனெனில் அதற்கு சிரமம் அதிகம் ஆகையால் அவ்வித வேலைக்கு மாத்திரம் எந்திரத்தை உபயோகிப்பது நல்லது. அது நமது திறமையை விருத்தி செய்வதேயாகும், பறிமுதல் ஆகாது, இதனால் வேலையில்லா நிலைமை உண்டாகாது, வேலையே அதிகரிக்கும். கந்தல், மூங்கில், சணல் முதலியவற்றிலிருந்து காகிதப் பல்ப்பு செய்வதென்பது ஏற்கனவே நாட்டில் இருந்த தொழிலல்ல ஆகையால் எந்திரத்தின் மூலம் அவைகளைச் செய்வதென்பது நாட்டுத் தொழிலாளிகளின் வேலையை அபகரிக்காது.

காகிதப் பல்ப்பு செய்வதுபோல் இன்னும் கிராமத் தொழில்களில் சில எந்திரங்களின் உதவியால் அதிக விருத்தி பெறுபவையாக இருக்கலாம். மண்பாண்டங்களுக்கு மேல்பூச்சு பூசுதல் ஒரு உதாரணம். ரயில்வே, சுரங்கங்கள், கப்பல் போக்குவரத்துக்கள் முதலிய பெரிய எந்திர உதவி வேலைகளை சர்க்கார் மூலமாகவோ, கூட்டுறவு முறை மூலமாகவோ நடத்தலாம். நமது நோக்கம் மனித உழைப்பைப் பரவினதாகச் செய்து பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே. எந்திரங்களைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்பதல்ல.

ஜனநாயகம் என்பது அரசாங்கமே இல்லாமல் செய்வதல்ல, ஒரு மத்ய அரசாங்கம் இருந்து ஜனங்களின் க்ஷேமத்திற்கு உழைப்பது என்பதுபோல "கிராமத் தொழில்" என்ற இயக்கம் ஒரு நிலைப்பட்ட தொழில்களே கூடாது என்று விலக்குவதற்காக அல்ல, அவைகள் பல நிலைப்பட்டவையும், சிறு சிறு அமைப்புகளுமான தொழில்களுக்கு ஆதரவு அளிப்பவைகளாக இருக்கவேண்டும். என்பதே. கிராம இயக்கம் என்ற முறை அதன் முழு

அம்சத்தில் தேசம் முழுவதற்கும் பொருளுற்பத்தி, சமூக நன்மை, அரசியல் நன்மை ஆகிய எல்லாமும் செய்யக் கூடிய முறையே.

## உழைப்பின் நோக்கம்:

மேல்நாட்டுத் தொழிலாக்க முறையில் தொழிலாளியின் நலம் முக்கியமாகக் கருதப்படுவதில்லை. ஆனால் நாம் ஏற்படுத்தும் அமைப்பில் தொழிலாளியும் அவனுடைய குடும்பமும் சௌக்கியமாக இருக்கவேண்டுமென்பதே நமது நோக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். மேல் நாடுகளில் தொழிலாளிகள் தாமே ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அமைப்புகளில் கூட தமது சரீரத்தின் தேவைகளைப்பற்றி கவனிக்கிறார்களே தவிர, ஆத்ம தேவைகளைப் பற்றிக் கருதுவதில்லை. அதிகம் பண்டம்பாடி பெற்றிருப்பதனால் மாத்திரம் நாம் சந்தோஷித்திருப்பவர்களாக ஆகிவிடோம். "வேட்டை இன" முறையில் முதலாளி ஆக்கத்திலாகட்டும், பொதுவுடைமை ஆக்கத்திலாகட்டும், ஒருவனுடைய வேலை எவ்வளவு உணர்ச்சியற்றதாக இருப்பினும் தொழிற்சாலைக்கு வெளியில் அவன் பண்பு பெற வசதிதந்தால் இதை நிறைக்கட்டிக் கொள்ளலாமென்று எண்ணுகின்றனர். ஆனால் உண்மையான பண்பை இவ்விதம் நமது தினசரி வேலையிலிருந்து பிரித்து வைக்க இயலாது. நாம் செய்யும் வேலையினாலேயே நாம் வளருகிறோம், நமது குணங்கள் வளருகின்றன. வேலையின் மூலமே மனிதன் தனது சொந்த சக்தியைக் கண்டுகொள்ள இயலும். பிறர் சொல்வதையே தனது ஆயுள் முழுவதும் செய்யும் ஒருவன் பொறுப்பு என்ற குணத்தைக்கூடப் பெருதவனாகிறான். பொறுப்பை வகித்து முன்செல்லச் சக்தியற்றவனுக்கு ஆத்மவளர்ச்சியே இருக்காது. அவனுக்கு மனதின் பண்பு எவ்விதம் ஏற்படும்? பொருள் உறபத்தி செய்வது ஒருவனுடைய வாழ்க்கையை ரஸமுள்ளதாகச் செய்யவேண்டும். தொழிற்சாலையில் தலைமை அதிகாரத்தின்கீழ் ஒரு வேலையாளாகத் தொழில் செய்து, பொருளுற்பத்தி செய்வதானது மனிதனின் தேகத்து நரம்புகளைச் சின்னபின்ன



மாகச் செய்துவிடுகிறது. நாம் இளமையில் பள்ளியில் கல்விகற்பதைத் தொடர்ச்சியாக வாழ்க்கையில் தொழிலின் மூலம் கற்கிறோம். பள்ளியில் கல்வி, ஒழுக்கம் ஆகிய இரண்டையும் கற்பதைப்போல தொழில் மூலமும் அறிவு ஒழுக்கம் இரண்டும் நாம் விருத்திபெறவேண்டும். நமது தொழில் அவ்வித விருத்திக்குச் சாதகமாய் இருக்க வேண்டும். இது ஏற்பட்டால் இந்நாட்டின் செல்வம் மேல் நாட்டுக் கோடீச்வரர்களுடைய செல்வத்துடன் ஒப்பிடத்தக்கதாகாவிடினும், பொதுப்பட சந்தோஷமும் திருப்தியும் இங்கு அதிகமானதாக இருக்கும்; பொது ஜனங்களின் திறமையும் சீலமும் அதிகமானதாக இருக்கும். அவ்வித குணங்களுடைய ஜனங்களிடை தலைவர் பதவியை வகிக்கத் திறமையுள்ளவர்கள் அதிகம் இருப்பார்கள்.

ஒவ்வொருவரும் இவ்வளவு அளவு தொழில் செய்ய வேண்டும் என்று (ஸோவியத் முறையில் போல்) ஏற்படுத்தப்பட்ட பொருளாக்க முயற்சியில் மனிதனின் செல்வமும் சௌகரியமும் கவனிக்கப்படுகிறதே தவிர, ஆத்ம வளர்ச்சி அல்ல. மேலும் இந்த ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர பலவந்தம் அவசியமாக இருக்கிறது. அவ்வித உற்பத்தி இயற்கையானதல்ல. ஆகையால் நீடித்திருக்காது. இம்முறையில் அதிகாரம் சிலர் கையில் இருக்கிறது. அதனால் சுயமுயற்சிக்கு இடமிராமல் மனிதனின் வளர்ச்சி தடைப்பட்டு விடுகிறது. அவ்வித முறையானது நாளடைவில் பொருளினால் ஏற்படும் சௌக்கியத்தில் மனிதனுக்கும் பற்றுதலுண்டாக்கி தேக சௌக்யத்திற்கென்றே உழைக்கும் அடிமையாக அவனைச் செய்துவிடும்.

"வேட்டை இன" முறையில் தொழில் செய்யும் நேரத்தைக் குறைத்து, தொழிலாளிக்கு ஓய்வு அதிகம் கொடுத்தால் அவனால் மனதின் பண்பைச் சம்பாதித்துக் கொள்ளமுடியும் என்று சொல்லப்படுகிறது. அது இயலுமா? அமெரிக்க தொழிலாளிகள் தினமும் இரண்டு மணிநேரம் வேலை செய்து இந்தியாவிலிருக்கும் ஒரு சாதா

ரண மனிதனின் வாழ்க்கை நிலையைப் பெறமுடியமென்றால், அவர்கள் அத்துடன் திருப்தியடைந்து தமது மிகுதி நேரத்தில் பண்பு பெற முயலுவார்களோ? இது மிகச் சந்தேகமான விஷயம். அவர்கள் தமது நேரத்தை சோம்பேறித்தனத்தில் கழித்து, நாளடைவில் கேடும் நாசமுமே அடைவார்கள் எனலாம்.

**விலைக் குறைவு:**

குடிசைத் தொழில்மூலம் உற்பத்தி செய்வதனால் பண்டங்களின் விலையைக் குறைக்க இயலாதே என்று பலர் சம்சயிக்கின்றனர். உதாரணத்திற்கு சிகாகோவில் இருக்கும் மாமிசம் தயாரிக்கும் தொழில்களைக் கூறி அவ்வித பெரிய சாலைகளில் சிறிதும் நஷ்டம் ஏற்படாமல் தோல், நரம்பு, எலும்பு ஆகிய எல்லாமும் உபயோகிக்கப்பட்டு அதிக லாபம் ஏற்படுத்துவதை எடுத்துக் கூறுகிறார்கள்.

மேற்கூறிய சம்சயத்தில் மூன்று நம்பிக்கைகள் இருக்கின்றன. (1) பெரிய பெரிய தொழில்களில்தான் முக்கிய பண்டம் தவிர இதர பண்டங்களையும் பயன்படுத்தக் கூடும். (2) இதர பண்டங்கள் நஷ்டமாகாமல் பெரிய தொழில்கள் எப்போதும் பாதுகாக்கின்றன. (3) குறைந்த விலை என்பது மிகவும் முக்கிய விஷயம். இம்மூன்றையும் ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

பெரிய தொழில்கள் தங்களுடைய இதர பண்டங்களையும் நஷ்டமாக்காமல் உபயோகிக்கின்றன என்பது ஓரளவு உண்மையே. ஆனால் பெரிய தொழிலின் முக்கிய குணத்தில் அது ஒன்று என்று நினைப்பது தவறு. நால்வாடியில் எமது தோல் பதனிடும் இடத்திலோ, அல்லது கல்கத்தாவில் ஸ்ரீ சதீச்சந்திரதாஸ்குப்தரின் பதனிடும்சாலையிலோ சென்று பார்த்தால் அவ்விடங்களில் ஒரு மிருகத்தின் எல்லா பாகமும், கொம்பு, தோல், குளம்பு, கொழுப்பு, மாமிசம், எலும்பு, குடல்கள் ஆகிய யாவும் குடிசைத் தொழில் முறையிலேயே பயன்படுத்தப்படுவதைப் பார்க்கலாம். இது சாதாரணமாக எல்லா இடங்களிலும் செய்யப்படாமலிருந்தால் அதற்குக் காரணம் நமது நாட்டுப் பதனிடுவோரின் அறியாமையேயாகும். குடிசைத் தொழில் முறையில் அது சாத்தியமல்ல என்ற காரணமாகாது. அதற்குப் பரிகாரம் குடிசை முறையை விட்டுவிடுவதல்ல; நல்ல சாஸ்திரீக முறையை குடிகளுக்குச் சொல்லிக்கொடுப்பதே. இந்த விஷயத்தில் நாம் தவறுதல் செய்கிறோம். சுயநலப் பற்று அற்ற விஞ்ஞானிகள் தமது அறிவை குடிசை முறையின் சக்திக்கு சாதகமாக்கிக் கொடுக்க வேண்டும். அதுதான் நமக்குத் தேவை. பெரிய தொழில்களல்ல. பெரிய தொழில்கள் மொத்த செலவைக் குறைக்கின்றனவாதலால் அவை சிக்கனமான முறை எனலாம். ஆனால் அவையே மிகச் சிக்கனமான முறை என்று கூற இயலாது. இதை அமெரிக்க நாட்டின் பொருளாக்க சரித்திரத்திலிருந்து நாம் அறியலாம். அங்கே போர் போராகப் பஞ்சுகளைக் கொளுத்தி, கப்பல் கப்பலான காப்பிக்கொட்டைகளை கடலில் மூழ்கடித்து அல்லது அடுப்பில் எரித்து, மற்றும் சத்து நிறைந்த பதார்த்தங்களை தூர எறிந்து தொழில் நடத்தவேண்டியிருக்கிறது. குடிசை முறையில் அது அவசியமாகாது. தேசத்தின் நலத்தை யோசித்துப் பார்த்தால் அனேக சமயம் பெரிய தொழில்கள் மிக செலவு அதிகம் பிடிக்கும் தொழிலெனப்படும். மூங்கிலிலிருந்து காகிதம் செய்வதை எடுத்துக்கொள்வோம். ஒரு பெரிய மூங்கிற்காடு அதற்கு அதீனமாக இல்லாவிட்டால் ஒரு பெரிய மூங்கிற் தொழிற்சாலை ஏற்படுத்துவது கஷ்டம். ஏனெனில் புதிது புதிதாக வெட்டி மூங்கிலை ஓயாமல் அதை அரைக்கும் எந்திரத்திற்கு கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டும். ஆனால் குடிசை முறையிலோ புதிதாக வெட்டின மூங்கிலை வீட்டு உபயோகங்களுக்கு, கூடை பின்ன, பாய் முடைய, கூரை போட, களஞ்சியம் கட்ட ஆகிய பல முறைகளில் உபயோகிக்கலாம். இவைகள் மக்கி பாழ் அடைந்தால் இவைகளைக்கொண்டு அழகிய காகிதம் செய்யலாம். இவ்விரண்டில் எது சிக்கன வழி?

குறைந்தவிலை நல்லதா அதிக விலை நல்லதா என்று ஒரு பண்டத்தின் விலை ஏற்பட்டதன் காரணம் என்ன

என்பதைப் பொருத்திருக்கிறது. பண்டங்களில் உள்ள சரக்குகளின் விலையினால் அப்பண்டத்தின் விலை ஏற்பட்டதென்றால் குறைந்த விலை இருப்பது நலம். ஆனால் மனிதர் உழைப்பிற்குக் கூலி கொடுத்ததனால் பண்டத்தின் விலை ஏற்பட்டதென்றால், அப்பொழுது விலை அதிகம் இருப்பதே நல்லது. அதனால் செல்வம் பரவியிருக்கும். ஒரு ரூபாய் பொறுமான மில்துணியில், அதற்கு உண்டான பஞ்சு, போக்கு வரத்துக்கூலி, எந்திர மூலதனத்தின் வட்டி முதலியவை 12 அணாவும், அதை செய்த தொழிலாளியின் கூலி 4 அணாவும் என்றிருந்தால் 12 அணா விலைக்குக் காரணமான விஷயங்களைக் குறைத்து, துணியின் விலையைக் குறைப்பது நல்லது. கதர் துணியில் 12 அணா தொழிலாளியின் கூலியும், 4 அணா பண்டங்களின் செலவும் என்றிருந்தால் கதரின் விலையைக் குறைப்பதனால் அத்தொழிலின்மூலம் ஜனங்களுக்கு ஏற்படும் நன்மையையே குறைப்பதாகும். குடிசை முறையில் உழைப்பிற்கே அதிகக் கூலி கொடுக்கவேண்டியிருப்பதால் அதிக விலை கொடுப்பது நல்லது. பெரிய தொழில் முறையில் உழைப்பிற்கென்று ஏற்படும் செலவு சொற்பம்; ஆகையால் அவ்வித உற்பத்தி பண்டங்களுக்கு விலை குறைவாக இருப்பது நலம். இவ்விதம் எல்லா அம்சங்களையும் பார்க்காமல் நாம் ஒருவித முடிவிற்கு வருவது தவறாகும். பொருளாதார பாடபுத்தகங்களில் கூறப்பட்டிருக்கும் ஆதாரங்களை நாம் சரிவர ஆராயவேண்டும். அவைகள் முதலாளித்வ முறையைக் கையாளும் நாடுகளுக்கென்று எழுதப்பட்டவை. அவைகளை நாம் அப்படியே நம்பிவிடக்கூடாது. சிற்சில சமயம் அவைகள் பாதி உண்மையைக் கூறுவதால் நாம் எளிதில் ஏமாந்துவிடும் நிலைமையில் இருக்கிறோம்.

### முதலாளித்வம் கவர்ந்து வாழ்தலே:

இங்கிலாந்தின் ஆலைத்தொழில் முதலாளிகளின் தங் கப்பூச்சு வீடுகளைப்பார்த்த சிலர் ஆலைத் தொழில் உற்பத்தியை இங்கேயும் செய்தால் இந்தியாவின் ஏழ்மைத்தனம் நீங்கிவிடும் என்று நினைக்கிறார்கள். ஆலைத்தொழில் பெரிய



அஸ்திவாரத்துடன் இருக்கவேண்டுமெனில் அதற்கு அதிக மூலதனம் வேண்டும். நமது இந்தியாவிற்குத் தேவையான சில இரும்பு ஆலைகளுக்கும் சர்க்கரை ஆலைகளுக்கும் போதுமான மூலதனம் நம்மிடம் கிடைக்கும்.

ஆனால் அவ்விதச் சில ஆலைகளினால் ஒரு தேசத்தை ஆலைத்தொழில் தேசமாகச் செய்துவிட இயலாது. பிரிட்டனுக்கு இவ்வேலையில் தூண்டுகோல் அளித்தது அது பிறதேசங்களிடமிருந்து கவர்ந்துசென்ற செல்வமே. நமது தேசத்தின் தனம் பொக்கிஷம் பொக்கிஷமாக அங்கே போய்ச்சேர்ந்திராவிட்டால் இவ்விதம் தொழில் செய்வது அவர்களால் இயலாது. பெரிய ஆலைத்தொழில்களுக்கு வேண்டிய மூலதனம் ஒரு ஆயுள் காலத்திற்குள் திரட்டக் கூடியதல்ல. ஆகையால் பிறருடையதைக் கவராமல் இந்த நாடுகளில் ஆலைத் தொழில்கள் செய்வது இயலாது. பிரிட்டன் இன்னும் இந்தியாவிடம் பால்குடித்துக்கொண் டிருக்கிறது. குழந்தை புஷ்டியாக இருப்பதற்குக் காரணம் தாய்ப்பாலின் விசேஷமே. குழந்தை பால் குடிப்பது நின்று தானே சம்பாதித்துக்கொள்ளவேண்டிய நிலைமை இனி ஏற்பட்டால் என்னவாகும்? புது ருஷ்யா இன்னும் சிசுப்பருவத்திலிருக்கிறது. மேலும் பொதுஜனங்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட மூலதனம் அதனிடம் இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் போதுமானதாக இருக்கிறது. அமெரிக்க ஐக்ய நாட்டில் ஏராளமான இயற் பொருள்கள் எடுப்பாரின்றிக் கிடந்தன. அவைகளைத் திரட்டிக்கொண்டதால் அங்கே பெரிய ஆலைத் தொழில் கள் இயன்றது. இவ்விதமில்லாமல் ஒரு தேசமுழுவதும் ஆலைத் தொழில் செய்வது என்பது இன்னும் எங்கும் ஏற்படவில்லை. அது பிறரிடமிருந்து பறிக்காமல் இயலாது. ஹிம்சைக்கும் சண்டைக்கும் இடமளிப்பதேயாகும்.

ஆகையால் முதலாளி தொழில் முறையிலும் பொதுவுடமை தொழில் முறையிலும் இம்சைக்கு அவசியமிருக் கிறது, இடம் இருக்கிறது என்பது தெரிகிறது. அவ்வித முறைகளுக்கு அதிகாரம் சிலர் கையில் சேர்ந்திருப்பதும் அவசியமாகிறது. மேலும் அவ்வித முறைகளில் உற்பத்

திக்கும் விற்பனைக்கும் சார்ப்படுத்த இயலுவதில்லை யாகையாலேயே நாம் அவ்வித ஒரு நிலைப்பட்ட உற்பத்தியைச் செய்யாமல் பலநிலைப்பட்ட உற்பத்தியே வேண்டும் என்று சொல்லுகிறோம். இவ்விதம பல நிலைப்பட்ட உற்பத்தியில் "அதிக உற்பத்தி" என்ற நிலைமை ஏற்பட இடமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் ஊருக்குள் விற்பனையைத் தேடுவார். சொந்தத் தேவைகளைத் திருப்தி செய்துகொண்ட பிறகே வேறு மார்க்கெட்டுகள் தேடவேண்டும்.

தற்காலத்திய பொருளாக்க முறை பழையகால கப்பல் போன்றது. அதனில் ஒரு சந்து ஏற்பட்டால் கப்பலே முழுகிவிடும். ஆனால் இக்காலத்தில் கப்பல்கள் இவ்விதம் இயற்றப்படுவதில்லை. தண்ணீர் உட்புக இயலாத சிறிய சிறிய அறைகள் கப்பலின் கீழ்பாகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கின்றன. இதனால் கப்பலின் ஒரு புறத்திற்குக் கேடு ஏற்பட்டாலும் கப்பல் முழுவதும் முழுகிவிடாது; மிதந்துகொண்டே இருக்கும். அதேவிதம் பொருள்செய்வது ஒரு நிலைப்பட்டிராமல் பல நிலைப்பட்டு செய்வதாக இருந்தால், அந்த அமைப்பை எளிதில் முழுகடிக்க இயலாது, அவ்வித அமைப்பின் கீழ் சண்டையும் இம்சையும் ஏற்படுவதும் குறையும்.

### ஒருநிலைப்படுத்துதல் :

நாம் சில தொழில்களை ஒரு நிலை அதிகாரத்தின் கீழ் செய்தேயாகவேண்டும். ஆனால் அவை சமூகத்திற்கு அவசியமான விஷயங்களாய் சமூகக் கட்டுப்பாட்டிற்கு அல்லது கூட்டுறவு முறைக்கு அடங்கியதாக இருக்க வேண்டும். டெலிபோன், தந்தி, தபால், சாலைகள் அமைப்பது, தண்ணீர் வசதி, காட்டு இலாகா, சுரங்கங்களிலிருந்து உலோகம் எடுப்பது முதலியவை சமூகத்தின் நலத்தையே நோக்கமாக வைத்துக்கொண்டு ஒரு நிலைப்பட்ட அதிகாரத்தில் செய்யப்படவேண்டும். இவை அரசாங்கத்தினுல் செய்யப்படுவதே நலம். இவைகளைத் தனிப்பட்டவனின் அதிகாரத்திற்கு விடக்கூடாது. ஆனுல் பொருள்களை உண்டாக்குவதை அரசாங்கக் கட்டுப்பாடு அல்லது சமூகக்



கட்டுப்பாட்டிற்கு விடக்கூடாது. அவ்விதம் விட்டால் முன்னேற்றம் தடைப்படும். முதலாளித்வத்தில்போல் முழுதும் தனிப்பட்டவனுக்கும் கொடுக்கக்கூடாது. அவ்விதம் விட்டால் நாம் இதுவரை கூறியுள்ள பல தீங்குகள் ஏற்படுகின்றன. ஆகையால் உற்பத்தியைத் தனிப்பட்டவனிடம் கொடுத்து, உற்பத்தி சாலையின் அளவையும் சக்தியையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். அவ்விதக் கட்டுப்பாட்டை சமூகம் செய்யவேண்டும். இவ்வித முறையினுல் முதலாளித்வத்தின் சாதகத்தைப் பெற்று, பாதகங்களைக் குறைக்கலாம். ஆகையால் உற்பத்திசாலையின் சக்தியையும் அளவையும் வளரவிடாமல் சமூகம் கட்டுப்படுத்துமென்ருல் பொருளுற்பத்தியைத் தனித்தனியானவனுடைய இஷ்டத்திற்கு விடுவதனுல் ஏற்படும் தீமை குறையும். மனித குணம் மனித குணமாக இருக்கும் வரை சுரண்டுவதையும் லாபம்பெற முயல்வதையும் தடுக்கமுடியாது. இம்சை ஓரளவு இருந்தே தீரும். நாம் மூச்சுவிடுவதே இம்சை. நாம் சாப்பிடுவது இம்சை. ஆனுல் நமது நோக்கம் மனிதரின் முன்னேற்றத்திற்குத் தீங்கில்லாமல் இம்சையைக் கூடியவரை குறைப்பதாகும். நாம் ஏற்படுத்தும் நிபந்தனைகளினுல் ஒரு தனிப்பட்டவனின் செல்வத்திற்கு ஓர் எல்லை ஏற்பட்டுவிடும். செல்வம் கண்ட கண்ட இடங்களில் குவிய இடமிராது. மனிதர் ஒருவருக்கொருவர் வித்யாசப்படும்வரை அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவும் குணமும் வித்யாசப்படும். ஆனுல் அந்த வித்யாசம் ஓரளவிற்கு உட்பட்டதாகவே இருக்கும். நூற்றுக்கணக்கான வருமானம் சிலருக்கும் ஆயிரக்கணக்கான வருமானம் சிலருக்கும் ஏற்படலாம். ஆனுல் இலக்ஷக்கணக்கான வருமானம் வருவதென்ருல் பல ஆயிரம் பேர்களுக்குத் தாழ்வு ஏற்பட்டேயாக வேண்டும். அதைத் தடுக்கவே நாம் கூறியுள்ள பலநிலைப்பட்ட உற்பத்திமுறை. வெளிநாட்டு வியாபாரமும், உள்நாட்டு பாங்குகளும் குவாபரேடிவ் முறையில் நடத்தப்படலாம். இதனுல் தனிப்பட்டவனிடம் அதிகம் செல்வம் சேர இடமிராது.

திக்கும் விற்பனைக்கும் சாப்படுத்த இயலுவதில்லை யாகையாலேயே நாம் அவ்வித ஒரு நிலைப்பட்ட உற்பத்தியைச் செய்யாமல் பலநிலைப்பட்ட உற்பத்தியே வேண்டும் என்று சொல்லுகிறோம். இவ்விதம பல நிலைப்பட்ட உற்பத்தியில் "அதிக உற்பத்தி" என்ற நிலைமை ஏற்பட இடமில்லை. ஒவ்வொருவரும் தத்தம் ஊருக்குள் விற்பனையைத் தேடுவார். சொந்தத் தேவைகளைத் திருப்தி செய்துகொண்ட பிறகே வேறு மார்க்கெட்டுகள் தேடவேண்டும்.

தற்காலத்திய பொருளாக்க முறை பழையகால கப்பல் போன்றது. அதனில் ஒரு சந்து ஏற்பட்டால் கப்பலே முழுகிவிடும். ஆனால் இக்காலத்தில் கப்பல்கள் இவ்விதம் இயற்றப்படுவதில்லை. தண்ணீர் உட்புக இயலாத சிறிய சிறிய அறைகள் கப்பலின் கீழ்பாகம் முழுவதும் கட்டப்பட்டிருக்கின்றன. இதனால் கப்பலின் ஒரு புறத்திற்குக் கேடு ஏற்பட்டாலும் கப்பல் முழுவதும் முழுகிவிடாது; மிதந்துகொண்டே இருக்கும். அதேவிதம் பொருள்செய்வது ஒரு நிலைப்பட்டிராமல் பல நிலைப்பட்டு செய்வதாக இருந்தால், அந்த அமைப்பை எளிதில் முழுகடிக்க இயலாது. அவ்வித அமைப்பின் கீழ் சண்டையும் இம்சையும் ஏற்படுவதும் குறையும்.

## ஒருநிலைப்படுத்துதல் :

நாம் சில தொழில்களை ஒரு நிலை அதிகாரத்தின் கீழ் செய்தேயாகவேண்டும். ஆனால் அவை சமூகத்திற்கு அவசியமான விஷயங்களாய் சமூகக் கட்டுப்பாட்டிற்கு அல்லது கூட்டுறவு முறைக்கு அடங்கியதாக இருக்க வேண்டும். டெலிபோன், தந்தி, தபால், சாலைகள் அமைப்பது, தண்ணீர் வசதி, காட்டு இலாகா, சுரங்கங்களிலிருந்து உலோகம் எடுப்பது முதலியவை சமூகத்தின் நலத்தையே நோக்கமாக வைத்துக்கொண்டு ஒரு நிலைப்பட்ட அதிகாரத்தில் செய்யப்படவேண்டும். இவை அரசாங்கத்தினால் செய்யப்படுவதே நலம். இவைகளைத் தனிப்பட்டவனின் அதிகாரத்திற்கு விடக்கூடாது. ஆனால் பொருள்களை உண்டாக்குவதை அரசாங்கக் கட்டுப்பாடு அல்லது சமூகக்



கட்டுப்பாட்டிற்கு விடக்கூடாது. அவ்விதம் விட்டால் முன்னேற்றம் தடைப்படும். முதலாளித்வத்தில்போல் முழுதும் தனிப்பட்டவனுக்கும் கொடுக்கக்கூடாது. அவ்விதம் விட்டால் நாம் இதுவரை கூறியுள்ள பல தீங்குகள் ஏற்படுகின்றன. ஆகையால் உற்பத்தியைத் தனிப்பட்டவனிடம் கொடுத்து, உற்பத்தி சாலையின் அளவையும் சக்தியையும் நாம் கட்டுப்படுத்த வேண்டும். அவ்விதக் கட்டுப்பாட்டை சமூகம் செய்யவேண்டும். இவ்வித முறையினால் முதலாளித்வத்தின் சாதகத்தைப் பெற்று, பாதகங்களைக் குறைக்கலாம். ஆகையால் உற்பத்திசாலையின் சக்தியையும் அளவையும் வளரவிடாமல் சமூகம் கட்டுப்படுத்துமென்றால் பொருளுற்பத்தியைத் தனித்தனியானவனுடைய இஷ்டத்திற்கு விடுவதனால் ஏற்படும் தீமை குறையும். மனித குணம் மனித குணமாக இருக்கும் வரை சுரண்டுவதையும் லாபம்பெற முயல்வதையும் தடுக்கமுடியாது. இம்சை ஓரளவு இருந்தே தீரும். நாம் மூச்சுவிடுவதே இம்சை. நாம் சாப்பிடுவது இம்சை. ஆனால் நமது நோக்கம் மனிதரின் முன்னேற்றத்திற்குத் தீங்கில்லாமல் இம்சையைக் கூடியவரை குறைப்பதாகும். நாம் ஏற்படுத்தும் நிபந்தனைகளினால் ஒரு தனிப்பட்டவனின் செல்வத்திற்கு ஓர் எல்லை ஏற்பட்டுவிடும். செல்வம் கண்ட கண்ட இடங்களில் குவிய இடமிராது. மனிதர் ஒருவருக்கொருவர் வித்யாசப்படும்வரை அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவும் குணமும் வித்யாசப்படும். ஆனால் அந்த வித்யாசம் ஓரளவிற்கு உட்பட்டதாகவே இருக்கும். நூற்றுக்கணக்கான வருமானம் சிலருக்கும் ஆயிரக்கணக்கான வருமானம் சிலருக்கும் ஏற்படலாம். ஆனால் இலக்ஷக்கணக்கான வருமானம் வருவதென்றால் பல ஆயிரம் பேர்களுக்குத் தாழ்வு ஏற்பட்டேயாக வேண்டும். அதைத் தடுக்கவே நாம் கூறியுள்ள பலநிலைப்பட்ட உற்பத்திமுறை. வெளிநாட்டு வியாபாரமும், உள்நாட்டு பாங்குகளும் குவாபரேடிவ் முறையில் நடத்தப்படலாம். இதனால் தனிப்பட்டவனிடம் அதிகம் செல்வம் சேர இடமிராது.

நாம் சிபார்சுசெய்யும் அரசியல் முறையை அமுலுக்குக் கொண்டுவந்தால் தேசத்தில் ஏற்படும் மாறுபாடானது திடீரென்று ஏற்படுவதாகவும் பலர் கண்டு வியக்கத் தக்கதாகவும் இருக்காது. நமது முறை ஆமைபோல் ஊர்ந்து செல்லும் முறை. தேசம் முழுவதும் இவ்வழியைப் பின்பற்ற வெகு நாட்கள் செல்லும். ஆனால் நீடித்திருக்கும் மாறுதல்கள் ஏற்பட வேண்டுமென்றால் நாம்பொறுமையாகத்தான் இருக்கவேண்டும். பொதுவுடைமை முறைப்படி ஒரு சட்டத்தை ஏற்படுத்தி கையெழுத்திட்டுவிட்டு எல்லாருடைய சொத்தையும் நாம் பறித்துக்கொள்வது இம்சையாகும். ஆனால் சொத்து அதிகம் சேராதவண்ணம் அவரவர் உற்பத்தியைக் கட்டுப்படுத்தினால் நாளடைவில் ஒருவரிடமும் செல்வம் சேராமல், எல்லாரிடமும் பரவினதாக இருந்து எல்லாரிடமும் அதிக க்ஷேமத்தைக் காணலாம். இந்த முறை இம்சை ஆகா. நமது நாட்டில் முன்னாட்களிலாகட்டும், இந்த நாட்களிலாகட்டும் சில தொழில்கள் சமூகக் கட்டுப்பாட்டிற்கு அடங்கியவை. சில வேலையைச் செய்வது நல்லதா கெட்டதாஎன்பதைச் சமூகமே தீர்மானிக்கும். இம்முறையில் சில தீங்குகள் இருக்கலாம். ஆனால் நமது நாட்டினரை வழிக்குக் கொண்டுவர அரசியல் முறையில் மாத்திரமல்ல, சமூக முறையிலும் நாம் முயலலாம் என்பது இதனால் ஏற்படுகிறதல்லவா? அவ்வழியை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம்.

# அத்யாயம் 12

## அஹிம்சை வாழ்க்கை நிலை.

ஆலைத்தொழில நாடுகளில் பொருள் நிபுணர்கள் ஜனங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினால் அவர்களுக்கு இன்னும் அதிக உற்பத்தி செய்ய விருப்பமுண்டாகும், இதனால் வருமானம் இன்னும் அதிகமாகும் என்கிறார்கள். ஓரளவு இது உண்மை. வாழ்க்கை நிலையை உயர்த்துவது என்பது ஜனங்களின் தேவைகளை அதிகரிக்கச் செய்வதே.



முந்தின தலைமுறை மனிதர் இலைகளில் அன்னத்தைப் பறிமாறிக்கொண்டு தமது கைகளினால் புசித்துவிட்டு, அந்த இலைகளை தமக்குப் பால் கொடுக்கும் ஆடு, மாடுகளுக்குப் போடுவார்கள். அடுத்த தலை முறையில் மேஜைபேரில் தட்டுகளில் ஸ்பூனும் முள்ளும் கொண்டு சாப்பிடச் சொல்லிக்கொடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பரிமாறவும் அந்த தட்டுகளை கழுவவும் வேலையாட்கள் தேவை. நாளடைவில் இவ்விதம் வேலையாட்களும் மேஜையும், ப்ளேட்டுகளும் இல்லாமல் சாப்பிடத் தெரியாதவர்கள் ஏற்பட்டு விடுகிறார்கள். இதனால் மேஜை, நாற்காலி, முள்ளு, ஸ்பூன், பிளேட்டு, வேலையாள் ஆகியவைகள் தேவையின் ஜாப்தாவில் சேர்க்கப்படுகின்றன; இவைகளை உற்பத்தி செய்வது அவசியமாகிறது. இவ்விதப் புது வாழ்க்கை பழைய முறையைவிட பரிசுத்தமானதா, சந்தோஷம் அளிப்பதா, ஜனங்களின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாததா என்பது கேள்வி. இருந்தும் இது வியாபாரத்திற்கு நல்லது. ஏனெனில் பிந்திய தலைமுறைக்காரர்கள் இந்த சாமான்களைப் பெறுவதற்காக மிக ஊக்கமாக உழைப்பார்கள். இவ்விதம் தேவைகளை அதிகமாக்குவது தவிர இம்முறையானது சமூகத்தில் ஒரு படாடோபமான வாழ்க்கை நிலையை உண்டாக்கி கேவலம் வெளிமதிப்பிற்காகிலும் பயந்து பழைய வழக்கங்களுக்கு ஜனங்கள் மாறிவிடாமல் தடுக்கும். இவ்விதம் பொய்த் தேவைகளை விரும்பச் செய்து ஜனங்கள் வேலை செய்யத் தூண்டப்படுகிறார்கள். ஆலைத் தொழிலாளிகள் இவ்விதம் ஜனங்கள் அதிக வேலை செய்ய விரும்புவதைப் பயன்படுத்திக் கொண்டு, ஆலைகளில் வேலை அளப்பவர்களை ஏற்படுத்தி தொழிலாளிகள் மும்முரமாக வேலை செய்யுமாறு தார்குச்சி உபயோகிக்கிறார்கள். இதனால் தொழிலாளியின் வருமானம் அதிகரிக்கும் சந்தேகமில்லை. ஆனால் இவ்விதம் கஷ்டப்பட்டு சம்பாதித்த வருமானத்தை அவர்கள் எவ்விதம் செலவு செய்கிறார்கள்? அவர்களுடைய பொய்த் தேவைகளை திருப்தி செய்து கொள்ளும் ஒரே நோக்கத்துடன் எங்கிருந்தாகிலும் வரும் எந்தப்பண்டத்தையாகி

லும் வாங்கி வைக்கிறார்கள். இம்முறையானது சுய திருப்தியும் சுய நலமுமே வாழ்க்கையில் முக்கியமாகச் செய்துவிடுகிறது. மேன்மேலும் பண்டங்களைப்பெற ஆசை ஏற்பட்டு, தேவையின் நிதானம் என்பது அடியோடு மறைந்து ஜனங்களுக்கு வாழ்க்கையில் அதிருப்தி உண்டாகிறது. முக்கிய தேவைகளைவிட்டு, பிறர் தம்மை மதிப்பார் எண்ணவேண்டும் என்ற விருப்பத்தில் அதிகவிலை பெற்ற சுகபோக பண்டங்களை வாங்குமாறு ஜனங்கள் தூண்டப்படுகிறார்கள். இவ்விதம் வாழ்க்கை நிலையை உயர்த்தவேண்டும் என்று தூண்டப்படும் ஜனங்களை தன் முகத்துக்கெதிரில் தொங்கவிடப்பட்டிருக்கும் முள்ளங்கிக் கிழங்கைப் பற்ற ஆசைகொண்டு மேன்மேலும் வேகமாய் வண்டியை இழுத்துச் செல்லும் கழுதைக்கே ஒப்பிடலாம். அதனுடைய சேணத்தில் சொருகப்பட்ட குச்சியிலிருந்து அந்த முள்ளங்கி தொங்குவதை கழுதை அறியாது. வேகமாய்ச் சென்றால் அதைப்பிடிக்கலாம் என்று ஓடும். வண்டிக்காரனின் வேலை நிறைவேறுகிறது. முள்ளங்கி அப்படியே இருக்கிறது. அதே விதம் மேற்கூறிய முறையினால் ஆலையின் முதலாளிக்கு பண்டங்கள் விற்படுகின்றன. ஆனால் ஜனங்களின் வாழ்க்கை முன்போலவே இருக்கிறது. நல்ல விளம்பரங்களினால் இந்த முறையை போதிக்கவும் சிறுவர்களுக்கு பால்யத்திலிருந்தே பாடமாகக் கற்பிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இது இம்சையும் பறிமுதலுமான முறை, ஆலைத் தொழில் நாடுகளில் அந்த ஆலைகளின் உற்பத்தியாகும் பண்டங்களின் விற்பனைக்கென்று அதிகம் கையாளப்படும் முறை.

**வருமானத்திற்கேற்ற வாழ்வு:**

நமது தேவைகளை அதிகரித்து அதன்மூலம் நமது வாழ்க்கை நிலையை அதிகரிக்கச் செய்வதைவிட, நமது வருமானத்தைக்கொண்டு நாம் நமது வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக்கொள்வது நலம். மேலும் பிறர் கண்ணியமாக மதிக்கும் நிலை எது என்று கவலைப்படாமல் அவரவருக்கு முக்கிய தேவைகள் எவையோ, பிடித்தமான முறை



எதுவோ அவ்வழியில் பணத்தைச் செலவு செய்வது உசிதம். இதுதான் இயற்கைக்கு ஏற்றமுறை. பண்டங்கள் வாங்குபவர்கள் அவர்களுடைய இஷ்டப்போல் வாங்க இடமிருக்கிறது. ஒருவன் தனது தேவைகள் என்ன என்று தீர்மானிப்பதிலிருந்து அவனுடைய குணத்தை அறியலாம்.

நமது நாட்டில் அதிகமானவர் ஆகாரக் குறைவு உடையவர். ஆகையால் வருமானம் அதிகமானால் "ஆகாரம்" என்பதில் அதிக செலவு ஏற்படும். நமது நாடு முக்கியமாக வியவசாய நாடு ஆகையால் நாம் நமது கவனத்தை உணவு பதார்த்தங்களைப் பயிர்செய்வதிலும் அதற்கு அவசியமான கிராமத் தொழில்களிலும் முதலில் செலுத்தவேண்டும். அகில பாரத கிராமத் தொழில் சங்கம் இக்காரணங்களினாலேயே முதன்முதலாகக் கோதுமை அரைப்பது, அரிசி குத்துவது, செக்கு ஆட்டுவது, வெல்லம் செய்வது ஆகிய வேலைகளை மேற்கொண்டு இருக்கிறது.

கிராமங்களில் வருமானம் ஒரு வருஷத்திற்கு தலைக்கு ரூ. 15 என்று இருக்கிறது. அதை ஒரு குடும்பத்திற்கு மாதம் வருமானம் ஏழெட்டு ரூபாய் என்று நாம் உத்தேசமாகக் கூறலாம். ஒரு ஆள் மாதமுழுவதும் நல்ல உணவு உட்கொள்ள அந்த ரூபாய் தேவையாக இருக்கும். ஆகையால் ஆலையில் உற்பத்திசெய்யப்படும் பண்டங்களை விருத்திசெய்து இந்தியாவின் வாழ்க்கை நிலையை உயர்ந்ததாகச் செய்வோம் என்று கூறுவது இச்சமயம் சரியான வார்த்தை அல்ல. இப்போதைய வருமானத்தைப்போல் ஏழெட்டு மடங்கு அதிக வருமானம் இருந்தால் இவர்களின் முதற் தேவையான பசி அடங்கும். அதற்கு மேற்பட்ட இதர விஷயங்கள்.

**வருமானம்:**

எந்த தேசத்திலும் பொதுப்பட்ட ஜனத்திரள் தமது முக்கிய தொழிலிலிருந்துபெறும் வருமானத்தைப் பொறுத்ததாக இதர ஜனங்களின் இதர வருமானங்களும் இருக்கவேண்டும். நமது நாட்டில் வியவசாயத்திலிருந்து பெறக்

கூடிய வருமானத்தைக்கொண்டு இதர விஷயங்களை திட்டம் செய்யவேண்டும். வியவசாயத்திலிருந்து மாதம் ஒருவன் ரூ. 10 பெறுவதுகூட கஷ்டமாக இருக்கிறது. கிராமத் தொழில்காரர்கள் மிக ஊக்கத்துடன் உழைப்பவர்களாக இருந்தால் மாதம் ரூ. 30 அல்லது 40 பெறலாம். நாடு நிலைதவறி இருந்தால் சில சமயம் இதைப்போல இரு மடங்கு கூடப்பெறலாம். இவ்வித வருமானம் அவர்களுடைய சொந்த உழைப்பினால் கிடைப்பது; இதில் பறிமுதல் கிடையாது. இவ்வித வருமானத்தை ஒரு திட்டமாக வைத்துக்கொண்டு அ. பா. கி. தொழில் சங்கம் தனது உத்யோகஸ்தர்களுக்கு மாதம் சம்பளம் ரூ. 50 என்று விதித்திருக்கிறது. இதற்கு மேற்பட்ட சம்பளம் கொடுப்பது நாம் தொண்டு செய்வதாகச் சொல்லுபவர்களின் வாழ்க்கை நிலைக்கு அதிக வித்யாசப்படுவதாகும். இந்தச் சம்பளமே சாதாரண கிராம நிலைக்கு மிக அதிகமானதென்றே கூறலாம்.

வருமானம் என்பது தொழிலுக்குத் தொழில் சம்பந்தப்பட்டிருப்பதென்றால், நாம் வாங்குவதனால் நமது அண்டை வீட்டுக்காரனின் வருமானம் எவ்விதம் பாதிக்கப்படும் என்று நாம் கவனிக்கவேண்டும். அதைக் கவனித்தால் நாம் தாறுமாறாக வாங்காமல் கரிசனையுடனும் சீருட்னும் வாங்க முயலுவோம். நமது அக்கம் பக்கத்தோரின் உற்பத்தி பண்டங்களை வாங்கவே இஷ்டப்படுவோம். இதனால் நமக்கு ஆத்ம கட்டுப்பாடு ஏற்பட்டு, தன்னடக்கம் உண்டாகும். செல்வத்தின் பொறுப்பை உணருவோம்.

### தவறான திட்டங்கள்:

நமது நாட்டுக்கு செல்வத்தைப் பறிமுதல் செய்வதில் கருத்துடன் இருப்பவர்களான அந்நிய நாட்டாரால் இங்கே வாழ்க்கை திட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இது நமது துரதிருஷ்டம். கம்பெனிக்காரர் நாட்களில் கம்பெனியின் ஆட்கள் லஞ்சம் வாங்காமல் இருப்பதன் பொருட்டு அதிக சம்பளம் கொடுக்கப்பட்டார்கள்.



மேலும் அந்தச் சம்பளம் கம்பெனியின் வியாபாரிகள் இந்நாடு முழுதும் திரிந்து ஏராளமாகக் கொள்ளையிட்ட வருமானத்திலிருந்து கொடுக்கப்பட்டது. அந்த திட்டத்தையே வைத்துக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இக்காலத்திய சர்க்கார் சம்பளம் நமது ஏழை நாட்டில் இருந்து வருகிறது. மிகப் புராதன அரச குடும்பஸ்தர்களுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன்களைக்கூட இந்தச் சம்பளத்துடன் ஒப்பிட இயலாது. இவ்விதம் அந்நிய நாட்டாரின் கொள்ளையிடும் திட்ட முறையானது இதர தொழில்களையும் பாதிக்கிறது. ஜில்லா ஜட்ஜிக்கு மாதம் ரூ. 2500 சம்பளமென்றால், பெரிய வக்கீல் அந்த ஜட்ஜியின் வாழ்க்கை நிலைக்கு ஏற்றதாகத் தாம் வகிக்கவேண்டுமென்பதனால் அதற்கு ஏற்ற தொகை கேட்கிறார். டாக்டரும் அவ்விதமே. இதனால் செயற்கையான நிலை ஏற்படுகிறது. சர்ஜனைக் கூப்பிட்டு அவனுக்கு 10 அல்லது 15 ரூபாய் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கவேண்டி உபாத்யாயர்கள் அதிக சம்பளம் கேட்கிறார்கள். இந்தத் திட்டம் முழுதும் நமக்குப் பொருத்தமானதல்ல. நமது நாட்டிற்கு விரோதமானது. ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு தச்சனோ கொல்லனோ கிராமத்தின் வாழ்க்கை நிலையை நோக்கினால் மிக அதிக சம்பளம் பெறுபவராவார். ஆனால் அவர்களாலும் நல்ல வைத்தியம் பெறுவது என்பது இயலாது. ஆனால் நாடு முழுவதும் நாட்டின் ஜனங்களின் வருமான நிலைக்கு ஏற்றதாகவே உத்யோகஸ்தர்கள் சம்பளமும் இருப்பதென்று ஏற்பட்டால், மிகத்தேர்ந்த வைத்தியரும் ஏழையின் சொல்பசக்திக்கு கிடைக்கூடியவராக இருப்பார். நியாயமும் சட்டமும் இனமாக கிடைக்கும். மோதிலால்களும், புலாபாய்களும், சப்ருக்களும் தங்களுடைய பத்தாயிரக்கணக்கான தொகைகளை விட்டு தங்களுடைய கூரிய அறிவின் பயனை மிகசொல்ப தொகைக்கே அளிப்பார்கள். நமக்கு அஹிம்ஸா முறையில் வாழ்க்கை நிலை வேண்டுமென்றால் இவ்வித திட்டத்தையே நாம் பெற முயலவேண்டும். அவ்விதம் ஏற்பட்டால் தற்காலத்தில் ரூ. 1000 சம்பளம் பெறுபவருக்கு இருக்கும்

சௌகரியங்களெல்லாம் மாதம் ரூ. 50 வருமானத்திலேயே ஒருவர் அடையலாம். நாடு முழுவதும் ஏற்றத் தாழ்வு அதிகம் இல்லாமல் சுமாரான சமத்வம் ஏற்படும். நாட்டின் வாழ்க்கை நிலை நல்லதாகும்.

---

## அத்யாயம் 13

### பண்டம் மாற்று.

ஜனங்களிடை நாகரீக முன்னேற்ற மேற்பட்டால் தொழில்களைப் பிரித்துச் செய்யவேண்டியது அவசியமாகிறது. ஆனால் அவ்விதம் பிரிப்பதை மிக நுணுக்கமாகச் செய்தால் மனிதரின் பொதுத் திறமை குன்றிவிடுகிறது. தொண்டைக்கட்டி ஒன்றையே மிகப் பெரிதாக எண்ணி நோயாளியின் தேகத்தை மறக்கும் தொண்டைக்கட்டி நிபுணர் தமது வேலையில் வெற்றிபெறமாட்டார். ஏனெனில் அவர் நினைப்பது போன்ற தொண்டையையே முக்கியமாகக்கொண்ட கோரரூபமல்ல நமது தேகம். வேலை செய்பவனின் குணத்தை மறந்து, வேலையை மிக நுணுக்கமாய்ப் பங்கிட நாம் அனுமதிக்கக் கூடாது. அவ்விதம் வேலையைப் பிரித்துக்கொடுக்கும் சமயமும் கூடியவரை பண்டம் மாற்றிக்கொள்வது என்ற முறையை அனுசரிப்பதுநலம். இவ்வித மாற்று இருவருக்கும் சாதகமானதாக இருக்கவேண்டும். அதுவே உண்மை வியாபாரம்.

**மாற்று :**

பண்டத்தைக் கொடுத்து பண்டம் வாங்கிக்கொள்வது மிகச் சுலபமான மாற்றுமுறை. ஒரு வியவசாயி ஒரு குசவனைச் சந்திக்கிறான். வியவசாயி உற்பத்தி செய்யும் நெல் குசவனுக்குத் தேவை. குசவன் உற்பத்தி செய்யும் பானை வியவசாயிக்குத் தேவை. பொருளியல் பரிபாஷையில் ஒரு உற்பத்தியாளன்—உபயோகிப்பவன் வேறொரு உபயோகிப்பவன்—உற்பத்தியாளனைச் சந்திக்கிறான். இருவரும் தத்தம் பொருள்களை மாற்றிக்கொள்கிறார்கள் இது



தான் மாற்று. வியாபாரம் விரிந்து இன்னும் நுணுக்கமானதானால் இந்த மாற்றை எளிதாகச் செய்ய ஒரு மூலப்பொருளின் தேவை ஏற்படுகிறது. இவ்விதத் தேவையினால் சில அடையாளங்கள், அல்லது பொருள்கள் அல்லது ஒரு இஷ்டமான உலோகம் மாற்றாக உபயோகிப்பது என்று ஏற்பட்டு முடிவில் நாமிப்பொழுது கையாளும் நாணயவியல் ஏற்பட்டிருக்கிறது. தற்காலத்தில் இது தவறான முறையில் பிரயோகிக்கப்படுகிறது. நாணய மாற்றிலிருந்தே லாபம் பெற முயற்சி செய்யப்படுகிறது.

**மாற்றுவதன் நோக்கம் :**

நாம் விற்கும் இடங்களை இன்னும் விசாலமானதாகச் செய்வதற்கு நாணயங்கள் இன்றியமையாதவை. கேவலம் நாணயங்கள் மாத்திரம் நமது தேவை எதையும் திருப்தி செய்வதில்லை. உலோபி ஒருவனே நாணயங்களைக் கண்க்கிட்டுக் தட்டிப்பார்த்து அதைக்கொண்டே திருப்தி அடைவான். நாணயம் என்பது வாங்கும் சக்தியை சேகரித்து வைத்துக்கொள்ள ஒரு சௌகரியமான சாதனம். மேலும் விலை நிர்ணயிக்க சாதகமானது. ஒருவன் தன்னுடைய பசுமாட்டை விற்றுவிட்டு ஒரு ரேடியோ பெட்டி வாங்க விரும்பினால் பசுமாட்டை வாங்க விரும்புபவனும் ரேடியோ விற்க விரும்புபவனுமான ஒரே ஆள் அவனுக்குக் கிடைப்பது கஷ்டம் ஆகையால் பசுவை விரும்பும் ஒருவனுக்குப் பசுமாட்டைவிற்று அதற்கு மாற்றாக வாங்கும் சக்தியை சேகரித்து வைத்து, ரேடியோ பெட்டி விற்பவனைக் கண்டதும் இந்த சக்தியைக் கொடுத்து அதை வாங்கிக் கொள்ளுகிறான். பசுவாங்கப்படும் இடமும் ரேடியோ விற்கப்படும் இடமும் ஒன்றுக்கொன்று மிக தூரத்தில் இருந்தால் இவ்வித சாதனத்திற்கு அவசியம் இன்னும் அதிகமாகிறது. தற்கால ஏகாதிபத்ய ஆட்சியின் கீழ் இயற்பொருள் உற்பத்தி செய்வது ஒருநாடும், அதை உபயோகத்திற்கு ஏற்றதாகச் செய்வது மற்றொரு நாடாகவும் இருப்பதனால் நாணயமாற்று என்பது வியாபாரத்தின் உயிர் நிலையாக ஏற்பட்டிருக்கிறது. ஒரு அரசாங்கமும்

மற்றொரு அரசாங்கமும் தமக்குள் பண்டம்மாற்று முறையில் தீர்வைகளை சரிப்படுத்திக் கொள்ளக்கூடும் என்றாலும், சாதாரணமாய் ஒரு தனிப்பட்ட மனிதன் வைக்கோல் கட்டுகளைக் கொடுத்து அதற்கு மாற்றாக ஒரு அமெரிக்க தேசத்து மோட்டாரை வாங்குவது என்பது இயலாது.

விற்கும் மார்க்கெட்டுகளை தூர இடங்களில் வைத்துக் கொண்டால், அதற்கு சாதகமாக கப்பற்படை, ஆட்படை ஆகாயப்படை ஆகிய எல்லாமும் ஒரு தேசத்திற்கு அவசியமாக இருக்கிறது. வியாபாரத்திற்கு நாணயமாற்றும், ஈரெட்டு முறையும் அவசியம்தான். ஆனால் அவைகளால் நமக்கு நன்மை மாத்திரம் ஏற்படவேண்டுமென்றால் நாம் அவைகளை நமது கைக்கு அடங்கினவைகளாய் வைத்துக் கொள்ளவேண்டும். தேசத்திற்கு தேசம் மாற்றுமுறையானது சரியான வழியில் அமைக்கப்பட்டால், ஓரளவு பண்டம் மாற்றிற்கும் வியாபாரத்தில் இடம் இருக்க வேண்டும். யுத்த சமயங்களில் தபால் முத்திரைகள், நெருப்புப் பெட்டிகள், சீட்டுக் கட்டுகள் முதலியவைகளால் நாணய சாதனங்களின் தொகையை அதிகரிக்கச் செய்துவிட்டு அதை பண்டம் மாற்று என்று தவறாக நினைக்கக்கூடாது. உண்மையான பண்டம் மாற்றுமுறையாலேயே நாணயத்தின் கெடுதல்களைக் குறைக்கக்கூடும்.

சர்க்கார் ஒரு குடியானவனிடமிருந்து அவனுக்குப் பல நாள் உணவு அளிக்கும் பணத்தை வாங்கி அதை ஒரு பெரிய உத்யோகஸ்தனுக்குச் சம்பளமாகக் கொடுத்து அந்த உத்யோகஸ்தன் அதைத் தனக்கு சுருட்டுகள் வாங்கிக் கொள்வதில் உபயோகித்தால், பணமானது மனிதர் நலத்தை அழிக்கும் வஸ்துவாகிறது; நாட்டின் செல்வத்தில் குறைவை உண்டாக்குகிறது. சர்க்காரின் செய்கைகளில் இவ்வித நஷ்டத்தை நாம் அதிகம் கவனிக்கலாம். பண்டம் மாற்று முறையை சர்க்கார் அனுசரித்தால் இந்தியாவின் செல்வத்தில் கோடிக் கணக்கான தொகையை லண்டன் மார்க்கெட்டுகளில் செலவழித்து நமது நாட்டுத்



தொழில்களை மூலதனத்திற்குத் திண்டாடும்விதம் செய்வதைத் தடுக்கலாம்.

வரி வசூலிப்பதில் பண்டம் வசூலிக்கும் முறையை அனுசரித்து, சம்பளம் கொடுப்பதிலும் அம்முறையையே கொண்டால் சர்க்காரின் மூலம் ஏற்படும் நஷ்டத்தை ஓரளவு குறைக்கலாம். இவ்வித முறையை அனுசரிப்பதனால் சில அதிகக் கஷ்டங்கள் ஏற்படும் என்றாலும், அவைகள் சர்க்காரால் சமாளிக்க முடியாதவை அல்ல. அந்த சிரமத்தைக் குறைத்துக்கொள்ள விரும்பி தற்கால அரசாங்கங்கள் முன் இஸ்லாமியரும் யூதரும் கையாண்ட மிக சிலாக்கியமான வருவாயில் பத்தில் ஒரு பங்கு அரசுக்கு என்ற முறையை முற்றும் ஒதுக்கிவிட்டிருக்கின்றனர்.

இம்முறைகள் இஸ்லாமிய நாடுகளாகிய சித்ரால், தீர், ஸ்வாத் முதலிய எல்லைப்புற சிற்றரசாங்கங்களில் மிக நன்றாக இக்காலமும் கையாளப்பட்டு வருகின்றன. பிரிட்டிஷ் இந்தியாவில் விளைபொருள்களின் விலையை உத்தேசமாகக் கணக்கிட்டு வசூலிப்பதுபோலல்லாமல் அங்கே சர்க்கார் கண்டிராக்டர்கள் மூலம் உண்மையில் விளைந்த பொருள்களில் பத்தில் ஒரு பங்கு விகிதம் வசூல் செய்கிறார்கள். ஆடுகள் என்றால் நாற்பதிற்கு ஒன்றாகவும் அல்லது அதன் விலைக்கு ஈடான நெய், முதலியவையோ வசூலிக்கப்படுகிறது. மாடுகள் என்றால் மந்தைக்காக வருஷத்திற்கு ஒரு சேர் நெய் என்று வசூலிககப்படுகிறது. மேய்ச்சல் நிலம் குத்தகை எடுத்து ஜமீன்தாருக்கு வரி கொடுக்கப்படுகிறது.

இவ்விதம் வசூலிக்கப்படும் பண்டங்களை வைத்துப் பாதுகாத்து, சர்க்கார் உத்திரவுப்படி அவைகளை மீண்டும் செலவழிப்பதற்கான கண்டிராக்டர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் உள்நாடுகளில் செலவழிந்தது போக மிகுந்த பண்டங்களை வெளிநாட்டில் விற்று பணத்தை சர்க்கார் கஜானாவில் கட்டுகிறார்கள். அவர்களுக்கு உள்நாட்டு வியாபாரத்திலும் செல்வாக்கு இருக்கிறது. சர்க்காரின் பாங்கிகளாக வேலை பார்க்கும் இவர்கள் மூலம் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்த சர்க்காரால் எளி

தில் இயலுகிறது. சர்க்கார் சிப்பந்திகளில் மிலிட்டரி, சிவில் இரண்டு வகையினருக்கும், உத்யோகஸ்தர் தவிர ஏனையோருக்கு ஒரு பங்கு பண்டமாகவும் ஒரு பங்கு ரொக்கமாகவும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. உத்யோகஸ்தர்களுக்கு முழுதும் ரொக்கமாகவே கொடுக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் இந்தியாவில் வியவசாயிகளின் கஷ்டங்கள் அனேகமானவைகளை இவ்வித முறையை அனுசரித்தால் நாம் குறைக்கலாம். ரொக்கமாக வசூலிப்பது என்று இருப்பதனால் வியவசாயிகள் வாயிதாவைக் காலம் தவறாமல் செலுத்த வேண்டியதன் நிமித்தம் அறுப்புக்கு முன்பே கூட சிற்சிலசமயம் தமது பயிரைவிற்றுவிட வேண்டியிருக்கிறது. முன்பே கூறியிருக்கும் கஷ்டங்கள் தவிர இவ்விதம் நிர்பந்த விற்பனையினால் விலைக்குறைவு ஏற்பட்டு இன்னும் நஷ்டத்தை உண்டாக்குகிறது.

சர்க்கார் சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்கும் காலமும், கோதுமை, நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், பருத்தி முதலியவைகளின் அறுவடை காலமும் ஒன்றாக இருந்தால் இவைகளை வைத்துப் பாதுகாக்கும் சிரமம் குறையும். இவ்விதம் கொடுப்பதனால் வெளிநாடுகளிலிருந்து சாமான்கள் வருவது குறைபட்டு, வெளிநாட்டாருக்கு அதிக அதிருப்தியை உண்டாக்கும் என்றாலும் நமது நாட்டில் தானியங்கள் எங்கும் பரவி இருக்குமாறு செய்வதுடன் தரகர்களின் செலவைக் குறைக்கலாம்.

சரியான மாற்று முறை இருந்தால் சரியான வகையில் பண்டங்கள் பரவியிருக்க சாதகம் ஏற்படும். தற்காலத்தில் உற்பத்திக் குறைவினால் அல்ல, சரியான முறையில் செலவு இல்லாததனாலேயே கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஜனங்களுக்கு உணவு அவசியமாக இருக்கிறது. உணவு பதார்த்தங்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் ஜனங்களிடை வாங்கும் சக்தி இல்லாததனால் அவர்களால் தமது தேவையை பூர்த்திசெய்துகொள்ள முடியவில்லை.



மிட்டாய் கடை எதிரில் நிற்கும் பையனுக்கு மிட்டாய்களை வாங்கித்தின்ன நாக்கில் ஜலம் ஊறினாலும் பையில் காசு இல்லாவிட்டால் அவனால் அவைகளை வாங்க இயலாது. ரொக்கத்திற்கு விற்பனையென்றிருப்பதனால் பையன் ஒரு காசு அச்சடிக்கும் சாலையை வைத்திருந்தால் தவிர அவனால் தனது தேவையை பூர்த்தி செய்துகொள்ள முடியாது.

அஹிம்ஸா முறையில் மார்க்கெட்டுகளை சரிப்படுத்தி, கூடியவரை சிரமமில்லாமல் பண்டங்கள் பரவிவரச் செய்வதற்கும், ஒவ்வொருவர் கையிலும் ஒரு பண உற்பத்தி சாலையைக் கொடுப்பதற்கும் ஏற்றதான வழியை காந்திஜி காட்டியிருக்கிறார். அது ஒரு சிட்டம் நூலை ஓரளவு நாணயமாக எடுத்துக்கொள்வது என்பது. இந்த முறை அமுலுக்கு வந்தால் மிட்டாய் கடை எதிரில் நிற்கும் பையன் வீட்டிற்குச் சென்று தக்கிளியை எடுத்து தேவையான நூலை நூற்றால் அவனுக்கு மிட்டாய் கிடைக்கும். ஜனங்களின் வசம் ஓர் தங்கசாலை இருக்கும். இந்த சாலையில் செல்லாக் காசுகள் உற்பத்தியாகா, ரொக்கத்தினால் ஏற்படும் கஷ்டங்களும் ஏற்படா. இதைப் பாதுகாக்க சேனை, கடல்படை, ஆகாசப் படை, ஆகியவை வேண்டாம்.

நமது நாட்டில் உழைப்பு தனம் அதிகம். உள் நாட்டுத் தேவைகளும் ஏராளமானவை. இம் முறையினால் அந்தத் தனத்தை பயன்படுத்தி நாட்டிற்கு நலத்தை உண்டாக்கலாம். ஆகையால் சரியான மாற்றுமுறை வேண்டுமென்றால் ஓரளவு பண்டம் மாற்று என்றும்; ஓரளவு சம்பளத்தை பண்டமாகக் கொடுப்பதென்பதும் இருக்க வேண்டும்.

**மாற்றுவதன் நோக்கம் :**

பொருள் வாங்கக்கூடிய சக்தி பெற்றிருக்கும் உலோக நாணயங்கள் அழிவற்றவை. ஆனால் உபயோகிப்பதற்கென்று ஆக்கப்பட்ட பொருள்கள் நாளடைவில் அழிந்துவிடுகின்றன. இவ்விதம் அழியாப் பொருளையும் அழியும் பொருளையும் ஒன்றுக்கொன்று மாற்றாக் வைப்பதனால் சில

பாதகங்கள் ஏற்படுகின்றன. ஒரு வாழைப் பழக் காரனுக்கும் அப்பழத்தை வாங்கக்கூடிய நாணயத்தைப் பெற்றிருப்பவனுக்கும் இருக்கும் வியாபாரசக்தி ஒரே வகைப்பட்டதல்ல. வாழைப்பழம் சீக்கிரம் அழுகிவிடும். ஆனால் நாணயத்தை வைத்திருப்பவன் எவ்வளவு தினங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கக்கூடும் ஆகையால் பேரம் பேசும் சக்தியானது கையில் நாணயத்தை வைத்திருப்பவனுக்கே இருக்கிறது. விற்பவனின் சக்தி ஓர் எல்லைக்குட்பட்டதாகி விடுகிறது. இவ்விதமிருப்பதை வாங்குகிறவன் தன்னுடைய நலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறான். பணம் கையிலிருந்தால் நமக்கு லாபம் அதிகம் என்றிருப்பதனால் பணத்தை அதிகம் சேகரிக்கவும் விருப்பமுண்டாகிறது, உற்பத்திக்குச் சரியான உபயோகப்படுத்துதல் இல்லாமல் நாணயம் சுற்றிவருவதும் தடைபடுகிறது.

சிலகாலம் சேர்ந்தாப்போல் மார்க்கெட்டில் விலைக் குறைவு ஏற்பட்டால் கடன் வாங்கினவனுக்கு ரூபாயின் பாரம் அதிகமாகிவிடுகிறது. கடன் கொடுத்தவனின் ரூபாயின் சக்தியோ அதிகரிக்கிறது. இதனாலும் நாணயப் பரவுதலில் வித்யாசம் ஏற்படுகிறது.

## உண்டாக்குவதும் உபயோகிப்பதும் :

மேற்கூறிய குறைகளைத் தவிர்த்து, ஒரு நிலைப்பட்ட உற்பத்தியில் எந்திரங்களுக்காக மூலதனம் அதிகம் வைக்க வேண்டியிருப்பது நாணயத்தைக் கட்டிப்போட்டுவிடுகிறது. நாணயத்தின் கொடுக்கல் வாங்கல் தடைப்படுகிறது. பொருள்களை விற்பதனால் கிடைக்கும் ரொக்கத்தில் ஒரு அம்சம் புது எந்திரங்கள் வாங்குவதற்கும் மராமத்து செய்வதற்கும் தனியாக வைக்கப்பட்டுவிடுகிறது. உற்பத்திசெய்த தொழிலாளிக்கு அந்த உற்பத்தி பொருளின் விலையில் சொற்பமான பாகமே கிடைக்கிறபடியால் அவர்களால் அதிகம் செலவுசெய்ய இயலுவதில்லை. இதனால் உற்பத்திக்கு ஏற்ற செலவு இருப்பதில்லை. தற்கால உலகத்தில் ஏற்பட்டிருக்கும் வியாபார மந்தத்திற்கு இது



ஒரு முக்கிய காரணமாகும். ஒரு தேசத்தினரின் பொருளாக்க முயற்சி தடைபடாமல் ஆறு போன்ற போக்குள்ளதாகவும் போகப் போக மேன்மேலும் சக்திபெற்றதாகவும் இருக்க வேண்டுமென்றால் உற்பத்திசெய்யப்பட்ட பொருளை செலவழிக்க வசதிசெய்து கொடுத்தாக வேண்டும். இவ்வித வசதியானது வாங்கக் கூடியவர்களின் சக்தியைத் தடைப்படுத்தாமலிருந்தாலே ஏற்படும். எந்திரங்களில் முதல் போட்டு, தொழிலாளிகளுக்குக் குறைந்த கூலியைக் கொடுத்து அவர்களுடைய வாங்கும் சக்தியைக் குறைத்தால் உற்பத்திசெய்யப்பட்ட பொருள் விற்பனையாகாமல் நின்றுவிடுகிறது. விசாலமான ஓர் இனிய நீர் கொண்ட ஏரியின் கரையில் ஜனங்கள் அத்தண்ணீரை எடுத்துக் குடிக்கத் தங்கக் கோப்பை இல்லாததனால் தாக வரட்சியுடனிருக்கிறார்கள். முதலாளித்வத்தில் தங்கக் கோப்பைகொண்டே அத்தண்ணீரை எடுக்க வேண்டுமென்று நமக்குப் போதிக்கப்படுகிறது. நாமும் நமது தாகத்தைச் சாந்தி செய்துகொள்ளாமலேயே, அவர்கள் போதிக்கும் விதமே செய்யவேண்டுமென்று எண்ணியிருக்கிறோம். இந்த முறையில் கையில் ரூபாய் இருப்பவனே பொருள் வாங்கக் கூடியவன்—பொருளின் தேவையிருப்பவனல்ல—கையில் தங்கக் கோப்பையுடனே தண்ணீர் மொள்ளக்கூடியவன்—தாகமுடையவனல்ல.

## தொழிலின் கட்டு:

இவ்விஷயத்தை இன்னும் கெடுதலாகச் செய்ய பாங்குகளால் தொழில் உற்பத்திக்குக்கடன் முதலிய வசதிகள் கொடுக்கப்படுகின்றன; ஆனால் பண்டம் வாங்குபவனுக்கு எவ்வித சகாயமும் கிடைப்பதில்லை. பணத்தைத் தமது கையில் பெற்றிருக்கும் முதலாளிகள் பொருளியல் சாஸ்திரத்தைத் தந்திர முறையில் கையாண்டு, கூடியவரை எல்லாத்துறையிலும் தமது அதிகாரத்தை வைத்துக்கொண்டிருக்கின்றனர். சம்பளம் பெற்று உழைக்கும் அடிமைகளுக்கு வேலையை அளந்து அளந்து கொடுக்கிறார்கள். மேன்மேலும் எல்லாத்தொழில்களும் இக்காலத்

தில் முதலாளியின் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒருநிலைப்பட்ட உற்பத்திமுறைக்கு அதிக மூலதனம் கொடுக்கும் சக்தியாரிடமிருக்கிறதோ அவர்களுடைய கையில் வேலையைக் கொடுக்கும் சக்தி பிடிபடுகிறது.

மேலும் நாணயத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவது மிகச் சுலபமாக இருக்கிறது. ஒரு நிலைப்பட்ட ஆட்சி செய்யும் நமது இந்திய சர்க்கார் போன்ற அரசாங்கத்திற்குத் தமது வருமானத்தில் அதிக பாகத்தை நகரங்களில் செலவழிக்கவே விருப்பமுண்டாகிறது. கிராமங்களில் வசூல் செய்யப்பட்ட ரூபாய் நகரங்களில் செலவு செய்யப்படுகிறது. அத்துடன் தேசத்தில் எவ்வளவு நாணயங்கள் பரவலாமென்பதைச் சர்க்கார் கட்டுப்படுத்துகிறார்களே தவிர, விலையைக் கட்டுப்படுத்துவதில்லை. இதெல்லாமும் சேர்ந்து ஏழையை இன்னும் ஏழையாகவும், பணக்காரனை இன்னும் பணக்காரனாகவும் செய்கிறது.

**கிராமங்களில் இதன் விளைவு:**

நமது தேசம் கிராமங்கள் அதிகம் கொண்ட தேசமாகையால் இவ்வித நாணயவியலினால் கிராம வியவசாயிக்கு எவ்வித சாதக பாதகம் ஏற்படுகிறதென்பதை நாம் உணரவேண்டும். கிராமத்து ஜனங்கள் தமக்குள் பண்டங்களை மாற்றிக்கொண்டால் பொருள் கிராமத்தில் தங்குகிறது. பக்கத்து கிராமத்தாருடன் மாற்றிக்கொண்டாலும் பாதகம் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால் கிராமத்து ஜனங்கள் எதுவிதப் பிரதியையும் அடையாமல் வருஷா வருஷம் தங்களுடைய பொருள்களை நகரங்களில் பிறருக்காக செலவழிப்பதற்கென்று கொடுத்துக்கொண்டே வந்தால் அப்போது நஷ்டம் ஏற்படுகிறது. தேசத்தின் அரசாங்க சபைகளில் குடியானவனின் குரல் எட்டுவதில்லை. தான் கொடுக்கும் ரூபாயைச் செலவுசெய்யும் முறையைப்பற்றி சொல்ல அவனுக்கு எவ்வித அதிகாரமும் இருப்பதில்லை. அதே விதம் வெளி தேசங்களிலிருந்து அவன் பொருள் வாங்கும் சமயம் ஏமாற்றப்படாமலிருக்க அவனுக்கு எவ்விதப் பாதுகாப்பும் கிடைப்பதில்லை. நமது தேசத்தைத் தாண்டி பொருள் வெளிச்செல்ல வேண்டுமென்றால் பல எல்லைகளைக் கடந்தாக வேண்டும். அதிகாரம் பெற்றவர்களாலேயே இந்த வேலிகளைக் கடக்க இயலும். வியவசாயிகள் சதா கடனில் மூழ்கினவர்களாகவே இருக்கின்றனர். தேசத்திற்கு தேசம் நாணயவியல் மாறுபட்டால், பொருள்களின் விலை குறைந்தால், இவர்களுடைய கடன் இன்னும் அதிகரிக்கிறது. வேறு கஷ்டங்களும் இவர்களுக்கு இருக்கின்றன. உணவு பதார்த்தங்களை உற்பத்திசெய்யாமல், விற்பனைச் சரக்கை உற்பத்திசெய்யுமாறு சில தரகர்கள் தமது சொந்த லாபத்தை உத்தேசித்து வியவசாயியைத் தூண்டிவிடுகிறார்கள். இவ்வித வேலைக்குக் கையில் அதிக மூலதனம் வைத்திருந்தாலே நஷ்டமில்லாமல் வியாபாரம் நடத்தக்கூடும். இல்லாவிடில் வியவசாயி நாளடைவில் தனது சுதந்திரத்தை இழந்து கேவலம் முதலாளியின் ஆலைத் தொழிலுற்பத்திக்கு இயற்பொருள்களைச் செய்துகொடுக்கும் அடிமையாகிவிடுகிறான். அதிகவிலைக்கு விற்கலாம் என்ற எண்ணத்துடன் முதன் முதல் பயிர்செய்யத் தொடங்கினது போய், நாளடைவில் தமக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் பயிர்செய்ய இயலாமல், முதலாளி வசப்பட்டு இறுதியில் திவாலாகிவிடுகிறார்கள். போன ஜூன் மாதம் ஐக்கிய மாகாணத்தில் உற்பத்தியான கரும்பை சர்க்கரை ஆலைகள் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டதனாலும், வியவசாயிகள் அதை வேறு விதமாக விற்க இயலாததனாலும் 27 லக்ஷம் பொறுமான கரும்பு அழிக்கப்படப்போகிறதென்ற செய்தி பத்திரிகையில் வெளிவந்தது.

வியவசாயமென்பதே, நம்பத் தகுதியற்ற உற்பத்திமுறை. மழையும் வெயிலும் நமக்குக் கட்டுப் படாத விஷயங்கள். வியவசாயத்தில் லாபம் வருவது மிகச் சந்தேகமாக இருக்க, சர்க்காரின் வரியோ நிச்சயமாகக் கொடுபட்டாக வேண்டியதாக இருக்கிறது. சர்க்கார் தமக்கு வரவேண்டியதைப் பண்டமாக வாங்கிக் கொண்டால குடியானவர்களுக்கும் கிராமத்தவர்களுக்கும் அதிக சாதக

மிருக்கும் தற்காலத்திய தந்திரமான மார்க்கெட் முறைகளினாலும், சமார்த்தியப் பேச்சினாலும் வியவசாயிகள் தம்முடைய ரூபாயைத் திருப்தி தராத விஷயத்தில் செலவழித்து விடுகிறார்கள். மிகத் துச்சமான, மலிவான பரதேசிச் சாமான்களை வாங்கித் தம்முடைய கை ரூபாயை நஷ்டம் கொள்வதுடன் தங்களுக்குள் வேலையில்லா நிலைமையையும் ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். இவர்களுடைய பொருள் வெகுதூரம் போகாமலிருக்க, இவர்கள் மட்டும் தூரத்திலுற்பத்தியாகும் பொருளை வாங்குவதனால் ஏழ்மையும், வேலையற்ற நிலைமையும் அவ்விதம் வாங்குபவர்களிடையே இறுதியில் வந்து சேருகிறது. ஆகையால் வெளிதேச வியாபாரத்தில் தடையற்ற போக்கு வரவு ஏற்படும் வரை நமக்குச் சமீபத்தில் செய்யப்படும் சாமான்களையே வாங்கிக் கொள்வது நலம். ரயில், கப்பல் கூலிகள், தீர்வை சுங்கவரி, நாணயவியல் ஆகிய தடைகள் நிறைந்திருக்கையில் வெளிநாட்டு வியாபாரத்தைப்பற்றிப் பேசுவது மடமையாகும். ஏமாந்தவர்களைப் பிடிப்பதற்கே அப்பேச்சு ஏற்றது. ஆகையால் நாம் கவனத்துடனிருந்து நமது ஊர்களில் உற்பத்தி செய்வதையே வாங்குவோமாக.

## உண்மை விலையும் உண்மை நோக்கங்களும்:

பண்டத்தின் விலையானது உண்மையில் தேசத்து ஜனங்களின் உற்பத்திசெய்யும் சக்தியைப் பொறுத்திருக்கிறது. சமூகத்திற்கு ஒரு பொருளின் தேவை எவ்விதமானது என்பதைக் கொண்டே நாம் அதன் விலையை மதிப்பிடவேண்டும். நாமோ நமக்குத் தற்காலம் போதிக்கப்படும் கல்வியின் பயனாக ஒவ்வொரு பொருளையும் ரூபாயைக்கொண்டு மதிப்பிடுகிறோம். அப்பொருள்களை உற்பத்தி செய்தவர்களைப்பற்றியே மறந்துவிடுகிறோம். தொழிலாளி கூட ஏதோ ஒரு பண்டமாகவே மதிக்கப்பட்டு சம்பளம் கொடுக்கப்படுகிறான். அவன் ஒரு உற்பத்தியாளன் என்பது மறந்து விடப்படுகிறது. மிகவும் குறைவாக உற்பத்தி செய்பவனுக்கு இருப்பினும் மிகதனமுள்ளவனுக்கே சமூகத்தில் அதிக மதிப்பு இருக்கிறது. உண்மையான மதிப்பு திட்டத்தில் ஒருவர் ஒரு சமூகத்திற்குச் செய்யும் தொண்டிற்கே ஏற்றதாக மதிப்பு இருக்கவேண்டும். இவ்விதம் தவறாக மதிப்பிடுவதனால் பணம் சேர்ப்பதற்கு தூண்டுதல் ஏற்பட்டு, பணத்தைக் கட்டிவைத்துக் கொள்ளவும் பிறரின் சுதந்திரத்தைக் கட்டுவதற்கும் எண்ணமுண்டாகிறது. அதிகமும் தனம் சேர்ந்தால் அது வெளிதேசத்தில் வட்டிக்குக் கொடுக்கப்பட்டு விடுகிறது. இவ்விதம் செய்வது தேசப்போரில் முடிகிறது. தனம் படைத்த முதலாளி ஆக்கத்தினால் வெளிநாட்டு லேவாதேவி ஏற்பட்டிருக்கிறது. இது இருக்கும்வரை தேசங்களிடை சமாதானம் ஏற்படாது. ஒருவனின் பணத்தைக்கொண்டு அவனுக்கு மதிப்புக்கொடுத்து வரும்வரை பணத்தைச் செலவழிக்க விருப்பமிருப்பதில்லை. ஆகையால் அதிக உற்பத்திக்கும் வியாபார மந்தத்திற்கும் இடம் ஏற்படுகிறது.



## பணமும் தேசப்போர்களும்.

நாணயத்தை மதிப்பாக வைத்துக்கொண்டு உற்பத்தி செய்வதனால் சமூக மதிப்புகள் கவனிக்கப் படாமல் விடப்படுகின்றன. எவ்வித உற்பத்திகளினால் சமூகத்திற்கு அதிக நலம் ஏற்படும் என்பது கவனிக்கப்படாமல், எவ்வித உற்பத்தி அதிக நாணயத்தைத் திரட்டும் என்பதே கவனிக்கப் படுகிறது. அதே விதம் தேசத்தின் புத்திமான்கள் ஜனங்களின் தேவைகளை எவ்விதம் திருப்தி செய்வது, அவர்களுடைய வாழ்க்கையை எவ்விதம் பயன் பெற்றதாகச் செய்வது என்பதை யோசிக்காமல், பிறதேசத்தைத் துப்பாக்கி பீரங்கிகளின் மூலம் எவ்விதம் தமது தேசத்திற்குக் கீழ்படியச் செய்யலாம், அடிமைப்படுத்தலாம் என்பதையே சிந்திக்கிறார்கள். புது வெடிகுண்டுகளையும் விஷப் புகைகளையும் கண்டுபிடித்து சேர்ந்தாப்போல் ஒரு பட்டாளம் முழுவதையும் அழிப்பதற்கு வழி கண்டுபிடிக்க அதிக புத்தி உபயோகிக்கப்படுகிறது. நாணய விலை என்பதன் பெயரைக்கொண்டு சுரண்டல் நடக்கிறது. ரூபாய் லாபத்தை உத்தேசித்து செய்யப்படும் பொருளுற்பத்தியானது ஜனங்களின் தேவை என்ன

என்பதைக் கவனிப்பதேயில்லை. நமது தேசத்திற்கு அவசியமான சாமான்களைச் செய்வதைவிட வெளிநாட்டாருக்காக விநோத, விசித்ர சாமான்கள் செய்து விற்பதனால் அதிக லாபம் வருவதனால் இவ்வித அவசியமான சாமான்கள் செய்யப்படாமலே விடப்படுகிறது. இதனால் நம்மில் அநேகருக்கு வேலையிலலாத் திண்டாட்டம் ஏற்படுகிறது. வெளிநாட்டு வியாபாரம் செய்வதே மிக மிக நாகரீகம் என்று கருதப்பட்டு, அதைப் பெறவே எல்லா முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இவ்வளவு தீங்கிற்கும் முக்கிய காரணம் தங்கத்தைத் தூக்கி, சிங்காதனத்தில் வைத்ததே. தேசத்திற்கு தேசமுள்ள நாணமாற்று விகிதம் அத்தேசத்தின் வாங்கும் சக்தியைப் பொருந்தினதாக இருக்க வேண்டுமே தவிர, வேறு விதமானதாக இருக்கக்கூடாது. தேசங்கள் தங்க திட்டத்திலிருந்து நழுவினது இதன் உண்மையை விளக்கவில்லையா!

## முடிவு:

நமது முடிவு என்ன? பொற்காசைக் கண்மூடித்தனமாய்ப் பின்பற்றினால் நமக்குப் பலதீங்குகள் விளையுமென்பது தெரிகிறது. பொருள்களுக்கு அழியும் குணமும் நாணயத்திற்கு அழியாக் குணமும் இருப்பதால் ஏற்படும் தாரதம்மியத்தை நாம் சரிக்கட்டவேண்டும். கூடியவரை பண்டம் மாற்று முறையில் வாங்குவதும் விற்பதும் இருக்க வேண்டும். சரியான முறையில் உண்டாக்கப்பட்ட பொருளை உபயோகிப்பதுதான் நலம், தனம் சேர்ப்பது நலமல்ல என்ற ஞானம் ஏற்பட்டால் செல்வம் எல்லாரிடமும் சமமாகப் பரவ இடமுண்டாகும். இவ்வித எண்ணமுண்டாக நமது மனதில் மாறுதல் ஏற்படவேண்டும். தனிப்பட்டவனின் லாபத்தைவிட, மனிதரின் முன்னேற்றமே முக்கியம் என்பதை நாம் உணரவேண்டும். நமக்குச் சமீபத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களைக் கொண்டே நமது தேவைகளை பூர்த்திசெய்துகொள்ள நாம் முயலவேண்டும். வெளிநாடுகளிலிருந்து வருவதைக் கூடியவரை வாங்காமலிருக்கவேண்டும்.



நாணயவியல் சீர்திருத்தப்பட்டபிறகே நாம் பண்டம் மாற்றும் முறையை அனுசரிக்கக்கூடும் என்று நினைக்கக்கூடாது. பண்டம் மாற்றுவதற்கு அடிப்படையான கொள்கை என்ன? உண்டாக்குபவனையும் உபயோகிப்பவனையும் சம்பந்தப்படுத்துவது. நாணயவியலினால் உண்டாக்குபவனுக்கும் உபயோகிப்பவனுக்கும் இடையில் வெகுதூரம் ஏற்பட்டுவிடுகிறது. நாம் நமது உள்ளூர் தொழில்களையே ஆதரித்தால் இந்த தூரத்தைக் குறைத்துவிடலாம். உண்டாக்குபவன், வாங்கி விற்பவன், அவனிடமிருந்து வாங்கி விற்பவன், உபயோகிப்பவன் என்றிருந்தால் உபயோகிப்பவனின் ரூபாய் உண்டாக்குபவனிடம் வந்து சேருவது சந்தேகமாகிவிடுகிறது. ஆனால் இவ்விரண்டு பேர்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள தூரம் குறைந்துவிட்டால் நன்மை ஏற்படும். உள்ளூரில் உண்டாக்குவதை உள்ளூரில் வாங்கி உபயோகித்தால் அந்தத் தூரத்தைக் குறைக்க இயலும். உள்ளூர் வியாபாரமே கூடியவரை செய்தோமாகில் நாம் நாணயங்களை உபயோகித்தாலும், பண்டம் மாற்றுவதனால் ஏற்படும் சாதகம் உண்மையில் ஏற்படும்.

உற்பத்தி முறையை அதிக ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. அவ்விதம் செய்யப் புகுந்தால் தனிப்பட்டவர்களுக்கு நலம் ஏற்படாமல் செல்வாக்குள்ளவர்களின் கையில் சக்தி பிடிபடுகிறது. சரியான வகையில் பொருள் வாங்கப்பட்டு உபயோகிப்படுகிறதா என்பதை நாம் கவனித்துக் கொண்டால், வாங்குபவர்கள் உண்மை மதிப்புத்தெரிந்து வாங்கினால், உற்பத்தி முறை தன்னைத்தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளும்.

தேசத்திற்கு தேசம் சமத்வம் ஏற்பட பொருளாக்கத்தில் சுதந்திரம் இருக்கவேண்டும். சமத்வமில்லாவிடில் சண்டை ஏற்படுகிறது. ஆனால் தற்காலம் தேச சமத்வம்" என்று பெரிதாகக் கூவப்படுவதல்லாம் "தேசப் போட்டியே யாகும். ஒவ்வொரு தேசமும் மற்றவர்களையெல்லாம் சமமாகச் செய்துவிட்டுத்தான் மட்டும் எல்லா

ருக்கும் மேல் பட்டதாக இருக்கமுயல்கிறது. இதுதான் இந்த யுத்த மூலதீப்புகளுக்கெல்லாம் காரணம் தேசத்திற்கு தேசம் கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டு ஒவ்வொரு தேசமும் தன் விற்பனையைத் தன் ஊருக்குள் செய்து கொண்டாலே சமாதானம் ஏற்படும். நாணயவியல் நம்மை ஆழத்திற்கு இழுத்துச் சென்றுவிட்டது. நமக்குக் கட்டுப்படாத வெளிநாட்டு மார்க்கெட்டிற்கு இழுத்துச் சென்று விட்டது.. பண்டம் மாற்றும் உள்ளூர் வியாபாரமும் ஏற்பட்டாலே நாம் கரைகாண இயலும்.

---

## அத்யாயம் 14

### பொருளாதார விசாரணையும் புது திட்டம் அமைப்பதும்.

விசாரணைகள் செய்வதிலும் புது திட்டம் அமைப்பதிலும், (Surveying and Planning) பல வகைகள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று அதிகம் வித்யாசப்படும். பொதுப்பட அவைகளை நான்கு வகைகளாகப் பிரித்துக் கொள்வோம்—(1) அறிவு வகை, (2) பிரசார வகை, (3) ஆராய்ச்சி வகை, (4) குணப்படுத்தும் வகை.

அறிவு விசாரணையில் புகுபவர்கள் கேவலம் ஒன்றை அறியவே முயலுபவர்கள். அவ்விதம் அறிய ஒவ்வொன்றையும் பல சாக்ஷியங்களையும் பிரமாணங்களையும், புள்ளி விவரங்களையும் கொண்டு அவர்களுக்கு நிரூபித்த பிறகே அவர்கள் ஒன்றை ஒத்துக்கொள்வார்கள். செலவுபற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. காலத்தை நிரந்தரமென்று கருதுவார்கள். விசாரிக்கப்படும் விஷயத்தில் அனுதாபம், பற்று, சீர்திருத்தும் எண்ணம் எதுவும் அவ்விதமானவர்களுக்குக் கிடையாது. விசாரணைசெய்து தாங்கள் அறிந்ததைச் சொல்ல வேண்டியதே அவர்கள் கடமை. அதற்குப் பரிகாரம் பகவான் அனுக்ரஹத்தாலேதான் ஏற்படும்.

ஒரு கிராமம் ஏழையாக இருக்கிறதென்பதை ரூபிக்க அவர்களுக்கு ஆயிரக் கணக்கான சாக்ஷிகள் தேவை. மிகச் சிரமப்பட்டு, தீர, சாவதானமாக விசாரணைசெய்த பின்பே கிராமத்



தார் பட்டினி கிடக்கிறார்கள் என்ற முடிவிற்கு வருவார்கள். கிராமத் தொழில் க்ஷீணித்திருக்கிறதென்பதை ரூபிக்க இருநூறு முந்நூறு வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் ஆராயப்படும். இவ்விதம் விசாரணை நடத்திய பின் நேர்த்தியான ரிபோர்ட்டுகள் பிரசுரிப்பார்கள். இதுவரை விசாரணை நடத்திய அரசாங்கக் கமிட்டிகளும் ராயல் கமிஷன்களும் இவ்வித அறிவு விசாரணையையே செய்திருக்கிறார்கள். அவைகளின் பலனை நோக்கினால் இவ்விசாரணை அனைத்தும் பயனற்றவை என்பது நன்கு தெரியும். பக்ஷபாதமற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக வெகுதூரத்திலிருந்து அதிக செலவில் நிபுணர்கள் வரவழைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் ஜனங்களுக்கும் ஏதுவித சம்பந்தமும் கிடையாது. சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவும் அவர்கள் விரும்புவதில்லை. இவர்களின் நேர்த்தியான நீண்ட ரிபோர்ட்டுகள் அழகிய முறையில் அச்சிடப்பட்டு செக்ரடரியட் காரியாலயத்தின் அலமாரிகளுக்கு அழகாய் விளங்குகின்றன.

#### பிரசார விசாரணை :

சில விஷயம் நடந்தேற வேண்டுமென்றால் பொதுஜனங்களை நாசூக்காக அதன் அவசியத்தை உணருமாறு செய்யவேண்டும். யானை பிடிக்க முயலும் சமயம் அது வேறு வழியாகச் செல்லவிடாமல் அந்த அந்த வழிகளை தம்பட்டம் தப்பரை அடிப்பவர்களைக்கொண்டு அடைத்து, அதை நேரே குழியில் சென்று விழுமாறு செய்வதுபோல், அரை உண்மைகளையும் புள்ளி விவரங்களை நாசூக்காக எடுத்துச் சொல்லி பொதுஜனங்கள் ஒரு சம்பவம் நடந்தால் நலம் என்று நினைக்குமாறு செய்ய வேண்டியிருக்கும். இவ்வித விசாரணையைச் செய்ய வருபவர்கள் பக்ஷபாதமற்ற மனதுடன் வருபவர்களல்ல; மனதில் ஏற்கனவே ஒரு வித அபிப்பிராயத்தைக்கொண்டவர்கள்.

முன் கூறிய விசாரணையில் இருப்பதுபோல இதனிலும் சாக்ஷிகளும் அத்தாக்ஷிகளும் புள்ளி விவரங்களும் அதிகம் விசாரிக்கப்படும். அவ்விதம் செய்தாலே ஒரு செப்படி வித்தை செய்பவர் தனது பேச்சினாலும் கைஜாடைகளினாலும் பார்ப்பவர் கவனத்தை வேறு விஷயத்தில் செலுத்தி ஏமாற்றுவதுபோல் ஜனங்களை ஏமாற்ற இயலும். ஏகாதிபத்ய பொருள் நிபுணரான ஜே. எம். கெயின்ஸ், சர்க்கார் வாதிகளான எம். எல். டார்லிங் முதலியவர்கள் செய்யும் விசாரணை இவ்விதமானவை. முதற்

கூறிய விசாரணை போலில்லாமல் இவ்வித விசாரணைகளால் அதிகத் தீங்கு ஏற்பட இடமிருக்கிறது.

## ஆராய்ச்சி விசாரணை :

ஆராய்ச்சி விசாரணை செய்வதன் நோக்கம் அறிவு அல்லது அனுபவம் பெறுவது என்பதே. வைத்யகலாசாலையில் சர்ஜன் பிரசங்கம் செய்யும் சமயம் வியாதியஸ்தனின் பரிகாரத்தையல்ல, வியாதியைத்தான் அவர் விவரிக்கிறார். இவ்வித விசாரணை செய்பவர்கள் புள்ளி விவரம் நிறைந்த புஸ்தகங்கள் பிரசுரிக்கவே விரும்புபவர்கள். இதைச் செய்ய நேரில் சென்று இடங்களைப் பார்க்கவேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. புத்தகாலயத்திலிருந்தே செய்து விடலாம். ஒரு வித சீர்திருத்தத்திற்காகவும் அவை செய்யப்படுவதில்லை. இவ்வித விசாரணைகள் பிறந்தபின் மரிப்பதென்றல்ல. சவமாகவே பிறக்கின்றன.

## குணப்படுத்தும் விசாரணை :

குணப்படுத்தும் உத்தேசத்துடன் செய்யப்படும் விசாரணை, நோயை அல்ல, நோயாளியைக் கவனிக்கிறது. ஒரு வைத்தியன் நோயாளியைத் தனது முந்திய அனுபவம், அறிவு ஆகியவைகளின் உதவியைக்கொண்டு, கவனிப்பதன் நோக்கம் அவனைக் குணப்படுத்த ஏற்றவழி எது என்று அறிவதற்கே. இந்த உத்தேசத்துடன் எல்லாக் கேள்விகளையும் கேட்பார். கேள்விகளின் உத்தேசம் க்ஷயரோகத்தைப்பற்றி புத்தகம் எழுதுவதற்காகவுமல்ல, இந்த ரோகத்தைப்பற்றி அதிகம் தெரிந்துகொள்ளவேண்டுமென்பதற்காகவுமல்ல.

இந்த மனப்பான்மை அந்த வைத்யரின் செய்கைகளில் வெளியாகும். அவருக்கு அந்த நோயைப்பற்றி தெரியும். அவ்வித நோய் ஒன்று உளதென்று அவர் நிரூபிக்க வேண்டியதில்லை. சீக்கிரம் குணப்படுத்தவே முயலவேண்டும். காலமும் செலவும் கவனிக்கப்படவேண்டும். வியாதியை உணர்ந்து மருந்து சொல்வது இந்த நோயாளிக்கு ஏற்றதாகவே இருக்கவேண்டும். வைத்யர் சொஸ்தம் செய்யும் திறமையைக்கொண்டு அவரை ஜனங்கள் மதிப்பிடுவார்கள். விசாரணை நடத்துபவருக்கு ஏற்கனவே ஓரளவு சக்தி இருக்கிறதென்பதே அனுமானம். அதை அவர் இந்த விசாரணையில் உபயோகிக்கவேண்டும். வைத்யர் சில கேள்விகள் கேட்டு, ஜுரத்தின் பரிமாணத்தை அளந்தாலும், அவ்விதம் செய்வது சிகித்சைக்காகவே



என்பதுபோல் இவ்வித விசாரணையில் கேள்விகள் கேட்பதும் சிகித்சைக் காகவே இருக்கும். காந்திஜி செய்யும் விசாரணைகள் இவ்விதமான விசாரணைக்குச் சிறந்த திருஷ்டாந்தமாகும். அதிக ஆடம்பரமும் அட்டகாசங்களுமில்லாமல் நோய் எங்கிருப்பதென்றும், மருந்து இன்னதென்றும் அவர் சீக்கிரத்தில் சொல்லிவிடுகிறார்.

இவ்வித விசாரணைக்கு ஏற்ற முறை, விசாரணை செய்பவருக்குரிய குணங்கள், செலவு ஆகியவைகளைக் கவனிப்போம்.

## செய்பவர்கள் :

வைத்யப் பயிற்சி எதுவும் பெறாத ஒருவர் ஒரு நோயைக் குணப்படுத்த முயலுவது சரியானதல்ல என்பதுபோல், இதற்குரிய பயிற்சி பெறாதவர் விசாரணை செய்ய முயல்வதும் திட்டம் அமைக்க முயல்வதும் தவறாகும். நோயாளிக்குச் சிகித்சை செய்ய அழைத்ததும், ஒரு மனிதன் வைத்ய கலாசாலைக்குச் சென்று சிகித்ஸை எப்படி செய்வது என்று கற்றுக்கொண்டு வருகிறேன் என்று போனால் நாம் அவனைப் பரிகசிப்போம். இருந்தும் நிலத்தைப்பற்றின விவரமே அறியாதவர்களையும் குடியானவர்களின் குணமும் வேலையும் என்னவென்பதே தெரியாதவர்களையும் நில விசாரணை குடி விசாரணைக் கமிட்டிகளில் நியமிப்பது வழக்கம். அநேகம் பொருளாதார நிபுணர்கள் கூட குடிகளின் பரிசயம் சிறிதும் அற்றவர்களாக இருக்கிறார்கள். அவ்விதம் எளிய மக்களின் வாழ்க்கை என்னதென்பதை அறியாதவர்கள், ராயல் கமிஷனின் ரிபோர்ட்டுகளைத் தலைகீழ் பாடமாகக் கற்றிருந்தால் என்ன அல்லது பொருளாதார சாஸ்திரத்தின் நுட்பமான விஷயங்களைப்பற்றி தர்க்கிக்கும் திறமை பெற்றிருந்தால்தான் என்ன! விசாரணைக் கமிட்டியில் விஞ்ஞான நிபுணர்களும், பொருளாதார பண்டிதர்களும், ஆஸனங்களுக்கு அலங்காரமாக வீற்றிருக்கவேண்டுமென்பதா அல்லது ஆழ்ந்த தத்வ விசாரணையும் பாண்டித்யமும் பெற்ற சொற்பொழிவுகள் செய்யவேண்டுமென்பதா நமது கருத்து? நாம் வேண்டுவதெல்லாம் குடிகளிடம் அனுதாபத்துடன் குடிகளின் குறையை நீக்க விரும்பும் மனப்பான்மையே. அவ்வித மனப்பான்மை இருந்தால், அவர்கள் பின்பற்றும்முறை உண்மையில் குறையை நீக்கும் முறையாக இருக்கும்.

அவ்விதக் கமிட்டியில் ஒரு அங்கத்தினராக இருப்பதனால், அவர் உழைத்துப் பெறும் மதிப்பைவிட அதிக

மான மதிப்பு எதுவும் கிடைக்காது. ஏதுவித சுயநலமும் ஏற்படாது என்று இருந்தால், அக்கமிட்டியின் அங்கத்தினர்கள் உண்மை உழைப்பாளியாக இருப்பார்கள்.

நமது நாடு ஏழை நாடு. இதன் ஏழ்மையை எவ்விதம் நீக்குவது என்று ஆலோசிக்கப்புகும் கமிட்டி தாங்கள் பெறும் சன்மானங்களினாலும் இந்த விசாரணை ஆலோசனைக்கென்று ஏற்படும் செலவினாலும், நாட்டின் ஏழ்மைத்தனத்தை இன்னும் அதிகரிக்கவே செய்தார்களென்றால் அந்தக் கமிட்டியை நாம் என்னவென்று சொல்வது? மேலும் அவ்விதக் கமிட்டியின் அங்கத்தினர்கள் சாதாரணமாக செல்வந்தர்களிடையிருந்து பொறுக்கப்படுகிறவர்கள். அவர்களுடைய செலவு ஏழைகளிடமிருந்து வசூலிக்கப்படும் வரியிலிருந்து கொடுக்கப்பட்டால் செல்வம் தாறுமாறாகப் பரவ இன்னும் இடமுண்டாகிறது. ஆகையால் இவ்விதக் கமிட்டிகள் மிகச் சிக்கனமாக விசாரணை நடத்தவேண்டும். அதே காரணத்திற்காக கூடிய சுருக்கில் காலதாமதம் செய்யாமல் விசாரணையை நடத்தவேண்டும்.

மேற்கூறிய விதம் சிக்கனமாகவும் சுருக்காகவும் வேலை செய்வதென்றால் மிக விஸ்தாரமான சாக்ஷி விசாரணைகளை ஒதுக்கி எவ்வளவு அவசியமோ, கையிலிருக்கும் வேலைக்கு எவ்விதக் கேள்வி பொருத்தமானதோ அவைகளையே கேட்க வேண்டும். ஒரு நோயாளியின் நோயைத் தெரிந்துகொள்ள வைத்யர் எவ்வித முக்கியக் கேள்விகளை மாத்திரம் கேட்டுத் தெரிந்துகொண்டு தமது வேலையைச் சுருக்கமாகச் செய்வாரோ அவ்விதம் செய்யவேண்டும். வைத்யரின் கேள்விகளால் வியாதியஸ்தனுக்குத் தளர்ச்சி ஏற்படாமல் இருக்க அவர் கவனம் எடுத்துக்கொள்வதுபோல் கமிட்டி அங்கத்தினர்களும் தமது விசாரணையால் குடிகளுக்கு அதிகத் தொந்திரவு ஏற்படாமல் கவனத்துடன் இருக்கவேண்டும்.

கிராம விசாரணை செய்வதென்றால் உண்மையில் கிராமங்களுக்கு நேரில் சென்று குடிகளுடன் சகஜமாகப் பழகி விஷயங்களைக் கிரகிக்க வேண்டும். "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்." ஒரு விஷயத்தைத் தெரிந்து நிரூபிக்க ஆயிரம் சாக்ஷிகள் வேண்டியதில்லை. முக்கிய சாக்ஷிகள் சிலர் போதும். அனேக விஷயங்களை அனுபவத்தைக்கொண்டே நிர்ணயிக்கலாம். கல்கத்தாவிலிருந்து பம்பாய்க்கு ஒரு ரயில் தொடர்



செல்ல வேண்டுமென்றால், எவ்வளவு பிரயாணிகள் எவ்வளவு எடை சாமான்களுடன் எந்த எந்த ஸ்டேஷன்களில் ஏறுவார்கள் என்று கணக்கிட்ட பிறகே வண்டிகள் பூட்டப்பட்டு அத்தொடர் புறப்பட வேண்டுமென்பதல்ல. முந்திய அனுபவங்களைக்கொண்டு ரயில்வே அதிகாரிகள் அன்றைத் தொடருக்கு வண்டிகள் பூட்டுகிறார்களல்லவா? ஆனால் சிற்சில ராயல் கமிஷன்கள் செய்யும் விசாரணை இவ்விதம் ஒவ்வொரு ஸ்டேஷனில் ஒவ்வொரு வகுப்பிலும் ஏறும் ஒவ்வொரு பிரயாணியையும், அவனுடைய மூட்டைகளின் எடையையும் கணக்கிட்ட பின்பே இஞ்சினின் பின் வண்டிகள் பூட்டலாம் என்று நினைக்கிறமாதிரி தோன்றும். மிக விஞ்ஞான முறைபோல் தோன்றும் இம்முறை இந்த வேலைக்கு ஏற்றதல்ல.

## திட்டம் அமைப்பது :

தேவையான சாக்ஷியங்கள், விவரங்கள் முதலியவற்றைப் பெற்றபின் புதுதிட்டம் அமைக்க ஆரம்பிக்கலாம். அவ்விதத் திட்டம் "இல்லாததைக் கொண்டுவா, கல்லாததைப் பாடு" என்ற வகையைச் சேர்ந்ததாக இராமல், நடந்தேறக்கூடியதாக இருக்கவேண்டும். கமிட்டியின் கண்முன் ஒரு இலட்சியம் இருந்தால் அது அவர்களுடைய புது திட்ட அமைப்பில் இடம் பெறும். உதாரணமாக காங்கிரஸ் ஜனத்திரளின் நன்மையையே எப்போதும் மனத்தில் வைத்திருக்கிறபடியால், அதன் ஒவ்வொரு திட்டத்திலும் ஜனத்திரள் பொருள் நிலைமையும் சக்தியும் அதிகரிப்பதே முக்கியமாகக் காணப்படுவதை அறியலாம். ஏற்கனவே முந்தின அத்யாயங்களில் கூறியபடி, பொது ஜனங்களின் சௌகரியத்திற்கானவைகளான தண்ணீர் வசதி, மின்சார வசதி, தந்தி தபால், முதலிய தொழில்களைத் தனிப்பட்டவனிடம் அவனுடைய லாபத்திற்கென்று செய்யக் கொடுக்கக்கூடாது.

ஒவ்வொரு தொழிலையும் ஆராய்ந்து, அதைச் சேர்ந்த எந்த எந்த வேலைகள் எவரவர் செய்கின்றனர், எவ்வித நன்மை தீமை பெறுகின்றனர் என்பதை ஆராயவேண்டும். பிறகு, அவ்வேலைகள் எவ்விதம் அமைத்தல் ஏற்ற முறை என்று தீர்மானிக்கவேண்டும். உதாரணமாக தோலைப்

பதனிடும் வேலையை ஆராய்ந்தால் அதனில் சிலபாகங்களைத் தனிப்பட்டவனும், சிலவற்றை சர்க்காரும் செய்வது சரி என்பது புலப்படும். மரித்த ஜந்துவின் தேகத்திலிருந்து தோலை உரித்ததும் உடனேயே உப்பிலிடவேண்டும். இல்லாவிடில் தோல் அழுக ஆரம்பித்துவிடும். அழுகின தோல் பிறகு நல்லதாகா. மரித்த ஜந்துவை பலவந்தமாக இழுத்து சென்றால்கூட தோல் கெட்டுவிடும். தோல் இவ்விதம் அழுகியோ, காயம்பட்டோ இருந்ததென்றால் அதன் விலை மிகவும் குறைந்துவிடும். பதனிடுவதற்கு ஏற்ற அவகாசம் கொடுக்கவேண்டும். சக்கிலியர்களோ சாதாரணமாக மிக ஏழைகள். ஆகையால் நன்றாக பதனிடும் வரை காத்திருக்க அவர்களுக்குக்கட்டுவதில்லை. இதனால்நமதுநாட்டின்தோல்கள்மிகமட்டமாகஇருக்கின்றன. நாட்டின்செல்வம் கவனிப்பாரற்று அழிவடைகிறது. ஆகையால் தோல்களின் விலையைக் குறையச்செய்ய காரணமாகயிருக்கும் விஷயங்களைச் சர்க்கார் ஆராய்ந்து பார்த்து தக்க உதவி செய்யவேண்டும். தோல் பதனிடும் தொழிலை நாட்டின் செல்வ விருத்திக்குக் காரணமானஒருதொழில்என்பதைஉணர்ந்து, தோல்அழுகுவதற்கு முன்பு அதை உரித்து எடுக்கச் செய்து, உப்பு சர்க்காரின உரிமையாகையால், சக்கிலியர்களுக்கு வரி அன்றியும் தடங்கலன்றியும் உப்பு கிடைக்க ஏற்பாடு செய்து, பதனிடும் சரக்குகள் அவர்களுக்கு மலிவாகக் கிடைக்க ஏற்பாடு செய்து, கடன் தேவை இருந்தால் கிடைக்குமாறு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். வெளிநாட்டுத் தோல்கள் உள்நாட்டுத் தோல்களுடன் போட்டிக்கு விற்கப்பட்டு, இந்த தொழிலையே அழித்துவிடாத விதம் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்விதம் சர்க்காரும், தனிப்பட்ட தொழிலாளியும் சேர்ந்துநடத்தவேண்டியதாகிய தொழிலை, எந்த பாகத்தை சர்க்கார் செய்வது, எந்தப் பாகத்தைத் தனிப்பட்டவன் செய்வது என்று நிர்ணயித்துக்கொடுப்பது தான் சரியான "புது திட்டம் அமைப்பது" என்பதாகும். இவ்விதம் பிரித்துக் கொடுக்காமல், மேல் வாரியாகப் பேசுவது திட்டம் அமைப்பதாகாது. விசாரணைக் கமிட்டிகள் இதை உணரவேண்டும். மேலும் சர்க்கார்



நாட்டுத் தொழில்களின்மேல் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். அவ்விதம் இருந்தாலே புது திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர இயலும்.

இவ்விதம் தொழில்களின்பேரில் இந்திய சர்க்கார் அதிகாரம்படைத்திராமல்இருப்பதாலேயே, அகிலபாரதசர்க்கா சங்கமும், அகில பாரத கிராமக் கைத்தொழில் சங்கமும் சர்க்காரின் வேலைகளைத் தாங்கள் செய்ய முயன்று, திட்டங்கள் அமைத்து, பண உதவி செய்து, சரக்குகளின் பொறுமானத்தை நிர்ணயித்து, விற்பனைக்கு ஏற்பாடுகள் செய்து அவசியமான ரஸாயன விஞ்ஞான ஆராய்ச்சிகளைச் செய்து தொழில் கல்வியை போதித்து, தொழிலைப்பற்றின அறிவைப் போதித்துவர முயலுகின்றனர். இவ்வளவு வேலையும் இந்நாட்டின் சட்டங்களுக்குட்பட்டதாகவும் தனிப்பட்டவரின் சக்தியைக் கொண்டே நடப்பதாகவும் இருக்க வேண்டியதாகிறது. சர்க்காரின் சக்தியின் உதவி கிடைப்பதில்லை. ஆகையாலேயே சர்க்கார் சட்டங்களினால் வெகு சுலபமாக செய்யக்கூடிய உதவியை, நாட்டு மக்களின் தேசாபிமானத்தையும் பொதுஜன அபிப்பிராயத்தையும் கொண்டு பெறவேண்டியதாக இருக்கிறது.

புது திட்டங்களை அமைத்துக் கொண்டு தொழில் செய்ய வேண்டுமென்றால், அது ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி போன்ற ஆராய்ச்சி விஷயம் என்பதை மறந்துவிடக் கூடாது. எந்தக் கணமும் திட்டத்தை மாற்றவேண்டியதாக இருக்கும். ஆகையால இதற்கு வேண்டிய சக்தியும், நாட்டின் பொக்கிஷம், பட்டாளம், ரயில்பாதைகள் ஆகிய எல்லாவற்றின் பேரிலும் அதிகாரமும் வேண்டும். இவ்வித அதிகாரம் சர்க்காருக்குத்தான் கிடைக்குமாகையால் இவ் வேலையைச் செய்ய சர்க்காரே ஏற்றவர்.

அத்யாயம் 15.

## திட்டமான பொருளாக்கம்.

ஸோவியத் ரஷ்யாவின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டதான ஒரு திட்டத்திற்குக் கட்டுப்படுத்தப்பட்ட பொருள் முறை என்பது மேல் நாட்டாருக்குப் புதிதாக இருப்பினும், கீழ் நாடுகளில் ஒரு கட்டுக்கு அடங்கின பொருள் முறை என்பது ஏற்பட்டு பல ஆயிரம் வருஷங்கள் கழிந்திருக்கின்றன. இந்துக்களின் சமூக அமைப்பே ஒரு திட்டமாக ஏற்படுத்தப்பட்ட முறை. அது தொன்று தொட்டு காலமாய் வழக்கத்தில் இருந்து வருகிறது. அது இவ்வளவு நூற்றாண்டுகளாய் நமக்கு உதவியிருப்பதே அதை இயற்றியவர்களின் கூரிய தீர்க்கதரிசனத்திற்கு அத்தாக்ஷியாகும். மேலும் அம்முறை என்றும் அழியா சத்ய விதிகளை ஆதாரமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம். இந்துக்களின் முறையானது வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் ஆதரிக்கிறது—அரசியல், சமூகம், மதம், செல்வம் ஆகிய எல்லாமும் இதில் கட்டுப்படுகிறது. ரஷ்யர்களின் முறை செல்வத்தையும், பொருள் முயற்சியையும் மாத்திரமே கருதி அமைக்கப்பட்டது. போக்கு வரவு சாதனம் ஏதும் இல்லாத பண்டை காலத்தில் இந்தியாபோன்ற பெரிய தேசத்தில் இவ்விதம் பலமுகம்கொண்ட இந்துக்களின் திட்டம் ஏற்படுத்தப்பட்டதை நோக்கினால் ரஷ்யர்களின் இக்காலத்திய பெரிய அமைப்பு ஏதோ ஒரு சிறு பிள்ளையின் விளையாட்டாகவே நமக்குப் படுகிறது.

### நோக்கம்:

ஒரு திட்டத்தை அமைப்பது என்றால் ஏதோ நாம் ஒரு நோக்கம்கொண்டு அதை அடைவதற்கு நாட்டினர் எல்லாரும் முயற்சி செய்வதற்கு வழியாக அமைக்க வேண்டும். ஆகையால் நாம் நமது நோக்கம் என்ன என்பதை நம்முடைய மனக்கண் முன்பு தெளிவாகக் கண்டு தெரிந்துகொள்ளவேண்டும். ரஷ்யாவில், அத்தேசத்திய ஜார்



களின் கொடுங்கோன்மையின் பயனாக நாட்டில் ஒரு வகுப்பு மக்களுக்கு ஏற்பட்ட ஏழ்மையை அகற்றி செல்வம் பரவினதாகவும் ஏராளமானதாகவும் இருக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்தைக் கொண்டே புது திட்டம் அமைக்கப்பட்டது. இதர விஷயங்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டது.

நமது நாட்டிலோ நாம் ஒரு அந்நிய நாட்டினருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம் என்ற ஒரு குறையை நீக்குவதற்கு மாத்திரம் நாம் முயன்றால் போதாது; நமது நாட்டின் தர்மத்திற்கே அடிப்படையான அஹிம்சை என்ற கொள்கையையும் நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். இவ்விரண்டு காரணமும் சேர்ந்திருப்பதாலேயே காந்தி அடிகள் அஹிம்சை முறையில் சுதந்திரப்போர் நடத்துகிறார். ஒருவனுக்கு சுதந்திரம் என்பது எது சரியோ அதைச் செய்ய சுதந்திரம், தன்னுடைய புத்தியைக் கொண்டு நினைக்க சுதந்திரம், தன்னுடைய எண்ணங்களைச் சொல்லுவதற்கு சுதந்திரம், தனது தேவைகளை [illegible] தன் விருப்பப்படி உழைக்க சுதந்திரம் வேண்டும். [illegible]னித சமூகத்தில் சுதந்திரம் என்பது ஒருவன் எது வே[illegible]னால் செய்து கொள்ளலாம் என்று அர்த்தம் ஆகாது; சுதந்திரமென்றால் அதற்குச் சில உரிமைகள், கடமைகள், எல்லைகள் ஆகிய மூன்றும் உண்டு. இந்தக் கடமைகளையும் எல்லைகளையும் மீராமல் காப்பதற்கு வெளியிலிருந்து பலாத்காரம் அவசியமென்றால் அதற்குக் கப்பல் படை, காலாட் படை, ஆகாயப் படை, போலீஸ்காரர் ஆகிய எல்லாமும் தேவை. ஆனால் கட்டுப்படுத்துவது உள்ளிருந்து ஏற்படுவதென்றால், அப்பொழுது சமூகம் அஹிம்சையை ஆதாரமாகக் கொண்டதாகும். நமது கடமைகள் என்ற பகுத்தறிவே நம்மைக் கட்டுப்படுத்தும். உண்மையில் வெளி பலாத்காரத்தினால் கட்டுப்பட்டு நடக்கும் ஹிம்சையை ஆதாரமாகக்கொண்ட சமூகத்தில் சுதந்திரமென்பது அதிகம் கிடையாது. அதனில் அதிகாரத்திலிருப்பவர்களின் கட்டளை[illegible]க் கீழ்படியாவிட்டால் தடியடி கிடைக்கும். இவ்வி[illegible] பெறப்படும் வணக்கம் பயத்தினால் ஏற்படுவது.

நாளடைவில் அது அவநம்பிக்கையையும் க்ஷாத்திரத்தையும் உண்டாக்கும். தற்காலத்திய அதிகம் திட்டப்படுத்தப்பட்ட அரசாங்கங்களாகிய ஜர்மனி, இத்தாலி முதலிய நாடுகளில் தேசமக்களின் வாழ்க்கையே ஒரு அடிமை வாழ்க்கையாக இருக்கிறது—ஒரு எஜமானனுக்கு அடிமை என்றல்ல, ஒரு அரசு என்று கொண்டாடப்படும் பலாத்கார முறைக்கு அடிமை. அங்கு அரசாங்கம் ஜனங்களின் நன்மைக்காக உழைப்பது என்றல்லாமல் ஜனங்கள் அரசிற்கென்று அடிமைப் படுத்தப்படுகிறார்கள். பயம், அவநம்பிக்கை, விரோதம் ஆகியவற்றின் நடுவில் உண்மை சுதந்திரம் வாழமுடியாது. உண்மை சுதந்திரமென்பது ஜனங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கவேண்டும். அதன் ஆதரவில் மனிதன் தனது மிருகக் குணம் குறையப்பெற்று, மானிடத் தன்மை அதிகம் பெற்றவனாவான். சுயநலப் பற்று குன்றி, சமூக உணர்ச்சி அதிகம் பெறுவான். இம்சைக் குணம் குறைந்து, கடமையைப்பற்றிய உணர்ச்சியை அதிகம் பெறுவான். பொருளாசை குன்றி, மனிதர் நலத்தில் அதிகம் பற்றுடையவனாவான். இதுதான் உண்மை சுதந்திரத்திற்கு அடையாளம். மனிதரைப் பட்டாளம் போல் உத்திரவிற்குக் கீழ்ப்படியும் கூட்டமாகச் செய்யும் எந்த அமைப்பும் அவர்களுடைய வளர்ச்சியைத் தடுத்து அவர்களின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்தும். (ரஷ்ய அமைப்பில் இம்முறை காணப்படுகிறது). ஒரு செடியை கூட்டு அறைக்குள் வைத்துப் பாதுகாத்து வளர்ப்பதனால் அது மிக அழகாகக் காணப்படினும், அந்த செயற்கையான பாதுகாப்பைவிட்டு அதை அகற்றினால் அதன் அழகு குன்றிவிடும், இவ்வித செயற்கை அழகு சுவபாவமானதல்ல. நமக்கு இயற்கையான உண்மைப் பொருள் வேண்டுமென்றால் அது தானாக வளரும் காலம் வரை நாம் பொறுமையுடன் இருக்கவேண்டும். பலாத்கார முறைகளினால் சீக்கிரம் பலன் காணலாம்; ஆனால் அவ்விதப் பலன்கள் நீடித்திரா. இந்தியாவில் அஹிம்ஸா முறையில் சமூகம் அமைப்பதற்கென்று பல நூற்றாண்டுகளாய் ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த அஸ்திவாரம் இருக்கிறது. இந்த அஸதிவாரத்தின்மேல் நாம் நமது சமூகத்தை மறுபடி கட்டினோமென்றால், நமது நாகரீக முன்னேற்றம் உண்மையானதாக இருக்கும். நம்முடையதுபோன்ற பண்பு படைத்திருந்த ஜப்பான் அதைவிட்டு மூர்க்கமும் பகட்டானதுமான முறைக்கு மாறினது மிக வருந்தத்தக்க விஷயம். நாமும் அவ்வழி செல்வோமா? அல்லது கவி டாகூர் பாடின சுதந்திர வழி செல்வோமா?



"Where the mind is without fear
And the head is held high,
Where knowledge is free;
Where the world has not been broken
up into narrow domestic walls;
Where words come out from the depth of truth;
Where tireless striving stretches its arms
towards perfection;
Where the clear Stream of reason has not lost its way;
Into the dreary desert sand of dead habit;
Where the mind is led forward
By thee into ever widening thought and action;
Into that heaven of freedom, my father
let my country awake."

**மார்க்கம்:**

மேற்கூறிய இலட்சியத்தை நாம் எவ்விதம் அடைவோம்? அஹிம்ஸா முறையில் ஏற்படுத்தப்பட்ட சமூகத்தில் ஒவ்வொரு தனிப்பட்டவரும் சுதந்திரத்துடன் இருப்பதே நமது நோக்கம் என்பதை நாம் முந்தின பாராவில் விவரித்தோம். நமது நாட்டு ஜனங்களுக்கு ஏற்கனவே அஹிம்ஸா முறையில் ஏற்பட்ட பண்பு இருக்கிறது. நாம் அதை விருத்திசெய்யத் தேடவேண்டும். நாம் பலாத்கார முறையை அனுசரிக்கக் கூடாது. ஆகையால் நாம் மனிதரின் விருத்திக்கு ஆத்ம கட்டுப்பாடும் பயிற்சியும் கொண்ட முறையைப் பின்பற்றவேண்டும். இதற்கு ஏற்றதான வகைகளை திட்டம் செய்யவேண்டும். மிகச் சிரமப்-

பட்டாலே இவ்வித உயர்ந்த குணங்களைப்பெற இயலும். ஜனங்களுக்கு அவ்விதக் குணங்களில் கடுமையான பயிற்சி அளிக்கவேண்டும். ரேடியோ, சினிமா போன்ற கருவிகள் விளம்பரம் செய்யவும், பொழுது போக்கிற்கும் எவ்வளவு தான் ஏற்ற சாதனமாக இருந்தபோதிலும், நமக்குப் பண்பை ஏற்படுத்தா. பண்பு ஏற்பட பண்பைப் பெறுபவர் பண்பையளிக்கும் கருவியுடன் சேர்ந்து உழைக்கவேண்டும்; பார்த்தும் கேட்டும் இருந்தால் போதா. ரேடியோவில் மிக உயர்ந்த சங்கிதங்களை சதா கேட்டுக் கொண்டு இருப்பதனுல் ஒருவன் பாடகனுக ஆக இயலாது. தனது வாத்யத்தில் பல வருஷங்கள் சாதகம் செய்தாலே அவன் சபையில் வந்து பாடக்கூடும். மேல்வாரியான அறிவினுல் பண்பு ஏற்படாது. அனுபவம் என்பது நமது இரத்தத்தில் ஊறி நம்முடன் ஒன்ருகவேண்டும். அவ்விதமாகக் காலம் பிடிக்கும், சிரமமாக இருக்கும். ஆனுல் அது எப்போதும் அழியாமல் இருக்கும். அதற்காக எடுத்துக் கொள்ளும் சிரமத்திற்கெல்லாம் பிரதியளிக்கும். நமது நாட்டிற்கு அஹிம்ஸை முறையில் பண்பும் நாகரீகமும் ஏற்படவேண்டு மென்ருல் அதற்கென்று நாம் அதிக முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.

கொள்ளை முறையில் ஏற்பட்ட ஏகாதிபத்யத்தில், அவ்வித முறையில் பழக்கப்பட்ட மனிதருக்கு சமூகத்தில் பெரிய ஸ்தானத்தைக் கொடுப்பது அவசியமாக இருக் கிறது. அஹிம்சை முறையை அனுசரிக்கும் சமூகத்தில் நாம் எல்லாம் துறந்து, பிறரின் தொண்டிற்கென்றே வாழும் இலக்ஷிய புருஷர்களின் வாழ்க்கையை எடுத்துக் காட்டவேண்டும். நித்யமான, அழியாத மதிப்பை உடை யவைகளைக்கொண்டு பண்பின் நிலையை ஏற்படுத்த வேண் டும். படாடோபமும் சுயநலமுள்ளதுமாக நமது பண்பு இல்லாமலிருக்க் வேண்டுமென்ருல் நாம் பொருள்களைப் பணத்தைக்கொண்டு மதிப்படும் குணத்தை விடவேண்டும்.

அரசியல் விஷயத்தில் சுதந்திரம் பெற்று, அச்சுதந் திரத்தை ஜனங்களின் நலத்திற்கென்று நாம் உபயோகிக்க

முடியாமலிருந்தால், அவ்வித சுதந்திரத்தினால் என்ன பயன்? அந்த சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நாம் ஏராளமான பட்டாளங்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவ்விதப் பட்டாளத்திலிருக்கும் ஜனங்களின் சுதந்திரத்தை நாம் அபகரிப்பது மாத்திரமல்ல, நமது நோக்கத்தையே இழந்துவிடுவோம். ஆகையால் நாம் சுதந்திரம்பெற்று வாழ்வதற்கேற்ற முறையை மிகக் கவனத்துடன் தேர்ந்து எடுக்கவேண்டும்.

## அரசாங்கம் :

அரசு என்பது ஜனங்களுக்குத் தொண்டு புரிவதற்கு. அரசியல் மூலம் நாம் அரசாட்சியை நமது கையில் வாங்கிக்கொண்டு ஜனங்களின் தேவைகளைக் கவனிக்கக்கூடும். அரசாட்சி விஷயங்கள் சிலவற்றில் முன்னோக்குடன் பார்க்கவேண்டும். அவ்விதம் பார்ப்பது தற்கால நலத்திற்கு முரண்பட்டதாக ஏற்படலாம். சிலருக்கு நஷ்டத்தை உண்டாக்குவதாக இருக்கலாம். அவ்வித விஷயங்களை ஒரு உத்யோகஸ்தரின் முடிவிற்கு என்று விடாமல் தேசம் முழுவதற்கும் க்ஷேமம் உண்டாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் உழைக்கும் ஒரு கூட்டத்திற்கு விடுவது நலம்.

இவ்விதக் கூட்டத்தைச் சேர்ந்த மனிதர் தமது பதவியைத் தமது நலத்திற்கென்று பயன்படுத்திக்கொள்ள முயலமாட்டார்கள். அவர்களுக்கு சம்பளதிட்டமும் மிகத் திறமைகொண்ட வியாபாரிகள் சம்பாதிக்கும் தொகையைக்கொண்டு திட்டப்படுத்தப்படாமல், கிராமத்து ஜனங்களின் வருமானத்தைக் கொண்டு திட்டமிடப்பட்டதாக இருக்கும். மத்திய மாகாணத்திலும் பீராரிலும் சர்க்கார் பரிசீலனை செய்து வெளியிட்டிருக்கும் அறிக்கைப்படி அவ்விடத்திய ஜனங்களின் வருமானம் மாதம் ஒரு ரூபாய் என்று ஆகிறது. அவ்விதமானவர்களுக்கு தொண்டு செய்வதற்கென்று, அவ்விதமானவர்களை வரியிட்டு அவர்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை ஆயிரக்கணக்கில் கொடுத்து அதிகாரிகளை நியமிப்பது அநீதியாகும். கிராமத் தொழில்களில் மிக மேன்மையானதன் மூலம் கூட மாதம் ரூ. 75 ஒரு குடும்பம் சம்பாதிக்க இயலாது. ஆகையால் ஒரு டிவிஷனின் கமிஷனருக்கு ரூ. 200 கொடுப்பதுகூட மிகமேற்பட்ட திட்டமே. அதற்கு ஏற்றவிதமே இதர சம்பளங்களும் விதிக்

கப்படும். வக்கீல், டாக்டர் முதலியவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகைகளும், இஞ்சினீர், உபாத்யாயர் முதலியவர் சம்பளங்களும் இந்த திட்டத்திற்கு ஏற்றமாதிரி அமையும். இச்சமயம் சர்க்கார் உத்யோகஸ்தர்களின் உன்னத சம்பளத்தினால் ஏற்படுத்தப்படும் வாழ்க்கை நிலையானது இந்நாட்டின் சக்திக்கு மீறினதாக இருக்கிறது. இதனாலேதான் படித்தவர்களெல்லாரும் ஒரு குமாஸ்தா வேலையாகிலும் கிடைக்காதா என்று தேடி அலைகிறார்கள். படித்தவர்கள் கிராமத்தில் உழைக்க வேண்டுமென்று நாம் விரும்பினால் இந்த குமாஸ்தாவேலையிலிருக்கும் மயக்கத்தை அகற்றவேண்டும். சர்க்காரே வேலையளிக்கும் எஜமானர்களில் மிகப்பெரிய எஜமானராகவும், ஏராளமான தனம் செலவழிப்பவராகவும் இருப்பதால் சரியான முறையில் சரியான விகிதத்திற்கு வேலைகளை விதிக்கவேண்டிய பெரிய பொறுப்பு சர்க்காருடையதாகிறது. நமது தேசிய சர்க்கார் இதை கவனிக்க வேண்டும். காங்கிரஸ் சர்க்கார் மிக உயர்ந்த சம்பளத்தை ரூ. 500 என்று விதித்திருப்பது ஒரு நல்ல ஆரம்பமாகும்.

### சர்க்காரின் கடமைகள் :

அரசாங்கத்தை சரிவர நிர்வகிப்பதுடன், சர்க்கார் ஜனங்களின் தொழில்களிலும் முக்கிய பங்குக்காரராக இருக்கவேண்டும். காடுகள், உலோகங்கள் மின்சார சக்தி நிலையங்கள், தந்திதபால், ரஸ்தா இவைகளைப் பற்றிய பொறுப்பு சர்க்காரைச் சேர்ந்திருப்பதால், ஜனங்களின் பொருள் முயற்சிகளுக்கு சர்க்கார் ஏராளமான நலனோ, தீங்கோ செய்யக்கூடும்.

### காடுகள் :

ஜனங்களின் தொழில்களுக்கு தேவையான இயற்பொருள்களை அளிக்கும் வற்றாத ஏரி போன்றவை காடுகள். நமது நாட்டில் காட்டுச் செல்வம் அதிகம் இருக்கிறது. ஆனால் ஜனங்களுக்கு எந்த சமயம் எவ்விதமான பொருள் தேவையோ அதை அளிக்கும் விதம் காடுகளின் தற்காலத் திட்டம் இல்லை. ஒரு தச்சனுக்கு மரம் தேவை என்றால் அவன் அதை மார்க்கெட்டில் வாங்கிக் கொள்ளுகிறான். அவ்வித மரம் பதம் பெறாமல் இருப்பதனால் தச்சன் செய்யும் பண்டம் வளைந்தும், வெடித்தும் போகிறது. மரங்களுக்கு பதம்



அளிப்பதற்குக் காலமாகும். அவைகளைச் சேகரித்துவைக்க விஸ்தாரமான இடம் வேண்டும். ஒரு சாதாரண தச்சனுக்கு அவ்வளவு காலம் காத்திருக்கவோ, அவ்வளவு விஸ்தாரமான இடம் பெறவோ சக்தி இல்லை. ஆகையால் காட்டு இலாகா தங்கள் மரங்களை மார்க்கெட்டில் விற்பதற்கு முன்பு அவைகளை பதம்படுத்தி விற்கவேண்டும். அதேவிதம் ஜனங்களுக்கு தேவையான, அவர்களின் தொழிலுக்கு அவசியமான பல வகைப்பட்ட காட்டு சாமான்களை சர்க்கார் கண்ட்ரோல் செய்து தேவைக்குத் தகுந்த விதம் அவைகளைக்கொண்டு பூர்த்தியைச் செய்யவேண்டும். காட்டு இலாகாவின் இந்த அம்சம் இக்காலத்தில் கவனிக்கப்படுவதில்லை. காடுகளிலிருந்து வரும் வருமானமே முக்கியமாகக் கருதப்படுகிறது.

### உலோகங்கள் :

சுரங்கங்களும், கல் குழிகளும் ஜனங்களின் புதையல்கள் எனலாம். காடுகளைப்போல் அல்லாமல் இவைகள் சீக்கிரத்தில் வற்றிப்போகும் குணமுள்ளவை. ஆகையால் அவைகளைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளால் ஜனங்களுக்கு வேலை உண்டாகும். உலோகங்கள் நாட்டைவிட்டு அனுப்பப்படுவது ஜனங்களின் பிதுரார்ஜிதத்தை விற்பதுபோலாகிறது. அந்த உலோகங்களை உபயோகித்து பொருள்களை உண்டாக்குவது அவைகளைக் கண்டெடுக்கப்பட்ட நாட்டினரது உரிமை. இன்று இந்தியவில் எடுக்கப்படும் உலோகத்தில் பெரும்பாலும் வெளி நாட்டிற்கு அனுப்பப்படுகிறது. ஆகையால் நாம் ஜனங்களுக்கு வேலையளிக்கக்கூடிய சந்தர்ப்பத்தை இழப்பதும் அல்லாமல் நாட்டின் தனத்தையே இழக்கிறோம். இதர இயற்பொருள்களைப் போல் உலோகங்களை நன்கு பக்குவப்படுத்தி அதனில் வேலை செய்த பின்பே அவைகளை உபயோகிக்கும் பொருளாகச் செய்யக்கூடும். அவ்விதம் உபயோகப் பொருளாகச் செய்த பின்பே அவைகளைப் பற்றின வியாபாரம் ஏற்படக்கூடும். நாட்டின் இயற்பொருளை வெளிநாட்டில் விற்கும் எந்த சர்க்காரும் நாட்டிற்குத் தீங்கு செய்பவராவார். சுயராஜ்ய அரசாங்கம் இருந்தால் இயற்பொருள்களில் சுரண்டல் ஏற்படாமல் பாதுகாப்பது தவிர, அதை நாட்டு மக்கள் தமது தொழிலில் உபயோகிக்கும் விதம் உதவிபுரிவார்கள். இதுதான் சர்க்காரின் ஆதீனத்தில் பெரிய தொழில்கள் உற்பத்தியாக சரியான இடம். இம்மாதிரி பெரிய

தொழிலில் ஒரு எஃகு செய்யும் ஆலையில் சர்க்காரின் ஆதரவில், இரும்புக் கம்பிகளும் தகடுகளும் செய்யலாம். ஆனால் இங்கே மரைஆணிகள், கீல்கள் செய்யக்கூடாது. அவைகளைச் செய்வது கிராமத்துக் கருமானாக இருக்கவேண்டும்.

## மின்சார சக்தி:

நாட்டின் தண்ணீர் சக்தியைக் கட்டுப்படுத்தி மின்சாரசக்தி உண்டாக்கி அதை மக்களுக்குக் குறைந்த விலையில் அளிக்கக் கூடும். இந்த விஷயத்தைத் தனிப்பட்டவர் செய்யவிடாமல் சர்க்காரே மேற்கொள்ளவேண்டும்.

## போக்குவரத்து சாதனங்கள்:

ரஸ்தாக்கள், கால்வாய்கள், இருப்புப்பாதை, கப்பலில் போக்குவரத்து ஆகிய எல்லாமும் அரசாங்கத்தால் அமைக்கப்படவேண்டும். நமது நாட்டில், சாமான்களின் மூட்டை ஏற்றிக்கொண்டு போவதற்கு மிக சுலபமான சாதனமாகிய கால்வாய்கள் மிகக் குறைவாக இருக்கும் குறையுடன், ரயில்வே மார்க்கமாகவே தூரத்திலிருக்கும் இடங்களுக்குப் பண்டம் போவது என்ற முறையும் இருக்கிறது. பண்டங்கள் இங்கும் அங்கும் போவதானது மிகக் கவனத்துடன் விதம் விதமான ஏற்றுக்கூலி விதிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றது. இவ்விதம் கட்டுப்படுத்துவது மக்களின் நலம் ஒன்றை மாத்திரமே உத்தேசித்துச் செய்யவேண்டும். நமது நாட்டில் இப்போது இருக்கும் ரயில்வே கூலி விகிதங்கள் நாட்டின் மூலப்பொருள்களை வெளிநாட்டிற்கு அனுப்பவும், வெளிநாட்டின் ஆலை உற்பத்திப் பொருள்களை நமது நாட்டின் மூலை முடுக்குகளுக்கும்கூட கொண்டுபோய்ச் சேர்ப்பதற்குமே சாதகமாக இருக்கின்றன இம்முறை நாட்டின் தொழிலிற்கு மிகத் தீங்கை விளைவித்திருக்கிறது. இந்தியாவின் தொழில்களில் பெரிதானவைகளில் ஒன்று எண்ணை ஆட்டுவது. அதைப்பற்றிய சில விவரங்களை உதாரணத்திற்கு இங்கே கூறுவோம். மத்ய மாகாணத்திலிருந்து நூறு மணு இலுப்பக்கொட்டைகளை பம்பாய்க்கு அனுப்புவதென்றால் ரயில்வே கூலி ரூ. 46—6—0. ஆனால் மத்ய மாகாணத்திலேயே அகோலா என்ற இடத்தில் அவைகளை ஆட்டி எண்ணை எடுத்து, அந்த நூறு மணு கொட்டைகளின் எண்ணையையும், புண்ணாக்கையும் பம்பாய்க்கு அனுப்புவதென்றால் ரயில்வே கூலி ரூ. 77—15—0 பிடிக்கும். இதனால் மத்ய மாகாணத்து ஆலையானது 100 மணுவிற்கு ரூ. 31—9—0. ரயில் கூலியிலேயே நஷ்டம் பெறுகிறதாகிறது. ஆகையால் இவ்விதம் நஷ்டமடைவதைவிட கொட்டையாகவே பம்பாய்க்கு அனுப்பவே குடியானவர்கள் முயலுவார்கள். இவ்விதம் பத்தாயிரக்கணக்கில் தனி விகிதத் திட்டங்கள் இருக்கின்றன. ஒரு தேசீய சர்க்கார் இருந்தால் இந்த அநீதிகளை முதலில் நீக்க முயலுவார்கள். விவசாயிகளின் பொருளாதாரத்திற்கு லாபகரமான திட்டங்களைக்கொண்டு கட்டுப்படுத்துவார்கள். ரயில் பாதைகள் மிக சௌகரியமான சாதனங்களே, ஆனால் அவைகளைக் கொண்டு மக்களை ஏழ்மைப்படுத்துவது சுலபம். அவ்விதம் செய்யக்கூடாது.



## வரி:

சர்க்காரின் வேலை நடப்பதற்கு அவர்களுக்கு தனம் தேவை. இது வரியின்மூலம் கிடைக்கிறது. உணவுற்கே போதுமான ஆதாயமில்லாமலிருக்கும் ஏழைகளிடமிருந்து அவர்களுடைய சக்திக்கு மேற்பட்ட வரி வசூலிக்கப்படாமலிருக்கிறதா என்று நாம் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும். வசூலிக்கும் வரியையும் செலவழிக்கும் வகையில், அந்த வரியைக் கொடுத்தவர்களின் வருமானம் அதிகமாக்கும் விதம் தனத்தை உபயோகிக்கவேண்டும்.. கிராமத்திலிருந்து வரி வசூலித்து நகரத்தின் செலவிற்கென்று அதை செலவழித்தால் மக்கள் ஏழையாவார்கள். ஏற்கனவே சர்க்கார் உத்யோகஸ்தர்களின் சம்பளம் குறைக்கப்படவேண்டுமென்பதைக் கூறியுள்ளோம். இரண்டாவதாக பண்டமாக ஓரளவு வரி வசூலிக்கப்படவேண்டும். உத்யோகஸ்தர்களின் சம்பளமும் ஓரளவு பண்டமாகவே கொடுபடலாம். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில், பட்டாணியர் நாட்டில் இம்முறை இன்றும் திருப்திகரமாக நடக்கிறது.

## செலவுகள்:

ஓரிடத்திலிருந்து வரியை வசூலித்து மற்றொரு இடத்தில் அதைச் செலவழித்தால், வசூலிக்கப்பட்ட இடம் ஏழ்மையாகும். கூடியவரை வரிப்பணம் வசூலிக்கப்பட்ட இடத்திலேயே செலவழிக்கப்படவேண்டும். விதேசி பொருள் மலிவாக இருக்கிறதென்று ஒரு தனிப்பட்ட மனிதன் அதை வாங்கலாம். ஆனால் சர்க்கார் அவ்விதம் செய்யக்கூடாது. உள்ளூரில் காகிதம்

கிடைக்கையில், சர்க்கார், ஸ்வீடன் தேசத்திலிருந்து காகிதம் தருவித்துக் கொண்டார்களென்றால் அது நாட்டு மக்களுக்கு, சர்க்காரின் செலவிற்கென்று வரியைக் கொடுக்கும் மக்களுக்குத் தீங்கு செய்வதாகும். விதேசிக் காகிதம் ஒரு அணாவாகவும், நாட்டுக் காகிதம் 1½ அணாவாகவும் இருந்தாலும் அப்பொழுதும் ஜனங்களின் நலத்தை உத்தேசித்து இவ்வித அதிக விலை கொடுப்பதே சிக்கனமான முறை. ஒரு அணா கொடுத்து அது நாட்டை விட்டு வெளியே போவதைவிட, 1½ அணா கொடுத்து நாட்டிற்குள்ளேயே செல்வம் பரவினால், வரி கொடுப்பவர்களின் சக்தி குறையாமல் இருக்கும். ஆகையாலேயே சர்க்காரின் செலவுகள் வரி வசூலிக்கப்படும் இடங்களிலேயே கூடியவரை செலவு செய்யப்படவேண்டும்.

## பெரிய தொழில்கள் :

பெரிய தொழில்கள் ஏற்பட்டால், அதனில் வேலை செய்யும் பெருந் தொகையான ஜனங்களின் வாழ்க்கை அத்தொழிலில் கட்டுப்படுகிறது. உண்மை ஜனநாயகத்தில் இவ்வித அதிகாரத்தை ஒரு தனிப்பட்டவனுடைய கையில் கொடுக்கக் கூடாது. அவை சர்க்காரால் செய்யப்படவேண்டும். அநேகமாய் சர்க்காரின் உதவி இல்லாமல் பெரிய தொழில்களை நடத்துவது சிரமம். ரயில் பாதைக் கூலியிலிருக்கும் ஏற்றத் தாழ்வைப் பற்றி முன்பே கூறினோம். பெரிய உற்பத்திக்கு ரயில்பாதை வசதி, கப்பல் வசதி, கிடங்குவசதி ஆகிய பல தேவை. இவ்வித வசதிகளை, வரிகொடுக்கும் ஜனங்களின் பணத்தைக்கொண்டு செய்துகொடுத்து, அதனுடைய லாபத்தை தனிப்பட்டமனிதன் எடுத்துக்கொள்வதென்றால் அதுசரியல்ல. பொதுப் பணம் பொது ஜனங்களின் நன்மைக்கென்று மாத்திரமே செலவழிக்கப் படவேண்டும். இந்தக்காரணம் கொண்டும் பெரிய தொழில்களை சர்க்காரே நடத்தவேண்டும்.

ஜனங்களின் சிறு சிறு தொழிலுக்கு அவசியமான உலோகங்கள், மரங்கள் முதலிய இயற்பொருள் கிடைக்குமாறு செய்யப் பெரிய தொழில்கள் மிக அவசியம். அவ்வித இயற்பொருள்களைப்பற்றின அதிகாரம் முழுவதையும் தனிப்பட்ட மனிதர் கையில் அவர்கள் இஷ்டப்படி செலழிக்குமாறு விடுவது நல்லதல்ல. ஆகையால் அவ்விதத் தொழில்களும் சர்க்காரின் அதிகாரத்தின் கீழ் இருக்கவேண்டும், பொருளாதாரத்தில்



பெரிய தொழில் என்பது அரசாங்கத்தில் ஜனநாயகம் என்பதற்கு நேர்விரோதமானது. மேல் நாடுகளில் பெரிய பெரிய தொழில்கள் தற்செயலாக ஏற்படவில்லை. அந்நாட்டினர் அதிகார அரசாக்ஷியிலேயே பற்றுகொண்டு அதிகார முறையிலேயே நினைப்பதனாலேயே அவ்வீதத் தொழில்முறை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தில் சர்வாதிகாரமும், பொருளாதாரத்தில் ஒரு நிலைப்பட்ட உற்பத்திகளும் அங்கே இருக்கின்றன. இவை ஒன்றுக் கொன்று துணை.

உண்மை ஜனநாயகம் வேண்டுமென்று நாம் விரும்பினால், உபயோகப் பொருள்களை ஒருநிலைப்பட்ட உற்பத்தி மூலம் செய்வதென்பதை நாம் விடவேண்டும். இதனால் ஒரு நிலைப்பட்ட உற்பத்தியே கூடாது என்பதாகா. ஒவ்வொன்றுக்கும் அதனதன் இடம் இருக்கிறது. அவ்வித இடமானது ஒரு எல்லைக்குள் அடங்கியதே. அவ்வித எல்லைக்குள், சர்க்காருக்குச் சொந்தமாய், சர்க்காரால் நடத்தப்படும் தொழிலகள் ஜனங்களுக்கு மூலப்பொருள்களை அளிக்கவும், பொதுஜன. சாதகமான தந்தி தபால் போக்குவரத்து, தண்ணீர் மின்சார வசதிகள் முதலியவைகளை நடத்தவும் ஆகிய இவ்வகையான பெரி ு ஒரு நிலைப்பட்ட தொழில்களுக்கு இடம் இருக்கிறது. சில ரசாயன பதார்த்தங்கள் மிகச்சொற்பமாக உபயோகித்தால் மருந்தாகவும், அதிகம் உபயோகித்தால் விஷமாகவும் இருப்பது போல் ஒருநிலைப்பட்ட உற்பத்தியும் ஜனங்களின் பொருள் முயற்சிக்கு ஒத்ததாக இருந்தால் ஒருநல்ல விஷயமாகவும், ஜனங்களைச் சுரண்டுவதற்கென்று உபயோகித்தால் மிகத் தீங்கு செய்வதாகவும் ஆகும். அவ்விதத் தொழில்கள் தமக்கு நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டாலும் ஜனங்களின் நலத்தையே நாடிற்றென்றாலே இது இயலும். ஆகையால் சர்க்காராலே அவைகள் நடத்தப்படுவதுதான் உத்தமம்.

## பொருள் முயற்சி :

தத்தம் தேவையைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்வதற்கு ஜனங்களுக்கு சுதந்திரம் வேண்டும். மிகச் சுலபமாகவே இதை ஏறபடுத்தலாம். லாபத்தைக்கட்டுப்

படுத்தினால் தொழிலில் ஒழுங்கு ஏற்படும். இப்போது உலகத்திலிருக்கும் கஷ்டம் உற்பத்தி குறைவினால் ஏற்படுவதல்ல, சரிவர பரவிய பங்கீட்டிற்கு இடமில்லாதிருப்பதே. ஆகையால் நாம் திட்டப்படுத்தும் முறை பண்டங்கள் பரவி இருந்து எல்லாருக்கும் கிடைக்கக் கூடியமுறையில் இருக்கவேண்டும்.

**பங்கீடு :**

ஒரு நாட்டின் செல்வம் என்பதை ஒரு சிலர் கையில் வைத்திருக்கும் ரொக்கத்தைக்கொண்டு மதிப்பிடக்கூடாது. அந்நாட்டின் பெரும்பான்மையோர் தமது தேவைகளை அதுவும் முக்கிய தேவைகளை எவ்விதம் பூர்த்திசெய்து கொள்ளும் சக்திபெற்றிருக்கிறார்கள் என்பதைக் கொண்டே மதிப்பிடவேண்டும். ஆகையால் ஒரு நாட்டில் கோடீச்வார்களின் எண்ணிக்கை ஒன்றிரண்டு அதிகமாகி இருக்கிறதென்பதனால் அந்நாட்டின் செல்வம் அதிகமாகிவிட்டதென்பது ஏற்படாது இவ்விதம் செல்வம் திரண்டு சிலர் கையில் இருப்பது பங்கீடு சரியாக இல்லாததனால் ஏற்பட்டது என்றால், அவ்விதப்பணக்காரர்களின் தொகை அதிகரிப்பது நாட்டின் வறுமையையே காண்பிக்கும். ஒரு நாட்டின் செல்வத்தை மதிப்பிடும் சமயம் நாம் பொதுமக்களிடம் பண்டம் வாங்கும் சக்தி எவ்வளவு இருக்கிறதென்பதைக் கவனிக்கவேண்டும். இவ்விதம் மக்களிடை வாங்கும் சக்தியை அளிக்கும் குணமுள்ள தொழில்களே நாட்டிற்கு ஏற்றதொழில்கள், சிலருக்கு அதிக திரவியம் சேகரித்துக் கொடுக்கும் தொழில்கள் நாட்டின் நலத்திற்கு ஏற்ற தொழில்கள் அல்ல. செல்வத்தை எல்லாரிடமும் பங்கீடு செய்வதான குடிசைத் தொழில்கள் மிக்க ஏற்றவை. அதுவும் நமது நாட்டைப்போல் மூலதனம் குறைவாகவும் உழைப்பு தனம் அதிகமாகவும் இருக்கும் நாட்டிற்கு அவ்விதத் தொழில்களே ஏற்றவை. ஆகையால் நாம் பொறுக்கி எடுக்கும் பொருள் முயற்சி முறையானது இந்த பங்கீடு விஷயத்திற்கும் சாதகமானதாக இருக்கவேண்டும்.

ஒரு நிலைப்பட்ட உற்பத்தியானது சிலர் கையில் தனத்தைச் சேர்க்கிறது. அதற்கு மூலதனமும் அதிகம்வேண்டும். மூலதனம் அதிகம் வேண்டியிருப்பதனால், அவ்விதத் தொழில்கள் எல்லோராலும் செய்யக்கூடியவை அல்ல; மேலும் தனத்தை பரவச் செய்யாமலிருப்பதனால் அவை நமக்கு ஏற்றவை அல்ல.



முதலாளித்வ முறையும் ஒரு நிலைப்பட்ட உற்பத்தியும் மூலதனம் கிடைத்தாலே ஏற்படக்கூடியவை. அவ்விதம் கிடைக்காத ஏழ்மைமிகுந்த நமது நாட்டில் நாம் வருமானத்தைக் கொண்டு, அதாவது நாளுக்குநாள் வரும் வருமானத்தைக் கொண்டு ஜீவிக்கக்கூடிய தொழில்களையே திட்டப்படுத்தக் கூடும். மிகத் தேர்ந்த சிற்பிகளால் கட்டப்பட்ட அரண்மனையைப் பழுது ஏற்படாமல் அவ்வப்போது செப்பனிட்டுப் பாதுகாக்கத் தேர்ந்த சிற்பிகள் வேண்டும். ஆனால் மண்ணால் கட்டப்பட்ட குடிசையை அதில் வசிக்கும் குடியானவனே தன்னுடைய உழைப்பினால் செம்மையாக வைத்துக்கொள்ள இயலும். முதல் கூறியதற்கு மூலதனம் வேண்டும், இரண்டாவதற்கு உழைப்பு தனம் போதும்.

ஒரு தேகத்தின் ஆரோக்கியம் நல்ல வகையான, எல்லா சத்துக்களும் அடங்கின உணவினால் ஏற்படுவது போலவும், ஒரு சமூகத்தின் ஆரோக்யம் எல்லா வகைத் தொழில்களும் அடங்கின பொருளாதார நிலைமையினால் ஏற்படுகிறது ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வகைத் தொழிலிலும் தேர்ந்தவர்களான சில தொழிலாளிகள் இருக்கவேண்டும். மனிதனுக்கு அன்னம் முக்கிய ஆகாரமாக இருப்பினும், அதுமாத்திரம் போதா. இதர பண்டங்களும் வேண்டும் எல்லாரும் வியவசாயத்தையே மேற்கொண்டால், அந்த சமூகத்தில் குறைவு உண்டாகும்— ஆகாரக் குறைவினால் தேகத்தில் வியாதி ஏற்படுவதுபோல், தொழில் குறைவினால் சமூகவியாதி ஏற்படும். இந்தியாவின் முக்கிய வியாதி இதுவே. உதாரணமாக, கிராமத்தட்டான்களின் தொழில் க்ஷீணித்து விட்டது; தங்கத்தில் வேலை செய்த அவர்கள் தங்கள் கையினால் கல் உடைத்து ரஸ்தாவில் வேலை செய்கிறார்கள். பல நூற்றாண்டுகளாய்ப் பயின்ற வித்தையை இந்திய தொழிலாளிகள் இழந்துவருவது ஜனசமூகத்திற்கே ஒரு பெரிய நஷ்டம். காலம் மாறுவதனால் அந்தத் திறமைசாலிகளான தட்டான்கள் இப்பொழுது தங்கள் திறமையைக் கொண்டு இக்காலத்திற்கேற்ற வேறு தொழில்களைச் செய்யலாம்; கடிகாரம், கைக்கடிகாரம் முதலியவைகளைச் செய்யலாம், ஆனால் இந்தியாவில் அவை

கள் இப்போது ஏராளமாக இறக்குமதி ஆகின்றன. நமது ஆட்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுகிறது. அவர்கள் பட்டினி கிடந்து தமது சக்தியை இழக்கிறார்கள்.

## உழைப்பைப் பிரித்துக்கொள்வது :

ஒருவன் செய்யும் தொழிலும், அவனுடைய தினசரிக் கடமைகளுமாகச் சேர்ந்து அவனுக்குப் பூரண ஆத்ம வளர்ச்சி ஏற்படக் காரணமாக இருக்கவேண்டும். ஒரு நிலைப்பட்ட உற்பத்தியில், பிரித்துப் பிரித்துக் கொடுக்கப்படும் வேலை புதிது புதிதாக சிருஷ்டிக்கவும், சுயசிந்தனைக்கும் இடம் கொடுப்பதில்லை. பெரிய தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளி அந்த ஆலையின் எந்திரத்தில் ஒரு சக்கரம் போலாகிறான். தன்னுடைய மானுஷ்யத்தையும் சுதந்திரத்தையும் இழக்கிறான்.

நமது நாட்டு மக்கள் மிக ஏழைகள். இங்கே உழைப்பு அதிகம் கிடைக்கும். ஆனால் மூலதனம் கிடையாது. ஆகையால் நாம் மூலதனம் அதிகம் அவசியமில்லாதவையும், இயற்பொருள்களும் விற்பனைக்கு மார்க்கெட்டுகளும் சுலபமாகக் கிடைக்கக் கூடியவையுமான தொழில் முறையையே சிந்திக்கவேண்டும். இந்த விஷயங்களைப் புறக்கணித்து நாம் வேறுவிதமாக திட்டம் தயாரிப்பது பயனில்லை. நமது நாடு வேறுவிதமாக இருந்தால் நாம் வேறுவிதம் சிந்திக்கலாம். ஆனால் இப்பொழுது இருப்பதற்கு ஏற்றமுறை சிறிய சிறிய குடிசைத் தொழில்களே—பெரிய ஆலைத்தொழில்களை நாம் ஏற்க இயலாது.

## அஹிம்சையான சுதேசி :

முன்பு, வங்காளப் பிரிவினைக்குப் பிறகே நாட்டில் சுதேசிப் பிரசாரம் ஆரம்பித்து பொருளாதார சீர்திருத்தம் கிளம்பிற்று. அச்சமயம் சுதேசி என்பது அரசியல் தந்திரமாகவே இருந்தது; அதாவது விதேசிக்கு மாறாக சுதேசி. ஆனால் இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம் பொருளாதார விஷயங்களே, அரசியல் விஷயங்களல்ல என்பதைக் காந்தியடிகள் மிகச் சுருக்மாகப் புரிந்துகொண்டார்கள். மிகவும் பரிகாசத்திற்கு இடமானதாகவும், துச்சமானதாகவும் அச்சமயம் காணப்பட்ட கதர் இயக்கத்தை அவர் மிகத் திடசித்தத்துடன் மேற்கொண்டார். இது கிராம மக்களின் உயிராகிய விதைகளுக்குத் தண்ணீர் வார்த்து மக்களின் மனதில் அவருக்கு ஆலயம் உண்டாக்கிவிட்டது. கதர் இயக்கத்தின் காரணமாக் விதேசித் துணி



பகிஷ்கரிக்கப்பட்ட சமயம், பிரிட்டிஷ் சர்க்காரால் விதிக்கப்பட்ட வரி விதிதங்களைவிட மிகத் துன்பமளிப்பவைகளான பல வித அவசரச் சட்டங்களையும் ஜனங்கள் பொறுத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டனர். மனிதரால் சிருஷ்டிக்கப்பட்ட பீரங்கிகளின் குண்டுகளைவிட இன்னும் அதிக சக்தியுடன் கதர் இயக்கம் மான்செஸ்டர் நகரத்தை அஹிம்ஸை முறையில் வீழ்த்திற்று.

அரசியல் சுதேசி என்பது ஒரு எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைக் குறிக்கலாம். அப்பொழுது அதற்கு தர்மாதர்ம விதிகள் கிடையாது. அரசியல் முறையில் சுதேசியைக் கொண்டாடி, விதேசியை பகிஷ்கரித்தால், அதனால் விரோதத்திற்கும் எரிச்சலுக்கும் இடம் உண்டாகும். நமது அயலான் செய்யும் பொருள்களை நாம் வாங்காமலிருப்ப தென்றாலோ, அது நமது சக்திக் குறைவை மாத்திரமே காண்பிக்கும். அரசியல் பகிஷ்காரத்தினால் சண்டை ஏற்படலாம்; உண்மை சுதேசித்வம் இருநாட்டினரைச் சேர்த்துப் பிணிக்கும். உண்மை சுதேசி என்பது பண்டம் வாங்கும் ஒருவன் தனது கடமையை நேர்மையுடன் செய்வதையே குறிக்கும். ஒரு வியாபாரம் என்பது ஒருவன் பணத்தைக் கொடுப்பதுடனும் ஒருவன் பண்டத்தைக் கொடுப்பதுடனும் முடிந்துவிடாது; அத்துடன் தான் பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளும் கட்டுண்டிருக்கின்றன.

நமது மனதில் மனிதரை மனிதருடன் சேர்க்கும் உண்மை அன்பு இல்லாவிடில் ஒரு நிலைப்பட்ட தொழிலினால் ஆவது என்ன, பல நிலைப்பட்ட தொழிலினால் ஆவது தான் என்ன? ஜப்பான் குடிசைத்தொழில் முறையை அதிகம் கையாளுகிறது என்று சொல்லுகிறார்கள். குடிசைத்தொழிலை உபயோகித்து ஜப்பான் சைனாவை சுரண்டப் பார்த்தால், நாம் அதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. சமீபத்தில் காந்தி அடிகள், நற்சாக்ஷி பத்திரம் பெறாத கடைகளில் கதர் வாங்க வேண்டாமென்ற அறிக்கையை விடுத்துள்ளார். ஏன்? பண்டங்களையும் அவைகளின் விலையையும் பற்றினவரை இந்தக் கடைக்கும் அந்தக் கடைக்கும் எவ்வித வித்யாசமும் இல்லை. ஆனால் தர்ம முறையில் நோக்கினால் அதிக வித்யாசம்

இருக்கிறது. நூற்பவனுக்கு சாப்பாட்டிற்குப் போதுமான கூலியாகிலும் கட்டாயம் கொடுக்கப் படவேண்டுமென்று அகில பாரத சர்க்கா சங்கத்தினர் நிர்ப்பந்தமான திட்டம் விதித்திருக்கின்றனர். ஆகையால் அதனுடைய விலையை தர்ம முறையில் பெற்றிருப்பதான சர்க்கா சங்கத்தின் கதர் உண்மைக்கதர். மற்றதோ சுரண்டல் முறையில் உற்பத்தி செய்யப்பட்டதாய் மனிதர் துக்கத்தைப் பெற்ற கதராக இருக்கலாம். ஆகையால் பல நிலைப்பட்ட தொழில்களிலும் நாம் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஒரு பண்டத்தின் தூய்மையைப்பற்றி அறிய விரும்புகிறவர், தமக்குத் தெரிந்த இடங்களுக்குள்ளேயே உற்பத்தி செய்யப் பட்ட பொருள்களை வாங்குவது நலம். சுதேசி என்பதற்குக் காந்தியடிகள் கூறும் அர்த்தம் இதுவே.

**விலை :**

குடிசைத் தொழில் உற்பத்தியில் செய்யப்பட்ட பொருள்களில் பெரும்பான்மையான அம்சம் அதைச் செய்பவர்களின் கூலிக்கென்று கொடுக்கப்படுகிறது ; மூலப்பொருள்களின் விலை மிகவும் சொற்பம். ஆலைத் தொழில்களில் உற்பத்தி உழைப்பிற்கென்று கொடுபடும் கூலி மிகக்குறைவு. அதிக அம்சம் யந்திரங்கள், இடம் முதலிய செலவிற்கென்றும் விற்பனை ஏற்பாடுகளுக்கென்றும் கொடுபடுகின்றன. மேல் நாட்டு பொருளாதாரமானது குறைந்த விலையைக்கொண்டு ஏற்படுபவை; ஆனால் ஒரு வியவசாய சமூகத்திற்கு அதிக விலை நலத்தை அளிப்பது. குடிசைத் தொழில் பண்டங்களின் விலை அதிகமாக இருப்பது அவை மூலம் செல்வம் பரவுவதற்கு உதவியாக இருப்பதால் ஜனங்களுக்கு அம்முறை அதிக நலத்தை உண்டாக்கும்.

**சுய உதவி :**

அதனுடைய உற்பத்திப் பொருள்களை வாங்கும் ஜனங்கள் சுய சக்தியற்றவர்களாக இருந்தாலே முதலாளித் தொழில்கள் முன்னுக்கு வரக்கூடும். வாங்குபவனின் வேலைத் திறமை முழுவதையும் அது அழிக்கப்பார்க்கிறது. குடிசைத் தொழில் முறையில் ஒவ்வொருவரும் திறமையுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்க்கிறோம்.



**பொருட்காக்ஷிகள் :**

முதலாளித்வ முறையில், பண்டங்களை அதிகம் விற்பதற்கென்றே பொருட்காக்ஷிகள வைக்கப்படுகின்றன; அதாவது உற்பத்தி அதிகம் ஏற்பட்டபின், அவைகளுக்கு ஏற்ற தேவையை உண்டாக்குவதற்கென்று வைக்கப்படுகின்றன. இது சரியான முறையல்ல. காந்தியடிகளின் முறையிலோ, பொருட்காக்ஷிகள் என்பது ஒருவகைக் கல்விச்சாலையாக, ஒரு பண்டம் மூலப்பொருளிலிருந்து உபயோகப் பொருளாக எவ்விதம் மாறுகிறது என்பதை ஜனங்களுக்கு எடுத்துக்காண்பிப்பதாக இருக்கும். அவ்விதப் பொருட்காக்ஷிகள் தொழில் வகைகளில் ஏற்படும் முன்னேற்றங்களையும், ஆயுதங்களில் ஏற்படும் சீர்திருத்தங்களையும் அவ்வப்பொழுது காண்பிப்பவைகளாக இருக்க வேண்டும். நாளடைவில் அவ்வித பொருட்காக்ஷிகள் ஸ்திரமானவைகளாக மாற வேண்டும். முதலாளித்வ முறையில் பல ஆராய்ச்சிகள் செய்துகொண்டே இருக்கின்றனர். ஆனால் அவைகளை அவர்கள் இரகஸ்யமாக வைத்துக்கொண்டு உற்பத்திப் பொருளைமாத்திரம் விற்று தனம் சம்பாதிக்கின்றனர். நாம் அவ்விதம் செய்யாமல் அறிவு எல்லோருக்கும் கிடைக்கும் வண்ணம் செய்யவேண்டும்.

மேலும் பொருள் வாங்குகிறவர்கள் தாம் வாங்கும் பொருள் தர்ம வழியில் செய்யப்படுகிறதா என்பதை அறியவும் அவ்விதப் பொருட்காக்ஷிகள் அவசியமானவை. அவைகள் சரியாக அமைக்கப்பட்டால் பொதுமக்களுக்கு அவர்கள் நேர்மையான, தர்ம முறையில் செய்யப்பட்ட பொருள்களையே வாங்க வேண்டுமென்று போதித்து அவர்கள் தமது கடமையைச் சரிவரச்செய்யசா தகமாகிறது.

---

## அத்யாயம் 16

### தொழில் திட்டம்.

ஒரு நாட்டின் முக்கிய தொழில் அந் நாட்டினருக்குத் தேவையான உணவும் ஆடைகளையும் உற்பத்தி செய்வதே யாகும். அதற்குப் பிற்பாடே இதர தொழில்கள். ஆகையால் வியவசாயமே தொழில்களுக்குள் முதன்மை

பெற்றிருக்கவேண்டும். வியவசாயத்தை நன்கு நடத்த வேண்டுமென்றால், லாபத்துடன் நடத்தவேண்டுமென்றால், இயற்கையைப்பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ச்சிகள் செய்யவேண்டும். இந்தத் தொழிலில் இயற்கையை நமக்குச் சாதகமாகச் செய்துகொண்டாலே நலன் ஏற்படும். இவ்விதம் இயற்கையின் விசித்திர குணங்களை அறிவது என்பது ஒரு தனிப்பட்டவனால் செய்ய இயலாது. அதற்கு ஒருவனின் வாழ்நாள் போதாது. நூற்றுக்கணக்கான விருக்ஷங்கள் தேவை. ஒட்டு முதலியவைகளைப் பரீக்ஷித்துப் பார்க்க அச் செடிகளின் மூன்று நான்கு தலைமுறைகளைப் பரீக்ஷிக்கவேண்டும். ஆகையால் இந்த ஆராய்ச்சி வேலையை ஜனங்களுக்கென்று அரசாங்கம் செய்யவேண்டும். அவ்விதம் ஆராய்ச்சி முறையில் பரீக்ஷித்து கண்டு பிடிக்கப்பட்ட விஷயங்களை வியவசாயிகளுக்குப்போதித்து அவன் அவைகளை அனுசரிக்குமாறு செய்யாவிடின், இந்த ஆராய்ச்சி அனைத்தும் வீண். வியவசாயிகளின் கலப்பைகளை புதிது புதிதாக அமைத்துக் கொடுத்தும், அதை அவர்கள் வாங்கச் சக்தியற்றவர்களாகவோ, உபயோகிக்கச் சக்தியற்றவர்களாகவோ இருப்பின், அவ்விதப் புது கலப்பைகளினாலும் ஆயுதங்களினாலும் பயன் ஏற்படாது. எல்லா சீர்திருத்தங்களும் ஜனங்களின் தேவைக்குத் தகுந்ததாக இருக்கவேண்டும்.

வியவசாயத்திற்கு அடுத்தபடியான பெரிய தொழில் ஆடை உற்பத்தி செய்வதேயாகும். வியவசாயம் என்பது நமது நாட்டில் ஆறுமாத காலத்திய வேலையே. ஆகையால், இந்தத் தொழிலை ஒரு குடியானவன் தனது இரண்டாம் தொழிலாகச் செய்யலாம். வியவசாயியின் வீண் காலத்தைப் பயன்பெறுமாறு செய்தோமென்றால் அதுவே ஜனங்களின் செல்வத்தையும் வாங்கும் சக்தியையும் விருத்தி செய்யும். அகில பாரத சர்க்கா சங்கத்தினர் இவ்வழியைப் பின்பற்றி அதிக வெற்றி பெற்றிருக்கின்றனர்.

இவை தவிர எல்லா ஜனங்களும் வியவசாயத்திலேயே புகுந்து பூமிக்கு பாரமாக ஏற்பட்டுவிடாமலிருக்க, தொழில் செய்ய விரும்புவோர் செய்வதற்கு வேறு தொழில்கள்



இருக்கின்றன. அத் தொழில்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

(1) எல்லோருக்கும் தேவையான பொருட்களை உண்டாக்கும் தொழில் (2) சுக போகப் பொருட்களையும் விசித்ர விநோதப் பொருட்களையும் செய்யும் குடிசைத் தொழில்.

முதல் வகுப்பைச் சேர்ந்தவை என்று, விளை பொருட்களைப் பக்குவமாகச் செய்து உணவு பொருட்களாக்கும் தொழில்களைச் சொல்லலாம். அவையாவன, மாவரைப்பது, நெல் குத்துவது, எண்ணை ஆட்டுவது, வெல்லம் செய்வது ஆகியவை. மற்றும் வியவசாயிக்கு அவகாச வேளையில் செய்யக்கூடியவையான தேனீ வளர்ப்பது, பட்டுப் பூச்சி வளர்ப்பது ஆகிய தொழில்களை இவர்களும் ஓய்வு நேரங்களில் செய்துவரலாம். ஜாதித்தொழில்கள் என்று கருதப்படுபவையானவையும் எல்லாக் கிராமங்களிலும் இருந்து வருபவையுமான தோல் பதனிடுவது, இரும்பு வேலை, தச்சு வேலை, கூடை தட்டு முடைவது, சட்டி பானை செய்வது, கொத்து வேலை, கயிறு திரிப்பது, காகிதம் செய்வது ஆகிய தொழில்கள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் பொதுவில் கிராமத்திற்கு உயிர் அளிப்பவைகளான கிராமத் தொழில்கள் எனலாம்.

## குடிசைத் தொழில்:

இவைகளைத் தவிர, இரண்டாம் வகையில் செய்யப்படுபவையான சுகபோகத்திற்கு வேண்டிய தொழில்கள் இருக்கின்றன. முதற்கூறிய தொழில்களைப் போல் இவை எல்லோருக்கும் பயன்படுபவையானவைகளல்லவென்றாலும், அனேகமாய் இவைகளுக்கும் நிரந்தர தேவை இருந்துகொண்டே இருக்கிறது. அவையாவன :—சோப்புகள் செய்வது, துணிகளில் பூக்கள் அச்சடிப்பது, சாயமிடுவது, பித்தளை முதலிய உலோகங்களில் சாமான்கள் செய்வது ஆகியவை. நமது தொழில்கள் ஒன்றுக்கொன்று பயன்படுபவையாகவும், பரந்த அஸ்திவாரம் கொண்டு, அதாவது எல்லா கிராமங்களிலும் செய்யப்படுபவைகளாகவும் இருந்தாலொழிய தேசத்தில் பொருளாக்க முயற்சி என்பது பூரணத்வம் பெற்றிராது.

ஏற்கனவே கூறியுள்ள விதம், நமது நாட்டிற்குத் தேவை இல்லாத பொருள்களையே வெளிநாட்டு விற்

பனைக்கு அனுப்பவேண்டும். ஏனெனில் இக்காலத்திலிருக்கும் பலவிதத் தடைகளால் நமது பொருளுக்கு வெளிநாட்டில் சரியான விலை கிடைப்பது கஷ்டம். இந்த நிலைமை இருக்கும் வரை, உற்பத்தி செய்பவனுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டில் அதிகாரம் இல்லாதிருக்கும் வரை, வெளிநாட்டு வியாபார நுட்பங்களும் தந்திரங்களும் நமது வியவசாயிகளுக்குத் தெரியாமலிருக்கும் வரை, அவர்கள் வெளிநாட்டு வியாபாரத்தில் பிரவேசிக்கவே கூடாது. மேலும் ஒரு விளை பொருளை அது உற்பத்தியாகும் இடத்திற்கு அருகிலேயே அதை உணவிற்கோ உபயோகத்திற்கோ ஏற்ற பொருளாகச் செய்து விடுவது நலம். அவ்விதம் செய்வதனால் அதை உற்பத்தி செய்பவர்களுக்கு அதிக சாதகம் ஏற்படும். இல்லாவிடில் அவர்களுக்கு அதிக நஷ்டமே உண்டாகும்.

விளை பொருளை வெளிநாட்டிற்கு தயாரிக்கும் பொருட்டு அனுப்பினோமென்றால் அது நமது வேலையையும் அவ்வித வேலைக்கென்று நமக்குக் கிடைக்கும் கூலியையும் வெளிநாட்டிற்கு அனுப்புவதற்கு சமானமாகும். நமது ஊரில் விளையும் சரக்கை வெளி நாட்டிற்கு அனுப்பி உபயோகிக்க ஏற்றதாக அங்கே செய்யப்பட்டபின் இங்கே தருவித்து நாம் வாங்கிக் கொள்வது என்பது நமது நாட்டில வேலையில்லாத் திண்டாட்டத்தை நாமே செய்து கொள்வதாகும். இதனிலிருந்தே இவ்வித நிலைமை ஏற்படாமலிருக்க வழி நமது ஊரில் விளையும் சரக்கை நாம் உபயோகிப்பது என்பது விளங்குகிறதல்லவா.

## அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தின் திட்டம்:

அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கமானது இவ்வழியைப் பின்பற்றி நமது சரக்குகளை உபயோகிப்பதென்பதை ஏற்படுத்த அமைக்கப்பட்டிருக்கிறது. அது பின்பற்றும் முறையை மூன்று வகையாகப் பிரிக்கலாம்—

(1) பண்டங்கள் சேதமாகாமல் தடுத்து, உபயோகமற்றவை என்று புறக்கணிக்கப்பட்ட பொருள்களையும் உபயோகப்படுத்த முயலுகிறது.



(2) கிராமத்தோருக்குக் கிடைக்கும் பொருள்களைச் செவ்வையாகப் பாதுகாக்க முயலுகிறது.

(3) ஓய்வு நேரங்களைப் பயன்படுத்திக்கொள்ளப் போதித்து, ஜனங்களின் செல்வ நிலையை விருத்திசெய்யக் கூடியதான தொழில்களைக் கற்பிக்க முயலுகிறது.

முதல் வகைக்கு உதாரணமாக ஆகாரம், ஆரோக்யம், சுகாதாரம் முதலியவைகளைக் கூறலாம். நமது தற்கால நிலையில் நமது பொருளாக்கத்திற்கு மனிதனே நமக்கு முக்கிய சக்தி. அவனுக்கு ஆகாரம் சத்து அற்றதாகக் கிடைத்துப் பல நோய்களால் அவன் பீடிக்கப்பட்டால், நமது உற்பத்திக்குக் குறைவு ஏற்படும். சத்து நிறைந்த ஏற்ற ஆகாரம் மிக அவசியமாகிறது. நமது கிராமங்களிலோ அரிசி, கோதுமைபோன்ற முக்கிய தானியங்கள்கூடப் போதுமானது கிடைப்பதில்லை. தேகத்திற்கு அவசியமான ஜீவ சத்துக்களை அளிக்கும் காய்கறி வகைகள் நமது ஏழைக் குடிகளுக்குக் கிடைப்பதில்லை. அவ்விதமிருக்க கிடைக்கும் சில பதார்த்தங்களையும் சமைக்கும் வகையில் சத்து அற்றதாக அவர்கள் செய்துவிடுவது மிகவும் கெடுதலாகும். உதாரணமாய் அரிசியை மில்களில் அரைத்து, தவிடு நீக்கும் சமயம் ஜீவ சத்துக்களையும் நீக்கி, வெறும் சர்க்கரை சத்து மாத்திரமே மிகுந்திருக்கும் வெள்ளை அரிசியை உண்பது இத்தகைய தீங்கில் ஒன்று. இந்தச் சங்கத்தின் எல்லா வேலைகளையும் இங்கே விவரிக்க இயலாது. இந்த முதல் வகைக்குட்பட்ட ஒரு விஷயத்தையே இங்கு உதாரணத்திற்குக் கூறினோம்.

கிடைக்கும் பொருள்களைச் சேதமாகாமல் பாதுகாப்பதற்கு உதாரணமாக எருக்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு போதிக்கப்படுவதைச் சொல்லலாம். மேலும் இறந்த பிராணிகளின் எல்லா பாகங்களையும் பயன்படுத்திக்கொள்ள கற்பிக்கப்படுகிறது.

ஓய்வு நேரத்தில் மற்றொரு தொழிலாக தேனீ வளர்ப்பது, காகிதம் செய்வது முதலியவை கற்பிக்கப்படுவது மூன்றாவது வகைக்கு உதாரணமாகும்.

## உற்பத்தி:

நமது புது திட்டத்தின் முக்கிய நோக்கம் உற்பத்தியானது பற்பல இடங்களில் ஏற்பட்டு பரவின அஸ்திவாரம் கொண்ட

தாக இருக்க வேண்டுமென்பதுடன் ஜனங்கள் எல்லோருக்கும் தேவையான பொருட்களை உற்பத்திசெய்ய முயலவேண்டுமென்பதே. நாட்டின் செல்வத்தை விருத்திசெய்ய அதுதான் ஏற்றவழி. செல்வவந்தர்களுக்கு மாத்திரம் தேவையான அலங்கார சுகபோக சாமான்கள் அதிகம் உற்பத்திசெய்யப்பட்டால் அதனால் நாட்டின் பொதுமைச் செல்வ நிலை அதிகரிக்காது. எல்லோருக்கும் தேவையான பருத்தி, ஆடை, கிராமத்துச் செருப்பு, பாய்கள், முதலியவைகளைச் செய்யும்வரை இவைகளை விற்பதைப்பற்றின கவலை எழாது. பணக்காரர்களுக்கு வேண்டிய சரக்கை உற்பத்திசெய்யப் புகுந்தால், அதன் விற்பனையினால் அதிக லாபம் கிடைக்குமென்றாலும், விற்பனையிலிருக்கும் கஷ்டங்களினால் லாபம் நடுவிலிருப்பவனுக்கே கிடைக்கிறது, உற்பத்தியாளனுக்குக் கிடைப்பதில்லை. மேலும் அவ்விதச் சரக்குகளை வாங்கும் பணக்காரர்கள் சிலரே இருப்பதனால், இவ்வித வேலைகளைச் சிலரே செய்யக்கூடும்; இவ்வித உற்பத்தி பலருக்கு ஏற்றதான தொழில் திட்டமல்ல.

கூடியவரை அதிகமான மனிதரிடை செல்வம் பரவியிருக்க வேண்டும். சிலர் அதிகசெல்வவந்தர்களாகவும் பலர் ஏழைகளாகவும் இருக்கக்கூடாது என்பது நமது உத்தேசம். ஆகையால் இச்சங்கம் அதிக மூலதனம் உதவி பெரிய தொழில்களை ஆரம்பிக்கச்செய்து, அந்த உற்பத்தி சரக்குகளை விற்க சிபார்சுகளும், சாஸனங்களும் பெற முயலுவதில்லை. சிற்சில சரக்குகளை விற்பதற்காக நகரங்களில் சர்டிபிகேட் வழங்கிய கடைகளை இச்சங்கம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது உண்மையே. இருந்தும் இவ்வித உதவி பெரும்பாலேயே கிராமத்தோர் தமக்குள் ஒருவருக்கொருவர் உதவியாக உற்பத்திசெய்து ஜீவிக்க வேண்டுமென்றே இச்சங்கம் முயன்றுவருகிறது.

மேலும் நமது நாட்டு ஜனங்களின் ஏழ்மைத்தனத்தை மனதில் வைத்து இந்தச் சங்கமானது மூலதனம் அதிகம் தேவையில்லாததும், ஆக்கும் கருவிகள் ஆயுதங்கள் முதலியவை எளிதில் கிடைக்கக் கூடியதுமான தொழில்களையே சிபார்சு செய்கிறது. தொழிலிற்குத் தேவையான மூலப் பொருள் உள்ளூரிலேயே கிடைப்பதாக இருக்கவேண்டும். அவ்விதமில்லாமல் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படும் மூலப் பொருளைக்கொண்டு பண்டம் செய்யப்படுவதென்றால், அந்தப் பண்டத்தின் விலையில் சொற்ப அம்சமே மூலப் பொருளிற்குக் கொடுக்கப்படுவதாக



இருக்கவேண்டும். வெளிநாடுகளிலிருந்து பித்தளைத் தகடுகள் வரவழைக்கப்பட்டு, பாத்திரங்கள் செய்யப்பட்டு, ஒரு பாத்திரம் நான்கு ரூபாய் என்று விற்கப்பட்டால், அப்பாத்திரத்தின் தகட்டின் விலை மாத்திரம் மூன்று ரூபாயாக இருக்குமென்றால் இந்த விற்பனையில் 75 சத விகிதம் வெளிநாட்டிற்குப் போய்விடுகிறது. இவ்விதம் நமது செல்வம் போகாமல் தடுக்க வேண்டுமென்றால் பித்தளைப் பாத்திரங்களுக்கு மாறாக வேறு உள்ளூர் பாண்டங்களை உபயோகிக்க முயல வேண்டும். கிராமத்தினரின் தேவைக்கு ஏற்றதாக உற்பத்தியைச் செய்துகொண்டு, கூடியவரை இப்பொழுது இருக்கும் நிலைமையை உத்தேசித்து வெளிநாட்டு வியாபாரம் செய்யாமலிருப்பது உசிதம். கிராமத்தினருக்கு இன்னும் சிறந்த ஆகாரம்; ஆடை, வசிக்கும் இடம், இவைகளைப் பெற முயலவேண்டுமே தவிர, வெளிநாட்டு விற்பனைக்குப் பொருள் செய்வதில் முனையக்கூடாது. சில மிஷனரிகள் குடியானவர்களை நல்ல ஜாதி கோழிகளை வளர்க்குமாறு கற்பிக்கின்றனர். ஆனால் அவர்கள் கையாளும் முறை அவ்வளவு திருப்திகரமானதல்ல. லெக்கார்ன், மினார்க்கோ, சிவப்பு முதலிய சீமைப் பறவைகளை இங்கு கொண்டுவந்து நமது நாட்டு ஜாதிகளுடன் கலக்கச் சொல்கிறார்கள். இந்த சம்பந்தத்தினால் ஏற்படும் முட்டைகள் பெரிதாகவும் கோழிகள் அழகாகவும் இருக்கின்றன. ஆனால் குடியானவன் அவ்வளவு நல்ல முட்டைகளைத் தான் சாப்பிடக் கட்டாதென்று நகரங்களில் கொண்டுபோய் செல்வவந்தர்களுக்கு விற்றுவிடுகிறான். இவ்விதக் கோழிகளை வளர்ப்பதற்கென்று அதிக செலவு ஏற்படுகிறது; மிக ஜாக்ரதையாகப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. தவிர நாட்டுக் கோழிகளைப்போல் வியாதி வந்தால் தாங்கிக்கொள்ளும் சக்தி இவைகளுக்கு இருப்பதில்லை. ஒரு தொத்து நோய் வந்தால் ஒருவனிடமிருக்கும் கோழிகள் முழுவதும் இறந்துவிடுகின்றன. இவ்விதத் தொழிலைச் செய்ய நமது கிராமவாசிக்குக் கட்டாது: நாட்டுப் பறவைகளில் நல்ல வகையை விருத்தி செய்து அவைகளின் முட்டைகளை அந்தக் குடியானவனும் அவனுடைய குடும்பமுமே சாப்பிடுவது, மிகுந்தவைகளையே விற்பது என்றே ஏற்படுத்தித் திருப்தியடைவது நலம். தூரத்திலிருக்கும் மார்க்கெட்டிற்கென்று உற்பத்திசெய்தால், லாபத்தில் அதிக அம்சம் இவர்களிடமிருந்து வாங்கி அவர்களுக்கு விற்கும் நடு மனிதனுக்கே போய்விடுகிறது. உற்பத்தியாளனுக்குக் கிடைப்பதில்லை.

குடியானவன், வியவசாயிகளுக்கு பணம் கிடைக்கக் கூடியதான எந்தத் தொழிலையும் அவர்கள் செய்தால் நல்லதுதானே, நல்ல முட்டைகளையும் கோழிகளையும் விற்று அவர்கள் பணம் பெற்றால் அதுவும் நல்லதுதானே என்று சிலர் வாதிக்கின்றனர். இந்த வாதம் ஓர் அம்சத்தில் மாத்திரமே உண்மையாகும். வெளியே இருக்கும் மார்க்கெட்டில் வியாபாரம்செய்யக் கையில் ரொக்கம் வேண்டும். மேலும் வெளிநாட்டிலிருந்து நமது தேசத்திற்குப் பண்டங்கள் அனுப்புகிறவர்கள் அப்பண்டங்களைக் கைமேல் ரூபாய் வாங்கிக்கொண்டே விற்பார்கள். நமது அறியாமை மிகுந்திருக்கும் கிராமவாசிகளிடம் ரொக்கமாகக் கையில் பணம் கிடைத்தால் அவர்களுக்கு உடனே பகட்டான வெளிநாட்டுப் பொருள்களை வாங்க விருப்பமுண்டாகிறது. இவ்விதம் அவர்கள் வாங்குவதனால் தங்களுடைய கிராமத்துத் தொழிலிற்கே குறைவு ஏற்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள். கையில் ரொக்கத்திற்கு மாறாக பொருள்கள் அதிகமிருந்தால், பண்டம் மாற்று முறையில் உள்ளூர் பொருட்களை வாங்கி ஒருவருக்கொருவர் உதவியாக ஜீவிப்பார்கள். கிராமவாசிகளிடை ரொக்கம் சேருவதென்ற விஷயத்தில் நாம் ஏற்கனவே ஏமாந்திருக்கிறோம். தன்னுடைய குழந்தை பட்டினி கிடக்க ஒருவன் தன் வீட்டுப் பாலை விற்று பணம் பெறுவதற்கு நம்மில் யார் சம்மதிப்பார்? வெளிநாட்டிலிருந்து வரும் சாமான்களை வாங்குவது நமது குழந்தைகளின் ஆகாரத்தைப் பிறருக்குக் கொடுப்பதேயாகும். நமது நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிக்கச்செய்கிறோம். இதை நாம் மறக்கக்கூடாது. வெளிநாட்டுப் பொருள்களை நாம் வாங்குவது நமது வீட்டு வேலையாட்களை வேண்டாமென்று சொல்லி அந்நியர்களை நமக்கு வேலையாட்களாக வைத்துக்கொள்வதற்கு ஒப்பாகும். இவ்விதம் செய்ய நமக்குக் கட்டாது. நாம் உண்டாக்காமல், பிறர் உண்டாக்குவதையே அனுபவித்துக்கொண்டிருக்க நமக்குக் கட்டாது. கூடியவரை உள்ளூரில் கிடைக்கும் மூல பொருள்களையும் விளை பொருள்களையும் அந்த நிலைமையிலேயே வெளிநாட்டுக்கு அனுப்பிவிடாமல், அவைகளை உபயோகிக்க ஏற்றவைகளாகச் செய்தபின்பே மார்க்கெட்டுகளுக்கு அனுப்ப நாம் முயல வேண்டும். இதனால் நமது நாட்டிற்கு வேலையை உண்டாக்கி, வேலையின்மூலம் விருத்தியை நாம் கொடுக்கக்கூடும்.

இப்பொழுது நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு உபயோகத்திற்கு ஏற்ற நிலையில் அனுப்பப்படும் பண்டங்கள் அநேகமாய் விநோத, விளையாட்டுப் பண்டங்களாகவே ஆகிவருகின்றன. இவ்வித சாமான்கள் செய்வது தேசத்திற்கு அதிக லாபமில்லை. எல்லோருக்கும் தினசரி வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களைச் செய்தால் நிரந்தரமான வேலை அதிக ஜனங்களுக்குக் கிடைக்கும். ஆனால் சில செல்வந்தர்களே வாங்கும் பொருட்களைச் செய்வதென்றால் நிரந்தர வேலை கிடைக்காமல், அந்தப் பண்டங்களைச் செய்யும் தொழிலாளிகள் குறைவதுடன், அவை நாளடைவில் அபூர்வமாகி, விலை அதிகமாகி, அந்த விலையின் லாபத்தை நடுவிலிருக்கும் தரகர்கள் பறித்துக்கொள்கிறார்கள். ஆகையாலேயே இவ்வித தொழில்கள் அவ்வளவு உசிதமானவையல்ல. மேற்கூறிய கொள்கைகளே கிராமக்கைத்தொழில் சங்க திட்டங்களுக்கு அடிப்படையானவை.



இவ்விதமான கிராமத் தொழில் திட்டத்திற்கு பெண்கள் அதிகம் உதவிசெய்து எங்களுடைய முயற்சியின் அஸ்திவாரத்தை கெட்டிப்படுத்தக்கூடும்.

அநேகமாய் இந்தத் திட்டத்தின் எல்லா அம்சங்களும் பெண்களைச் சேர்ந்ததே. சுகாதாரம், சுத்தம், ஆகாரம், ஆடை, வீட்டின் பண்டம்பாடி ஆகிய எல்லாமும் அவர்களுடைய ஆதீனத்திற்குட்பட்டது. இம்சை முறையில், பிறரைத் துன்புறுத்தியோ, பலவந்தப்படுத்தியோ தயாரிக்கப்பட்ட பொருள்களை வாங்குவதில்லை என்று அவர்கள் தீர்மானித்து, ஒருநிலைப்பட்டதும் ஒரு முதலாளியின் ஆதிக்யத்திற்குட்பட்டதுமான ஆலைச் சரக்குகளை வாங்காமல், பல நிலைப்பட்டதும் (அதாவது தனித்தனி மனிதர் தமது இஷ்டப்படி உற்பத்தி செய்வதும்) பரவின லாபத்தை அளிப்பதுமான தொழில்களையே ஆதரித்தார்களென்றால், நமது கிராமச் சீர்திருத்த முயற்சியை அவர்கள் கைதூக்கிவிட்டு தேசத்தை நல்ல திடமான பொருளாக்கத்தில் நிலைப்படுத்துவார்கள்.

நமது பண்டைய உற்பத்தி முறைகளைப்பற்றின புத்திமதியும் தேவையான உதவியையும் இச் சங்கம் அளித்து வருகிறது.

இவ்வித பாதுகாப்பு முறைகள், தொழில் முறைகள் முதலியவற்றால் நமது நாட்டின் ஜனங்களை பிறர் சுரண்டாமல், பிறர் தமது லாபத்திற்கென்று சர்தகமாக்கிக்கொள்ளாமல், நாம் பாதுகாத்தோமானால், அவர்கள் தமது காலத்தை வீணாக்காமல்செய்து அவர்களுக்கு வேலையைக்கொடுத்தோமென்றால், அவர்களுடைய முயற்சியை அவசியமான தொழில்களைச் செய்வதில் திருப்பினோமென்றால், அவர்கள் சாத்விகமுறையில் தமது தொழில்களை விருத்திசெய்து கொள்ள இடமளித்தோமென்றால் தேசம் இப்பொழுது ஆழ்ந்திருக்கும் படுகுழியிலிருந்து வெளிஏறி முன்னேற்றமடைய இயலும்.

---

## அத்யாயம் 17

### ஒருநிலை உற்பத்தியும் பல நிலைஉற்பத்தியும்

இந்த அத்யாயத்தில் இதுவரை நாம் கூறிவந்தவற்றை ஒன்று சேர்த்து, ஒருநிலை உற்பத்தி, அதாவது ஒரு அதிகாரத்தின்கீழ் பலர் வேலைசெய்து ஏராளமான பொருள் உற்பத்தி செய்வதையும், பலநிலை உற்பத்தி, அதாவது பலர் தனித்தனியாக தமது முறையில் சொற்ப அளவில் தமது ஊரின் தேவைக்கு வேண்டியதாக பொருள் உற்பத்தி செய்வதையும் எடுத்துக்கூறி இரண்டு வகையிலும் இருக்கும் சாதக பாதகங்களை ஆராய்வோம். இதனால் முன்பு கூறிய சில விஷயங்களையே மறுபடிகூற நேருவதை வாசகர்கள் தயவு செய்து மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

நாம் எந்த வேலையைச் செய்ய உத்தேசிக்கிறோமோ அதற்கு ஏற்றவிதம் நமது கைக்கருவி இருக்கவேண்டும். அப்பொழுதே அவ்வேலையைச் சரியாகச் செய்ய இயலும். நிலத்தை உழுவதற்கு அறிவாள் பயன் படாது, கலப்பை வேண்டும்; சுவற்றில் ஆணி அடிக்க கடியாரம் உதவாது, சுத்திவேண்டும். கருவிகளை உபயோகித்துச் செய்யும் சிறிய வேலைக்கே, அவை ஏற்றவையாக இருக்கவேண்டுமென்று நாம் இவ்வளவு கவனம் செலுத்தவேண்டுமென்றால், சமூகத்தையும் ஜனங்களின் செல்வ நிலையையும் நிர்மாணிக்கும் சமயம் அந்த வேலை ஏற்ற முறையில் ஏற்ற விதம் செய்யப்பட வேண்டுமென்பதுபற்றி மிகக் கவனம் செலுத்த வேண்டுமல்லவா? இருந்தும் தாங்கள் சிபார்சு செய்யும் முறை ஏற்றதுதானோ என்பதைப் பற்றி எவ்வளவு பேர்கள் சிந்திக்கிறார்கள்? ஒரு நிலை உற்பத்தியாகட்டும், பலநிலை உற்பத்தியாகட்டும் சமூக நிலையையும் செல்வ நிலையையும் ஏற்படுத்தும் கருவிகளே. ஆகையால் இரண்டு முறைகளின் சாதக பாதகங்களை நன்கு ஆராய்ந்து நமது உத்தேசத்திற்கு எது ஏற்றதோ அதை நாம் அங்கீகரித்து புதிய திட்டத்தை நிர்மாணித்துக் கொள்ள வேண்டும்.



ஒரு தேசத்தின் பொருளாதார திட்டத்தின் உத்தேசம் என்ன? ஒரு தேசத்தின் குடிகள் தொழில்கள் செய்வதை அதன் அரசாங்கமும் சமூகமும் சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கினதாகச் செய்வதின் நோக்கம் என்ன?

(1) வீண் சிரமமில்லாததும் வீண்விரயமில்லாததுமான வழியில் செல்வத்தை உற்பத்தி செய்யவேண்டும்.

(2) செல்வம் அதிக மனிதரிடை பரவினதாக இருக்க வேண்டும்.

(3) ஜனங்களின் முக்கிய தேவைகளை உற்பத்திசெய்து கொடுத்த பின்பே, சுகபோகத்திற்கான பொருளுற்பத்திகள் செய்யப்படவேண்டும்.

(4) தொழிலாளியின் குணங்கள் அவன் செய்யும் தொழிலின்மூலம் விருத்தி அடையவேண்டும்; குன்றிவிடக்கூடாது.

(5) சமூகத்திலும் தேசத்திலும் அத்தேசத்தின் பொருளுற்பத்தி முறையினால் சமாதானமும் ஒற்றுமையும் பரவிவர வேண்டும்; சண்டைகளும் போர்களும் விளைய அது காரணமாக இருக்கக்கூடாது.

ஒரு நிலை உற்பத்தி ஏற்பட ஐந்து முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

(1) சிலரிடம் பொருள் அதிகம் சேர்ந்தால் தமது ரொக்கத்தை ஜாக்ரதையாகப் பாதுகாக்க விரும்பும் அவர்கள்

அதை ஒரு நிலை உற்பத்தியில், நம்பிக்கையான வழியில், மூலதனமாக உபயோகப்படுத்தி மேன்மேல் வட்டிபெற முயலுகிறார்கள். பலரிடம் சில்லறையாகக் கொடுத்தால் வசூலிக்கும் சிரமம் அதிகம். இவ்விதக்காரணத்தினால் ஆலைத்தொழில் மிக விருத்திபெற்ற நாட்டிற்கு உதாரணமாக இங்கிலாந்தைக் கூறலாம். இந்தியாவின் செல்வக் குவியல்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் அங்கே சென்றதும், அத் தேசத்தின் ஆலைத் தொழில்கள் பெரிதும் விருத்தியடைந்தன.

(2) வேலை அதிகம் இருந்து, அதைச் செய்ய மனிதர் குறைவாக இருப்பின், மனிதன் தனக்கு உதவியாக எந்திரங்களைச் செய்துகொள்கிறான். இதற்கு உதாரணமாக அமெரிக்க ஐக்ய நாட்டைக் கூறலாம். அங்கே அத்தேசத்தின் விஸ்தீர்ண பிரதேசங்களும், அடர்ந்த காடுகளும், பிரம்மாண்டமான நதிகளும் மனிதரின் முன்னேற்றத்தைத் தடுத்தன. அவைகளை வெல்ல அந்நாட்டார் பெரிய பெரிய எந்திரங்களை உற்பத்தி செய்துகொள்ளவேண்டியதாயிற்று.

(3) ஒருமாதிரியான பொருள்கள் அதிக எண்ணிக்கையில் தேவையாக இருப்பின், ஒருநிலைப்பட்ட ஆலை உற்பத்தியில் அவைகளைச் செய்வது சுலபம். மோட்டாரின் பாகங்களாகிய சக்கிரங்கள், ஆணிகள், அச்சுகள், ரயில் தொடரின் பல பொருள்கள் ஆகியவை ஒரேமாதிரியாகப் பல ஆயிரங்கள் வேண்டியிருக்கின்றன. பட்டாளங்களுக்குத் தேவையான ஆயுதங்கள், கருவிகள், உடுப்புகள் முதலியவைகளும் இவ்விதமே பல ஆயிரக்கணக்கில் தேவை. இவைகளை ஆலைகளின் மூலம் செய்வதனால் ஒரேவிதமாகக் கிடைக்கும், அதிக மலிவாகவும் செய்யலாம். மிலிட்டரி தேசங்களாகிய ஜர்மனி, ஜப்பான், இதாலி முதலியவைகளின் ஆலைத்தொழில் அபிவிருத்தி இவ்வகையானது.

(4) தொழிலை ஒருங்குபடுத்தி, பொருளுற்பத்தியை விரைவில் செய்து முடிக்கவேண்டுமென்றால், ஒரு நிலை உற்பத்தியின் கீழ், தொழிலாளிகளை பட்டாளம் பட்டாளமாக வகுத்து, இவ்வேலையைச் செய்து முடிக்க இயலும். இதற்கு உதாரணமாக ஸோவியத் ரஷ்யாவைக் கூறலாம்.

(5) மேலும், மூலப்பொருள், அப்பொருளை உபயோகித்திற்கு ஏற்றதாக ஆக்கும் இடம், அதை விற்கும் இடம் ஆகி



யவை தூரதூர இருப்பின், முதலாளித்வத்தினாலேயே, அதிக மூலதனம் கொண்ட வியாபார முறையினாலேயோ அந்த மூலப் பொருளை ஆக்கும் இடத்திற்குக்கொண்டு வந்து, அதை விற்பனைக்கு ஏற்றதாகச் செய்து, மறுபடி விற்கும் மார்க்கெட்டுகளுக்குக் கொண்டுபோய் விற்கப்படும். இவ்விதம் தொழில் செய்துவரும் நாடுகளுக்கு உதாரணமாய் இங்கிலாந்து, ஜர்மனி ஜப்பான் மூன்றையும் கூறலாம்.

ஒரு நிலைப்பட்ட ஆலை உற்பத்தி விருத்தி அடையும் காரணங்கள் இவை. இந்தக் காரணங்களில் ஒன்றோ, பலவோ ஏற்பட்டு ஒரு தேசத்தின் ஒரு நிலைப்பட்ட உற்பத்தி விருத்திபெறலாம். ஆனால் அவ்வித உற்பத்தியினால் சாதகங்கள் மேற்கூறிய வண்ணம் இருப்பினும், பாதகங்களும் பல இருக்கின்றன.

(1) ரொக்கதனம் ஏற்பட்டிருப்பதனால் அதை முதலாக வைத்து பெரிய ஆலைத் தொழில் செய்யும் இடங்களில், அந்த ரொக்கம் மேன்மேலும் விருத்தியாகி சிலரிடம் செல்வம் ஏராளமாகக் குவிந்துவிடுகிறது. இதனால் முதலாளிக்கும் தொழிலாளிக்கும் வகுப்புத் துவேஷம் உண்டாக இடமாகிறது.

(2) போதுமான தொளிலாளி அகப்படாமல் எந்திர உதவியினால் உற்பத்திசெய்து வருகையில், எந்திரங்கள் நிற்காமல் உற்பத்தி செய்தாலே முதலாளிக்கு நஷ்டமில்லாமலிருக்கும். அவ்விதம் உற்பத்தியாகும் பொருளை வாங்க ஜனங்களுக்கு சக்தி இருப்பதில்லை. இதனால் அதிக உற்பத்தி ஏற்பட்டு அது விற்கப்படாமல் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. இந்த நிலைமையை உலகெங்கும் இன்று காணலாம். ஒரு நிலைப்பட்ட பெரிய பெரிய உற்பத்திசாலைகளே இதற்குக் காரணம்.

(3) ஒரே மாதிரி சரக்குகளை ஆலைகளில் உற்பத்தி செய்தால், சரக்குகளில் வகை வித்யாசம் ஏற்படுவதில்லை. அதனால் முன்னேற்றம் தடைப்பட்டு விடுகிறது. மேலும் அதிக சுலபமாய் ஏராளமான ஆயுதங்கள் செய்துவிட முடிவதனால், யுத்தத்திற்கு இடமளிக்கிறது.

(4) தொழிலாளிகளைப் பட்டாளம் பட்டாளமாகத் திரட்டி ஒரு நிலைப்பட்ட உற்பத்தியின்கீழ் வேலை வாங்குவதனால், அதி

காரம் சிலருடைய கையில் அதிகம் ஏற்பட்டு விடுகிறது. இவ்விதம் அதிகாரம் சிலரிடம் அதிகம் சேர்வது செல்வம் அதிகம் சேர்வதைவிடத் தீங்கு இழைக்கிறது.

(5) தூரதூரத்திலிருக்கும் இயற்பொருள், ஆக்கும் ஆலை, விற்கப்படும் மார்க்கெட் இவைகளைப் பிணைப்பதனால் ஏகாதிபத்யமும் அதைப்பெற யுத்தமும் ஏற்படுகிறது.

தனித்தனி உற்பத்தி முறையை எவ்விதம் உபயோகித்தால் எவ்விதப் பயனளிக்கும் என்பதை ஆராய்வோம்.

(1) மூலதனம் குறைவாக இருப்பின் ஒருநிலைப்பட்ட பெரிய உற்பத்தியைச் செய்ய இயலாது. அவ்விதம் செய்ய வேண்டுமென்ற அவசியமும் இல்லை. (ரொக்கம் அதிகமிருந்தாலல்லவோ அதைப் பாதுகாக்க வேண்டும்.) சிறிய சிறிய தனித் தொழிற்சாலைகளே ஏற்படும். பெரிய தொழிற்சாலைகளைக் கட்ட விரும்பும் சிலர் லிமிடெட் கம்பெனி என்ற முறையில் செல்வம் சேகரித்து ஆலை ஏற்படுத்தப் பார்க்கிறார்கள். ஆனால் செல்வம் எல்லாரிடமும் சமமாகப் பரவுவதற்கு இது சரியான மார்க்கமல்ல. மேலும் வேறு சில கஷ்டங்களும் பெரிய ஒருநிலைப்பட்ட உற்பத்திமுறையில் இருக்கின்றன.

(2) மனித உழைப்பு அதிகம் கிடைக்கக்கூடிய இடத்தில், வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்பட்டிருக்கும் இடத்தில் ஒருநிலைப்பட்ட உற்பத்தியானது அக் கஷ்டத்தை இன்னும் அதிகரிக்கச் செய்யும்.

(3) தனித்தனியான சிறிய தொழில்களின் சரக்கில் பல வகைகளும் வித்யாசங்களும் இருந்துகொண்டே இருக்கும். இவ்விதக் கைத்தொழிலுடன் எந்த எந்திரமும் போட்டியிட இயலாது. தொழிலாளியின் குண மேன்மையை விருத்திசெய்யக் கைத்தொழில் முறையே ஏற்றது.

(4) ஜனநாயகம் பெறக் கைத்தொழில் உற்பத்தியே ஏற்ற வழி. ஆலைத்தொழிலில் தொழிலாளியின் குணங்களும் புத்தியும் குன்றிவிடுகின்றன. அவர்கள் மிகச் சுலபமாய் சர்வாதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுவிடுகின்றனர். ஒரு நிலைப்பட்ட பெரிய ஆலைத்தொழிலானது உண்மை ஜனநாயகத்திற்கு விஷம் போன்றது.



(5) மூலப் பொருள்களும், மார்க்கெட்டுகளும் அடுத்தடுத்து இருக்கும் இடங்களில் பலநிலைப்பட்ட கைத்தொழிலானது சாதகமளிக்கும்.

பலநிலைப்பட்டதான கைத்தொழிலுற்பத்தியின் சாதகங்கள்.

(1) பலநிலை உற்பத்தி முறையினால் செல்வம் அதிக சமமாக எல்லோரிடமும் பரவிவரும். மனிதருக்குள் பொறாமை, துவேஷம் இவைகளுக்கு அதிக இடமளிக்காது.

(2) எந்திர உற்பத்தியில் ஒரு பொருளின் விலையில் அதிக அம்சம் முதலாளிக்குப் போகிறது. அதனால் தொழிலாளிக்குப் பொருள் வாங்கும் சக்தி குறைந்துவிடுகிறது. கைத்தொழில் உற்பத்தியில் ஒரு பொருளின் விலையில் அதிக அம்சம் தொழிலாளியின் கூலியாகச் சேருகிறது. அதனால் தொழிலாளிகளான ஜனத்திரளிடை வாங்கும் சக்தி அதிகமாகி பொருள்களின் விற்பனைக்கும் உற்பத்திக்கும் அதிக வித்தியாசமில்லாமலிருக்கும்.

(3) ஒவ்வொரு கைத்தொழிலாளியும் தன்னுடைய வியாபாரத்தின் பொறுப்பை வகிப்பதனால் அவனுக்கு ஒழுங்கு முறைகளும் வியாபாரத்திறமையும் ஏற்படுகிறது. மேலும் தன்னிஷ்டப்படி தனது கலையை விருத்திசெய்ய சந்தர்ப்பம் பெறுகிறான். இவ்வித முறையினால் தொழிலாளிகளின் திறமை அதிகரிக்கும்.

(4) பொருளுண்டாக்கும் இடத்திற்கருகில் அதற்கு விற்பனை மார்க்கெட் இருப்பதனால், மார்க்கெட்டுகளைத் தேடிச் சென்று பிறரைப் பலவந்தப்படுத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை.

(5) அதிகாரமும் செல்வமும் ஓரிடத்தில் அதிகம் சேராவிட்டால், தேசத்திற்கு தேசம் ஏற்படும் பெரிய மகா யுத்தங்கள் ஏற்பட இடமிராது.

மேற்கூறிய விவரங்களைப் படித்தால் நமது தேசத்திற்கு ஏற்ற முறை எது என்பது தெரியவரும். சுரங்கங்களிலிருந்து உலோகம் எடுப்பது, இரும்பு ஆலைகள் முதலிய சில முக்கிய தொழில்கள் நடத்துவது, பொது ஜனங்களுக்குச் சாதகமான தந்தி தபால் முதலிய வேலை

களை நடத்துவது ஆகிய எல்லாம் ஒரு நிலைப்பட்ட அதிகாரத்தின் கீழ் நடக்குமாறு செய்தே தீரவேண்டும். ஆனால் இவைகளைக் கூட்டுறவு முறையிலாகிலும், பொதுவுடமை முறையிலாகிலும், செய்யலாம்.

நாம் பலநிலைப்பட்ட தனி உற்பத்தி என்று சொல்லுகையில் எந்திரமே கூடாது என்று சொல்லவில்லை என்பதை வாசகர்கள் மறக்கக்கூடாது. மனிதருக்கு ஆயுதமாகவும் அடிமையாகவும் உபயோகப்படும் எந்திரங்களை நாம் பயன்படுத்திக்கொள்ளவும் புதிதானவைகளை அமைத்துக்கொள்ளவும் வேண்டும். எந்திரங்களின் மூலம் ஒருவனுடைய உழைப்பின் லாபம் மற்றொருவனுக்குச் சேருவதையே நாம் தடுக்க முயலவேண்டும். அவ்வித சமயங்களிலேயே எந்திரம் கூடாதென்று சொல்லவேண்டும். அவ்வித நிலமையில் எந்திரத்திற்கு மனிதன் அடிமையாகிவிடுகிறான். நமது தேசத்தைப் பொறுத்தினவரையில் பலநிலைப்பட்ட தனி உற்பத்தி என்ற முறையில் தொழில் செய்தால்தான் இந்நாட்டின் தீங்குகள் நீங்கும். தன் முயற்சி இல்லாத நிலமை, பொறுப்பற்ற குணம், ஒழுங்கில்லாமை, எங்கும் பரவியிருக்கும் ஏழ்மை, வேலையில்லாத்திண்டாட்டம் ஆகிய எல்லாவற்றிற்கும் மாற்று பலநிலைப்பட்ட உற்பத்தியே.

பலநிலைப்பட்ட சுய உற்பத்தியினால் ஜனங்கள் அதிக அறிவு பெற வசதி உண்டாகிறது. முன்னேற்றமடைய விரும்பும் எந்தத் தேசமும் இவ்விதக் கல்வி முறையை அலக்ஷியம் செய்ய இயலாது. ஒரு நிலைப்பட்ட உற்பத்தியில் தொழிலாளிகளுக்கு அறிவு ஏற்பட இடமில்லை. அதனுடைய மகத்தான எந்திரங்களுக்கு மனிதர்கள் அடிமைகளாக உழைத்துத் தமது ஆத்மாவையே இழந்து வெறும் மிருகத்தேவைகளையே விருத்தி செய்துகொள்ளுகிறார்கள். ஆகையால் வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கிச்சென்று உண்மைச் சரக்கை நாம் இழக்காமலிருப்போமாக.

---

## அத்யாயம் 18

### வாழ்க்கைக்கேற்ற கல்வி

சென்ற அத்யாயங்களில் கூறப்பட்டவைகளிலிருந்து நமது சங்கடங்களுக்கெல்லாம் காரணம் நமது கல்வி முறையே, நமது மதிப்புத் திட்டங்கள் வேறு விதமாக மாற்றப்பட்டிருப்பதே என்பது தெரியவரும். நமது ஜனங்களுக்கு வாழ்க்கையைப் பொதுப்பட்டதாக சமத்வ திருஷ்டியுடன் நோக்கும்படி போதித்தாலே நமது பிரச்னைகளைத் தீர்க்க இயலும். வாழ்க்கையைப்பற்றின எல்லாத் துறைகளுக்கும் திறவுகோல் கல்வி.

**கல்வியின் கருத்து:**

கல்வி என்றால் நாம் எதைக் குறிப்பிடுகிறோம்? ஒரு குழந்தைக்கு ஐந்து வயதானபின் ஆரம்பிக்கப்படுவதும், அதன் பெற்றோர்களின் சக்திக்குத் தகுந்ததாய், அக்குழந்தையின் பன்னிரண்டோ, பதினைந்தோ, இருபதோ இம்மாதிரி வயதில் முடிவதுமான கலாசாலைப் போதனையே கல்வி என்று வழங்கி வருகிறது. அவ்விதக் கல்வி எழுதப் படிக்கத் தெரிவதா, தொழில் திறமையா, அல்லது வாழ்க்கைக்கு உபயோகமான திறமையா? இவ்விதக் கல்வியைப் பெறுவதே ஒரு முடிவா? அல்லது இந்தக் கல்வியின் மூலம் நாம் வேறொன்றைப்பெற முயலுகிறோமா? அவ்விதம் நாம் பெற முயலுவது வேறொன்றாகில் அது என்ன? அதற்கு ஆரம்பம் இருக்கிறதா? முடிவு இருக்கிறதா? கல்வியைப்பற்றி நாம் கொண்டுள்ள எண்ணம் எதுவோ அதை அடிப்படையாகக் கொண்டதாகவே நமது ஆராய்ச்சியும் இருக்கவேண்டியதாகிறது. ஆகையால் அதைச் சரியாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

கல்வியினால் நமது வாழ்க்கை முழுவதும் பயனடைய வேண்டுமென்றால், சிறந்த சமூகஸ்தனாகவும், சிறந்த கணவனாகவும், சிறந்த தகப்பனாராகவும் அது நம்மைச் செய்ய வேண்டுமென்றால் நாம் பிறந்தது முதல் மரிக்கும் வரை கற்றுக் கொண்டே இருக்கவேண்டும். வாழ்க்கையில்

ஏற்படும் எல்லா மாறுதல்களையும் நாம் சகஜமாக வகிக்கக் கற்கவேண்டும். அவ்விதமில்லாமல் நமது கல்வி ஒருவித மான அந்தஸ்தில் வசிக்கவே நமக்குக் கற்றுக்கொடுத்த தென்றால், வேறு வித நிலமை ஏற்பட்டால் நாம் சமாளிக் கத் தெரியாமல் மூழ்க நேரிடும். கல்வி என்பது நமக்கு அதிக விவரங்களையும் கணக்குகளையும் ஊட்டவேண்டு மென்பதில்லை. ஆனால் நாம் வாழ்க்கையில் நடந்துகொள் வதற்கு சரியான வழியைக் காட்டிக்கொடுக்க வேண்டும்.

கல்வி என்பது ஒரு தத்வஞான முறையில் அமைந்த தாய் ஒவ்வொரு தனிப்பட்டவனிடம் இருக்கும் நற்குணத் தையும் முன்னுக்குக் கொண்டுவரக் கூடியதாக இருக்க வேண்டும். கல்வியைப் போதிப்பது என்பது ஒரு பொறுப்பான மகத்தான வேலை. அதனில் ஆபத்துக்கள் அதிகம். தீர ஆலோசிக்காமல் எவ்விதக் கல்வி முறையி லும் நாம் இறங்கக்கூடாது.

எழுதவும் படிக்கவும் கற்பிப்பதுதான் கல்வி என்று தவறாகக் கருதப்பட்டு பல இடங்களில் குழப்பமுண்டாக்கி விட்டிருக்கிறது. அதைவிடப் பரிகசிக்கத் தகுந்த கொள்கை வேறெதுவும் இல்லை எனலாம். எழுதவும் படிக்கவும் கற்பது அறிவைப் பெறுவதற்கு ஒரு சாதனம். ஆனால் இவை மூலமாகவே உண்மை அறிவு ஏற்படுமென் பதல்ல. அறிவு பெறுவதற்கு இவை முக்கியமென்பது மல்ல.

### உத்தேசத்துடன் கூடின கல்வி:

தற்காலம் அநேக தேசங்களில் ஒரு உத்தேசத்தைக் கொண்டே கல்வி போதிக்கப்படுகிறது, பொதுவாக அறிவு உண்டாக்கும் எண்ணத்துடனல்ல. முதலாளித்வத்தில் தொழிற்சாலையின் அதிகாரிகள் கல்வி என்றால் தமது தொழிற் சாலையில் அதிகாரம் வகிக்கப்பழகுவது என்று நினைக்கிறார்கள். பொதுவுடமை தேசங்களில் பொருளுற்பத்தியை விருத்தி செய் வதற்காகக் கல்வி போதிக்கப்படுகிறது. பட்டாளங்களை விருத்திசெய்யும் தேசங்களில் ஒருவிதக் குறுகிய தேசபக்தியே கல்வியாகப் போதிக்கப்படுகிறது.



### ஏகாதிபத்தியத்தின் முதல்படி:

அதிகார வர்க்கத்தினரால் ஆளப்படும் நமது தேசத்தில் கல்வி என்பது குமாஸ்தாக்களை தயாரித்துக் கொடுக்கிறது. இவ்வித நோக்கத்துடனேயே மெக்காலே பிரபு தம்முடைய கல்வி முறையை இந்தியாவில் ஸ்தாபித்தார். இந்தக்கொள்கை களைக் கைப் பிடித்தே நமது சர்வ கலாசாலைகள் அன்று முதல் உழைத்து வருகின்றன. இம்முறையினால் எவ்வளவு தீங்கு ஏற்பட்டிருக்கிறதென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்ததே. எங்கு பார்த்தாலும் குமாஸ்தாவின் புத்தியுடையவர்களைக் காணலாம், கலாசாலை ஆசிரியர்கள், உத்யோகஸ்தர், வக்கீல், ஜட்ஜ், ஏன் கவர்னராகச் சிறிதுகாலம் பதவி வகிப்பவர்கள் கூடக் குமாஸ்தாவின் மனப்பான்மையைப் பெறப் பழக்கப்பட் டவர்களாய், மேலிருப்பவர் சொல்வதைக் கண்மூடித் தனமாய்ச் செய்துவருவதைக் காணலாம்.

ஒரு குமாஸ்தாவிற்குத் தானாக ஏதாகிலும் செய்யும் சக்தி யாகிலும், தானாக நினைக்கும் சக்தியாகிலும் இருக்கக்கூடாது. அவனுடைய வேலைக்கு அவ்விதக் குணம் ஏற்றதல்ல. இந்தப் படிப்பின் முறையினால் இப்பொழுது தேசமே சுய முயற்சியற்ற வர்களாய் மாறி, எல்லாப் பதவிகளிலும் குமாஸ்தா புத்தி யுடையவர்களே இருக்கிறார்கள். நம்மை நாமே ஆளச் சக்தி யற்றவர்கள் என்று சிலர் சொல்வதில் அதிக உண்மை இருக் கிறது. நாம் எவ்வளவுக்கெவ்வளவு கலாசாலைப் படிப்பைப் பெற்றிருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நம்மை ஆளும் சக் தியை இழந்திருக்கிறோம். நம்மில் மிகத் திறமைபெற்றவர்க ளிடமும் தன் மதிப்புக் குறைவையும் தயக்கத்தையும் கலாசாலை கள் உண்டுபண்ணிவிடுகின்றன. குமாஸ்தாக்களின் இயற்கை பிறருக்குக் கீழ்ப்படிந்து நடப்பது, அவர்களுக்குத் தங்களைத் தாங்களே ஆளும் சக்தி கிடையாது. திலகர்களும் காந்திகளும் இவ்வித முறையிலிருந்து திமிறிக்கொண்டு வெளிவந்தவர்கள். இவ்விதக் கூட்டில் அவர்களை அடைப்பது இயலாது. இங்கி லீஷ் தெரிந்த குமாஸ்தர்க்களைத் தயாரித்துக்கொள்வது ஏகாதி பத்யத்திற்கு முதற்படி.

### ஏகாதிபத்யத்தின் இரண்டாம் படி:

ஏகாதிபத்யத்தின் இரண்டாம் படி இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் நிலைப்படவே, இனி பொருள்

சுரண்டுவது அடுத்தபடி. இதற்குக் குமாஸ்தாக்கள் பயன்படார். குமாஸ்தாக்கள் ஆபீசில் உழைக்கலாம். தொழிற் சாலைகளிலும் ஆலைகளிலும் அவர்களால் எதுவும் செய்ய இயலாது. இதற்குத் தேவையான தொழிலாளிகளை இங்கிலாந்திலிருந்து கொண்டு வருவதும் இயலாது. அவர்களை இங்கேயே தயாரிப்பதுதான் நல்லது. இதுவரை கற்பித்த கல்வி இதற்குப்பயன்படாது. அந்த முறையை மாற்றியாக வேண்டும். அவ்விதம் செய்வதற்குமுன் பொதுஜன மயக்கத்திற்காக ஒரு ஆராய்ச்சி விசாரணை நடத்த வேண்டும். அந்த வேலையை "அபட்" "வுட்" என்ற இருவரும் இப்பொழுது செய்து முடித்திருக்கிறார்கள்.

அவர்கள் விசாரணைசெய்து பிரசுரித்திருக்கும் ரிபோர்ட்டில் (Report on vocational education in India, by A. Abbott and S. H. Wood) பொதுக்கல்வி ஆரம்பமாகவும், தொழிற் கல்வி பிற்பாடு ஏற்படுவதாகவும் இருந்தாலே ஒரு மனிதன் பூரணக் கல்வி கற்றவனாவான் என்று சொல்லியிருக்கிறார்கள். தொழிற் கல்வி என்பது பொதுக்கல்விக்குத் தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்று அவர்கள் நினைக்கிறார்கள். இது காந்தியடிகளின் கொள்கைக்கு நேர் விரோதமானதாகும். ஆலைத் தொழில் விருத்தியைப்பற்றின எல்லா அம்சங்களையும் போதிப்பதான தொழில் கல்வியைப் போதித்துவிட்டால் தேசத்தில் ஆலைத்தொழில் தானாகவே ஏற்பட்டு, இத்தேசம் ஒரு பெரிய ஆலைத்தொழில் தேசமாகிவிடும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். தற்காலத்துக் கல்வி முறையினால் ஒருவனுடைய சுயமுயற்சி விருத்தியடைவதில்லை என்பதை அவர்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். தொழில் கல்வியைப் போதித்தால் ஒரு மாணாக்கன் முயற்சி, ஒழுங்கு, தன்னம்பிக்கை, சாமர்த்தியம் ஆகியவைபெற்றவனாய், பிறருடன் ஒத்துப்பழகக் கற்றுக் கொள்வான் என்பதையும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சிபார்சு செய்யும் போதனா முறை ஒருவனை ஆலைக்கு எஜமானாகச் செய்யவேண்டுமென்பதற்கல்ல. தொழிலாளிகளையும் மேஸ்திரிகளையும் தயார் செய்யவே ஏற்றமுறை. "சரியான உற்பத்தி மேஸ்திரி கையில் இருக்கிறது." என்று அவர்கள் சொல்லுகிறார்கள். "இந்தியாவில் ஆலைத்தொழிலுக்கு முக்கிய தேவை மேலதிகாரத்தை வகிக்கத் திறமை பெற்றவர்களும் ஆலைத்தொழிலில் சிறிது அனுபவம் பெற்றவர்களுமான ஒருசிலரல்ல. நன்றாகப் பழக்கப்பட்ட மேஸ்திரிகள்தான் அதிகம் தேவை." (பக்கம் 63). இதிலிருந்து அவர்களுடைய நோக்கம் முழுவதும் தேசத்தின் பொருளைச் சுரண்டுவதற்கு ஏற்றமுறை எது என்பதைக் கண்டறிவதே தவிர, தேசத்து மனிதர்களின் குணங்களை விருத்திசெய்வதென்பதல்ல என்பது தெரியும். பின் வரும் வாக்கியம் இதை இன்னும் தெளிவுபடுத்துகிறது: "ஆலைத்தொழில் அபிவிருத்தியடைவதற்கு முக்கியமான தொழிலாளிகளையும் மேஸ்திரிகளையும் பழக்க அவர்களுக்குத் தொழிற் கல்வி போதித்தாக வேண்டும் என்று நாங்கள் நினைத்தாலும், நாங்கள் சிபார்சு செய்யும் முறையான கல்வி மிக வேகமாக ஏற்பட்டு ஆலைத் தொழிலின் அதிகாரத்தையே அவர்கள் கையில் கொடுத்துவிடாதென்று நம்புகிறோம்." (பக்கம் 42) பொதுஜனங்களின் நலத்தைப்பற்றி அவர்கள் சிந்திப்பதாக இத் ரிபோர்ட்டில் எங்கும் எவ்வித அறிகுறியும் காணோம். ஆலைத்தொழிலுக்கு அவசியமான தொழிலாளிகளை அளிப்பதுடன் அவர்களுடைய தொழிற் கல்வி முறை முடிந்துவிடுகிறது.



இந்த ரிபோர்ட் சிபார்சு செய்யும் முறைப்படி கல்வியைப் போதிக்க எந்த அரசாங்கமும் முயலக்கூடாது. ஆலைத் தொழிலுக்குத் தேவையான தொழிலாளிகளை ஆலைத் தொழிலகாரர்களே தயாரித்துக் கொள்ளட்டுமே! பொதுஜனங்களின் பணத்தைச் செலவழித்து விசாரணை செய்யும் ஒரு கமிட்டி அதிகமான ஜனங்களுக்கு எவ்விதத் தொழிலினால் நன்மை ஏற்படுமோ அதன் அபிவிருத்தியையல்லவோ சொல்லவேண்டும்! இந்தியர்களில் அதிகமானவர் வியவசாயிகள். ஆனால், வியவசாயிகளைப் பற்றியும் அவர்களுக்குத் தொழில் ஞானம் ஏற்படுவதைப் பற்றியும் இவர்கள் புதிதாக எதுவும் ஆராய்ச்சி செய்ய முயலவே இல்லை. 1928ம் வருஷம் வியவசாயக் கமிட்டி செய்த ரிபோர்ட்டிலிருந்து ஒரு வாக்கியத்தை எடுத்துச் சொல்லி, "வியவசாயிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க அவர்களில் சிலர் வேறு தொழில்களில் பிரவேசிக்கவும், மற்றவரை வியவசாயத்தை இன்னும் சிறந்த முறையில் செய்யும்படி தூண்டவும் வேண்டியது." "கிராமத் தொழில்களின் மூலம் கிராம வியவசாயத்தைச் சீர்திருத்த அதிக இட-

மில்லை. அது மிகவும் சிரமம்." என்று சொல்லி ஒதுக்கி விட்டிருக்கிறார்கள்.

மெக்காலே பிரபுவின் கல்வி முறைக்கு ஏற்றதாகவே வியாபாரத்திற்கு இரண்டாவது படியாக இந்த முறை அமைந்திருக்கிறது.

## கீழ்நாட்டு முறை:

நமது தேசத்தில் முன்னாட்களில் கையாளப்பட்ட கல்வி முறை ஒருவனின் வாழ்க்கையை நன்கு பயன்படுத்திக்கொள்ளப் போதிப்பதாகும். ஒரு மாணாக்கன் தனது குருவைத் தானே தேர்ந்து எடுத்து, தன்னுடைய தினசரி வாழ்க்கை முழுவதையும் ஆசானின் கண் பார்வையின்கீழ் கழித்து, அவரிடமிருந்து வெறும் கல்வி மாத்திரமல்ல, ஆத்ம பயிற்சியையும் பெற்று தனது சீலத்தை விருத்திசெய்துகொண்டான். இவ்விதப் போதனாமுறை மதவிஷயத்தில் மாத்திரமல்ல, எல்லா விஷயத்திலுமே அனுசரிக்கப்பட்டது. ஆசானும் தான் போதிப்பதை ஒரு தொழிலென்று நினைப்பதில்லை. ஒரு தகப்பனார் தமது பிள்ளைக்குப் போதிப்பது போன்றே கருதிச் செய்துவந்தார். ஆசான் தமது வாழ்க்கையை நன்னெறி முறையில் நடத்த, அதைக்கண்முன் காணும் சீடனும் தன்னால் இயன்றவரை அதைத் தானும் பயின்றுகொண்டான். இயேசுநாதர் தமது சீடரிடம் "என்னைப் பின்பற்றுங்கள்" என்று கூறின சமயம் அச்சீடர் வாசிப்பதற்கென்று பாடபுத்தகங்கள் எதுவும் அவர் கொடுக்கவில்லை. குரு சென்றவழி அவர்கள் செல்லவேண்டியதாயிற்று. இதுவே நமது கல்வி முறை.

## மேல்நாட்டு முறை:

மேல் நாடுகளில் கல்வி போதிப்பது ஒரு உத்யோகம். "தொழில்" என்பதன் கௌரவப்பெயரே "உத்யோகம்". இந்தியாவில் அந்தத் தொழில் சில்லரைக்கடை வியாபாரமாக மாறி விட்டிருக்கிறது. சில்லரை வியாபாரி பெரிய வியாபாரியிடமிருந்து பொருள்களை வாங்கி ஜனங்களுக்கு விற்கிறான். அதேபோல் நமது போதகர்கள் தமது பொருளாதாரக் கொள்கைகளை மேல்நாட்டு நிபுணர்களாகிய மார்ஷல், பிக்கோ முதலியவர்களிடமிருந்தும் சர்க்கார் ரிபோர்ட்டுகளிட மிருந்தும் பெற்று வித்யார்த்திகளுக்குச் சில்லரையாக விற்கிறார்கள். ஆகையால் ஒரு கடைக்காரனுக்குத் தான் வாங்கி விற்கும்



சாமான்களிடத்தும் அதை வாங்குபவர்களிடத்தும் எவ்வளவு பற்றுதலும் அன்பும் இருக்குமோ அவ்வளவே இவர்களுக்கும் தமது அறிவிலும் தமது சீடர்களிடமும் இருக்கும். இவர்கள் பெறும் கூலியை மிகச் சொற்பமானதாகவும் கேவலம் ஜீவனம் செய்வதற்கே போதுமானதாகவும் செய்தால், இவர்களில் எவ்வளவு பெயர்கள் தம்து வேலையைச் செய்ய முன் வருவார்கள்? முன்னாட்களில் ஒவ்வொரு கிராமத்திலும் உபாத்யாயர்களுக்கென்று ஒரு பங்கு நிலம் ஒதுக்கிவைக்கப்படும். அவர்கள் அதைக்கொண்டு திருப்தியடைவார்கள். இந்நாட்களிலோ ஒரு நல்ல வியாபாரி தனது தொழிலில் எவ்வளவு லாபம்பெற முயலுகிறானோ அவ்வளவு லாபம் கிடைத்தாலே போதகர்கள் தமது வேலையை ஏற்கிறார்கள்.

## கல்விச் சீர்திருத்த வரலாறு:

கல்வியிலிருக்கும் தவறுகளைச் சீர்திருத்தக்காரர்கள் உணர்ந்தார்கள். ஆனால் அதைத் திருத்த இன்னும் வழி ஏற்படவில்லை. முன்பு தேசத் தலைவர்கள் சத்யாக்ரகப் போருக்கென்று பிள்ளைகளைப் பள்ளியை விட்டுவிட்டு வருமாறு அழைத்த சமயம் அப்பிள்ளைகள் இக்காலத்திய கல்லூரிகளில் படிப்பதனால் ஏதும் சாதகமேற்படாது என்று உணர்ந்திருந்தேயே அவ்விதம் செய்தனர். அச்சமயம் அக்கல்வி முறைக்கு மாறாக வேறு முறை தேசத்தில் இல்லாவிட்டாலும், அந்த முறைக் கல்வியைவிட கல்வியில்லாமலிருப்பதே நலமென்று அவர்கள் கருதினார்கள். வேறு தேசத்தினரால் இயற்றப்பட்ட குமாஸ்தா அச்சுக்களில் நமது குழந்தைகளை உருக்கி வார்க்காமலிருக்கலாமல்லவா!

அதற்கு மேல் நாமே கல்வி போதிக்கலாமென்று சிலரால் முயலப்பட்டது. பல வித்யாபீடங்கள் அல்லது தேசியக் கல்லூரிகள் அங்கங்கே ஏற்பட்டன. சர்வகலாசாலைக்கும் இவைகளுக்கும் இருந்த முக்கிய வித்யாசம் கல்வியைப் போதிக்கத் தாய் பாஷை உபயோகிக்கப்பட்டதென்பதே. போதிக்கப்பட்ட கல்வி அந்த கல்விதான். இத்தேசத்திற்கு ஏற்ற கல்வி எது என்று சீர்திருத்தக்காரர்கள் ஆலோசித்துக்கொண்டிருந்தனர். சில வருஷங்களுக்குப் பின் தேச உழைப்புக் கொண்டதான ஒரு தொழில் போதிப்பதே நலம் என்பது ஏற்பட்டது. ஒரு மாணாக்கன் தனது காலத்தில் ஒரு பகுதியைத் தொழில் செய்வதிலும் ஒரு பகுதியை மனதின் பண்பைத் தருபவை என்று

சொல்லப்படும் கல்வியைக் கற்பதிலும் செலவு செய்வது என்று முடிவுசெய்யப்பட்டது. வித்யாபீடங்களில் இவ்வித முறை சில வருஷங்கள் அனுசரிக்கப்பட்டன. சர்வகலாசாலை முறையில் பயின்றவர்களைவிட, இந்த முறையில் பயின்ற மாணாக்கர்கள் அதிக திடசித்தமும் சுய முயற்சியும் உள்ளவர்களாயிருந்தனர். ஆனால் இவர்களைக் கிராமத்திற்கேற்றவர், கிராமத்தை முன்னுக்குக் கொண்டுவரக் கூடியவர் என்று சொல்ல இயலாது. இம்முறையைப் போதிக்கும் வித்யாபீடங்கள் நகரங்களிலேயே இருந்தன. நகரங்களில் படிக்க வந்தபின் வாலிபர்கள் கிராமங்களை மறந்துவிடுகின்றனர். பருவமடைந்த வாலிபர்களுக்கு நகர வாழ்க்கை மிகவும் ரஸமாக இருக்கிறது. வித்யாபீடங்களில் தேறின வாலிபர்கள் தேசத்தின் நலத்தைக் கோரினவர்களென்பது உண்மையே. ஆனால் அவர்களால் புது நிர்மாண வேலையிலாவது பெரிய பலனில்லை. கிராமங்களில் அவர்கள் வசித்திருப்பதில்லையாதலால், அவர்களுடைய போதனைகளைக் கிராமவாசிகள் எளிதில் மறந்துவிடலாயினர்.

ஆதலால் பிரஜைக் கிராம நிர்மாண சங்கம் ஆரம்பித்த சமயம் கிராமத்தில் வசித்து உழைக்கக்கூடிய திறமைசாலிகள் தேவையாக இருந்தது. வித்யாபீடங்களின் முறை இங்கே பயன்தரவில்லை. கிராமத்தைத் தமது பிறந்த இருப்பிடமாகச் செய்துகொண்டு, தமது கல்வியினாலும் வாழ்க்கை முறையினாலும் கிராமவாசிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் உண்டாக்கக்கூடிய மனிதர்கள் வேண்டியிருந்தது. நகர வாழ்க்கையில் பற்றுள்ளவர்களைக் கிராமங்களுக்கு அனுப்புவதனால் யாது பயன்? கிராமத்து வாலிபர்கள் கல்விபெற்று, தேர்ச்சிபெற்று, கிராமத்திலேயே கிராமத்து ஜனங்களுக்கு வழிகாட்டியாகவும் ஆதர்சமாகவும் நிற்கவேண்டும். கிராமவாசிகளைப்போல் தம்முடைய சொந்த முயற்சியினால் ஒரு தொழில் செய்து ஜீவனோபாயம் செய்துகொள்ள வேண்டும். இவ்வித நோக்கத்துடன் புதுக் கல்வி முறை சீர்திருத்தப்பெற்று, ஒவ்வொரு மாணாக்கனும் தனக்கு ஜீவனோபாயம் தரக்கூடியதான ஒரு தொழிலைக் கற்பதென்பது ஏற்படுத்தப்பட்டது. இவ்விதத் தொழிலைக் கற்பது முக்கியமாகவும், இதர பாடங்கள் அதைத் தழுவியதாகவும் போதிக்கப்பட்டது. முற்காலத்தில் ஒருவனுக்கு வாழ்க்கையைச் செம்மையாக நடத்த எவ்விதப் பழக்கம் ஏற்றதென்று கருதப்பட்டதோ, அதே போதனைமுறையில் சில திருத்தங்



களுடன் இந்த முறையில் அமைந்திருக்கிறது. இவ்விதக் கல்வி முறை ஏற்பட்டு சிலகாலமே ஆகிவிட்டிருக்கிறபடியால் இம்முறையிலிருக்கும் சாதக பாதகங்களை அதற்குள் அறிய இயலாது. ஒவ்வொருவன் வாழும் முறையினாலும் அவனுடைய அண்டையிலிருப்பவர் நல்ல வழியிலோ தீய வழியிலோ பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் நல்ல வழியில் பழக்கப்பட்டவர்களைக் கிராமங்கள்தோறும் ஸ்தாபித்து நல்ல முறையில் வாழச் செய்தால், அந்த முறை பரவ அதிக வசதி ஏற்படும்.

## உண்மை மதிப்புகள் :

துர்பாக்கிய வசத்தினால் நமது கலாசாலையில் தேறினவர்கள் வெளி நாட்டாரின் வாழ்க்கை முறையைக் குரங்குகள்போல் பின்பற்றவே கற்கின்றனர். படித்தவரென்று பெயர் பெற்றிருப்பவர்களின் முறையைக் கிராமத்து ஜனங்கள் பின்பற்ற முயல்வது இயற்கைதானே! இவர்கள் செய்வது சரிதானோ இல்லையோ என்பது அவர்களுக்கு எவ்விதம் தெரியும்! ஆகையால் மிகமிகப் பட்டிக்காடு என்று கருதப்படும் இடங்களிலும் தவறான கொள்கைகள் பரவி வருகின்றன. நகரத்து ஜனங்களின் வழியைப் பின்பற்ற முயலும் கிராமவாசி தனது சக்திக்கு மீறி செலவழிக்கிறான். இது அவனைக் கடனில் இன்னும் ஆழமாக அழுத்தி விடுகிறது. வெளிநாட்டுப் பகட்டுச் சாமான்களுக்கு ஆசைப்படும் அவன் தனது நாட்டினரின் தொழிலைக் கொன்றுவிடுகிறான். வெளி நாட்டுச் சாமான்களை வாங்க வாங்க நமது நாட்டின் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமுமே அதிகரிக்கிறது. ஆகையால் கிராமத்தின் எல்லா அம்சத்தைப்பற்றினதாகவும் நமது கல்வி முறை அமையவேண்டும். கிராமத்தினரின் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதுடன் கிராமத்தினரின் வாழ்க்கையே எவ்விதமிருக்க வேண்டுமென்பதை நாம் வாழ்ந்து காண்பிக்கவேண்டும். கிராமவாசிகளின் நலத்திற்கு ஏற்றதானதும் அவர்களுடைய செல்வத்தை விருத்தி செய்யக் கூடியதானதுமான புது மதிப்புகளை நிட்டப்படுத்தி போதித்தாக வேண்டும்.

நமது கல்வி முறை தவறாக இருப்பதினால் நமது வாழ்க்கையே நம்மைக் கொன்றுவிடுகிறது. தும்பைவிட்டு வாலைப் பிடிக்கிறோம். சிறிது காலம் முன்பு நான் ஒரு சம்ஸ்கிருத பாடசாலைக்குச் சென்றிருந்தேன். மேல் வகுப்பினர் என்று சொல்லப்படும் ஒரு ஜாதி பிராம்மணர்களுக்கே அங்கு சில

மந்திரங்கள் குருட்டுத்தனமாக மனப்பாடம் செய்யப்போதிக்கப்படுகிறது. ஹரிஜன் எவரும் அங்கே பிரவேசிக்கக்கூடாது என்பதைச் சொல்லவும் வேண்டியதில்லை. இதுவோ பண்பு? நாம் நமது கல்வியை பிரிட்டிஷாரிடமிருந்து கற்கிறோம். நமது உண்மைப் பிராமணர்கள் எங்கே? பிறதேசத்திற்கு நாம் அடிமைப்பட்டிருக்கிறோம். நமது க்ஷத்ரியர்களெங்கே? பிரிட்டிஷ் வியாபாரமென்ற கொள்ளையைத் தாங்க இயலாமல் தேசம் திண்டாடுகிறது. நமது வைசியர்கள் எங்கே? தேசத்தில் பிரம்ம, க்ஷத்ரிய, வைசியர் இருக்கிறார்களென்றால் அவர்களெல்லாரும் பிரிட்டிஷ்காரர்களே. இவ்விதத் தாழ்வு நமக்கு ஏற்பட்டிருக்க, உலகத்திற்கே நாம் பறையர்களாக இருக்க, நம்மில் சிலர் தம்மைப் பிராம்மணர்களென்று சொல்லிக்கொண்டு, தமக்கு இருக்கும் அறிவைப் பிறருக்குப் போதிக்க முயலாமல் தம்மைத் தனியாக ஒதுக்கி ஒளித்து வைத்துக்கொள்வது மிகப் பரிதாபகரமான காட்சியாக அல்லவோ இருக்கிறது. இந்தத் தீண்டாத பிராம்மணர்களின் ஆசாரமும், தன்மதிப்பும், கர்வமும்போன்ற கேவலமான விஷயம் வேறு ஏதாகிலும் உளதோ? பழையகால சாஸ்திரங்களை மனப்பாடம் செய்துவிட்டால் உண்மைக் கல்வி ஏற்பட்டுவிடாது. வாந்தி எடுப்பதை ஜீர்ணம் என்று சொல்ல இயலுமோ? "அன்னம் ஆவே—" என்றார் நன்னூலாசிரியர். ஓர் பசு புல்லை மேய்ந்து பாலை ஈவதுபோலும் ஓர் நல்ல மாணாக்கன் முன்கால சாஸ்திரங்களையும் நூற்களையும் பயின்று தற்கால சமூகத்திற்கு பயன் தரும் வகையில் அந்த அறிவை உபயோகித்தாலே அவனுடைய கல்வியை உண்மைக் கல்வி என்று நாம் சொல்லலாம். தினசரி வாழ்க்கையில் ஏற்படும் பிரச்னைகளைச் சரியான வகையில் தீர்த்துக்கொள்ள அறியாத ஒருவரை கல்விமானென்றும் பண்பு பெற்றவரென்றும் கருதுவதெங்ஙனம்? வாசகசாலையில் புத்தகம் ஏராளமாக இருக்கலாம், ஆனால் அச்சாலைக்கு அதிக அறிவு இருக்கிறதென்று எண்ணக்கூடாது. நான் பார்வையிட்ட பாடசாலை மனிதர்களைக் கேவலம் நடக்கும்புத்தகங்களாகச் செய்தது; ஆனால் தினசரி உலகத்துடன் அதுபழகாமல் தன்னை ஒதுக்கி வைத்துக்கொள்ளும்வரை அதனால் வாழ்க்கைக்கேற்ற பண்பை போதிக்க இயலாது. அவ்விதப் பாடசாலைகள் வெறும் கொள்ளி உயிர்களே. அவைகளை வேருடன் அகற்றவேண்டும். நமது ஜனங்களுக்கு மனோபீடையை உண்டாக்கும் நோய் நிலையங்கள் அவை.



உண்மைக் கல்விக்கு ஜாதி மதபேதமே கிடையாது. அது மனிதரின் கட்டுகளுக்கு மீறினது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்திருக்கும் மானுஷ்யம் என்பதை நாம் உணர்ந்து அதற்கு மரியாதை கொடுக்காவிடில், நமது பூனுலினாலேயே நாம் சுருக்கிடப்பட்டு நசிப்போம். ஆகையால் இவ்விதப் பந்தனங்களிலிருந்து நாம் நம்மை விடுவித்துக்கொள்வோம். தாம் பிராம்மணரென்பதைப்பற்றி எவராகிலும் பெருமையாக நினைத்தால், இந்தப் பிராம்மண அப்பிராம்மண வித்யாசத்தினாலேயே இந்திய தேசம் இன்று உலகத்தோர் முன் வெட்கித் தலைகுனிய வேண்டியிருக்கிறதென்பதை அவர் உணருவது நலம். ஆதியில் நாட்டின் பண்பிற்கும், ஜனங்களின் தூய்மை வாழ்க்கைக்கும் பொறுப்பாளிகளாக நியமிக்கப்பட்டிருந்த பிராம்மணர்கள் தமது அதிகாரத்தைத் தவறான வழிகளில் செலுத்தியும், இதர ஜனங்களிடை இருந்து தம்மைத் தனிப்படுத்திக்கொண்டும பலவழிகளினால் நமது மேன்மை ஸ்தானத்திற்கு தம்மை அருகரல்லாதவர்களாய் செய்துகொண்டுவிட்டனர் இதனால் அவர்களுக்கு முன்பு இருந்த பொறுப்பையும், முன்னணியில் இருந்து ஜனங்களுக்கு வழிகாட்டும் அதிகாரத்தையும் அவர்கள் நாளடைவில் இழந்து வருகின்றனர். ஒரு வைத்யர் வியாதிக்காரர்களுக்கு சிகித்ஸை செய்யாமல் அவர்களுடைய வியாதி தமக்கு ஒட்டிக்கொள்ளக்கூடாது என்று ஒரு பரிசுத்த அறைக்குள் ஒளிந்து கொள்வது போலிருக்கிறது. இந்தப் பிராம்மணர்களின் செய்கை. அவ்வித மனிதன் சமூகத்தை ரக்ஷிக்காமல், அதன் இரத்தத்தை உறிஞ்சுபவனாவான். தீண்டாமையும் ஜாதிவித்யாசமும் நீங்கினாலேயே ஸரஸ்வதி தேதி நம்மைக் கடாக்ஷிப்பாள்.

மேல்நாட்டு வியாபாரத்துடன் நெருங்கின பழக்கமேற்பட்டபின் நம்மிடை தங்கம் மிக உயர்ந்த ஸ்தானம் பெற்றுவிட்டது. நாம் முன்பு கொண்டிருந்த பண்பின் மதிப்பு திட்டத்தை விட்டுவிட்டு பணத்தின் மதிப்பு திட்டத்தை அங்கீகரித்து விட்டோம். மனிதரின் நலத்தைப் பற்றி சிந்திக்காமல் மனிதரின் செல்வத்தைப்பற்றியே

சிந்திக்கிறோம். பிராமணரின் பண்பு போய் மேல்நாட்டு வைசியரின் பணத்தாசையே எங்கும் பரவி வருகிறது. முன்னாட்களில் பிராமணர்களை மற்ற வகுப்பினர் கௌரவித்தது எதற்காக? அவர்களிடம் அதிக தனம் இருந்ததென்பதற்காக அல்லவே? அவர்கள் சுயநலம் பாராட்டாமல் சமூகத்திற்கு நலம் செய்து வந்ததற்காக வல்லவோ? அவ்விதம் முக்கியமான விஷயத்தை முக்கியப் படுத்தாத கல்வி முறை நமக்குப் பயனே இல்லை. பொது ஜனங்களுக்குப் போதிக்கப்படும் கல்வி முறையில் செல்வம், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றைப்பற்றின உண்மை மதிப்பைப் போதிக்கும் குணமும் இருக்க வேண்டும்.

**வாழ்க்கையின் பல துறைகள் :**

மனிதர் மிகச் சிக்கலான இயற்கையுள்ளவர் அவர்களுடைய குணங்களைத் தனித்தனியாகப் பிரித்து ஒவ்வொன்றாக விருத்தி செய்ய இயலாது. தேகவிருத்தி, ஆத்ம விருத்தி, குணவிருத்தி ஆகியவைகளை விட்டுவிட்டு கேவலம் அறிவு விருத்தியை மாத்திரம் கல்வி மூலம் ஏற்படுத்த முயன்றால் கோணலான மனிதரே கிடைக்கும். நாம் உத்தேசிப்பது உண்மைக் கல்வி, உண்மை விருத்தி என்றால் மனிதருக்கு எல்லா துறைகளிலும் விருத்தியளிக்க முயலவேண்டும். தேகம், மனம் ஆத்மா, அறிவு ஆகிய எல்லாவற்றிலும் தேர்ச்சிபெற்றவராகச் செய்யவேண்டும். இவ்விதம் செய்ய ஒவ்வொருவரும் ஒரு தொழிலைக் கற்க வேண்டும். சமூகத்தின் ஓர் அங்கத்தினராக எவ்விதம் வாழ்வது என்பதைக் கற்கவேண்டும். இதர மனிதர்களையும் பொருள்களையும் எவ்விதம் மதிப்பிடுவதென்று கற்க வேண்டும். இவையெல்லாவற்றையும் போதிக்காத கல்வி சிறிதும் பயனில்லை.

நாம் செய்யும் ஒவ்வொரு சிறிய வேலையினாலும் நாம் பாதிக்கப்படுகிறோம். நமது வேலை, நமது விளையாட்டு, நமது பொழுது போக்கு, நமது ஓய்வு ஆகிய எல்லாமும் நன்கு யோசித்து அமைக்கப்பட்டாலே அதன் பயன் சமூகத்திற்கு நலமளிப்பதாகும். தன்னுடைய தொழிலைச்செய்ய பழக்கிக் கொள்வதில் ஒருவனுடைய ஆயுளில் அதிக காலம் செலவழிகிறது.



அதற்குமேல் தொழிலைச் செய்வதில் அதிக காலத்தைச் செலவழிக்கிறோம். அவ்விதம் நாம் தொழில்செய்யும் வகையானது நமது திறமையும் ஆத்மாவையும் குணங்களையும் நாளுக்கு நாள் விருத்திசெய்து, நம்மை ஓர் முழு மனிதனாகச் செய்தால் அவ்வளவுக்கவ்வளவு இத்தேசத்திற்கு நலம். உண்மை உழைப்பினால் ஒரு தேசம் குறைவு அடையாது, விருத்தியையே பெறும். நாம் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டுள்ள இலக்ஷியங்களை தினசரி அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர நமது தொழில் சாதகமாக இருக்கவேண்டும். பூஜை வழிபாடுடன் முடிந்துவிடும் பக்தி வெறிக்குச் செய்வதேயாகும், நமது வாழ்க்கையின் ஒவ்வொரு செய்கையையும், ஒவ்வொரு நிமிஷத்தையும் நமது பக்தி பாதிக்காவிட்டால் அவ்வித பக்தி வீண். "வேலை" என்ற அத்யாயத்தில் ஒரு மனிதனுக்கு வளர்ச்சி அளிக்க வேலை எவ்வளவு அவசியமென்பதை ஆராய்ந்தோம். ஒரு மனிதனின் பூரண வளர்ச்சிக்கு வேலை அவசியமென்றால், குழந்தைகளின் வளர்ச்சிக்கும் நாம் வேலையைத் தகுந்தவிதம் உபயோகிக்கலாம்.

## பொதுஜனநிதியும் கல்வி திட்டமும் :

நமது பொருள் வரியிலிருந்து சேரும் ரூபாயைக் கல்வி இலாகாவிற்கென்று செலவழிப்பது என்று சர்க்கார் நியமித்திருப்பது ஒரு ராஜ தந்திரமே. அம்முறை நியாயத்திற்கு விரோதமானது. நடுத்தர வகுப்பினரின் குழந்தைகளுக்குத் தேத் தண்ணீர் கொடுப்பதற்காக ஏழையின் கூரையைப் பிய்த்து எரிக்கவேண்டிய அவசியமேயில்லை. இவ்விதக் கல்வியானது ஏழைகளை இன்னும் பரம ஏழைகளாகச் செய்து, அவர்களுடைய வாழ்க்கையைத் துன்பமானதாகச் செய்து, அவர்களின் குணத்தை அழித்து விடுகிறது. தனது ஜனத்திரளை மிதித்துக்கொண்டு சென்று எத்தேசமும் முன்னேற்றமடைய இயலாது. தகப்பனைக் கொன்று தாயை வியபிசாரியாகச் செய்து சர்க்காருக்கு மலிவான குமாஸ்தாக்கள் தயாரிப்பதைவிட கல்வியே இல்லாமலிருப்பது நலம். நாம் சற்று நிதானித்து இக்காலத்தில் நம்மைச் சுற்றி என்ன நடக்கிறதென்று பார்ப்போம். அப்பொழுதே ஜனத் திரளுக்கு ஏற்றதான கல்வி முறை, அழிக்காமல் உண்டாக்குவதும், கொல்லாமல் உயிர் அளிப்பதும், பிறருடையதைக் கவராமல் நமக்குச் செல்

கும் சேரும்படி செய்வதுமான ஒரு நல்ல கல்வி முறையைத் தயாரிக்க வழி தெரியும். நம்மில் எவர் அதிகக் கல்வி பெற்றிருக்கின்றனரோ அவர் பிறருக்குத் தமது பாகத்திலிருந்து தாராளமாகக் கொடுக்கட்டும். நாம் பெற்றிருக்கும் செல்வத்தாலல்ல நாம் மேன்மை பெறுவது, நாம் பிறருக்குக் கொடுத்தாலே, தர்மம் செய்தாலே, மேன்மை பெறுகிறோம். கிணற்றின் தண்ணீரை இறைக்க இறைக்க அது இன்னும் சுத்தமானதாக ஊறும்.

நாம் நமது கவனத்தை கிராமங்களில் செலுத்தவேண்டும். கலாசாலைப் படிப்பை சிறிது காலம் ஒதுக்கி வைத்திருப்பதனால் தேசத்திற்கு எவ்விதத் தீங்கும் ஏற்படாது. ஏற்கனவே முன்பாரம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. நமது தேவைக்கு மேற்பட்ட கலாசாலைப் பட்டதாரிகள் இருக்கிறார்கள். இவர்களினால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் நமக்குத் தேவையான கல்வியைப் பெற்றவர்களல்ல அவர்கள். அவ்விதமிருந்தால் அவர்களுக்கு வேலை வெகு சுலபமாய் ஏற்பட்டு விட்டிருக்கும். நமது நோக்கம் நமது கிராமத்தினரை இன்னும் திறமை பெற்றவர்களாகச் செய்வதே. அவ்விதம் செய்ய அவர்களுக்கு ஆழ்ந்த புத்தக விஷயங்களைப் போதித்தாக வேண்டுமென்பதல்ல. கிராமவாசிகளுக்கு அறிவு போதிக்க சினிமாவும் ரேடியோவும் ஓரளவு பயன்பட்டாலும் அவை மாத்திரம் போதா. மேலும் அவைகளின் மூலம் கிராமத்தோர்க்கு கல்வி போதிக்கச் செலவழிக்கப்படும் தொகை மிகவும் அதிகம். அவர்களின் கல்வி உள்ளிருந்து வளரும் மரமாக இருக்கவேண்டும், வெளியிலிருந்து கொண்டு வந்து போடப்படும் பந்தலாக அல்ல. வெளியிலிருந்து கொண்டுவரப்படும் கல்விக்குப் பல செயற்கை உதவிகள் கொடுத்தாகவேண்டும். ஆனால் உள்ளிருந்து ஏற்படும் கல்வி தானாகவே வளர்ந்து மலர்ச்சி பெற்று கிராமத்தினரை ஒருவரோடொருவராகப் பிணைத்து, முடிவில் தேசத்தை ஒன்றாகச் செய்ய சக்தி பெறும்.

இவ்விதக் கல்வியைப் போதிக்க பெரிய திட்டம் எதுவும் ஏற்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை. பெரிதாக



திட்டங்களை ஏற்படுத்தி, அவைகளில் அதிக நம்பிக்கை வைத்தோமானால் மனித குணங்களை நாம் மறந்துவிடுகிறோம். அவ்வித அமைப்பு நாளடைவில் உயிரற்றதாகவும் அதிகச் செலவு பிடிப்பதாகவும் ஆகிவிடுகிறது. இதர விஷயங்களில் போலவும் கல்வியிலும் அதை ஒருநிலைப்படுத்தினால் (சர்வகலாசாலை போன்ற ஓர் தலைமை ஸ்தாபனத்திற்கு எல்லா சக்தியையும் கொடுத்தால்) மிகக்கட்டுப்பாடுகளும் ஒரே அச்சில் வார்த்து எடுப்பது போன்ற குணங்களும் ஏற்பட்டுவிடுகிறது. இது கல்விக்கு மிகத் தீங்கிழைக்கும். உபாத்தியாயர் வேலை சரியாக செய்கிறார் என்பதை அந்த அந்த கிராமத்து ஜனங்கள் மேற்பார்வையிடுவது மேலானது. ஆகையால் கிராமத்துக்கு வேண்டிய கல்வியின் செலவிற்கென்று கிராமத்தினர் முன் காலங்களிலிருந்தது போல் ஒரு பங்கு நிலத்தை உபாத்தியாயருக்கென்று ஒதுக்கிவைத்துச் சரிகட்டிக் கொள்வது நலம். ஒரு நடு அமைப்பிலிருந்து இவ்வித பள்ளிக்கூடங்களுக்கு புத்திமதிகளும் அடிக்கடி மேற்பார்வையும் ஏற்படுமென்றால் நமது காரியத்திற்கு இதுபோதும். உள்ளூர் கவனம் எப்போதும் பள்ளியில் இருக்கும். இப்போது இருப்பது போல் வருஷத்திற்கு ஒரு முறை சர்க்கார் இன்ஸ்பெக்டர் வரும்பொழுது அவரை திருப்தி செய்துவிட்டால், வருஷம் முழுவதும் உபாத்யாயர் தமது இஷ்டப்படி நடக்கலாம் என்றிருப்பது அவ்வளவு திருப்திகரமான முறை அல்ல. இம்முறையினால் முன்னேற்றம் ஏற்படுவதில்லை. வேலை கூட சரியாக நடப்பதில்லை. ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கூடமும் அக்கிராமத்தின் முன்னேற்றத்திற்கு, பணிபுரியும் உயிர் நிலையாக இருக்கவேண்டும். இவ்வித முறையினாலும் ஒரு வகையில் தீங்கு ஏற்படக்கூடும் என்று சிலர் சொல்லலாம். உபாத்யாயர் தம்மை அக்கிராமத்தின் கல்விக்கே பொறுப்பாளி என்று எண்ணி பெரியவர்களைச் சீர்திருத்துவதில் முனைந்து குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க மறந்துவிடலாமல்லவா என்று சொல்லப்படும். ஆனால் சமூகத்திற்கு வழிகாட்டியாக இருப்பது உபாத்யாயரின் முக்கிய கடமை அல்ல. அது ஒரு அம்சமே. ஆகை

யால் அவர் தமது கடமையை நன்கு செய்வார் என்றே நம்பி, மனிதரின் நல்ல குணங்களில் நம்பிக்கை வைத்து; நமது இலக்ஷயத்தை மறக்காமல் முன் செல்வோமாக.

நமது இலக்ஷியத்தை அடைவதற்கு மார்க்கத்தைப் பற்றி நமக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படலாம். ஒவ்வொரு உபாத்யாயரும் ஒவ்வொரு வகையில் போதிக்க முயலலாம். ஆனால் இது ஒரு சிறு விஷயமே. இலக்ஷியத்தை மனதில் வைத்துக் கொண்டால் உண்மைப் பண்பைப் பெற்று, திருப்திகரமான மதிப்புகளை ஏற்படுத்திக்கொண்டு நமது முறைகளில் வித்யாசப்படுவதாகத் தோன்றினாலும், உண்மை ஒற்றுமையை நாம் அடைவோம்.

## உத்தேசிக்கப்பட்ட முறை:

உண்மைக் கல்வி எவ்விதம் அமையவேண்டுமென்பதைப் பற்றி அதிகம் பேச்சு நடந்துகொண்டு வருகிறது. கல்வியினால் ஏற்படும் செலவைக் கல்வி பயில்வோரே கொடுக்கவேண்டும் என்று காந்தியடிகள் சொல்லுகிறார். "சிறுவர், பெரியவர் எவராக இருப்பினும் அவர்களுடைய தேகம், அறிவு, ஆத்மா ஆகிய மூன்றையும் முன்னுக்குக்கொண்டு வருவதே உண்மைக் கல்வியாகும். கேவலம் எழுதவும் படிக்கவும் போதிப்பது கல்வியின் நோக்கமல்ல, அம்முறை கல்வியேயல்ல. படிக்கத் தெரிந்தால்மாத்திரம் கல்விமானாகமாட்டான். ஆகையால் ஒரு குழந்தைக்குக் கல்வி போதிக்க வேண்டுமென்றால் முதன் முதல் அதற்கு ஒரு தொழிலைக் கற்பித்து அது ஆரம்பமுதல் பொருள் உண்டாக்கும் சக்திபெற்றதாகவே நான் செய்வேன். இந்த முறையினால் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் தன்னுடைய செலவைத் தானே சம்பாதித்துக்கொள்ளும். சர்க்கார் இவ்விதப் பள்ளிகளில் ஆகக்கூடும் பொருள்களை வாங்கிக்கொள்வது என்று இருந்தால்மாத்திரம் போதுமானது." என்று எழுதுகிறார் காந்தியடிகள்.

மேலும், "இவ்வித முறையினால் குணங்களும் ஆத்மவிருத்தியும் அதிகம் ஏற்படுமென்று எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. ஆனால் ஒவ்வொரு தொழிலும் இக்காலத்தில் கற்பிக்கப்படுவதுபோல் உயிரற்ற வகையில் கற்பிக்கப்படாமல், விஞ்ஞான முறையில் பூரணமாகக் கற்பிக்கப்பட வேண்டும்; அதாவது ஒவ்வொன்றின் காரணம் காரியம் இரண்டையும்



குழந்தை அறிய வேண்டும். இந்த முறையை நான் கையாண்டிருக்கிறேனாகையால் எனக்கு அனுபவத்தினால் ஏற்பட்ட நம்பிக்கை இம்முறையில் இருக்கிறது. நூல் நூற்பது போதிக்கப்படும் இடங்களிலெல்லாம் இம்முறை கையாளப்படுகிறது. பாதரக்ஷை செய்வதையும் நூற்பதையும் நானே இம்முறைகளில் போதித்திருக்கிறேன். இதை போதிப்பதனால் பூகோளம் சரித்திரம் இரண்டும் ஒதுக்கப்படவேண்டுமென்பதல்ல. அவ்விதப் பொதுப்பட்ட ஞானம் வாய்மூலமாகச் சொல்வதனால் இன்னும் நன்றாக மனதில்படிகிறது. ப[illegible]ம் எழுதியும் போதிப்பதைவிடப் பத்துமடங்கு அறி[illegible] தொழில் மூலம் போதிக்கலாம். அதற்குமேல், குழந்தைக்கு குணவிருத்தி ஏற்பட்ட பிறகு எழுத்து போதிக்கலாம். இது இப்பொழுது இருக்கும் முறைக்கு நேர்மாறான புரட்சி முறையாக இருக்கலாம். ஆனால் இம்முறையினால் சிரமக்குறைவு அதிகமிருப்பதுடன் பல வருஷங்களில் கற்பதைக் குழந்தைகள் ஒரே வருஷத்தில் கற்கின்றன. இதனால் எல்லா அம்சத்திலும் சிக்கனம் ஏற்படுகிறது. தொழிலைக் கற்கும் சமயம் குழந்தை கணக்கைக் கற்க வேண்டும்.

"ஆரம்பப் படிப்பு", அதாவது தற்காலத்தில் மெட்ரிகுலேஷன் என்று கருதப்படும் அளவு படிப்பு, (இங்கிலீஷ் ஒன்று ஒதுக்கலாக) மி[illegible]வும் அவசியம் என்பது என்னுடைய கொள்கை. ஆனால் அதற்கு மேற்பட்டதான கலாசாலைப் படிப்பு இல்லாவிடில் அதிக நஷ்டம் ஏற்படாது. தற்காலத்திய காலேஜ் படிப்புப்பெற்ற சில லக்ஷக்கணக்கானவர்கள் தாங்கள் கற்றதை மறந்துவிட்டால் தேசத்தில் ஏற்படும் கல்வி நஷ்டம் இந்தத் தேசத்தின் முப்பது கோடி ஜனங்களின் மூந்நூறு வருஷத்திய அந்தகாரமாகிய கடலில் ஒரு மழைத் துளிக்குச் சமமேயாகும். எழுதப் படிக்கத் தெரியுமா என்பதைக் கணக்கிட்டு நமது கோடிக்கணக்கான கிராமவாசிகளின் அஞ்ஞானத்தை அளக்க முடியாது." என்று காந்தியடிகள் சொல்லுகிறார்.

குழந்தைகள் கற்க ஆரம்பிக்கையிலேயே தமது செலவைக் கொடுக்கும் சக்தியைப் பெறமாட்டார்கள். அவர்கள் உண்டாக்கும் பொருள்கள் விலைபெறாது. அவைகளை சர்க்கார் வாங்கிக்கொள்வது என்று ஏற்படுத்தினால் முன்பு சர்க்கார் கல்விக்கென்று பணம் கொடுத்துவந்ததை இப்பொழுது பெயரை மாற்றி விலையற்ற பொருளை வாங்குவதற்கென்று பணம்

கொடுப்பதேயாகும். ஆகையால் இம்முறை கல்வி தனக்குத் தானே செலவைக் கட்டிக்கொள்ளும் முறை என்று நாம் நினைப்பது பிசகாகும். காந்திஜி சொல்வதன் கருத்து அதல்ல. ஒவ்வொரு குழந்தையும் அந்த வருஷம் தான் உண்டாக்குவதிலிருந்து தன்னுடைய அந்த வருஷத்திய செலவை கொடுத்துக் கொள்ளக் கூடுமென்று அவர் சொல்லவில்லை. இது மிகக் குறுகிய அர்த்தமும் கேவலம் ரூபாயைமாத்திரம் கணக்கிடும் நோக்கமுமாகும். அவர் சொல்வதற்கு இன்னும் விரிந்த பொருள் இருக்கிறது. அக்குழந்தை தற்சமயம் தான் உண்டாக்குவதைக்கொண்டும், பிற்காலம் ஓர் தேர்ந்த மனிதனாகி சமூகத்திற்கும் சர்க்காருக்கும் தொண்டுகள்செய்தும் தன்னுடைய செலவைச் சரிப்படுத்திக்கொள்வான் என்பதே அதன் அர்த்தம். தற்சமயம் கிராமத்தில் குழந்தைகள் தாம்கற்கும்சொற்பப்படிப்பை நாளடைவில் மறந்துவிடுகின்றனர். அவர்களுக்காக செலவு செய்யப்படும் காலமும் தொகையும் நஷ்டம். ஆனால் அது சரியாகச் செலவு செய்யப்பட்டிருந்தால் ஒரு வருஷத்திய செலவைக் குழந்தை தன்னுடைய உற்பத்தியிலிருந்து கொடுக்க இயலாவிட்டாலும், ஏழு வருஷப்படிப்பிற்கு அந்த ஏழு வருஷங்கள் உற்பத்தி செய்தது போதுமானதாக இருக்கவேண்டும். முதல் இரண்டு வருஷங்களில் நஷ்டமிருக்கும். அதற்கு அடுத்த மூன்று வருஷங்களில் குழந்தையின் உற்பத்தி அதன் செலவிற்குச் சரிகட்டிக்கொள்வதாக இருக்கும். அதன் கடைசி இரண்டு வருஷத்திய உற்பத்தியினால் ஏற்படும் லாபம் முதல் இரண்டு வருஷத்திய நஷ்டத்திற்கு ஈடு செய்வதாக இருக்கும். இது தவிர நாம் முன் கூறியபடி ஒரு தேசத்தின் ஆள் ஒருவனுக்கு நல்ல தேர்ச்சி அளிப்பதே தேசம் அவனுக்குச் செலவழித்த தொகைக்குச் சரிக்கட்டும். அந்தஅந்த ஊர் வாசிகளுக்குத் தேவை இருப்பதான நூற்பது, நெய்வது, சாயமிடுவது, தையல்வேலை, கூடைபாய்கள் பின்னுவது, மண் பாண்டங்கள் செய்வது, செருப்புத் தைப்பது, தச்சுவேலை, கருமான் வேலை, செம்பு பித்தளை வேலை, காகிதம் செய்வது, வெல்ல உற்பத்தி, எண்ணை ஆட்டுவது, தேனீ வளர்ப்பது முதலியவை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்பட்டால், இவர்கள் செய்யும் சாமானை உள்ளூரிலேயே விற்கக்கூடும். மார்க்கெட் தேடிக்கொண்டு வெளியூர் போகவேண்டாம். ஒரு ஆசாரியிடம் வேலை கற்பவன்கூட முதலிலேயே தன்னுடைய செலவைக் கொடுக்கும் சக்தி பெறுவதில்லை. அவன் வேலை கற்கும் சமயம்



ஆரம்பத்தில் சில நஷ்டங்கள் ஏற்படத்தான் செய்யும். சிறிது காலத்திற்குப் பிறகே அவன் சிறிது சம்பாதிக்கும் திறமை பெற்று தன்னுடைய பயிற்சிச் செலவைக் கொடுத்துக்கொள்ளும் சக்தியைப் பெறுவான். இவ்வித ஆரம்பப் பயிற்சிக்காக அவனுடைய பெற்றோரோ, சர்க்காரோ, கிராமத்தினரோ தானம் கொடுக்கவேண்டியிருக்கிறது. முன்னாட்களில் கிராமத்தில் உபாத்யாயர், வண்ணான், தச்சன், குயவன் முதலியவர்களுக்குப் பரம்பரையாக நிலம் ஒதுக்கி வைக்கப்படும். ஆங்கிலச் சர்க்காரின் வரி திட்டம் ஏற்பட்டபின் இவ்விதம் ஒதுக்கி வைப்பது இயலாமல் போய்விட்டது. கிராமப் பள்ளிக்கூடமே மறைந்துவிட்டது. சிறுவருக்குக் கல்வி கற்பிப்பது சர்க்காரின் கடமையாக இருக்கவேண்டும். இப்போது இருக்கும் கல்விச் செலவு இயற்கையான செலவாக இல்லாமல் ராஜதந்திரத்தினால் வருஷா வருஷத்திய செலவுப் பிரச்னையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தமுறை தவிரவேறு கிடையாதென்று நாம் எண்ணிவிடக்கூடாது. அதைத் திருத்த வேண்டும். உபாத்யாயருக்கு நல்ல பயிற்சி அளித்து ஆரம்பிக்கும் சமயம் குறைந்தது ரூ. 25 சம்பளம் கொடுப்பதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்தின் பஞ்சாங்கத்திற்கேற்றுப் போல் பள்ளி தினங்கள் வைக்கப்படவேண்டும். அறுப்பு நாட்களிலும், கிராமத்திலாவது வயல்களிலாவது அதிக வேலை இருக்கும் நாட்களிலும், விடுமுறை இருக்கவேண்டும்.

## புது திட்டம்:

வார்தா திட்டம் என்று சொல்லப்படும் இந்தப் புது கல்வி திட்டத்தில் ஒவ்வொரு குழந்தையும், ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும், ஏழு வருஷம் ஆரம்பப் படிப்பு படித்தாக வேண்டும். இது அந்தக் குழந்தையின் ஏழாவது வயதிலிருந்து பதினான்காவது வயது வரை இருக்கலாம். நூற்பது போன்ற ஒரு தொழிலின் மூலம் கல்வி போதிக்கப்படும். அதாவது அத்தொழிலை மையமாக வைத்துக்கொண்டு இதர பாடங்கள் போதிக்கப்படும். குழந்தையின் தினசரி வாழ்க்கைச் சம்பவங்களிலிருந்தும், அது கற்கும் தொழில் அதைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்விதப் பயனளித்து வருகிறதென்பதிலிருந்தும் இதர பாடங்கள், வரலாறு, பூகோளம், கணக்கு, விஞ்ஞானம் ஆகியவைகள்

பிணைக்கப்பட்டு போதிக்கப்படும். இந்த படிப்பின் இறுதியில் இக்காலத்திய மெட்ரிகுலேஷன் படிப்பின் ஞானம் (ஆங்கிலம் தவிர) இவர்களுக்கு இருக்கவேண்டும். சித்ரம் வரையச் சொல்லிக் கொடுத்த பின்பு எழுத்துச் சொல்லிக் கொடுக்கப்படும். முதலில் படிக்கவும் பிறகு எழுதவும் சொல்லிக் கொடுக்கப்படும். மாணுக்கர்களுக்குப் பன்னிரண்டு வயதிற்குமேல் அவர்கள் தத்தமக்குப் பிடித்த தொழிலைக் கற்க அனுமதிக்கப் படுவார்கள். இவ்வித முறையினுல் பதினுன்கு வயதில், ஒரு தேர்ச்சி பெற்ற தொழிலாளி ஏற்பட்டு விடமாட்டானெனினும் ஒரு தொழிலைப் பின்பற்றவும், அத்தொழிலின் மூலம் தனது குண விருத்தியைப் பெறவும் மாணுக்கர்கள் கற்பார்கள்.

இந்தத் திட்டத்திற்கு அடிப்படையாக இருக்கும் கொள்கை தொழிலின் மூலமாக அறி... விருத்தியாக வேண்டுமென்பது. இப்பொழுது இருக்கும் முறை பொதுப் பட்ட கல்வியை முக்கியமாக வைத்துத் தொழிற்கல்வியை அதற்கு மேற்பட்டு கற்பதாக இருக்கிறது. ...றிவுக் கல்வியை முதலில் வைப்பதனுல் குழந்தையின் கைககால்களைக் கட்டிப்போடுவது போலாகிறது. குழந்தை சக்தியற்றதாகிறது இவ்விதம் ஆரம்பத்தில் ஏற்பட்ட பலவீனம் பிற்பாடு எவ்வளவு தொழிற் பயிற்சியை அளித்தாலும் சிறிது இருந்துக் கொண்டேயிருக்கிறது. அனுபவத்தின் மூலம், அனுபவத்துடன் கலந்து போதிக்கப்படாத படிப்பு வெறும் வாய்ப்பாடு உருப்போடுவது போன்ற படிப்பே. குணத்தையும் சுய முயற்சியையும் அது விருத்தி செய்வதில்லை.

**பரீக்ஷை :**

புது திட்டத்தில் பரீக்ஷையின் கஷ்டங்களை உபாத்யாயர்களே அனுபவிப்பார்கள்; பிள்ளைகளல்ல. இந்த முறையின்படி, பிள்ளைகளின் இருபத்திநான்கு மணி நேர வாழ்க்கையையும் உபாத்யாயர்கள் கவனிக்க வேண்டுமாதலால் ஒவ்வொரு குழந்தையின் வீட்டாருடனும் உபாத்யாயர் பழகியிருப்பார்; கிராமம் முழுவதும் அவருக்கு நன்ருகத் தெரிந்து கிராமத்தோர் எல்லோருடனும் அவர் பிணைக்கப்

பட்டிருப்பார். கிராமமும் கிராமத்தோரும் இருக்கும் நிலையிலிருந்து உபாத்யாயரின் முயற்சி மெச்சத் தகுந்ததா என்பது தெரியவரும்.

## பெண்களின் பாகம்:

குழந்தையின் அவ்வப்போதைய தேக வளர்ச்சிக்கு ஒத்தான குணம், ஒழுக்கம், ஆத்ம வளர்ச்சி மூன்றையும் அதற்குப் போதிக்கவேண்டும். குழந்தையானது முதன் முதல் ரூபம், வர்ணம், சலனம் இவைகளைக் கண்டு ரஸிக்கிறது. பிறகு ஏன் இவைகள் இவ்வண்ணம் ஏற்படுகின்றன என்று அறிய முயலுகிறது. அதற்குமேல் தன்னிஷ்டம் போல் அவைகளைச் செய்ய இயலுமா என்று பார்க்க முயலும். இவ்விதம் விளையாட்டிலிருந்து ஆராய்ச்சியும் ஆராய்ச்சியிலிருந்து உற்பத்திக்குமாக வளர்ச்சி ஏற்படுகிறது. குழந்தைக்கு ஏற்றதாகக் கல்வி அமைக்கவேண்டுமென்றால் அதன் வளர்ச்சியின் இந்த மூன்று படிகளுக்கும் ஏற்ற முறையை அமைக்கவேண்டும். இவ்விதம் செய்ய உபாத்யாயர் குழந்தையுடன் ஒன்றாக லயித்து அதனுடைய உணர்ச்சிகளைத் தானும் பகிர்ந்து கொள்ளும் சக்தியைப் பெற்றிருக்கவேண்டும். இயற்கை விதியினாலும் அவர்களுடைய குணத்தினாலும் பெண்களே கல்வியின் முதற் படிக்குத் தகுந்த ஆசிரியர்களாவார். இந்தியாவில் பெண்களுக்குப் படிப்புக் குறைவாக இருப்பதனால் இந்தியப் படிப்புத் திட்டமே தாழ்வடையக் காரணமிருக்கிறது. தாயார்களுக்குத் தங்களுடைய குழந்தைகளுக்குப் போதிக்கும் திறமை இல்லை. சரியான முறையில் படிக்க வைக்கப்பட்ட பெண்கள் பள்ளிக்கூட உபாத்யாயினியாக வருவதில்லை. ஆகையால் நாம் பள்ளிகளைச் சீர்திருத்த வேண்டுமென்றால், இனி வரப்போகும் சந்ததிகளுக்குத் தாயார்களான நமது பெண் குழந்தைகளுக்கு நல்ல படிப்பு சொல்லிக் கொடுப்பதே நமது கடமை என்று தோன்றுகிறது. புருஷர்களின் ஏற்பாடுகளும் யோசனைகளும் எவ்வளவு இருந்தபோதிலும், பெண்கள் சரியாகப் பழக்கப்படாவிடில் அவை வீண். ஏனெனில் குழந்தையின் இளமனதில் பெண்கள் சொல்வதுதான் மிகச்சுலபமாகவும்

ஆழமாகவும் பதிகிறது. ஆகையால் ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கூடத்திலும் எட்டு வயதிற்குட்பட்ட பிள்ளைகளையுடைய வகுப்புகள் உபாத்யாயினிகளாலேயே போதிக்கப்படுவனவாயிருக்கவேண்டும்.

குழந்தையின் வளர்ச்சியின் இரண்டாவது படியில் அவர்களுக்கு ஆராய்ச்சியில் ஊக்கமுண்டாக்க, அவர்களுடைய புத்தியைத் தூண்டிவிடுகிறவர்களான போதகர்கள் தேவை. நான் அமெரிக்காவில் தொழிலாளிகளின் சங்கத்தின் ஆதரவில் நடத்தப்படும் ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்றிருந்தேன். அப்பள்ளியில் உபாத்யாயர்கள் மாணவர், மாணவிகள் ஆகிய யாவரும் சேர்ந்து வசித்துத் தமது ஆகாராதி விஷயம் மற்றும் வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் பொதுப்படச் செய்தனர். குழந்தைகளும் அவைகளில் கலந்துகொண்டன. கோசாலை வைத்துக் கொண்டு சில பையன்களும் ஒரு உபாத்யாயருமாக அதைக் கவனித்துக் கொண்டனர். பதினொரு வயதுள்ள பையன்களின் ஒரு "பொருளாதார" வகுப்பை நான் பார்க்க நேர்ந்தது. அன்றைய தினத்திய பாடம் "மாடு வாங்குவது" என்பது. வகுப்பை நடத்துமாறு ஒரு பத்து வயதுப் பையனிடம் சொல்லிவிட்டு உபாத்யாயர் என்னுடன் ஒரு பின்புறப் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார். வகுப்பை நடத்தும் பையன் உடனே எழுந்து நின்று முதலில் தான் ஒரு மாட்டுச் சந்தைக்குப் போக நேர்ந்ததையும், அங்கு மாடு வாங்கின விவரத்தையும் சொன்னான். மாட்டைப் பரிசோதிப்பது, ஏலம் போடுவது, மதிப்பு, பெறுமானம் எல்லாமும் அந்தப் பையன் வர்ணிக்கவும், இதர பிள்ளைகள் தத்தமக்குத் தோன்றின கேள்விகளைக் கேட்பதுமாக ஒரு மணி நேரம் அவ்வகுப்பு நடந்தது. இந்த ஒரு மணி நேரமும் அந்த வகுப்புப் பையன்கள் தாங்களாக ஊகிப்பது, சிந்திப்பது, புது விஷயங்களை அறிந்து கொள்வது ஆகிய விஷயங்களை பேச்சு முறையிலேயே கற்றனர். ஆடம் ஸ்மித்தும் மார்ஷலும் இயற்றியிருக்கும் பொருளாதார தத்வ முறைகளைப் படிப்பதைவிட இம்முறையினால் அதிகப் பயன் பெற்றனர். அனுபவத்துடன் கற்கும் அறிவு சிரமமில்லாமல் அடுத்த



படிக்கு அழைத்துச் செல்கிறது, மேன்மேலும் விருத்தியை ஏற்படுத்துகிறது.

தற்காலத்திய கல்வி முறையில் தானாக யோசிக்கத் திறமை பெறுபவர்கள் ஏற்படுவதில்லை. மூன்றாவது படியாகிய புதிதாக ஒன்றை உண்டாக்கும் திறமையை நமது சர்வகலாசாலை மாணவர்கள் கூடப் பெறுவதில்லை. இந்தக் குறையினால் தான் நாம் முன்னேற்றமில்லாமல் குட்டைத் தண்ணீர் போல் தேங்கிக்கிடக்கிறோம். நாம் ஏற்கனவே சொல்லியவிதம் நமக்குப் போதிக்கப்படும் கல்வி நம்மைக் குமாஸ்தாக்களாகச் செய்வதற்காகவே ஏற்பட்டது. ஒரு குமாஸ்தா மேலதிகாரியின் உத்திரவைச் செய்ய வேண்டுமே தவிர, சுய யோசனையும் சுய முயற்சியும் இருப்பவனாக வேண்டியதில்லை. மூன்றாவது படியில், ஆராய்ச்சியிலிருந்து உற்பத்திக்குச் செல்லும் படியில், கல்வி ஏற்பாட்டில் உபாத்யாயர்கள் தூர நின்று மேற்பார்வை செய்யவேண்டும்; குழந்தைகளுக்குத் தன் முயற்சியும் தன் நம்பிக்கையும் இருந்து அவர்களே தம்மை மேன்மேலும் விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

தொழில் கல்வியாகிலும் சரி, அறிவுக்கல்வியாகிலும் சரி, "கலை" என்பதுடன் சம்பந்தப்படாவிடில் பூர்த்தியானதாகா. கவி டாகூரினால் நமது கல்வியின் இந்த அம்சம் முன்னுக்கு வந்திருக்கிறது. கிராம்ய பாட்டுகளும், எளிய சித்திரங்கள் வரைவதும் ஒவ்வொரு கிராமப்பள்ளிக்கூடத்திலும் இடம் பெறவேண்டும். இந்தப் பள்ளிக்கூடங்கள் தொழில் போதிப்பதை முக்கியமாகவும் கலை போதிப்பதை அதற்கு உதவியாகவும் கொண்டு நடத்தப்பட்டால் பாடங்கள் எவ்வளவு சாமான்யமானவைகளாக இருப்பினும், அதில் தேறினவர்கள் தானே நிற்கும் சக்தி பெற்ற மக்களாவார். ஆத்ம மரியாதை கொண்டவர்களாயிருப்பார். தாம் படுக்கப் பட்டுப் பஞ்சணை வேண்டுமென்று அன்னிய நாட்டு அதிகாரிகளின் காலில் விழுந்து விழுந்து கும்பிட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள். தலை நிமிர்ந்து நின்று நமது தேசத்தினரின் வறுமையைத் தாமும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பார்கள். இவ்விதம் தேசத்தின் அஸ்தி

வாரத்தைக் கெட்டிப் படுத்தி அதன் ஜனத்திரளைத் திடம் பெற்றவர்களாகவும் செய்தாலே தான் அதற்கு மேற்பட்ட மாளிகையைக் கட்ட இயலும். அஸ்திவாரம் பலமில்லாத வீட்டில் மேல் மாடம் கட்ட இயலாது. ஆழவேர் ஊன்றாத மரம் உயரமாக வளரமுடியாது. தன்னுடைய பண்பை விருத்தி செய்துகொள்ளாத தேசம் இதர தேசங்களுடன் சேர்ந்து முன்னணியில் நிற்க இயலாது. கேவலம் புலித் தோலை வாங்கிப் போர்த்துக் கொண்டால் நாமும் புலிகளாகி விடமாட்டோம். உலகத்தின் அறிவு, கலை பண்பு ஆகியவற்றிற்கு நாமும் நமது விகிதத்தைச் செலுத்த அவைகளை நாம் விருத்தி செய்யவேண்டும். பிறரைப் பார்த்துப் பின்பற்ற முயலுவதில் பயனில்லை.

கலாசாலைப் படிப்பும் காந்தியடிகள் சொல்லும் விதம் தன்னுடைய செலவைத்தானே கொடுத்துக் கொள்ளும் சக்தி பெற்றதாக இருக்கவேண்டும். அதற்கென்று கொடுக்கப் பட்ட பூமியின் விளைவிலிருந்து ஜீவிக்க இயலாத வியவசாயக் கல்லூரி எவ்விதம் ஒரு உண்மை வியவசாயக் கல்லூரியாகும்? இவ்விதமே இதரத் தொழில் கலாசாலைகளும் உத்யோகக் கலாசாலைகளும் தம்மைத் தாமே காப்பாற்றிக் கொள்ளும் திறமைப் பெற்றிருக்கவேண்டும்.

---

# அத்யாயம் 19

## கீழ்நாடுகளில் ஜனநாயகம்

நமது நாட்டில் ஜனநாயகத்தைப்பற்றி அதிகப்பேச்சு இருக்கும் இச் சமயம் ஜனநாயகம் என்பதற்கு அடிப்படையான கொள்கைகள் என்ன, அவ்விதக் கொள்கைகள் இதற்கு முன்பு எவ்விதம் அனுசரிக்கப்பட்டிருக்கின்றன என்ற விஷயங்களை ஆராய்வது நலம்.

அமெரிக்காவில் அடிமைத்தனத்தை நீக்கினவரான அப்ரஹாம் லிங்கன் என்பவரின் பிரசித்திபெற்ற வாக்கியத்தை நாம் எல்லாரும் அறிவோம். "ஜனங்களினால் இயற்றப்பட்டு, ஜனங்களின் நன்மைக்காக, ஜனங்கள்



ஆள்வதே ஜனநாயகம்" என்றார் அவர். ஸர் ஜான் ஸீலி என்பவர் இன்னும் குறுகிய அர்த்தம்கொண்டதாய் "எல்லாருக்கும் பங்கு உடையதே ஜனநாயகம்" என்றார். ஏ. வி. டைஸி என்பவர் "நாட்டின் ஓர் பெரிய அம்சத்தினர் அரசாளும் அங்கத்தினராக இருப்பது" என்றார். இவர்கள் எல்லாருக்கும் ஜனநாயகம் என்பதன் அரசியல் அம்சமே மனதில் இருந்தது.

ஜனநாயகக்கொள்கைகள் அரசியலுடன் மாத்திரம் நிற்பதில்லை. அவ்விதமென்றால் ஜனநாயகமென்பது லார்டு ப்ரைஸ் என்பவர் சொல்வதுபோல் "தேகவலிமை கொண்டவர்களே ஓட்டுக்கொடுப்பவராவார்கள்" என்ற நிலைமைக்குத் தாழ்ந்துவிடும். இது ஜனநாயகமாகாது, பலவந்தமான சர்வாதிகாரத்வமாகிவிடும். உண்மை ஜனநாயகமென்பது வாழ்க்கையைச் சேர்ந்த எல்லாத்துறைகளிலும் விளங்கிப் பிரகாசிக்கும். ஆகையால் ஜனநாயகம் என்பது மதம், சமூகம், பொருளாக்கம் ஆகிய எல்லாவற்றையும் எவ்விதம் பாதிக்கிறதென்பதை ஆராய்வோம்.

ஒரு தேசத்தினரின் வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் ஜனநாயகத் தன்மை விளங்க வேண்டுமென்றால் அது அரசியல் சட்டங்களின்பேரில் கட்டப்பட்டதாக இராமல் அழியா நியாயங்களை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். பிரஞ்சு புரட்சி நடந்த சமயம் அவ்வித ஜனநாயகம் ஒன்றை ஸ்தாபிக்க முயன்று "சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்" என்ற வார்த்தைகளின்மூலம் அதை வெளிப்படுத்தினர். இந்த மூன்று இலக்ஷியங்களையும் வழக்கத்திற்குக் கொண்டுவருவதென்றால் மனிதரில் ஒருவருக்கொருவர் செய்யும் காரியங்களில் முரண்பாடு ஏற்படாத திட்டங்களை உடையதாக சமூகம் இருக்க வேண்டும். உதாரணமாக சுதந்திரம் என்பது பூராகவும் கிடைக்க இயலாது. ஒவ்வொருவனும் தன்னுடைய சுதந்திரத்தில் ஓரளவு சமூகத்திற்கென்று விட்டுக் கொடுத்தால் தான் இவனுக்குச் சாதகம் ஏற்படும். மேலும் மனிதரின் குணங்களில் வித்யாசம் இருக்கும்வரை சமத்வம் இருக்க

இயலாது. ஆகையால் சகோதரத்வம் என்பதை அண்ணன் தம்பி சகோதரத்வமாக நாம் கருத இயலாது.

உண்மை ஜனநாயகத்தின் சமூக அமைப்பினால் ஏற்படக்கூடிய சாதகம் என்னவெனில் ஒரு தனிப்பட்டவன் தன்னுடைய முழு சக்தியை விருத்தி செய்துகொள்ளக் கூடும். அதே சமயம் ஒரு பலவீனமானவனுக்கும் அச்சமூகத்தில் பாதுகாப்பு இருக்கும். ஆகையால் ஒரு பலவீனமானவனைக் கஷ்டப்படுத்தி மற்றொருவன் தன்னுடைய சக்தியை விருத்தி செய்துகொள்ளமாட்டான்; ஒரு பலவீனன் தான் சக்தியற்று இருப்பதால் மற்றொருவன் முன்செல்லக் கூடாது என்று கட்டுப்படுத்தமாட்டான். இவ்வித சமத்வமும் சகோதரத்வமுமே இருக்கும். சமூகத்தைச் சேர்ந்த எல்லா அம்சமும் முன்னேறக் கூடியதாக இருக்கவேண்டும். யாராவது ஒருவர் அல்லது ஒரு வர்க்கத்தினர்மாத்திரம் அதிகாரப் பதவியை அடைவதென்றால் ஜனநாயகமென்பது போய்விடும். ஒரு தேசத்தின் இலக்ஷியங்கள் வழக்கத்திற்கு வருவது பலவந்தம், கட்டுப்பாடு, பணத்தின் அதிகாரம் என்றவைகளினால் இல்லாமல் பொது ஜனங்களிடையே நியாயம், உண்மை, அஹிம்ஸை, அன்பு ஆகிய கொள்கைகள் ஊன்றி அவைகளைத் தமது வாழ்க்கையில் ஜனங்கள் உணர விரும்புவதனால் ஏற்படுவதாக இருக்க வேண்டும். அவ்விதம் ஏற்பட்டால் அத்தேசத்தின் ஜனநாயக திட்டமானது தானாக நடைபெறுவதாகவும், பாசமற்றதாகவும், சிக்கலில்லாததாகவும் இருக்கும்.

இவ்வித ஜனநாயகத்தைப் பெற அதன் கொள்கைகள் சமூகத்தில் தானாக ஊறியிருக்கவேண்டும். புதிதாக சைக்கிள் விடுபவன் யோசித்துத் தனது கைகால்களைச் செலுத்துகிறான். அச்சமயம் அதிகாரத்தை அவனுடைய மூளை வகிக்கிறது. அதனிடமிருந்து உத்திரவு பெற்ற பிறகே இவனுடைய கைகால்கள் அசைகின்றன. அவ்விதம் உத்திரவு பெற்ற பின்பே நகருவதனால் இவனுடைய போக்கு ஒழுங்கற்றதாகவும் திடுக்திடுக்கென்றிருப்பதாகவுமிருக்கும். சைகிள் விடுவதில் தேர்ந்தவனோவென்றால்



தான் ஒரு சைகிள் பேரில் இருப்பதைக்கூட உணருவதில்லை. உத்திரவுகள் அவனுடைய மூளையிலிருந்து வருவதில்லை அவனுடைய நரம்புகள் அவ்வேலையைத் தாமே செய்யக் கற்றுக்கொண்டு விட்டிருக்கின்றன. யோசித்து மூளையிலிருந்து உத்திரவுபெற்றுச் செய்வதைவிட இன்னும் சீக்கிரமாகச் சிரமமில்லாமல் செய்துவிடுகின்றன. ஆகையால் சைகிள் விடுபவன் நேராகவும் செம்மையாகவும் போகிறான். அதேவிதம் புரட்சிகளும் மாறுபாடுகளும் ஏற்படாமல் ஒரு சமூகம் தன்னுடைய காரியத்தை ஒழுங்காகச் செய்வதென்றால் நியாயம் வெளியிலிருந்தும சட்டங்களிலிருந்தும் ஏற்படக்கூடாது. அச்சமூகத்தினுள்ளிருந்தே நியாயமும் கட்டுப்பாடும் உண்டாகவேண்டும். இவ்விதத் தேசத்தை நாம் "பண்பு பெற்ற ஜனநாயகம்" எனலாம்.

புதிதாக சைகிள் விடுபவனின் கட்டுப்பாடுகள் அவனாக யோசித்துச் செய்துகொள்ளப்படுபவை. அவை வெறும் உத்திரவுகளே. அதே விதம் ஜனநாயகக் கொள்கைகள் ஒரு தேசத்தினரிடை ஊறியிராமல், தலைமை வகிக்கும் ஒரு சிலரால் அத்தேசம் கட்டுப்படுத்தப்பட்டால் அக்கட்டுப்பாடு சுயமானதாகாது; வெறும் உத்திரவுகளேயாகும். வெளிப் பார்வைக்கு அது சரியான கட்டுப்பாடாகத் தோன்றினாலும் அதனில் ஆதம கட்டுப்பாடு இராது. அவ்வித தேசத்தை "செயற்கை ஜனநாயகம்" எனலாம். ஒரு செயற்கை ஜனநாயகத்தை ஒரே தினத்தில் ஏற்படுத்திவிடலாம் ஆனால் "பண்புபெற்ற ஜனநாயகம்" ஏற்பட பல நூற்றாண்டுகள் தேவை. பண்புபெற்ற ஜனநாயகமே அழியாமல் இருக்கும்.

செயற்கை ஜனநாயகமென்பது அதிகமான ஜனங்களுக்கு "ஓட்" செய்யும் சக்தியைக் கொடுத்து, அதன் மூலம் அதிகாரத்தைக்கொடுத்து, ஜனங்களின் ஓட்டுக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக்கொண்டு ஆள்வது. ஆனால் பண்புபெற்ற ஜனநாயகம் என்பதில் ஜனங்களின் விருப்பமே ஆட்சிபுரியும்; ஜனங்களின் ஓட்டுப்பெற்றவரின் விருப்பப்படியான ஆட்சியல்ல. நம்மில் அதிக

மானவர் திருடாமலிருப்பதற்குக் காரணம் ஜயிலுக்குப் போக நேரிடுமென்ற பயமல்ல, பிறர் சொத்தை எடுக்கக் கூடாதென்ற கொள்கையும் வழக்கமும் ஏற்பட்டிருப்பதனாலல்லவோ! அதேவிதம் ஒவ்வொரு மனிதனும் சமூகத்தினுடையவும் தேசத்தினுடையவும் நன்மையை உத்தேசித்து தானாக வலுவில் அதற்கு ஒத்து நடக்க விரும்பினால் நாம் பண்பு ஜனநாயகத்தை அடைந்தவராவோம்—நாம் பெற்றிருக்கும் அரசாட்சியில் ஓட்டுசெய்யும் உரிமை எல்லோருக்கும் இல்லாவிட்டாலும், ஆட்சியின் அதிகாரம் ஒவ்வொருவர் கையிலும் சிறிது சிறிது இருக்கும்.

மனித வர்க்கத்தினரிடை ஏற்பட்டிருக்கும் ஜனநாயகங்களை ஆராய்ந்தால், அந்தந்த வர்கத்தினரின் வளர்ச்சிக்கும் அவரைச் சூழ்ந்திருக்கும் இயற்கைக்கும் ஏற்றதாக அவரவர்களின் ஜனநாயகக் கொள்கைகள் இருப்பதை அறியலாம். மிதமான சீதோஷ்ண ஸ்திதியை உடைய தெற்கு ஐரோப்பா ஜனங்கள் சேர்ந்திருப்பதற்கும் சமூக வாழ்க்கைக்கும் ஏற்றது. அந்த இடத்தில் கிரேக்க ரோம தேசங்களின் நகரத்தைச் சேர்ந்ததான நாகரீக வாழ்க்கை விருத்திபெற்றது. ஐரோப்பாவின் வடமேற்கு பாகம் குளிர் நிறைந்து காடுகள் வளராத சூன்யப் பிரதேசம். அங்கே தூர தூர இடங்களில் தனித்தனி பண்ணைகளே ஏற்பட்டன. இவ்விதம் வசிப்பவர்களிடை தன் முயற்சியும் சுயநலப் பற்றும் அதிகமிருக்கும். ஆகையால் இவர்களிடை தலைமை வகிப்பவரின் அதிகாரம் பலமானதாகவும், அவ்வித அதிகாரத்திற்கு வாய் திறவாத கீழ்ப்படிதலும் இருக்கும். இவ்வித குணமுள்ளவர்கள் நாளடைவில் ஜனநாயகம் ஏற்படுத்திகொண்டாலும் அது வோட்டு முறையில் ஏற்படக் கூடியதே அல்லாமல் வேறு வகையிலல்ல. இவர்களிடை ஜனநாயகக் கொள்கை இன்னும் விரிந்ததாக இருக்க வேண்டுமென்றால் வோட்டு கொடுப்பவர்களின் எண்ணிக்கையே அதிகரிக்கப்படும்; அவர்களின் திறமை கணக்கிடப்படாது. அதே விதம் மேல்நாட்டாரிடம் மதத்திலும் அதிகாரம் திரண்டு போப்பரசர் ஒருவருடைய கையில் அடங்கிவிடுகிறது; சமூக



வழக்கங்களில் அரசரைப் பின்பற்றுகிறது; பொருள் முயற்சியில் முதலாளித்வமே பெரிதாக விளங்குகிறது. இவ்விதம் ஒரு சிலரே பலருக்குத் தலைவர்களாக விளங்கும் வரை தத்தம் நலத்தைப்பற்றி முரண்பாடு இருக்கத்தான் செய்யும். இவ்வித ஜனநாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் உண்மையில் அதிக வித்யாசமில்லை. இந்தச் சர்வாதிகாரமானது ஒருவன் கையிலிருந்தால் என்ன, ஒரு சிலர் கையில் இருந்தால் என்ன? இவ்விதம் ஜனநாயகம், பாஸிஸ்டு, நாஸீ என்ற பெயருடன் விளங்கும் அதிகாரங்களின் மேல்பூச்சை நீக்கினால் முதலாளிகளின் முந்தாணியைப் பிடித்துக்கொண்டு நிற்கும் இங்கிலாந்தின் பார்லிமெண்ட் அமைப்பைக் காணலாம்; முஸோலினியையும் ஹிட்லரையும் காணலாம். இன்னும் சிறிது ஆழ்ந்து பார்த்தால் பண்டைக் காலத்தில் விரோதிகளின் மண்டை ஓடுகளை வெற்றி மாலையாக அணிந்த காட்டு அரசனைக் காணலாம். அரசாட்சியில் பொதுஜனங்களுக்கு பங்கே கிடையாது. இவ்வித ஜனநாயகமானது உண்மை விஷயத்தைப் பொதுஜனங்களுக்குச் சொல்லாமல், அறியாமையில் அவர்களை வளர்த்து வருகிறது. மேல் அதிகாரம் வகிப்பவர்கள் தமது மரியாதை, நாசூக்கான பழக்வழக்கங்கள் ஆகியவைகளைக்கொண்டு ஜனங்களிடமிருந்து தம்மைத் தனித்து வைத்துக் கொள்ளுகின்றனர்; ஜனங்களுடன் சகஜமாய்க் கலந்து பழகுவதில்லை. இவ்விதக் குணங்கள் இவர்களை ஜனத்திரளுடன் பிணைப்பதில்லை, பிரிவையே ஏற்படுத்துகின்றன. உண்மை ஜனநாயகமும் உண்மைப் பண்பும் ஜாதிமத பேதங்களைக் கடக்க உதவி புரிவதாக இருக்கவேண்டும். மேல்நாட்டு ஜனநாயக முறையானது வகுப்பு வித்யாசங்களை அதிகப்படுத்துகிற்து. தேசங்களுக்கிடை பூகோளப் பிரிவும், ஜாதிப் பிரிவும் மதப்பிரிவும் இருப்பதுடன் தேசத்திற்குள் வகுப்புப் பிரிவுகள் இருக்கின்றன. இவ்விதப் பிரிவுகளினால் தேசத்திற்கு தேசம் சண்டையை உண்டாக்கியும், வகுப்பிற்கு வகுப்பு துவேஷத்தை உண்டர்க்கியும், ஒரு சிலர் அதிகாரத்தைத் தமது கையில வைத்துக்கொள்ளுகிறார்கள்.

பெர்ட்ராண்டு ரஸ்ஸல் என்பவர் ஓரிடத்தில் "ஐரோப்பாவின் சுதந்திரங்கள் என்ற பெயரின்கீழ் நடந்துவந்து கொண்டிருந்த ஓயாச் சச்சரவு முடியாமல் இருந்ததற்கு முக்கிய காரணம் இங்கிலாந்து." என்கிறார். கார்ல்மார்க்ஸ் போன்ற தீவ்ர சமஉடமை வாதி கூட ஐரோப்பிய நாடுகள் மிக நாகரீகம் பெற்றிருப்பதால் கீழ் நாடுகளை அவைகள் கொள்ளையடிப்பது மிக நியாயமே என்று கருதுகிறார். இவ்வித அநாகரீகக் கொள்கைகள் பரவியிருப்பவர்களிடை "சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்" என்பது எவ்விதம் கிடைக்கும்? குறுகிய மனப்பான்மையும் பற்றுகளும் உடைய வகுப்பு அரசாட்சியும் தனிப்பட்ட அரசாட்சியும் கொண்ட நாடுகளில் ஜனங்களிடை புரட்சிகளும் தேசப் போர்களும் ஏற்பட்டுக்கொண்டே இருப்பது சகஜமேயல்லவா? மேல் நாட்டில் மத விஷயத்திலும்கூட இவ்வித குறுகிய மனப்பான்மையையே காணலாம். குறுகிய பற்றுதலே பிறரைத் தம்மதத்தினராக்கப் பார்க்கிறது, மிஷனரிகளைத் தேசதேசமாய் அனுப்புகிறது.

மேற்கிலிருந்து கிழக்கே வந்தால் இஸ்லாமிய ஜனநாயகத்தைக் காணலாம். இந்த ஜனநாயகம் உத்திரவு ஜனநாயகம் அதாவது செயற்கை ஜனநாயகம் என்பதிலிருந்து பண்பு ஜனநாயகத்திற்கு விருத்தி பெற்றிருக்கிறது. இங்கே ஜனங்களின் வாழ்க்கை ஒரு தலைவன் அல்லது ஒரு சிலரின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டதாக இராமல், ஒரு சமூக மதக் கட்டுப்பாட்டினால் "சுதந்திரம் சமத்வம், சகோதரத்வம்" என்பதை எல்லோரிடமும் பரவினதாகச்செய்ய முயன்றிருக்கிறது. ஏழை, பணக்காரன், மூடன், ஞானி, வெள்ளை மனிதன், கருப்பு மனிதன் என்ற வித்யாசமில்லாமல் பொதுவாக முகம்மது நபியைப் பின் பற்றுபவர் என்ற ஒரு குணத்தைக் கொண்டவரிடம் சமத்வத்தை உண்டாக்கப் பெற்றிருக்கிறது. இந்தக் குணம் ஒரு தேசத்திற்குட்பட்டதாக இல்லாமல் அரேபியன் இந்தியன் என்ற வித்யாசம்கூட இல்லாமல் சமத்வத்தை உண்டாக்கியிருந்திருக்கிறது. தற்காலம் இம்மதத்தின் சமூக



பூகோள, பொருளாக்க அரசியல் எல்லைகள் நீங்கி விட்டாலும் மதத்தின் எல்லை கெட்டியாக இருக்கிறது.

அதேவிதம் சைனாவிலும் ஜப்பானிலும் (ஜப்பான் ஐம்பது வருஷத்திற்கு முன்பு இருந்த நிலமையில்) பண்பின் ஜனநாயகத்தைக் காணலாம். இஸ்லாமிய ஜனநாயகத்திற்கு மதத்தின் எல்லை இருந்தது போல் இவர்களுடைய மங்கோலிய ஜனநாயகத்திற்கும் ஒருவித ஜாதிக்கட்டுப்பாடும், சிற்றரசரின் ஆட்சிக்குக் கீழ்ப்படிவதும் எல்லையாகவும் தடையாகவும் இருந்திருக்கிறது. அவ்வித எல்லைக்குட்பட்ட சமூகத்தில் நமது நாட்டினரிடம் கண்பதுபோன்ற திட்டங்களையே நாம் காணலாம். இவ்விதப் பண்பினால் ஏற்பட்ட திட்டங்கள் பற்றற்றதாய், தமது கடமையைச் செய்வதில் முனைந்திருப்பவை. அத்திட்டங்களுக்குக் கட்டுப்படுபவன் தன்னிஷ்டப்படி அவைகளை மாற்றிக் கொள்ள இயலாது. இக்காலத்திய தேசப்போர்களை நீக்க வேண்டுமெனில் தனக்குள் எல்லா அம்சமும்கொண்ட தனித் தனி அரசாங்கங்களை அமைக்கவேண்டும் என்று பெர்ட்ராண்டு ரஸ்ஸல் சொல்வது இவ்வித மங்கோலிய ஜனநாயக முறையைப் பின்பற்றுவதாகும்.

நமது நாட்டில் முன்காலத்தில் எவ்வித அரசாங்க முறை இருந்தது என்பதை நீதி சாஸ்திரங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் நாம் அறியலாம். ஏன், இன்னமும் நமது நாட்டினரின் தினசரி வாழ்க்கை வெளிதேசத்தவரால் திருத்தப்படுவதில்லை; தானாகவே ஒரு சமூக ஜாதீய கட்டுப்பாட்டிற்கு அடங்கினதாக இருக்கிறது. பலவித குணங்கள்கொண்ட நமது தேசத்தை இவ்விதக் கட்டுப்பாடே பிணைத்திருக்கிறது. மேல் நாட்டார் தமது "உத்திரவு ஜனநாயகத்தை" மனதில் வைத்துக்கொண்டு நம்மிடை மொழி வித்யாசம், பழக்கவழக்க வித்யாசம், நாட்டு சீதோஷ்ண வித்யாசம் இவைகளைக்கண்டு விட்டு நமக்குள் ஒரு தலைவரைக் கண்மூடித்தனமாகப் பின் பற்றும் குணம் கிடையாதென்பதைக்கண்டு, நமக்குள் ஒற்றுமையே கிடையாது, நம்மிடை ஜனநாயகம் ஏற்படுவது இயலாது என்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் கூறும் ஒற்றுமை உத்திரவினால் ஏற்படும் செயற்கை ஜனநாயகத்திற்கு அவசியம். இருந்தும் மிகப் பண்புபெற்றதான ஒரு ஜனநாயக குணத்தை நமது கிராமங்களில் காணலாம். அவ்விதப் பண்பு ஜனநாயகத்தில் பூமி மாறுபாடு, வர்ண மாறு

பாடு, ஜாதி மாறுபாடு ஆகியவைகளினால் நிரந்தர மாறுபாடு ஏற்படாது. நமது முறை பிற தேசத்தினரையும்கூட, படையெடுத்து வருவோரையும்கூட அதனுடைய கட்டுக்குள் சேர்த்துக்கொள்ளும் சக்திபெற்றதாக இருந்தது. ஏற்கனவே நாம் கூறிய விதம் இவ்வித ஜனநாயகத்தின் கொள்கைகள் பல நூற்றுக் கணக்கான வருஷங்களாய் ஜனங்களிடை சமூக திட்டங்களின்மூலம் ஊறிவிட்டிருக்கிறது. அரசர்கள் இருந்தால் என்ன! இதன் கட்டுப்பாட்டிற்கு அவர்கள் அடங்கினவர்களே! சுக்ரநீதியில் கூறியிருப்பதன் பிரகாரம் அவர்கள் போலீஸ்காரர்களுக்கும் சட்டசபை அங்கத்தினருக்குமே சமானமானவர்கள். உண்மை அரசாங்கம் ஜனங்களின் கையில் இருந்தது. கிராமத்தின் நலத்தை அதனதன் பஞ்சாயத்தார் ஏற்படுத்தினர். இந்தப் பஞ்சாயத்துக்காரர்களைப் பொறுக்கி எடுப்பது கிராமத்துக் குடிகள். பஞ்சாயத்தாக வருபவர்களின் வாழ்க்கை முழுவதும் அந்தக் கிராமத்துக் குடிகள் அறிவார்கள். ஒருவனைத் தண்டிக்க வேண்டுமெனில் பஞ்சாயத்தார் அவனைச் சிறையில் அடைக்கமாட்டார்கள், கிராமத் துரோகி என்றே ஒதுக்குவார். பஞ்சாயத்தின் தீர்ப்பு "மெஜாரிடி"யின் தீர்ப்பல்ல; நியாயத்தின்மூலம் எல்லோரையும் தன் வசப்படுத்திக்கொண்டு செய்யும் தீர்ப்பு. இவ்வித அரசாங்கமே உண்மை சுய ஆட்சி. ஏனெனில் இதனுடைய அதிகார திட்டங்களைச் செய்துகொள்வது ஜனங்களே ஆவர்.

ஒரு நிலைப்பட்ட அரசாட்சியானது, அதாவது கிராமந்தோறும் அவரவர் வேலைகளையும் பொறுப்பையும் அவரவர் வகிப்பது என்றில்லாமல் சிறிய விஷயம் முதல் பெரிய விஷயம் வரை எல்லாமும் ஒரு தலைமை அதிகாரத்தின்கீழ் கவனிக்கப்படும் அரசாட்சியானது ஜனங்களின் அரசாட்சியாக இருக்க இயலாது; அது ஜனங்களுக்காக ஏற்பட்ட அரசாட்சியாகவும் இருக்காது. ஜனங்களின் அரசாட்சி என்றால் அது மிகத் தாழ்ந்த கிராமத்திற்கும் எட்டவேண்டும். வோட்டு உரிமையை எவ்வளவு விஸ்தாரமானதாகச் செய்தாலும் இது ஏற்படாது.

மேலும், தன்னுடைய நலத்திற்கும் பிறர் நலத்திற்கும் முரண்பாடு ஏற்படும் சமயம் எவ்வித வெறுப்பும் பற்றற்ற மனப்பான்மையுடன் இருக்க இயலாது. அவ்வித விஷயங்கள் முன்னாட்களில் இருந்ததுபோல தர்ம சாஸ்திர முறையை அனுசரித்து நடக்கும் அமைப்புகளால் நடுநிலைத் தீர்மானங்களைப் பெறவேண்டும். இவ்விதம் ஏற்படுவதனால் ஏழைகளுக்கும்



பலவீனமானவர்களுக்கும் தீங்கு ஏற்படாமலிருக்கும். உதாரணமாக ஒரு ஹிந்து பொதுக் குடும்ப முறையில் சொத்து எல்லா அங்கத்தினரிடையும் பங்கிடப்பட்டு, பலவீனமானவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. தொழிலாளிகளின் கூலிக்கு நெல் அளப்பது என்பது எல்லோருக்கும் உணவிற்கு நெல் கிடைக்கும் என்ற நிச்சயத்தை ஏற்படுத்தவே. முன்னாட்களில் நமது தேசத்தில் இவ்விதம் வாழ்க்கையில் ஒவ்வொரு துறையிலும் திட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்விதமான பண்பின் ஜனநாயகத்தை இந்தியா பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பெற்றிருந்தது. பற்றற்றதாகவும் எல்லாரிடமும் பரவினதாகவும் இந் நாட்டின் அதிகாரம் இருந்திராவிட்டால் நமது நாட்டின் பண்பானது அதற்கு இக்காலத்தில் மேன்மேலும் ஏற்பட்டு வரும் தீங்குகளைத் தாங்கி இருக்க இயலாது. முன்பே நசித்துவிட்டிருக்கும். அவ்விதப் பண்பின் ஜனநாயகத்தில் ஏற்றத்தாழ்வு, வித்யாசங்கள் ஆகியவை புகுக்கப்பட்டு, பண்பைப் பாதுகாக்கவேண்டியவர்கள் அவ்விதம் செய்யாமல் தம்மை உயர்ந்த ஜாதியினரென்று ஒதுக்கி வைத்துக்கொண்டதாலேதான் தேசத்தில் குறைகள் ஏற்பட்டு அந்நியர் ஆட்சிக்கு அது வசமாகிவிட்டிருக்கிறது. பலநிலைப்பட்ட அதிகாரம் என்பதே நமது ஜனநாயகத்தின் அடிப்படையான கொள்கை. இந்த மேன்மையான கொள்கை நமது நாட்டினரால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அனுசரிக்கப்பட்டிருக்கிறது. மதத்திலும்கூட இந்துக்களின் பலநிலைப்பட்ட வழிபாடு போன்றதை, அவ்விதம் பலநிலைப்பட்டிருப்பதால் விசால மனப்பான்மையுடனிருப்பதை வேறு மதத்தில் காண்பது அரிது. சமூகம் வர்ணாச்ரம தர்மமுறையினால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது, அதன் கொள்கை என்னவெனில் ஒவ்வொருவனும் தான் சமூகத்தில் எவ்வித இடத்தை வகிக்கிறானோ அதற்குரிய கடமைகளைச் சரிவரச் செய்வது என்பதே. பொருள் முயற்சியில் ஒவ்வொருவரின் திறமையிலும் வித்யாசமிருக்கும். அதனால் அதிகத் திறமை பெற்றவன் திறமையற்றவனை இம்சிக்க நேரிடும். அவ்விதம் ஏற்படாமல் தடுத்து, போட்டியைக் குறைத்து வேலையைப் பகிர்ந்து கொடுக்கவே வகுப்புக்கட்டுப்பாடு ஏற்பட்டது.

இவ்விதம் தீர்க்க தரிசனத்துடன் நியாயமான கொள்கைகளை அடிப்படையாகக்கொண்டு திட்டமும் வரம்பு

களும் ஏற்படுத்தப்பட்டு இந்தியாவில் பண்டைய ஜனநாயகம் அநேகமாய் கட்டியிருந்தது. அதனுடைய அரசாங்கம் உண்மைக் கிராமவாசியின் ஆட்சியாய், கிராமவாசியால் கிராமவாசியின் நலத்திற்காக ஆளப்படுவதாக இருந்தது.

இருந்தும் இதனில் ஒரு குறை இருந்தது. வர்ணாச்ரம தர்ம முறைப்படி அவரவர் தமது ஜாதியின் தொழிலை தர்ம முறையில் செய்தாலே முக்தி ஏற்படுமென்பது விதி. தனிப்பட்ட மனிதனின் விருப்பங்களோ, போக்கோ கவனிக்கப்படவில்லை. ஓர் அழகிய நீர் வீழ்ச்சியில் அவன் ஓர் துளி நீருக்கே சமானம். அந்தத்துளி சிதறி மறைந்து விடுகிறது. ஆனால் மேன்மேலும் சிதலைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. தனிப்பட்டவனின் விருப்பம் பெரிதல்ல, சமூகமே பெரிது, சமூகத்தின் நலத்திற்காகத் தனிப்பட்டவன் கஷ்டப்பட்டாலும் பாதகமில்லை என்பது இதனால் ஏற்படுகிறது. ஆனால் உண்மை ஜனநாயகத்திலோ என்றால் தனிப்பட்டவனை இவ்விதம் துச்சமாகச் செய்துவிட இயலாது. தனித்தனி மனிதர் சேர்ந்தாலே சமூகம் ஏற்படும். தனி மனிதர்களின் முன்னேற்றமேற்பட்டாலே சமூக முன்னேற்றம் ஏற்படும். ஆகையால் தனிப்பட்டவனின் முன்னேற்றம் தடைப்படாமல், அவன் தன்னை விருத்திசெய்துகொண்டும், அதேசமயம், பிறருடைய விருத்திக்கும் வழி ஏற்படுத்தினனெனில் நாம் மனிதர் வாழ்க்கையின் இலக்ஷிய நிலையை அடைவோம்.

நாம் இதுகாறும் ஆராய்ந்ததிலிருந்து மேல்நாட்டு ஜனநாயகம் இன்னும் சிசு பருவத்திலேயே இருக்கிறது என்பது தெரிகிறது. சில வகுப்பினராலோ சிலராலோ தேசங்கள் ஆளப்பட்டு, அங்கே சாஸனைகள் நிறைவேற பலவந்தம் தேவையாக இருக்கிறது. கீழ்நாட்டு ஜனநாயகம் பண்டைய ஜனநாயக நிலையை அடைந்துவிட்டிருக்கிறதென்றாலும் தர்ம முறையில் கிராம நலத்தையும் சமூக நலத்தையும் அது பெற்றிருக்கிறதே ஒழிய தனிப்பட்டவனின் நலத்தை இன்னும் பெறவில்லை. உலகத்தில் ஒவ்வொருவனும் தனது "ஸ்வதர்மம்" என்பதிலடங்கியுள்ள



இலக்ஷியங்களை அனுசரித்து, அன்பினாலும் உண்மையினாலும் சுதந்திரம் ஏற்படுத்திக்கொண்டால் அப்ரஹாம் லிங்கனின் இலக்ஷியமான உத்திரவினால் ஏற்படும் செயற்கை ஜனநாயகத்திற்கு மாறாக பண்பு ஜனநாயகம் ஏற்பட்டு, தன்னைத்தானே நடத்திக்கொள்ளும் அரசாங்கத்தைப் பெறுவோம். இது ஒருவனால் ஒருவனுக்கென்று ஒருவன் ஆள்வதாகும். இதுவே மொத்தமாகச் சேர்ந்தால் ஜனங்களினால் ஜனங்களுக்காக ஜனங்கள் ஆள்வதாகும்.

---

## அத்தியாயம் 20

### தேசங்களிடை சமாதானம்

இப்புத்தகத்தின் ஆறாவது அத்யாயத்தில் தேசத்திற்கு தேசம் போர் ஏற்படுவதன் காரணங்களை ஆராய்ந்தோம். உற்பத்திகளின் வகைகளினாலும் தேவைக்கு முன்பு உற்பத்தி ஏற்படுவதனாலும் அவைகள் ஏற்படுகின்றன என்பதை விளக்கினோம். ஜனங்களிடை பொருள் முயற்சியை பரவினதாகச் செய்வதான பொருள் உற்பத்தி வகைகளையும் மேற்பட்ட அத்யாயங்களில் விவரித்தோம். இவ்விதம் பரவிய உற்பத்தி வகை இருந்தால், இந்தச் சிறுசிறு தொழிலாளிகளால் நாட்டின் சமாதானத்திற்குத் தீங்கு இழைக்க முடியாது. இயற்பொருள்கள் எங்கே எடுக்கப்படுகின்றனவோ அங்கேயே பக்குவப்படுத்தப்படும். அதனுடைய உற்பத்தி பண்டங்களும் ஜனங்களிடை பங்கிடு செய்யப்படும். தேசத்திற்கு தேசம் வியாபாரம் இருப்பது மிகச் சுவல்பமாக இருக்கும். அவ்வித வியாபாரத்திற்கென்று இயற்பொருள் கிடைக்கும் இடங்களை எல்லாம் பிடித்துக் கொள்ள முயற்சி ஏற்படாது. உற்பத்தி பொருள்களை விற்பதன் நிமித்தம் "காட்டு மனிதர்களுக்கு நாகரீகம் போதிக்க" வும் அவசியம் இருக்காது. இயற்கையாக ஏற்படும் தேவைக்கு தகுந்த விதம் உற்பத்தி ஏற்படும். உற்பத்தியையும் தேவையையும் சரிக்கட்ட பலாத்காரத்தின் அவசியம் இராது. ஒவ்வொருவனும் தன்னுடைய உழைப்பின் பலனை அனுபவிப்பான். ஒருவனுடைய உழைப்பினால் மற்

ஒருவன் தனவானாக இடமிராது. பெண்கள் தமது கையில் தேவையை எடுத்துக்கொண்டு சரிவர உபயோகித்தால் உற்பத்தி இயற்கையாக ஏற்படும். உலகில் ஒரு வகைப்பண்டம் குவிந்திருக்க மற்றொருவகைப் பண்டம் இல்லாமல் போவது என்பது இரா. பலாத்கார முறையில் தான் இவ்விதம் பொருள்களின் ஏற்றத்தாழ்வை நீக்கி சமத்வம் ஏற்படுத்த முடியும் என்பது இரா. மனிதன் தன்னுடைய தொழிலின் மூலம் தனது ஆத்மீகத்தை உணர்ந்து தனது தொழிலில் அதை வெளிகாண்பிக்கக் கற்பான். பலவந்தமாக அவனைத் தூண்டித் தொழில் செய்யுமாறு சொல்வதற்கு அவசியம் இராது. மனிதரின் நலமே பெரிது என்ற அறிவானது மனிதரின் பொருள் முயற்சிகளை சரியான வழிகளில் திருப்பும். தேசத்திற்கு தேசம் இருக்கும் போட்டியும், பொறாமையும் ஒழியும். இவை குறைந்தால் போர் ஏற்படுவதற்கு சாதகமான காரணங்கள் குன்றிவிடும். அந்த நிலையை நாம் அடைந்தால் மனிதரின் முன்னேற்றமும் செல்வ விருத்தியும் க்ஷேமமும் ஏற்படும்.

## அஹிம்ஸை முறை:

போர் இல்லாமல் நாம் வாழ விரும்பினால், நமது பொருளாதாரத்தை சரியாக அமைத்துக்கொள்ள வேண்டும். அடிக்கடி புரட்சி ஏற்பட்டே அவைகளை சீர்திருத்த இயலும் என்பது இருக்கக்கூடாது. தனது வாழ்க்கையில் ஹிம்சையை நீக்கினாலே மனிதன் மிருகத்தைவிட மேம்பட்டவனாவான். எவ்வளவுக்கெவ்வளவு ஹிம்சையை மனிதர் ஒழிக்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் அதிக நாகரீகம் பெற்றவர் எனலாம். புத்தர் பெருமான் காலம்முதல் இந்தியா அஹிம்ஸையையே பெரிய தர்மமாகக் கொண்டுள்ளது. மனிதருக்கு மனிதர் பழகும் வகையில் சண்டையையும் கொலையையும் வெறுப்பதான ஓர் உயர்ந்த பண்பை இந்துக்கள் பல நூற்றாண்டின் பழக்கத்தால் பெற்றிருக்கிறார்கள். உலகத்தை ஆளப்போவது பலம் அல்ல, பெரியபெரிய மிருகங்களெல்லாம்பலவீனமான



மனிதரின் புத்திக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன. அதே விதம் தற்காலம் உலகத்தை அந்தகாரத்தில் அழுத்தி இருக்கும் ராக்ஷச குணங்களை ஆத்மமேன்மையும் பண்பும் வெல்லும் உலகத்தில் சமாதானமும் சகோதரத்வமும் நிரவிநிற்க நாம் விரும்பி அதற்கென்று முயற்சி எடுத்துக்கொள்வதென்றால் அதற்கு நமது பேராசைகளையும் அதிக லாபம் பெறுவதற்கு இருக்கும் அவாவையும் கட்டுப்படுத்தி வெல்ல வேண்டும். இதை தேசம் முழுவதும் பின்பற்ற, பெரிய தொழில் உற்பத்திகளிலிருந்து, தனிப்பட்டவனுக்கு லாபம் ஏற்படாமல் இருக்கச் செய்யவேண்டும். அதற்கு வழி அவ்விதத் தொழில்களை சர்க்கார் செய்வது என்ற திட்டம். கைத்தொழில்களும் குடிசைத் தொழில்களும் அஹிம்சை முறையான தொழில்கள். ஒரு எல்லைக்கு உட்பட்டவை. ஆகையால் அவைகளை லாபத்தை விரும்பும் தனிப்பட்டவர்களிடம் கொடுத்தாலும் தீங்கு ஏற்படாது. இவ்விதம் தொழில்களில் திட்டம்கொண்ட சமூகத்தில் அதிகமும் விதம் விதமான பண்டங்கள் கிடைக்காமலிருக்கலாம். ஆனால் பொருள்களை ஏராளமாகத் திரட்டி வைப்பதை விட இன்னும் முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன அல்லவா?

---

முற்றிற்று

110431